
# கனிச்சாறு



பாவலரேறு
## பெருஞ்சித்திரனார்
பாடல்கள்

7

பொது
அணிந்துரைப் பாடல்கள்
வாழ்த்துப் பாடல்கள்

# பாவலரேறு
# பெருஞ்சித்திரனார்
# பாடல்கள்

(கனிச்சாறு)

**படையல்**

- எதிர்காலத் தமிழின மீட்பர்களுக்கும்
- தமிழீழ விடுதலைத் தலைவர்களுக்கும் மறவர்களுக்கும்
- அயல்நாடுகளில் வாழும் தமிழின மக்களின் முன்னேற்றத்திற்காக ஆங்காங்கு பாடுபடும் தமிழினத் தலைவர்களுக்கும்

**இந் நூற்றொகுதிகள் படையலாக்கப்படுகின்றன.**

– ஏழாம் தொகுதி

முழுமையான
முதற்பதிப்பு : தி.பி. 2043. துலை ( அத்தோபர் 2012 )

நூல் தலைப்பு : **பாவலரேறு**
**பெருஞ்சித்திரனார் பாடல்கள்**
(கனிச்சாறு - ஏழாம் தொகுதி)

ஆசிரியர் : *பாவலரேறு பெருஞ்சித்திரனார்*

வெளியீடு : *தென்மொழி பதிப்பகம்*
செந்தமிழ் அடுக்ககம்
(சி.கே. அடுக்ககம்)
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
மேடவாக்கம், சென்னை - 600 100
94444 40449

அச்சாக்கம் : *தென்மொழி அச்சகம்,*
சென்னை - 600 100

உரிமை : *தாமரை பெருஞ்சித்திரனார்*

பக்கங்கள் : 44+244

தாள் : படத்தாள் (மேப் லித்தோ 18.6)

அளவு : தெம்மி (1/8)

படிகள் : 1000

விலை : உரு. 220.00

# முன்னுரை

இயற்கை ஓர் ஒழுங்குடையது. நிலம் நெறியான ஓர் இயல்போட்டத்தை உடையது.கதிரவனும் விண்மீனும் ஓர் ஒழுங்கான அசைவை உடையன. புடவியும் பேரண்டமும் அவற்றுள் இயங்கும் பல்லாயிரங்கோடி இயற்கைக் கோளங்களும் சுடர்த் தொகுதிகளும் சிறிதே ஒழுங்கின்றி இயங்கத் தொடங்கினும் உடனே பேரழிவு நேரும்.

இவ்வியற்கை நிலையினைப்போல், இயற்கையுட்பட்ட அனைத்து நிலைகளிலும் அதனதற்குப் பொருந்திய ஓர் ஒழுங்கு கடைப்பிடிக்கப் பெறுதல் வேண்டும். இயற்கை அறிவிக்கும் இவ்வொழுங்கு சிதைவுறின், அச் சிதைவுக்கேற்ப, படிப்படியான அழிவுநிலைகளே நேரும் என்பதில் துளியும் ஐயமின்று.

உயிர்கள் அனைத்தினும் மேம்பட்டு விளங்கும் மாந்த இயக்கமும் அதன் பரும, நுண்ம நிலைகளுக்கு ஏற்ப, ஒழுங்குற இயங்குதல் வேண்டும் என்பதே இயற்கையின் உட்கோளாதல் வேண்டும். ஒழுங்கற்ற பரும இயக்கத்தால் உடல் சிதைவுறுதல்போல் ஒழுங்கற்ற உணர்வியக்கத்தால் உள்ளமும் சிதைவுறும். உள்ளச் சிதைவு மாந்தப் பேரழிவையே தோற்றுவிக்கும்.

உணர்வியக்கத்தின் தலைமைக்கூறு மொழி. மொழியின் படிநிலையுற்ற ஒழுங்கியக்கம் இலக்கணம். எனவே, இலக்கணச் சிதைவு மொழியைச் சிதைப்பதும், மொழிச் சிதைவு கருத்தைச் சிதைப்பதும், கருத்துச் சிதைவு உணர்வைச் சிதைப்பதும், உணர்வுச் சிதைவு உளத்தைச் சிதைப்பதும், உளச்சிதைவு உலகியலைச் சிதைப்பதும் ஒன்றினின்று ஒன்றெழும் தொடர் விளைவுகளாகும்.

மொழியின் மலர்ச்சியே பாட்டு. பாட்டுணர்வால்தான் மாந்தன் மீமிசை உயிருணர்வை எட்டுகின்றான். மற்ற உணர்வுகள் மாந்த உணர்வுகளிலேயே அவனைத் தேக்கி வைத்திருக்கையில், பாடல் உணர்வே புறவுணர்வுத் தளைகளைக் கட்டறுத்து, உலகியல் கூறுகளினின்றும் விடுவித்து, அவனை மீமிசை மாந்த நிலைக்கு உயர்த்து கிறது. பாட்டுணர்வு தாழ்ச்சியுறுதலால் அவன் உணர்வுயர்ச்சிக்குச் சறுக்கல் ஏற்படுகின்றது; உயிர்மைக்கு அயர்வு ஏற்படுகின்றது. இதனால் இயற்கைத் துய்ப்பு கெடுகிறது. உயிர்மை குன்றுகிறது; உலகியல் உணர்விருள் அவனைப் பற்றி

அலைக்கழிக்கின்றது. இவ் வியற்கைப் பொது நிலைகளை யொட்டி, ஒவ்வொருவரும் சில இன்றியமையாக் கலை, இலக்கியக் கூறுகளை உணர்ந்திருத்தல் வேண்டும். இவற்றுள் கலை புறமும் இலக்கியம் அகமும் ஆகும். இலக்கியத்தின் கொடுமுடி பாடல்! பிற அவற்றினின்று விரிந்து படரும் கொடிகளையும் கிளைகளையும் போன்றவை.

ஒழுங்கற்ற ஓசையைவிட ஒழுங்கான ஒலி உயிர்க்கவர்ச்சி உடையது. ஒலியொழுங்கோடு உணர்வும் சேருமாயின் உயிர்க் கவர்ச்சியுடன் உளக்கவர்ச்சியையும் அஃது உண்டாக்கி, அறிவுணர்வு உயர்ச்சியுடைய மாந்தனை அது தன்வயப்படுகிறது. இனி, உணர்வு சேர்ந்த ஒலியொழுங்குடன் ஏற்ற இறக்க அலைவொலிகள் அளவொத்து இணைதலும், பின் அவற்றுடன் ஏதாமொரு மொழி சேர்தலும், அவற்றைப் **பண்** என்றும் **பா**வென்றும் உயர்நிலைப்படுத்துவிக்கும். இப் பண்ணொடு தாளம் சேர்ந்து **இசை**யென்றும், பாவொடு கருத்துச் சேர்ந்து **பாடல்** என்றும் தமிழில் வழங்கும். இனி, பண்ணும் பாடலும் சேர்ந்து நடக்கும் இசைத்தமிழ் என்னும் ஒரு மொழியியல் மரபையே பண்டைத் தமிழ்மொழி முனைவோர் உலகோர் உணர்ந்துய்ய உண்டாக்கித் தந்துள்ளனர். வேற்றுமொழிகளில் இம் மொழியியல் கூறு தோன்றியிருப்பினும் தமிழ்மொழியில் உள்ளதுபோல், அஃது அத்துணையளவு தனித்தோ, சிறந்தோ இயங்கவில்லை யென்பதை அறிவினார் உணர்வர்.

இனி, பாடல் என்பது **பா தழுவிய கருத்துமொழி** என்று பொதுவில் பொருள் தரினும், அதற்கெனப் பல தனிக்கூறுகள் உண்டு. பாடல் இயற்கையாக வெளிப்படுதல் வேண்டும். மனமும் அறிவும் வயப்பட, உணர்வும் எழுச்சியும் மேம்பட்டுப் புறநிலையழுத்தத்தால் பீறிக் கொண்டு வெளியேறும் பாடலிலேயே இயற்கைச் சாயல் படிந்திருக்கும். **மொத்தத்தில் அஃது ஒரு வெளிப்பாடாக இருத்தல் வேண்டுமேயன்றி, வெளிப்படுத்துதலாக இருத்தல் கூடாது.** அவ்வாறு உள்ள நிலையில் அது சிறவாது; நிலைத்து நிற்காது; அதுவன்றிக் காலத்தில் கரைந்து போகும் தன்மையுடையதாக அஃது இருக்கும்.

ஓர் உணர்வு சான்ற இயற்கைப்பாடல் உணர்வுள்ள உள்ளங்களை மட்டுமேயல்லாது, உணர்வற்ற உள்ளங்களையும் அவையளவில் தொடுதல் வேண்டும். அப்பொழுதுதான் அஃதால் உயிர்க்கூறு படிப்படியாக மலர்ச்சி எய்துதல் முடியும். பிற உள்ளங்களை

ஆட்கொள்ளும் நிலையில் அஃது ஒரு மண்வெட்டியைப்போல் பயன்படுதல் வேண்டும். மண்வெட்டி பள்ளம் மேடுகள் நிறைந்த நிலத்திற்கே மிகுதியும் பயன்படுவதாகும். சமமான தரையில் அதன் பயன்பாடு மிகவும் குறைவே. வெறும் சுவைக்காக மட்டுமே வெளிப்படும் பாடல்கள் மாந்த உள்ளுணர்வுகளை வளர்த்து வாழ்விக்காமல் அவற்றை மழுங்கடித்துவிடும்.

பாட்டுணர்வு இயற்கையேயாயினும், அதன் புறக்கூறுகள் உலகியல் சான்றனவே. அப் புறக்கூறுகள் அசை படிந்த சொற்களாலும், சொற்களமைந்த சீர்களாலும், சீர்கள் இணைந்தியங்கும் யாப்பாலும், யாப்புடன் கூடிய அணியாலும், அணிபெற்றியங்கும் கருத்தாலும் விளங்கித் தோன்றுனவாகும். அவையே பாடலுக்குரிய தகுதிகளும் ஆகும். அவை பதினான்கு இன்றியமையாக் கூறுகளைக் கொண்டவை. அவை இவை:

அ. சொற்கள்

1. கருத்தாழம் நிரம்பிய தேர்ந்த சொற்கள்.
2. சுற்றி வளைக்காத சொல்லாட்சி.
3. வளங்கொழுவிய பொருத்தமான சொற்கள்.
4. குறைவான இடைச் சொற்கள்.

ஆ. சீர் அமைப்பு:

1. ஒலிநயத்தால் இணைகின்ற சீர் அமைப்பு.
2. கருத்தின் உணர்வுக்கேற்ற சீர் நீளம்.
3. வகையுளி அல்லது சொற்பிரிப்பால் பாட்டின் ஒட்டத்தையும் அழகையும் குறைக்காமல், முழுச் சொல்லால் அல்லது சொற்களால் அமைந்த சீர்கள்.

இ. யாப்பு

1. பிழையற்ற யாப்பு.
2. கூறப்போகும் கருத்தின் உணர்வை மழுங்கடிக்காத யாப்பு வகை.
3. உணர்வுயர்ச்சிக்கும் கருத்தகலத்திற்கும் ஏற்பத் தெரிந்தெடுக்கப் பெற்ற யாப்பு.

ஈ. அணிகள்

1. எளிதே விளங்கிப் பாடற் கருத்துடன் உடனே பொருந்துமாறு இருக்கும் உவமைகளும் உருவகங்களும்.

2. பாட்டின் பெருமையைக் குறைக்கும் பிற ஆரவார அணிகள் பெரிதும் தவிர்க்கப் பெறுதல்.

**உ. கருத்து**

1. மயக்கம் தராது உடனே புலப்படும் தெளிவு நிறைந்த கருத்து.
2. பொது மனத்திற்குப் புலப்படாத உயர்ந்த கருத்து.

இனி, முன்னைக் காலத்து, இயற்கை உணர்வின் ஒலியொழுங்குக் கொத்த மரபு தழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பிய ஓரிளம் பெண் பெற்றெடுக்கும், நல்ல அழகிய அறிவறிந்த நிறைமாதக் குழந்தைகள் போன்றவை. சோம்பலாலும் அறிவுக் குறுக்கத்தாலும் மன இழிவாலும் பிதுக்கப்பெறும் இக்காலத்து மரபு நழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பாத பெண்ணுரு சான்ற ஒருத்தி, அரைகுறை முதிர்ச்சியோடு பெற்றெடுக்கும், உறுப்புகள் குறைவுற்று அழகும் அறிவும் குறைந்த, குறைமாதக் குழந்தைகள் போன்றவை. நன்கு வளர்ச்சியுறாத உறுப்பு நிலைகளும், உணர்வு நிலைகளும், அக் குழந்தைகளைக் கவர்ச்சியற்றனவாகவும் நீடிய காலத் தங்குதலற்றனவாகவும் ஆக்கிவிடுகின்றன.

ஒழுங்கற்ற ஓசை இசையாகாததுபோல், ஒழுங்கான கட்டுக் கோப்பற்ற கருத்து வெளிப்பாடும் பாடலாகாது.

பாடல் உள்ளத்தின் மலர்; உணர்வின் மணம்; உயிரின் ஒலி யொழுங்கு.

பாடல் மலரிலிருந்தே உரைநடையென்னும் காய் தோன்றிக் கதையாகக் கனிகிறது.

பாடல் உணர்வு சிதைவுறுமானால் உரைநடையாக அது தத்துகிறது. உரைநடையில் பாடல் உண்டு. பாடலில் உரைநடை இல்லை. பாடல் உரைநடையாவது, மலர் தன் மென்மையையும் மணத்தையும் இழந்து பருமையும் வெறுமையும் உறுவது போன்றதே. அத்தகைய பாடற்போலிகள் தேங்காய் மட்டையின் ஊறலின்று அடித்தெடுக்கும் நார் போன்றவை.

இனி, உண்மையான பாடலை வெளிப்படுத்துபவனே உயர்ந்த பாவலன். பாவலன் பிறக்கிறான்; பாடல் தோன்றுகிறது. பாவலன் படைப்பாளன். அவன் உண்டாக்கித் தரும் உணர்வுருவாய கற்பனை மாந்தர்களையே இயற்கை பருவுருவாக உலகுக்குப் படைத்துத் தருகிறது. எனவே உலகின் இயற்கைப் படைப்புக்கே அவன் உணர்வுக் கருவைத் தருபவனாகிறான்.

உயர்ந்த உண்மைப் பாவலனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பத்து. அவை, நுண்ணோக்கு, இயற்கையீடுபாடு, சொல்வன்மை, பாத்திறன், யாப்பறிவு, மொழியறிவு, கற்பனையாற்றல், மனவியல், நடுவுநிலைமை, துணிவு என்பனவாகும். இவை ஒன்றின் ஒன்று சிறந்து விளங்கிப் பாவலன் ஆற்றலைப் படிப்படியாக மிகுவிக்கின்றன. இத் தகுதிகளின் பொருத்தத்திற்கேற்பவே ஒவ்வொருவனின் பாடலும் ஒளிர்ந்து சுடரும்; காலத்தை வெல்லும்; மக்கள் கருத்தினை ஆட்கொள்ளும்; அறிஞர் மதிப்பினைப் பெறும்.

**கனிச்சாறு** என்னும் இப்பாடல் தொகுதி பல நூறு கற்பனைத் தோற்றங்களை உங்கட்குக் காட்டுவதாகும். பல வாழ்வியல் கூறுகள் இதில் சொல்லப் பெறுகின்றன. அறிவுநிலை விளக்கங்கள்,உரிமை உணர்வுகள், மாந்தநிலை உயிரெழுச்சிக் கூறுகள், உள்ளுணர்வெழுப்பும் மெய்யறிவு நிலைகள், மொழியியல், இனவியல், நாட்டியல் புரட்சிக்கு வித்தூன்றும் அடிப்படை வரலாறுகள் முதலியன இப் பிழிவில் கலந்திருப்பதை நீங்கள் சுவைத்து உணரலாம்.

**கனியைப் பிழிந்திட்ட சாறு - எம்**
**கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!**

என்றும்,

**கனிச்சாறு போல்பல நூலெல்லாம் கண்டு**
**காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு!**

என்றும், பாவேந்தர் பாரதிதாசன் தமிழையும் தமிழ்ப் பனுவலின் இனிமையையும் உணர்த்தக் கனிச்சாற்றை உவமை பேசுவார்.

எனவே தமிழும் தமிழுணர்வும் செறிந்து விளங்கும் இப்பாடல் தொகுதிக்குக் **கனிச்சாறு** என்று பெயர் தரப்பெற்றது. மிக அரும்பாடுபட்டு இத் தொகுதித் தொடர்கள் வெளியிடப் பெறுகின்றன.

தமிழினம் தன் நிலைப்பாட்டு மேன்மைக்கு இத் தொகுதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாக.

சென்னை - 5 அன்பன்

14-4-1979 பெருஞ்சித்திரன்

# முதல் பதிப்பு - பதிப்புரை

உலக வரலாற்றிலேயே தலைசிறந்தது மாந்த வரலாறாகும். அதனுள்ளும், நம் முதுபழங் குமரித் தமிழிய வரலாறோ, மூல முதன்மையும், உயர் மாந்தத் தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும்.

அத் தென்குமரித் தலைக்கழக(சங்க)க் காலத்து முத்தமிழ் மீமிசை மாந்த வாழ்வியலின் ஏந்திய பண்பு நலன்கள் யாவும், அடுத்து வந்த இடைக்கழகக் காலந்தொட்டே, (பிற்காலக் கீழை) வேத ஆரியத்தின் நுழைவால் தாக்குண்டு சீர்குலையத் தொடங்கின. அதுமுதலே, ஆரிய எதிர்ப்பியக்கங்களும், தொடர்ந்து, பரவல் சிதறலாகத் தமிழகத்தில் தோன்றி வரவே செய்தன. ஆனால், அவை எவற்றுக்கும் ஆரியத்தை அடிதுமித்துச் சாய்த்துத் தமிழ் மீட்பினை நிலைநாட்டித் தரும் மொய்ம்புரம் வாய்க்கவில்லை.

இறுதியாக, சென்ற நூற்றாண்டில், மேலைநாட்டு நல்லறிஞரால் விழிப்புறுத்தப் பெற்றும், **மறைமலையடிகளாரின்** தனித்தமிழ்த் தொண்டினாலும், **பெரியாரின்** இனமானத் தொண்டினாலும் இந் நூற்றாண்டில் புத்துரமூட்டப் பெற்றும், பல மறுமலர்ச்சி இயக்கங்கள் தமிழகத்தில் தோன்றலாயின. அவற்றின் ஒட்டுமொத்த முயற்சிகளின் மெய்வருத்தக் கூலியாக, இன்று **மொழிஞாயிறு பாவாணர்** அவர்களின் மொழிமுதற் புலத்தில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் உரன்வல அறிவாண்மைப் படை கொண்டு முனைந்துழுது, 'தென்மொழி' என்னும் இதழ்வாயிலாக, தேடரிய தெளிவியக்கம் ஒன்று புரட்சிக்கால் ஊன்றி, ஆள்வினையும் ஏற்றுள்ளது.

அத் 'தென்மொழி இயக்க'த்தின், வினை வேளாண்மைக்கென மொழி - இன - நாடு தழுவிய பல்வேறு துறைகளிலும், **பாவலரேறு** அவர்கள், முப்பது ஆண்டுகட்கும் மேலாக, பன்னூற்றுக் கணக்கில் பாடிக் குவித்துள்ள அரும்பாடற் கனிகளையே இங்ஙனம் தொகுத்து, '**கனிச்சாறு**' ஆகப் படைத்துள்ளோம். அவ்வமிழ்தச் சாற்றினை ஆரப் பருகும் எவரும், தமிழியக் குடிசெயலுக்கு வேண்டிய 'வீறெய்தி மாண்ட' வினைத் திட்பம் பெற்று, தொண்டாற்ற முன்வர வேண்டுதலே எமது பெருநோக்கம் ஆகும்.

இப் பாடற் களஞ்சிய வெளியீட்டுத் திட்டம், கோவை மாவட்டத் தமிழன்பர்களின் அருமுயற்சியால் இயல்வதாகி, தி.பி. 2006இல் அறிவிக்கப் பெற்று, தி.பி. 2008 முதல் செயலாக்கங்

கொண்டு, இக்கால் முழுமையாக்கப் பெற்றுள்ளது. இத்திட்டத்தை வினைப் படுத்திய **தென்மொழி ந. முத்துக்குமரனார்**, அவர் துணைவர் **தென்மொழி மறை. நித்தலின்பனார்**, ஊக்கப்படுத்திய **திரு.க. ஆகுன்றன்**, கொடை நல்கி வலந்தந்த புரவலன்மார் ஆகிய அனைவரும் தமிழின மீட்பு வரலாற்றில் என்றும் நீங்கா இடம்பெறும் சிறப்புடையர். வெல்க எம் தமிழம்! மலர்க நல்லுலகம்!

பணிவுடன்,

*14.4.1979* **'கனிச்சாறு வெளியீட்டுக் குழு'**

# வெளியீட்டுரை

கனிச்சாறு(பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்) தொகுதி முதற்பதிப்பு 1979இல் வெளிவந்தபின், 1995 இல் பாவலரேறு மறைவுவரை வெளிவந்த அனைத்துப் பாடல்களும் தொகுக்கப் பெற்று முழுமைபெற்ற முதற்பதிப்பாக இப்போது வெளிவருகிறது.

முதற்பதிப்பின் முத்தொகுதிகளும் தென்மொழியில் சுவடி : 14; ஓலை : 12 வரையிலும் மற்றுத் தமிழ்ச்சிட்டில் குரல் : 9; இசை: 12 வரையிலும் வெளிவந்த பாடல்கள் அளவிலேயே அமைந்தன. அதன்பின் தொடர்ந்து வந்த இதழ்களின் பாடல்கள் அனைத்தும் துறைவாரியாகப் பிரிக்கப்பெற்று எண்தொகுதிகளாக இப் பதிப்பு நிறைவு செய்யப்பெற்றுள்ளது. மேலும், ஐயா அவர்கள் தம் இளமைக் காலத்தில் எழுதியனவும் இதுகாறும் அச்சுக்கு வராதனவுமான பாடல்கள் சில, பழைய குறிப்புச் சுவடிகளினின்றும் எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன; அன்றியும் ஐயா அவர்கள் அன்பர்கள் பலருக்குப் பல்வேறு நிகழ்வுகளையொட்டி எழுதியனுப்பிய பாடல்கள் பல, அவ் அன்பர்களிடமிருந்து பெறப்பட்டும், சில ஐயா அவர்களின் சுவடிகளிலிருந்து எடுத்தும் இணைக்கப்பட்டுள்ளன. (பழைய பாடல்களில் ஒரோவழி இடம் பெற்றிருந்த அயன்மொழிச்சொற்கள் வரிவடிவில் வேறுபடுத்திக் காட்டப் பெற்றுள்ளன.)

மொத்தத்தில், ஐயா அவர்களின் தனி இலக்கியங்களான கொய்யாக்கனி, ஐயை, பாவியக்கொத்து, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, நூறாசிரியம், உலகியல் நூறு, கழுதை அழுத கதை, அறுபருவத் திருக்கூத்து ஆகியன அல்லாத பிற பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பெற்றுப் **'பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தனிப்பாடல்கள் _ அடங்கல்'** என்னுமாறு இப்பதிப்பு முழுமையான பதிப்பாக வெளிவருகிறது. அவ்வகையில் இதுவே முதற் பதிப்பு எனலாம்.

பாடல்கள் அனைத்திற்கும் முன்னைப் பதிப்பின் போக்கிலேயே தொடர்ந்து பாடல்கள் விளக்கக் குறிப்புகள் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இயற்றப்பெற்ற அல்லது வெளிவந்த காலத்தையொட்டி ஆண்டு, மாத முறைப்படி பாடல்கள் வரிசைப்படுத்தப்பட்டிருப்பது இப்பதிப்பின் தனிச்சிறப்பாகும்.

பழைய பாடல்கள் சில எழுதப்பெற்ற காலம் தெளிவாகத் தெரியாமையால், அப்பாடற்குரிய ஆண்டையொட்டி **வினாக்குறி யிடப்பட்டுள்ளது.**

இக் கனிச்சாறு தொகுதிகளில், தமிழ்,இந்தி யெதிர்ப்புப் பற்றிய பாடல்கள் முதல் தொகுதியாகவும், இன எழுச்சிப் பாடல்கள் இரண்டாந் தொகுதியாகவும் அமைந்துள்ளன; நாட்டுரிமை பற்றிய மூன்றாந் தொகுதியில் நாட்டுரிமை, தமிழீழம் என்னும் பிரிவுகளிலான பாடல்கள் இடம்பெற்றுள்ளன; இளைய தலைமுறை, பொதுமை, இயக்கம் ஆகியன பற்றிய பாடல்கள் நான்காந் தொகுதியாகவும், குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழி மாலை என்னுந் தலைப்புகளில் அமைந்த பாடல்கள் ஐந்தாந் தொகுதியாகவும் கொள்ளப்பெற்றுள்ளன; ஆறாந் தொகுதியாவது காதல், இயற்கை, இறைமை என்னும் பிரிவுகளைக் கொண்ட பாடல்கள்; **தன்னிலை விளக்கம், பெருமக்கள் சிறப்பு, திருநாள் வாழ்த்து, திருமண வாழ்த்து, மதிப்புரைகள்** முதலியனவாகிய பாடல்கள் ஏழாந் தொகுதியில் வைக்கப் பெற்றுள்ளன. பாட்டரங்கப் பாடல்கள் எட்டாந் தொகுதி.

2009இல் தமிழக அரசு, பாவலரேறு அவர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கிப் பெருமை கொண்டது. அதனால் அவர்தம் படைப்புகளைப் பலரும் வெளியிட வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் வெளிவராத பாடல்கள் பலவற்றையும் நாம் வெளியிட்டால் மட்டுமே மற்றவர்கள் வெளியிட வாய்ப்பு ஏற்படும் என்பதால் நாம் முழுமையாக வெளியிட வேண்டிய தேவை ஏற்பட்டது.

எட்டுத் தொகுதிகளையும் ஒரே நேரத்தில் வெளியிடுவதற்குப் பெரும் பொருள் தேவைப்பட்டதால், முன்வெளியீட்டுத் திட்டம் ‘தென்மொழி’ யில் அறிவிக்கப் பெற்றது.

தென்மொழி அன்பர்கள் பலரும் முனைந்து தொகை அனுப்பி வைத்திருந்தனராயினும், அத் தொகை, தேவையான எல்லைக்கு மிகவும் குறைவான அளவையே நிறைவு செய்தது. நாமும் அந்தக் காலக்கட்டத்திற்குள் வெளியிட இயலாமல் சற்று காத்திருக்கநேர்ந்தது.

அவ்வாறு காத்திருக்கும் காலத்திற்குள்ளும் எதிர்மம், அச்சுக்கூலி, தாள் இவற்றின் விலையேற்றம் அளவு கடந்து உயர்வும் பெற்றன. அவற்றையும் நெருக்கியே வெளியிட வேண்டியதாயிற்று.

இனி, தமிழ்மக்கள் தம் மொழிநலத்தையும் வாழ்வியற் சிறப்புகள் சீரழிவுகள் ஆகியவற்றையும் உணர்ந்து, அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்து, எழுச்சிபெற்று, இனநலம் பேணி, நாட்டுரிமை பெற்று வாழ்வாங்கு வாழ வகைசெய்யும் கருத்துத் தெளிவும் உணர்வுச் செழுமையும் வாய்ந்த பாடல் திரட்டான இக் கனிச்சாறு தொகுதிகளைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்றுப் பயன்கொண்டு சிறக்கும் என்று நம்புகின்றோம்.

– **தென்மொழி பதிப்பகத்தினர்**

# கனிச்சாறு ஏழாம் தொகுதி

(தன்னிலைப் பாடல்கள், பெருமக்கள் சிறப்பு, திருநாள் வாழ்த்து, திருமண வாழ்த்து, மதிப்புரைகள்)

## பொருளடக்கம்


| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்கஎண் |
|---|---|---|

### பொது 'அ' தன்னிலைப் பாடல்கள்

| | | |
|---|---|---|
| 1. | என்னே செய்வேன்? | 3 |
| 2. | 'கவி' தோன்றாதென் புலமை மண். | 4 |
| 3. | நண்பரின் இனிய நட்பே யாவையினும் இன்பம். | 5 |
| 4. | இருளின் அணைப்பு! | 7 |
| 5. | நெஞ்சே! | 9 |
| 6. | மூச்சும் பேச்சும்! | 10 |
| 7. | என் பள்ளிக்கூடம்! | 10 |
| 8. | சென்னை சென்றேன்...! | 11 |
| 9. | தாய்மை வணக்கம்! | 19 |
| 10. | கவிஞர் மேல் காதல்! | 19 |
| 11. | நெஞ்சின் அழுகை! | 20 |
| 12. | கவிஞர் அன்றோ! | 21 |
| 13. | பாடியடங்கிய வாய்! | 23 |
| 14. | தடுப்பார் யாரே! | 24 |
| 15. | பாச்சுடர்! | 24 |
| 16. | நன்றியில் செல்வர்! | 25 |
| 17. | கண்ணீர் நெஞ்சம் ! | 27 |
| 18. | திறந்திருக்கும்! | 29 |
| 19. | அவனொரு தனியன்; நடந்து கொண்டிருந்தான்! | 30 |
| 20. | எம் வாழ்க்கை! | 32 |
| 21. | எனக்குக் குழந்தைதான் இருப்பினும் அவள்தாய்! | 33 |
| 22. | என்றன் பாட்டு! | 34 |
| 23. | நானும் பழையவன்! எண்ணமும் பழையது! | 35 |
| 24. | தனித்துப் பார்க்காதீர்! | 36 |
| 25. | எம் கோள்! | 37 |
| 26. | என் எண்ணம், எழுத்து, செயல், இயக்கம்! | 38 |
| 27. | குளிர்தமிழ் உலவிடும் நெஞ்சமன்றோ? | 39 |
| 28. | உறுதியும் நன்றியும்! | 40 |
| 29. | என்பும் தசையும் தமிழ் ஏற்றத்திற்கே! | 41 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 30. | சிறை என் செய்யும்? | 42 |
| 31. | உறவாடிய பழைய ஊர் நினைவு! | 44 |
| 32. | ஒரு மனம்! | 45 |
| 33. | உள்ளத்தை ஒளியாமல் உலகில் பதிக்கிறேன்! | 47 |
| 34. | என் வாழ்வும் தமிழும் ஒன்றன்றோ? | 48 |
| 35. | என் உடலும் உயிரும் நானும்! | 49 |
| 36. | அன்றையும் இருந்தேன்! இன்றையும் இருந்தேன்; என்றையும் இருப்பேன்! | 51 |
| 37. | துவளாத வாழ்வு, என் வாழ்வு! | 52 |
| 38. | வாழும் என் உயிரும் அகமும்! | 53 |
| 39. | கொள்கையை ஆற்ற மறப்பேனோ? | 53 |
| 40. | எனக்கொரு கொள்கை! | 55 |
| 41. | அன்புணர்வும்! அறிவுணர்வும்! செயலுணர்வும்! | 56 |
| 42. | தீதிலாது இனம் ஆற்றுவேன்! | 57 |
| 43. | தமிழருக் குலகினில் புகழ் சேர்ப்பேன்! | 58 |
| 44. | உண்மை உழைப்பு! | 59 |
| 45. | வினையும் விளைவும் தோற்றமும்! | 60 |
| 46. | இருள் உனக்கு விடியுமா? | 61 |
| 47. | சூழ்நிலைகளில் நான்! | 62 |
| 48. | தொண்டில் எனது மனம்! | 63 |
| 49. | வஞ்சகப் பூனைகள்! | 64 |
| 50. | நடிப்பார் ஆட்சியுள் நானிருந்தேனே! | 65 |
| 51. | நெருப்பாற்றில் எதிர்நீச்சல்! | 66 |
| 52. | எத்தனைமுறை எனைச் சிறையிலிட்டாலுமே என்கொள்கை மாறாது! | 69 |
| 53. | உள்ளச் சிதைவுகள்! | 70 |
| 54. | இவர்களில் நானுமா ஒருவன்? | 71 |
| 55. | என் தொடக்கமும் முடிவும்! | 72 |
| 56. | அனைத்தும் ஒன்றே! | 73 |
| 57. | குடியரசு நாடா இஃது! (?) | 74 |
| 58. | என் பயனே! | 74 |
| 59. | பிறந்தநாள் நினைவிலோர் பெருமையும் இல்லை! | 75 |
| 60. | என்றன் வாழ்க்கை மழையின் பொழிவு! | 76 |
| 61. | அருந்தமிழ் நினையுங்கள்! | 77 |
| 62. | காய்ச்சல் என்னை மேய்ச்சல் கொண்டது! | 78 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|

## பொது 'ஆ' தனியார் சிறப்புப் பாடல்கள்


| | | |
|---|---|---|
| 63. | நாட்டுப்பட எதிர்ப்புப் போராட்டம்! | 85 |
| 64. | எழுந்தது அரிமா! | 86 |
| 65. | பாவாணரின் பணிநீக்கம்! | 87 |
| 66. | அன்புள்ள சாத்தையா! உங்களையான் உள்ளுகின்றேன்! | 88 |
| 67. | நாவலர் சோமசுந்தர பாரதியார்க்குப் பாமலர்! | 91 |
| 68. | குத்தூசி வாழ்க! | 92 |
| 69. | வல்லுயிர் ஒட்டமும் உள்ளமும் செந்தமிழ் அன்றோ! | 93 |
| 70. | வெள்ளத் துணர்வை விளைவாக்கி வாழுங்கள்! | 94 |
| 71. | அருட்கொடையாளர்களே, பாவாணருக்குப் பொருட்கொடை தாருங்கள்! | 95 |
| 72. | நாளையும் நீ வாழ்வாய்! | 97 |
| 73. | பாரதிதாசன் பத்து! | 98 |
| 74. | பன்னாடைப் புலவர்! | 100 |
| 75. | பொய்யிலாப் புலவன் புகழ் வாழியவே! | 101 |
| 76. | செந்தமிழ்ச் சின்னசாமி! | 102 |
| 77. | அண்ணா இரங்கற் பத்து! | 102 |
| 78. | பாவாணர் தாத்தா தெரியுமா? | 104 |
| 79. | கழக ஆற்றுப்படை. | 105 |
| 80. | ஆசிரியர் பெருமக்கள் வாழ்க! | 107 |
| 81. | பாவேந்தர் பாரதிதாசன்! | 108 |
| 82. | மறைமலையடிகள்! | 109 |
| 83. | திருக்குறள் பெருமாள்! | 110 |
| 84. | அண்ணாமலைநகர் அதிர்ச்சி! | 114 |
| 85. | வங்க வாகை! | 115 |
| 86. | அல்லிக்குளம்! | 119 |
| 87. | திரு.வி.க. என்னும் மேலோன்! | 120 |
| 88. | பாவாணர்! | 122 |
| 89. | பெரியாரைப் பெற்றிழந்தோம்! பெற்றியிழந்தோம்! | 123 |
| 90. | ஓவியர் பெனடிக்ட்டு வாழ்க! | 125 |
| 91. | தமிழின்னும் வாழ்ந்ததிங்கே! | 125 |
| 92. | இக்காலத்துப் புல்லிசையும், சுந்தரேசனார்தம் நல்லிசையும்! | 127 |
| 93. | ஈரங்கொள் தமிழ்போல் அவன்புகழ் என்றும் இருப்பதுவே! | 129 |
| 94. | காமரா சென்னும் கடமை மாமலை! | 130 |
| 95. | அவனே இவன்! | 131 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 96. | பாவாணர்க்குத் துணை நிற்பதே பைந்தமிழ்க்குத் துணை நிற்பது! | 132 |
| 97. | அன்புருவே எங்கள் அறிவழகா! | 133 |
| 98. | திருமலை முத்துச்சாமி வாழ்க! | 135 |
| 99. | தமிழமல்லன் முயற்சி வெல்க! | 136 |
| 100. | பாவாணர்! இவர் பாவாணர்! | 137 |
| 101. | புலவர் பழனிமாணிக்கத்திற்கு வாழ்த்துப்பா! | 138 |
| 102. | நாவை சிவம் வாழ்க! | 139 |
| 103. | பெரியார் பிறந்தார்; பிறந்தது உள்ளொளி! | 139 |
| 104. | புத்தனைப் போற்று! | 140 |
| 105. | தெருள்மிரு தெசினி வாழ்க! | 140 |
| 106. | தமிழோடு வாழ்கின்றான்! | 141 |
| 107. | பெரியார் உவக்கும் பெருந்தொண்டர் நெடுஞ்செழியனார் பல்லாண்டு வாழ்க! | 143 |
| 108. | பாவாணர் இரங்கல் பதிகம்! | 144 |
| 109. | செந்தமிழை வென்றெடுத்த சீரியலாளன் ஔவை! | 146 |
| 110. | பண்ணாய்ந்த பாவாணன்! | 147 |
| 111. | என் மனைவி தாமரையாள்! | 148 |
| 112. | திரு.வி.க. எனுந் தெய்வம்! | 150 |
| 113. | ஆறு. அழகப்பன்! | 151 |
| 114. | காரல் மார்க்சு – எனுங் கதிரவன்! | 152 |
| 115. | அன்பின் விளைநிலங்கள்! | 153 |
| 116. | பொன்னும் முத்தும்! | 154 |
| 117. | அரிமா வளங்கோ! | 156 |
| 118. | முனைமழுங்கா வீரன் தமிழரசன்! | 157 |
| 119. | அப்பாதுரையார் எனும் அறிவாட்சி அடங்கியதே! | 158 |
| 120 | நெல்சன் மண்டேலா! | 159 |
| 121. | பாவேந்தர் பதிகம்! | 160 |
| 122. | அம்பேத்கர் வாழ்க! | 161 |
| 123. | புலவர் அரசு வாழியவே! | 162 |
| 124. | பெரும் புகழ் பெறுக! (தெசிணி) | 164 |
| 125. | ஆறுமுகம் காட்டுகின்ற அன்புணர்வு! | 165 |
| 126. | அன்புள்ள தெள்ளிக்குட்டி! | 165 |
| 127. | அருமை மகள் தேன்மொழிக்கு! | 166 |
| 128. | அவர்தாம் பீமராவ் அம்பேத்கர்! | 169 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 129. | 'மன்சூர் அலிகான்' என்னும் மாவீரத் திரைக்கலைஞன் மன்னு தமிழாகரன் ஆகுக! | 170 |
| 130. | மல்லிகேசன் எனும் மனம் செயல் தூய்மையர்! | 170 |


## பொது 'இ' விழா – சிறப்புப் பாடல்கள்


| | | |
|---|---|---|
| 131. | அறுபது பொங்கல்! | 173 |
| 132. | பொங்கல் வாழ்த்து! | 177 |
| 133. | தங்குக பேரின்பம் தழைத்து! | 177 |
| 134. | பொங்கல் படையல்! | 178 |
| 135. | நாடு வளம்பெற வாழிய! | 178 |
| 136. | முத்தமிழ் விழா வாழ்த்து! | 179 |
| 137. | பொங்கலும் வேண்டுமோ? | 179 |
| 138. | பொங்கலாமோ...? | 180 |
| 139. | மரத் தமிழன்! | 180 |
| 140. | வெங்காலூரர்ப் பாவாணர் தமிழ்மன்றத்திற்கு வாழ்த்து! | 181 |
| 141. | பொங்கல் நினைவு! | 182 |
| 142. | 'பொங்கலோ பொங்கல்' எனப் பொய்விழாக் கொண்டாடுவதா? | 184 |


## பொது 'ஈ' திருமணம், பிற வாழ்த்துப் பாடல்கள்


| | | |
|---|---|---|
| 143. | சு. மன்னர்மன்னன் – சாவித்திரி | 187 |
| 144. | க. பழனியப்பன் – செயமணி | 187 |
| 145. | வேங்கடேசன் – புட்பராணியம்மாள் | 188 |
| 146. | உ.வே. பாலசுப்பிரமணியம் – துளசியம்மாள் | 189 |
| 147. | மு. சாத்தையா – செயலெட்சுமி (தமிழ்க்குடிமகன் – வெற்றிச்செல்வி) | 189 |
| 148. | இராசு – செயா | 190 |
| 149. | மாரி. அறவாழி – தாயம்மை | 190 |
| 150. | புலவர் சீனி. சட்டையப்பன் – மணிமேகலை | 194 |
| 151. | இளஞ்செழியன் – முல்லைவடிவு | 195 |
| 152. | சி. இராமச்சந்திரன் – பார்வதி | 195 |
| 153. | நாவை சிவம் – தாமரை, முதல்மகன் சிவ. தமிழ்க்கதிரவன் பிறப்புக்கு வாழ்த்து! | 196 |
| 154. | நாவை. சிவம் – தாமரை, மகள் தமிழ்மலர் பிறப்புக்கு வாழ்த்து! | 196 |
| 155. | அ.தெ. தமிழநம்பி – மலர்க்கொடி | 197 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
| --- | --- | --- |
| 156. | அரசிறைவன் – கதிர்மதி | 198 |
| 157. | முத்தையன் – அரசிறைவி | 199 |
| 158. | கோ. இளவழகன் – வளர்மதி | 200 |
| 159. | புலவர் சிவசண்முகம் – செல்வி கலாவதி | 201 |
| 160. | முத்துப்பாண்டியன் – மலர்விழி | 202 |
| 161. | ஈரோடு பெரு.தமிழ்வேந்தன் – பூங்கொடி | 202 |
| 162. | பேரா. ஆறு. அழகப்பனார் மகள் திருமண வாழ்த்து! | 203 |
| 163. | இராணி – சந்திரன் | 203 |
| 164. | அறிவுச்செல்வன் – கல்யாணி | 204 |

## பொது 'உ' நூல்கள் அணிந்துரை

| | | |
| --- | --- | --- |
| 165. | 'மல்லிகை' மதிப்புரை! | 207 |
| 166. | சுப்புரத்தினக்கவிஞன் பாரதிதாசற்கிப் படைப்பு! | 208 |
| 167. | 'கொய்யாக்கனி' நூலுக்குப் படையல் | 208 |
| 168. | 'தென்மொழி' இதழின் முகப்புப் பாடல்! | 208 |
| 169. | 'தென்மொழி' முதல் தொகுப்பிற்கு முன்னுரை! | 209 |
| 170. | 'பாவியக் கொத்து' நூலுக்குப் படையல் | 209 |
| 171. | 'தென்மொழி' நூல்நிறை பகுதிக்கு முன்னுரை! | 210 |
| 172. | 'தமிழ்ச்சிட்டு' இதழின் முகப்புப் பாடல்! | 210 |
| 173. | 'மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்' பகுதிக்கு முன்னுரை! | 210 |
| 174. | 'தென்மொழி' பாட்டரங்கு பகுதிக்கு முன்னுரை! | 211 |
| 175. | 'குறள்நெறி' இதழ்க்கு வாழ்த்து! | 211 |
| 176. | 'ஐயை' நூலுக்குப் படையல். | 212 |
| 177. | 'எண்சுவை எண்பது' நூல் படையல். | 213 |
| 178. | 'அறிவு' இதழ்க்கு வாழ்த்து! | 213 |
| 179. | தேவநேயப் பாவாணரின் 'திருக்குறள் தமிழ் மரபுரை'ச் சிறப்புப் பாயிரம்! | 214 |
| 180. | 'கற்பனை ஊற்று' நூல் – படையல்! | 215 |
| 181. | 'தமிழ்நூல்' – பாயிரம் | 216 |
| 182. | இறைக்குருவனாரின் 'வலம்புரி' இதழ்க்கு வாழ்த்து! | 217 |
| 183. | முனைப்புடன் பேணுக! | 217 |
| 184. | செங்கை அழகனின் 'ஆயிரம் மலர்கள்' பாடல் நூலுக்கு ஊக்கவுரை! | 218 |
| 185. | 'வண்ணச்சிறகு' இதழ்க்கு வாழ்த்து! | 218 |
| 186. | 'தனித்தமிழ்' நூலுக்கு அணிந்துரை. | 219 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 187. | பாவலர் முல்லைவாணனின் குழந்தைப் பாடல் தொகுதிக்குத் தந்த மதிப்புரை. | 220 |
| 188. | மலேசியப் பாவலர் பொன். அன்பரசனின் 'உதிரிப்பூக்கள்' பாடல் நூலுக்கு மதிப்புரை. | 221 |
| 189. | 'அந்தமான் முரசு' கிழமையிதழாக மலர்ந்ததற்கு வாழ்த்து! | 222 |
| 190. | 'கவிதை' வாழ்கவே! | 223 |
| 191. | 'குறளும் பொருளும்' நூலுக்கு வாழ்த்துரை! | 224 |
| 192. | 'தமிழ் நிலம்' இதழின் முகப்புப் பாடல்! | 225 |
| 193. | 'எதிர்நீச்சல்' நூலுக்குப் பாராட்டுப் பா! | 225 |
| 194. | 'விடியல் விதைகள்' நூலுக்கு வாழ்த்து! | 226 |
| 195. | 'ஏசுபிரான் பிள்ளைத்தமிழ்', நூலுக்கு வாழ்த்து! | 227 |
| 196. | மணிகண்டனின் 'கூட்டுக்குயில் பாட்டுக்குரல்' நூலுக்கு மதிப்புரை! | 228 |
| 197. | எழில்வாணனின் 'ஒரு சொட்டுக்கண்ணீர்' நூலுக்கு அணிந்துரை! | 229 |
| 198. | இறையரசனின் 'சிந்தனை ஊற்று' பாடல் நூலுக்குப் பாராட்டுப்பா! | 230 |
| 199. | 'பூங்கொத்து' நூலுக்கு வாழ்த்து! | 231 |
| 200. | தமிழியக்கன் – நூலுக்கு அணிந்துரை! | 232 |
| 201. | 'சிவப்பு மலர்கள்' – நூலுக்கு அணிந்துரை! | 234 |
| 202. | வாழ்க நன்றே! | 235 |
| 203. | 'பிஞ்சுதமிழ்' – நூலுக்கு வாழ்த்து! | 236 |
| 204. | நீ தமிழ்மகனா என்னும் நூலுக்கு வாழ்த்து! | 236 |
| 205. | 'செயலும் செயல்திறனும்' – நூல் படையல்! | 238 |
| 206. | 'சங்கே முழங்கு' நூலுக்கு வாழ்த்து! | 239 |
| 207. | 'தமிழீழம்' நூல் படையல்! | 240 |
| 208. | 'செந்தமிழ் செய்யுட் கோவை' நூலுக்கு அணிந்துரை! | 240 |
| 209. | 'கவிதை'யால் நீடு வாழ்க! | 242 |
| 210. | தமிழமல்லன் நூலுக்கு அணிந்துரை! | 242 |
| 211. | இறையரசனுக்கு வாழ்த்துரை! | 243 |
| 212. | 'இளமை விடியல்' – வாழ்த்துப் படையல். | 244 |

# கனிச்சாறு ஏழாம் தொகுதி

(தன்னிலைப் பாடல்கள், பெருமக்கள் சிறப்பு, திருநாள் வாழ்த்து, திருமண வாழ்த்து, மதிப்புரைகள்)

## பாடல் விளக்கக் குறிப்புகள்

### –பொது 'அ' தன்னிலைப் பாடல்கள் –

1. 1949–இல் பாவலரேறு தம் கல்லூரிப் படிப்புத் தொடக்கத்தில், அவர்தம் பதினான்காவது அகவையிலேயே எழுதியிருந்த 'மல்லிகை' 'கொய்யாக்கனி' என்ற இரண்டு பாவியங்களையும் எடுத்துக்கொண்டு, சேலத்திலிருந்து புதுச்சேரிக்குப் பாவேந்தர் பாரதிதாசனை முதல்முறையாகப் பார்க்கச் சென்றபொழுது பாவேந்தர் 'மல்லிகை'யின் முதல் பாடலாகிய,

'வான்சிரித்து வண்ணவொளி வீசிற்றங்கே;
வயல்நோக்கிப் போந்தனர்தென் உழவரெல்லாம்;
கான்யாற்றின் கரையினில் நல்வஞ்சியர்கள்
கமழ்கின்ற சந்தனத்தை யள்ளித் தம்மென்
மேனிகளில் பூசுகின்றார், பரிதி அந்த
மெல்லனைய ஒண்டொடியர் மீதில்செம்பொன்
போன்றொளியைப் பூசுகின்றான்! தமிழ்ப்பெண்டிர்
புரள்கின்ற நீள்குழலால் வணக்கம் செய்வர்!'

என்னும் பாடலைப் படித்துவிட்டுக், "கான்யாறு என்றால் காட்டாறு. அங்குக் குளிப்பவர்களுக்குச் சந்தனம் எங்கிருந்து வந்தது? சேறுதான் கிடைக்கும், அள்ளிப் பூசிக்கொள்ள!" என்று குறைகூறிப் பாவியத்தை மேலும் பார்க்க மறுத்துத் திருப்பிக் கொடுத்துப் 'பாட்டு எல்லாருக்கும் எழுத வராது; ஒரு சிலர்க்கே வரும். பாட்டுப் படிக்க வேண்டியவனெல்லாம் பாட்டு எழுதக்கூடாது. நீ போய் இன்னும் படி' என்று கூறிப் போகச் சொன்னார். பின் எத்தனைமுறை வேண்டியும், அவர் நூல்களைப் பார்க்க மறுத்து விட்டதால், ஐயா அவர்கள் புதுவையின் கடற்கரைக்குச் சென்று அமர்ந்து மிகவும் வருத்தத்துடன் எழுதிய பாடலிது.

அதன் பின்னர் நான்காண்டுகள் கழித்து 1954–இல் பாவலரேறு மீண்டும் அதே புதுவைக்கு அரசுப் பணியின் பொருட்டு வந்தபொழுது, பாவேந்தரிடம் சென்று அக்கால் சேலங் கல்லூரிப் பேராசிரியராக விருந்த தம் ஆசிரியர் மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் எழுதிக் கொடுத்தனுப்பிய கீழ்வரும் பாராட்டுப் பாடலைக் காட்டினார்.

"துரைமாணிக்கம் இன்பத்தூடு
துள்ளும்இன்ப அருவிபோன்றே
வரைமாணிக்கம் ஆகிப் பல்ல
வகையால் உணர்ச்சிப் பாக்களாக
உரைமாணிக்கக் கொத்தின் கற்கள்
உள்ளத் தழகாய்ப் பட்டை தீர்ந்து

திரைமாணிக்கம் என்னத்தேறித்
தென்னாடெங்கும் திகழ்க மன்னோ"

—இப்பாடலையும் பாவலரேறு எடுத்துச் சென்ற பாடல்களையும் கண்டு பெருமகிழ்ச்சியுற்ற பாவேந்தர், தம் மகன் மன்னர்மன்னனை அழைத்து அவரிடம், 'தம்பி, இந்தாப்பா, இவரை எங்கெங்கேயோ தேடினோமே! இங்க வந்துநிற்கிறாரு. இவரை என்றைக்கும் கைவிட்டு விடாதே. கடைசிவரை உன்னோடேயே வைத்துக்கொள்!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினார். அக்கால் பாவலரேறு, , பாவேந்தரிடம் தாம் நான்காண்டுகளுக்கு முன்பு ஒருநாள் பாவியங்களுடன் வந்திருந்த செய்தியை நினைவூட்டிக்கூறி, அக்கால் மனம் வருந்தித் தாம் எழுதிய இப் பாடலையும் பாடிக் காட்டினார். பாவேந்தர் இப் பாடலைக் கேட்டு மிகவும் வருந்தியவராயும், இப் பாடலால் மகிழ்ந்தவராயும், 'அப்பொழுது வேறு மாதிரி நிலையில் இருந்திருப்பேன்; அந்நிகழ்ச்சியை மறந்துவிடு' என்று அன்பொழுக ஐயாவுக்கு ஆறுதல் கூறினார். அதன் பின்னர் முன்னாள் பார்க்கத் தவறிய பாவலரேறுவின் இரு பாவியங்களில் 'கொய்யாக்கனி' எனும் பாவியத்தை முழுவதும் படித்துப் பார்த்து, அதனைத் தம் மகனாரிடம் கூறி அச்சிடவைத்து, அவர் தாமே விரும்பி அதற்கொரு மதிப்புரையையும் பாடலாக எழுதிக் கொடுத்தார். ஐயா வேண்டிக் கொள்ளாமலேயே பாவேந்தர் தாமே மகிழ்ந்து எழுதிக் கொடுத்த 'கொய்யாக்கனி' மதிப்புரைப் பாடல் இது:

கள்ளம் எப்படி; அப்படிக்
கடுகளவும் இலாத நெஞ்சினார்; முக்
கனிகள் எப்படி அப்படிப்
போன்றமுத் தமிழின்மேல் அன்பர்;
குள்ளம் எப்படி அப்படி
யிலாப் பெருங்கொள்கையுடையார்;
குரைகடல் எப்படி அப்படிக்
குண நிறை துரைமாணிக்கனார்
வெள்ளம் எப்படி அப்படிப்
செந்தமிழ்ச் சொற்பெருக்கேற
மேன்மை எப்படி அப்படிப்
போன்ற நடையில்தம் நல்ல
உள்ளம் எப்படி அப்படித்
தந்ததோர் உயர்தமிழ் நூல்தான்
உலகம் எப்படி அப்படிப்
பட்டதோர் நிலைகொள் கொய்யாக்கனியே!

அதன்பின் பாவேந்தருடன், புதுச்சேரியினின்று கடலூருக்கு மாறுதலாகிய 1959ஆம் ஆண்டுவரை மிகவும் நெருங்கிப் பழகியிருந்தார் பாவலரேறு. அக்கால் நடந்த பாவேந்தரின் தனிப்பட்ட நிகழ்ச்சிகள், குடும்ப நிகழ்ச்சிகள், பல.

ஏனவே பாவேந்தருடன் தொடர்பு ஏற்படுவதற்குக் கரணியமாகவிருந்த சிறப்புப் பெறும் பாடல் இதுவாகும். கவி, கவிதை, கவிஞன் என்ற மூன்று வடசொற்கள் இதில் களையப்பெற்றுள்ளன.

2. எதிலும் வெளிவராத பாடல். பழைய கோப்பிலிருந்து எடுக்கப்பெற்றது. வடசொற்கள் களையாது வெளியிடப் பெறுகிறது.

3. ஐயாவின் பள்ளி, கல்லூரி நண்பர் ஒருவர்; மிகவும் ஏழ்மையான நிலையில் ஐயாவுடன் படித்தார். உணவுண்ணவும் இயலாதநிலை அவருக்கு. எனவே ஐயா தாம் எடுத்துப் படித்த தனியறையொன்றிலேயே அவரையும் தங்கச்செய்து, வீட்டிலிருந்து தமக்கெனக் கொணரும் உணவை அவர்க்கும் பகிர்ந்தளித்து, அவரையும் அவர் கல்வியையும் பேணினார். அவரின் இனிய நட்பை எதனினும் மேலாகக் கருதி பின்னர் எழுதிய பாடல் இது.

4. புலவரின் வறுமைச் சூழலில் இருளின் அணைப்பு..

5. தூய்மையான உள்ளங்களுக்கிடையில்தான் மகிழ்ச்சி பெற முடியும். அத்தகைய தூய்மையான உள்ளங்கள் நிறைந்த இடத்திற்கே, நெஞ்சே, 'என்னை அழைத்துச் செல்' என்று உள்ளத்தை வேண்டுவதாக அமைந்த பாடல் இது.

6. ஆசிரியரின் உயிர்க் கொள்கை இங்கு மூச்சு விடுகிறது.

7. அச்சில் ஏறாத பாடல். பள்ளியில் பயிலும்போது கல்வியோடு, பண்பையும் பெற்றுக்கொள்வதுடன், அதை எவ்வாறு நோக்கவேண்டும் என்பதைப் பாவலரேறு தாம் பெற்றவற்றைக் கூறுவதன்வழி உணர்த்துவதாக அமைந்துள்ளது இப்பாடல்.

8. சென்னைக்கு முதன்முதல் வந்தபோதிருந்த தன் உள்ளத்துணர்வை பாவலரேறு அப்படியே படம் பிடித்திருக்கிறார் இப்பாடலில். கண்ணுக்கும், கருத்திற்கும் இன்பம் சேர்க்கும் எதனையும் கவினுள்ள இந்நகரத்தினிலே காணேன் என்று கூறுகிறார் பாவலரேறு.

9. வாய்மை நெஞ்சத்திலும், தூய்மை நிகழ்விலுமான தாய்மையர்க்குத் தாம் தலை தாழ்த்துவமே என்றுரைக்கின்றார் பாவலரேறு.

10. புரட்சிப் பாவலர் பாரதிதாசனாரின்மீது பேரன்பு கொண்டு, அவர்தம் பாத்திறம் வியந்து பாவலரேறு அவர்களால் பாடப்பெற்ற பாடல்.

11. தன் எழுத்துகளினால் இக்குமுக மாற்றப்பயன் ஏற்படுமோ என்று எண்ணிப்பார்த்துக் கொண்டிராமல் தொடர்ந்து எழுதிஎழுதிச் சென்று கொண்டிருக்கிறேனே... என்று இப்பாடலில் பாவலரேறு அவர்களின் உள்ளம் அழுகிறது.

12. ஐயாவின் நண்பர் ஒருவர் ஒருநாள், "எனக்குப் பாவலர்களைவிட எழுத்தாளர்களுக்கே அதிகப்படியான புகழ் உண்டு என்ற நம்பிக்கை. ஆதலின் இறந்தபின் புகழப்படும் பாவலர்களைவிட இருக்கும்போதே புகழப்படுகின்ற உரைநடை எழுத்தாளர்களுக்கும், சொற்பொழிவாளர்க்குமே உயர்ந்த நிலை ஏற்படும்" என்றார். அப்பொழுது பாவலரேறு ஐயா எழுதிய இப்பாடல் உலக அறிவு நிலையையும், அதில் பாவலர்களின் உயர்வையும் ஒருவாறு விளக்குகிறது.

13. தென்மொழி தொடங்கப்பெற்று இடைநின்ற பொழுது, ஆசிரியரின் உணர்வுப் போக்கு ஏற்ற வடிகால் இன்மையால் மிகவும் குமைந்து வருந்திக் கிடந்தது. அதுபற்றி அன்பர் ஒருவர்க்கு எழுதிய பாடல் இது.

14. 1961–இல் தென்மொழி தொடர்ந்து வெளிவர இயலாமல் இடைநின்ற போழ்திருந்த கடும் பொருளியல் நெருக்கடிக்குத் துணையாய்த் தொகை அனுப்புவதாய்ச் சொல்லிச் சென்ற

திரு.சாத்தையா (திரு. தமிழ்க்குடிமகன்) அவர்கள், தாம் சொல்லிச்சென்ற அளவுதொகை அனுப்பாமல் குறைந்த அளவு அனுப்பியமையால் அவர்க்கு ஐயா அவர்கள் தம் நிலை குறித்தெழுதிய பாடல் இது.

15. பாக்களை நூறு நூறாக வெளிப்படுத்தும் ஆசிரியரின் உள்ள உணர்வு ஒளியை விளக்குவது இப்பாடல்.

16. 1960–62 இடையிட்ட ஆண்டுகளில் தென்மொழி இதழ் நின்றுபோய் மீண்டும் தொடர அரும்பாடுபட்டு வந்தபொழுது, புதுவையில் ஓரளவு செல்வ நிலையில் இருந்த ஓரன்பர் தாம் துணைநின்று, அதனைத் தொடங்குவிப்பதாய்க் கூறி, ஓராண்டுக்காலம் அடிக்கடி அழைத்துப் பொழுதை வறிதே போக்கி, இறுதியில் நம்பிக்கை தவிர்த்தார். அவரை நொந்து ஐயா எழுதியது இது.

17. உலகில் உள்ள இயற்கைப் போக்குக்கு முரணான மக்களைக் குறித்து வருந்தி பாடிய பாடல் இது. தென்மொழியில் வெளிவராத பாடல் இது.

18. ஆசிரியரின் உள்ளம், உணர்வு, விழிகள், செவிகள், பேச்சுகள், வாழ்க்கை அனைத்தும் அனைவர்க்கும் திறந்த பொத்தகம். நண்பர் ஒருவர் மடல் தாளில் அச்சிடக் கேட்க எழுதிக் கொடுத்த பாடல் இது.

19. ஆசிரியரைப் பற்றிய தன்னிலை விளக்கப் பாடல் இது. அவர் பிறந்து வளர்ந்த சூழல், வாழ்க்கை அமைப்பு, கொள்கை, உரன், ஊக்கம், முயற்சி அனைத்தும் மிகவும் விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் விளக்கப் பெற்றிருக்கின்றன, இதில்.

20. பாவலரேறுவின் வாழ்க்கை பற்றிய சிறு விளக்கம்.

21. ஆசிரியர், தாம் சிலருக்கு வேண்டாதவராக, வெறுக்கத்தக்கவராக, கொள்கை நிலையில் மறுக்கத்தக்கவராக இருப்பினும் தமக்கென வேண்டாதவர் ஒருவருமிலர் என்றுரைக்கும் இனிய பாடல் இது. தம்மைப் பிறர் வேண்டாத விரும்பாத ஒவ்வொரு தன்மைக்கும் இயற்கைப் பொருள் ஒவ்வொன்றினை உவமை கூறி விளக்கும் தன்மை இனிமை தருவது; சுவை பொதுளியது.

22. என்றும் அழியாத பாடல்.

23. எண்ணங்கள் நிலையானவை; ஆனால் சுழற்சியுடையவை. அவை தேவையானபொழுது தேவையான அளவு வெளிப்படுகின்றன. இந்த அரிய மெய்ப்பொருள் உண்மை இப்பாட்டில் எளிய முறையில் கூறப் பெற்றுள்ளது.

24. என், நான் – என்று விளித்துப் பாவலரேறு அவர்கள் எழுதிய பாடல்களை யெல்லாம் பார்த்துச் சிலர், ஐயா – தன்னைப் பற்றியே எழுதிக் கொள்கிறார் என மறைமுகமாகக் குறைபேசத் தொடங்குகையில், அவற்றைக் கேள்வியுற்று அவற்றுக்கு விளக்கமாக எழுதிய பாடல் இது.

25. பாவலரேறு ஐயா அவர்களைச் சிறப்பாசிரியராகக் கொண்டும், திரு.க.வெ. நெடுஞ்சேரலாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டும் 1972இல் வெளிவந்த 'தீச்சுடர்' எனும் மாத இதழில் முகப்புப்பாடலாக அமைந்த பாடல்.

26. 'என்மொழி, என் இனம், என்நாடு நலிகையில், எதனையும் பெரிதென எண்ணமாட்டேன், வேறு எவரையும் புகழ்ந்துரை சொல்லமாட்டேன்' என்று தமக்கென ஓர் உறுதியான

கொள்கையை வகுத்துக்கொண்ட ஆசிரியர் தென்மொழியைக் காப்பதையே வாழ்வாகக் கொண்டு அவ்வாழ்வு தீர்ந்துவிடின் வேற்றுடலம் மாற்றிக்கொண்டு வருவேன் என்று தம் கொள்கை உறுதியை விளக்குகிறார், இப்பாட்டில்.

27. தமிழன்பர்கள் ஒரு சிலரின் மன வருத்தங்கண்டு, மனம் வருந்திப் பாடியது.

28. ஆசிரியரின் கொள்கை உறுதி முழக்கம் இது. அவரின் நன்றி யுணர்வும் இதில் தெளிவாக உணர்த்தப் பெறுகின்றது.

29. ஆசிரியரின் தனிநிலை வாழ்க்கை அவரின் பொதுநிலை வாழ்வாக அமைந்த தன்மை பற்றியது இது. தமக்கிருக்கும் தனிநிலை உணர்வுகள் எப்படிப் பொதுநிலை உணர்வுகளுடன் பொருந்தி இயங்குகின்றன என்பதை இப்பாடல் நன்கு விளக்குகிறது. இதுவும் ஒரு தன்னிலை விளக்கமே!

30. 1975–இல் இந்திய அரசியல் நெருக்கடி நிலையிலும், ஆசிரியர் பிரிவினைக் கருத்துகளைத் துணிந்து எழுதி வந்ததால் தென்மொழி இதழ் தடைப் படுத்தப் பெற்றதாகச் செய்தி வெளிவந்தது. அக்கால் ஆட்சியில் வீற்றிருந்தது கலைஞர் கருணாநிதியின் (அருட்செல்வரின்) அரசு. கலைஞர் கருணாநிதியையும் அவர் கட்சியையும் முந்தையப் பொதுத்தேர்தலின்பொழுது ஆதரித்தது தென்மொழி. ‘அதற்கு நன்றியாகவா கலைஞர், இதழைத் தடைசெய்தார்’ என்று கேட்டு எழுதிய பாடல் இது. தென்மொழி வெளிவராத பொழுது ஆசிரியரின் ‘தமிழ்ச்சிட்டு’ என்னும் சிறுவர் இதழே தென்மொழிபோல் வெளிவந்தது. அதில் தம் பணி தொடர்ந்து நடைபெறும் எனச் சூளுரைத்து வெளி வந்தது இப்பாடல்.

31. எண்ணங்கள் பல. அவற்றுள் எழுத்துகள் சில. அவற்றுள்ளும் செயலாக முகிழ்ப்பவை மிகச் சில. இவற்றுக்குள்ள இடைவெளிகள்தாம் எத்தனையெத்தனை?. இவற்றுள் நல்லவற்றையே கூறி நல்லவற்றையே செய்மின்கள் என்பது இப்பாடல்.

32. தென்மொழி இதழின் தொடக்கக் காலத்தில் ஆசிரியர்க்குத் துணையாக இருந்த அன்பர்களுள் சிலர், ஆசிரியரின் நடைமுறைகளாலும் மனவுணர்வுகளாலும் மாறுபட்டும் வேறுபட்டும் இயங்கினர். அவருள் ஒருவர் தம்பால் வரும் அனைவரிடமும் ஆசிரியரைக் குற்றங்குறைகூறி விரித்துரைப்பதும், அவரை மறைமுகமாகத் தாக்கியும் இழித்தும் தம் கட்டுரைகளிலும் பாடல்களிலும் எழுதி வருவதுமாக இருந்தார். அவரின் தவறான போக்கைச் சுட்டி எழுதியதாகும் இவ்வுருவகப் பாடல். இதில் அன்பரின் உள்ளச் சலிப்பும் வெறுக்கையும் நம்பிக்கையற்ற வெறுமைப் போக்கும் நன்கு சுட்டப் பெற்றுள்ளன.

33. ஆசிரியர் எந்தக் கருத்தையும் வெளிப்படையாகக் கூறுபவர்; எழுதுபவர். அத் தன்மையால் அவருக்கு மட்டுமின்றி, அவரைச் சூழ்ந்திருக்கும் குடும்பத்தார்க்கும் நண்பர்களுக்கும்கூடச் சிற்சில பொழுதுகளில் கேடுகள் நேர்ந்ததுண்டு. இப்பாடல் அவரின் மிகநெருங்கிய நண்பரொருவர் ‘இவர் நினைத்ததை யெல்லாம் எழுதிவிடுகின்றார்’ என்று வேறொருவரிடம் குறைகூறியது கேட்டு ஆசிரியர் மிக வருந்தி எழுதியது. இதில் நண்பர் கூறியதையே மறுக்காமல் உடன்பட்டு எழுதிய நயம் வியந்து சுவைக்கத்தக்கது.

34. ஆசிரியர் தம்மின் கொள்கைக்கு என்றும் அழிவில்லை என்பது பற்றிய பாடல்.

35. ஆசிரியரின் தன்விளக்கப் பாடல். இதில் தம்மை எவரும் விளங்கிக் கொள்ளவில்லையே என்று கவலுறுகிறார்.

36. தம் அறிவும், மனமும், செயலும் எந்த அளவு பரந்து விரிந்தது எனும் முழுத் தன்னம்பிக்கையோடு எழுதுகிறார் பாவலரேறு.

37. சென்னை வந்தபின் ஏற்பட்ட பொருளியல் நெருக்கடியோடு, நெருக்கடிநிலை (மிசா)ச் சிறைக்கழிப்புக்குப் பின்னர் ஐயா எழுதிய தன் விளக்கப்பாடல் இது.

38. தம் உயிரும் அகமும் எவ்வாறு செந்தமிழ்க்கென வாழ்கின்றன என்பதை உணர்த்துகிறார் பாவலரேறு.

39. தம் வல்லுடல் சுருண்டு படித்திடினும், நெஞ்சாங்குலையைக் கசக்கிப் பிழிந்திடினும் மொழி, இன, நாட்டினை நிமிர்த்திடச் செய்யாமல் நீட்டிப்படுத்திடேன் – என்று வீறுரைக்கிறார் பாவலரேறு.

40. மொழி, இன, நாட்டுரிமைக் கொள்கையையே தம் உயிர்க் கொள்கை என்றும் தம் கடமை என்றும் ஐயா அவர்கள் விளக்கும் பாடல்.

41. தம்மை, அன்பு கொண்டவர், அறிவுடையோர் என்றெல்லாம் கூறிக் கொண்டவர், எவரும் எம் அருந்துணைக்கு வராமல் போனதோடுமல்லால் எம் அறிவையும், செயலையும் பெரும்பிழை பேசிப் பழி காண்கின்றனரே என ஐயா அவர்கள் வருந்திப் பாடிய பாடல்.

42. உண்மையான தம் உளத்தினை நம்பிடாமல் பேதைபோல் தம்மைப் பேசுவதைத் தவிர்த்துத் தீதிலாது இனப் பணியாற்றுவேன் எனச் சூளுரைக்கிறார் பாவலரேறு.

43. எத்துணை இழிவுகள் பழிகள் கூறிடினும் தனியனாய் உழைப்பவர் உழைப்பினுக்குத் துணை செய்தும், மொழி, இன நாட்டுரிமை பெற உழைத்திடுவார்க்குத் தம்முயிர் ஈந்தும் தமிழருக்கு உலகினில் புகழ் சேர்ப்பதாய் வீறுரைக்கிறார் பாவலரேறு.

44. ஊருக்கு நல்லன செய்வதான, வேருக்குள் நீர்விடும் வேலையான தம் போக்கில் மாறுதல் இல்லை என்று உறுதிப்படுத்துகிறார் பாவலரேறு.

45. தம்மேல் பழிசுமத்துவதான பலரின் செய்திகளில் எவ்வகை உண்மையும் இல்லை என்றும் – வினைபடும் வகையினால் ஏற்படும் பற்பல விளைவுகள் வேறு வேறு தோற்றம் கொண்டவை – என்றும் விளக்குகின்றார் பாவலரேறு.

46. பொய்யைச் சொல்லி, பழியைச் சொல்லி, எத்தனைபேர் ஒருங்கிணைந்து புறப்பட்டாலும் அன்னைத்தமிழில் கரைந்துவிட்ட தன்னை வீழ்த்த முடியாதென்று புரியுமா? –என்று வினாவாய் எழுப்பி விளக்குகிறார் பாவலரேறு.

47. துன்பம் வந்து சூழினும் துவண்டிடாமல், தோல்வி தொடர்ந்து தாக்கினும் தொய்வு கொண்டிடாமல் தம்மைத் தமிழுக்கும், இன நாட்டுக்குமென நிறுத்திக்கொண்டதை விளக்குகிறார் பாவலரேறு அவர்கள்.

48. தமிழ்நிலத்தைப் பெற்றிட வழக்காடும் தமது மனம் எவற்றினும் வாடாததும், வருந்திடாததும் ஆகும் என்று விளக்குகின்றார் ஐயா அவர்கள்.

49. தம்மிடையே வந்து தமக்கு உதவுவதாய்ப் பேசிவிட்டுப் பின்னால் சென்று தூற்றுகிற குறுமதி படைத்தோரின் போக்குகளுக்கு இசைவாய்த் தம்மால் இருந்திட இயலாது. தாம்

வித்து போன்றிருக்கிற நிலையில் தம்மை அவரவர்களின் பெறுகைக்கும், உழைப்புக்கும் ஏற்ப விளைவிக்கலாம் என்று தம்மை விளக்குகிறார் பாவலரேறு.

50. பிழைப்புக்காக அறிவையும் பாழாக்கிடும் நடிப்பார் ஆட்சிக்குள் தாமிருக்கிறோமே என வருந்திப் பாடியது இப்பாடல். ம.கோ.இரா. மறைவை யொட்டி வெளிவந்த தென்மொழியின் அட்டைப்பாடல் இது.

51. தமிழ் மொழி, இன, நாட்டு முயற்சிக்காக அரசின் ஒடுக்குமுறைகளுக்கிடையே தம் எதிர்நீச்சல் வாழ்வைப்பற்றி எவரும் அக்கறைகொள்ளாமல், இணைந்து செயல்படாமல், தம்மைப் புகழ்ந்து கொண்டிருக்க வேண்டாம் என்றும், தம் மறைவுக்குப் பின்னரே தன்னுடைய நன்மை வாழ்வு புரியும் என்றும் வருந்திப் பாடிய பாடல் இது. தமிழ்ச்சிட்டு ஆசிரியவுரையாய் வந்த ஒரே தனிநிலைப்பாடல் இது.

52. தஞ்சையில் தமிழர் தேசிய இயக்கம் கடந்த 1990 சூன் 9,10 ஆம் நாட்களில் கூட்டியிருந்த தமிழர் தன்னுரிமை மாநாட்டினை அப்போதைய கலைஞர் அரசு தடைசெய்ததோடு, அல்லாமல் அத்தடையை மீறி மாநாடு நடத்தமுயன்ற எண்பது பேர்களுக்கும் மேலானவர்களைச் சிறையிலடைக்கவும் செய்தது. பதினைந்து நாள்களுக்குப்பின்னர் பிணையலில் வெளிவரவேண்டிய நிலையிலேயே அவர்கள்மீது வழக்குபதிவு செய்யப்பெற்று நடந்தது. அவ்வகையில் சிறையிலிருந்து வந்த பின்னான தென்மொழியில் வெளிவந்த பாடல் இது.

தம் உடலைப் பாறையில் தேய்த்து உரசினாலும் தம் உறுதியில் மாற்றமில்லை என்று கொள்கை முழக்கமிடும் ஐயா பாவலரேறு அவர்கள் தம்மை எத்தனைமுறைச் சிறையிலிட்டாலும் தம் கொள்கை மாறாது என்று வீறுரைக்கின்றார்கள்.

53. அறிஞர்களைப் பேணாமல் பாழ்செய்வதாகவே அரசு ஆளுமை செய்து கொண்டிருப்பதைக் கண்டு மனம் வருந்திய பாவலரேறு ஐயா அவர்களின் உள்ளச் சிதைவுகள் பாடலாய்.

54. 91–ஆம் ஆண்டு செபுதம்பர்த் திங்களில் ஈழத்துக்கு சார்பாகப் பேசியதால் சிறைப்படுத்தப்பட்டு அடக்குமுறைக்குள்ளான ஐயா அவர்கள் தாம் சிறையினின்று மீண்டபின் வெளிவந்து 'தென்மொழி'யில் எழுதியது. பொதுமை உணர்வற்ற போலியரைப் போலவோ அறிவற்ற மூளியர்போலவோ தாம் இல்லை என்பதாக விளக்குகிறது பாடல்.

55. தம் உயிர் வாழ்க்கைக்குத் தாம் ஏற்றுக்கொண்ட கொள்கை உறுதியே காரணம். மற உணர்வு உள்ளத்தில் நிறைந்திருப்பதால் இகழ்ச்சியும் புகழ்ச்சியும் தனக்கு வெற்றொலிகளே என்கிறார் பாவலரேறு.

56. 'தடா'க் கொடுஞ்சிறையுள் ஏழு மாதங்கள் அடைக்கப்பட்ட நம் ஐயா அவர்கள் பிணை விடுதலையில் வெளிவந்தபின் 'தென்மொழி'யில் எழுதிய பாடல் இது.

57. வடநாட்டுப் பார்ப்பான்கள் வன்முறை செய்கையில் வளமனைக்குள் பேருக்குச் சிறைவைத்திடும் பேரரசுகள், தமிழ்நாட்டுரிமையைக் கோரிக்கையாய் வைத்திட்டாலே 'தடா'எனச் சிறைப்படுத்துவதோ, இதுதான் குடியரசு நாட்டின் நடைமுறையா என்று குரலெழுப்புகிறார் பாவலரேறு ஐயா அவர்கள்.

ஐயா அவர்கள் தாம் 1993–ஆம் ஆண்டில் 'தடா'க் கொடுஞ் சட்டத்தின் கீழ்ச் சிறைப்படுத்தப் பட்டிருக்கையில் சிறைக்குள் எழுதிய பாடல் இது.

58. இப்பாடலும் 'தடா'க் கொடுஞ்சிறையில் இருக்கையில் எழுதப்பெபற்றதே.

59. 'தடா'க் கொடுஞ்சிறையினின்று வந்தபின் 94ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 10ஆம் ஆண்டு நாளில் பாவலரேறு ஐயா அவர்களின் பிறந்த நாளன்று அன்பர்கள் பலரும் ஐயா அவர்களின் இல்லத்திற்கும், தென்மொழி அலுவலகத்துக்கும் வந்திருந்து மகிழ்ச்சி தெரிவித்தனர். (அதற்கு முந்தைய ஆண்டு பிறந்தநாளின்பொழுது ஐயா அவர்கள் 'தடா'க் கொடுஞ்சட்டத்தின்கீழ் சிறையிலிருந்தார்கள்)

இம் மாநில மக்களின் அவல நிலை நீங்க, மக்கள் விடுதலைக்குப் பெரும்பணி ஆற்றுகிற நிலையில் தமக்குப் பிறந்தநாள் நினைவிலோர் பெருமையையும் இல்லை என்கிறார் பாவலரேறு.

60. தம் உள்ளமும், விளைவும் வெளிச்சமானதும் பொதுமையானதுமான நிலையில் தம்மின் மறைவு கதிரவனின் வீழ்ச்சி போன்றது – என்று தம்மைப்பற்றி தமிழ்ச்சிட்டுகளுக்குச் சொல்கிறார் பாவலரேறு ஐயா அவர்கள்.

61. என்னைப்பற்றி எழுதுகிற பேசுகிற நேரத்தில் மொழியை, இனத்தை, நாட்டை எண்ணுங்கள்; பேசுங்கள் என்கிறார் பாவலரேறு.

இப்பாடல் ஐயா அவர்களின் மறைவுக்குச் சில மாதங்களுக்கு முன்னர் எழுதப்பெற்றது.

62. காய்ச்சல் என்றும், உடல் சோர்வு என்றும் நெடிதாய்ப் படுத்திராத நம் அருந்தமிழ் ஐயா அவர்களை அடாத காய்ச்சல் வாட்டி வருத்திடினும் ஏடெடுத்தெழுதி விளக்குகிறார் அரிமாப் பாவலரேறு.

வன்மை நெஞ்சொடும், வலிமை உடலொடுமான ஐயனை விடாத காய்ச்சல் படாதுபடுத்தினும், கடுமைக் காய்ச்சலால் இலங்கிடும் இனத்தின் கொடுமை நிலைதான் தாளவில்லை என்று பொங்கிடும் கொள்கைப்போர் வீரர் தாம் பாவலரேறு.

–இப்பாடலும் ஐயா அவர்களின் வீட்டு மிசையின் எழுது அட்டையினின்று எடுத்துப் – பின்னர் வெளியிடப் பெற்றது.

## –பொது 'ஆ' தனியார் சிறப்புப் பாடல்கள்–

63. 1958–ஆம் ஆண்டில் பெரியார் நடத்திய இந்திய நாட்டுப் படத்தைக் கொளுத்திய போராட்டம் பற்றிய பாடல் இது.

64. பெரியார் ஈ.வே.இரா. நாட்டுப் படத்தை எரித்துச் சிறை சென்று மீண்ட பொழுது எழுதியது.

65. இது, மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணரை அவர்தாம் இருந்துவந்த திராவிடமொழி ஆராய்ச்சிக் குழுவினின்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் வெளியேற்றி, அவர்க்குப் பகரமாக எத்திறத்தானுத் தகுதிவாயாத ஒருவரை அமர்த்தியகாலை, அவர் நைந்த உளத்திற்குத் தேர்வு கூறுமுகத்தான் தி.பி.கககூஉ (1961)–ஆம் ஆண்டு ஆடவைத் திங்கள் 23–ஆம் நாள் எழுதியனுப்பிய பாவோலை.

66. அமைச்சராயிருந்த தமிழ்க்குடிமகனார் எனும் சாத்தையா அவர்களுடன் உழுவல் அன்பினராய் இருந்த நம் பாவலரேறு அவர்கள் தொடக்கக் காலத்தில் எழுதிய 'பா'மடல். சாத்தையா அவர்களின் பண்பும் – அவர்மீது ஐயா அவர்கள் கொண்டிருந்த அன்பும் விரிவாய்க் காட்டப்பட்டுள்ளன.

67. நாவலர் சோமசுந்தர பாரதியார் மறைவின்பொழுது பாடியவை.

68. திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் 'குத்தூசி குருசாமி' 'குத்தூசி' என்னும் ஒரு மாத இதழை 1962இல் தொடங்கினார். அவ்விதழ்க்கு விடுத்த வாழ்த்து இது. குத்தூசியில் வெளிவந்தது.

69.கடலூரில் 'தென்மொழி' அலுவலகம் இருக்கையில் இடையிடையே ஐயா அவர்கட்குத் துணையாய் இருந்துபின் அரசுப்பணியின் காரணமாய்த் தஞ்சைக்கு மாற்றலாகிப் போன 'தேவராசு' (பாவலர் இளஞ்சித்திரன்) அவர்கட்குப் பாவலரேறு அவர்கள் எழுதிய பாடல்.

70. இப் பாடலும் தேவராசு (பாவலர் இளஞ்சித்திரன்) அவர்களுக்கு ஐயா பாவலரேறு அவர்கள் எழுதிய பாமடலே கோப்புப்படியின் தாளின் ஓரத்தில் ஏற்பட்ட நசிவால் பாடலின் சில அடிகளில் உள்ள இறுதிச் சொற்கள் தெளிவாகயில்லை.

தேவராசு அவர்களின் அன்புள்ளத்தையும், பாவலரேறு அவர்கள் அவர்மீது கொண்டிருந்த அன்பையும் பாடல் காட்டுகின்றது.

71. 1963–ஆம் ஆண்டு பாவாணர் பொருட்கொடைத் திட்டம் தென்மொழியில் அறிவிக்கப் பெற்றது. அதன்வழி அவர்க்கு மூவாயிரம் உருபாவுக்குமேல் நன்கொடை திரட்டி அனுப்பப் பெற்றது. அக்கால் விடுத்த வேண்டுகோள் இது.

72. பாவேந்தர் பாரதிதாசன் மறைவின்பொழுது பாடிய இரங்கற்பா.

73. பாரதிதாசனின் பா நலன்கள் குறித்த பாடல்கள் இவை.

74. புலவர் சிலர் தாம் இலக்கண அறிவில் மேம்பட்டவர் என்றும் அதனால் தாம் எழுதுவதே சரியென்றும், பிறர் எழுதுவதெல்லாம் பிழையென்றும் வீம்புக்குத் தம்பட்டம் அடித்துதிரிவர். உண்மையான மெய்த்தொண்டர்களை இவ்வாறு பழித்துத்திரிந்த இலக்கணப் புலவர் ஒருவரைக் கண்டித்து எழுதியது இது.

75. பாவேந்தர் பாரதிதாசனின் வாழ்க்கைச் சிறப்புகள்.

76. இந்தி எதிர்ப்புக்காக எரிநெய் ஊற்றித் தீயிட்டுக் கொண்டு மறைவுற்ற செந்தமிழ் மறவன் சின்னசாமியை வாழ்த்தியது.

77. அறிஞர் அண்ணா மறைவின் பொழுது பாடிய பத்துப் பாடல்கள்.

78. தமிழ்ச்சிட்டுகளுக்குப் பாவாணர் தாத்தாவை அறிமுகப்படுத்திய எளிமைப் பாடல். பாவாணர் அவர்களைத் தலைவராகக் கொண்ட உலகத் தமிழ்க் கழகம் செழிப்புற்று வளர்ச்சியில் இருக்கையில் – சிறுவர்க்கும் பாவாணர் ஐயா அவர்களைக் கொள்கைவழி அறிமுகப் படுத்துகிறார் பாவலரேறு.

79. "சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக" பொன்விழா மலரில் 1970–ஆம் ஆண்டு எழுதிய கழக ஆற்றுப்படைப் பாடல்.

80. 'ஆசிரியர் கூட்டணி' என்னும் இதழில் வெளிவந்த தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை வாழ்த்திப் பாடிய பாடல்.

81. தமிழ்ச் சிறுவர்களுக்குப் பாவாணர் தாத்தவை அறிமுகப் படுத்தியதைத் தொடர்ந்து நரம்புக்கு நரம்பு உணர்வேற்றவும், உயிர் நாடிக்குநாடி தமிழ் ஊற்று பெருக்கவுமான பாவேந்தரை அறிமுகப்படுத்துகிறார் பாவலரேறு.

82. சிறுவர்களுக்கு மறைமலையடிகளை அறிமுகப் படுத்துகிறார் பாவலரேறு. எளிய வகையில் அடிகளாரின் ஏற்றத்தைச் சொல்லுகிறது பாடல்.

83. புதுவை மாநிலம், பாகூர் வட்டம், மூர்த்திக்குப்பம் என்னும் சிற்றூரில் வாழ்ந்த திருக்குறள் பெருமாள் என்னும் அருந் தமிழ்த் தொண்டரைப் பற்றிய எழில்மிகு பாடல் இது. ஆசிரியர் வரைந்த அவர் ஓவியத்துடன் தென்மொழியில் வந்தது.

84. ஆட்சியிலிருப்பவர்கள், பல்கலைக் கழகங்களைக் கட்டாயப்படுத்தித் தமக்குப் பட்டம் பதவிகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இவ் வழக்கம் கூடாது என்பதைக் கண்டித்த பாடல் இது. கலைஞர் கருணாநிதிக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பண்டாரகர் பட்டம் வழங்கியபொழுது, அவர் வருகையைக் கருப்புக்கொடி காட்டி மறுத்த மாணவர்கள் பலரைக் காவலர்கள் கடுமையாகத் தாக்கினர். அக் கொடுமையைக் கடிந்து எழுதியது இது.

85. கிழக்கு வங்க விடுதலைப் போராட்டத்தில் பாக்கித்தானியர் செய்த கொடுமைகள், இந்தியப்படை அப் பாக்கித்தானியப் படையை அடக்கியது முதலியன இப்பாட்டில் அழகு பெறக் காட்டப் பெறுகின்றன.

86. வெளிவராத பாடல். பழைய கோப்பிலிருந்து எடுத்தது.

87. திரு.வி.க. என்னும் மேலோன்! 1973–இல் திருவாரூரில் நடைபெற்ற திரு.வி.க. சிலை திறப்பு விழா மலர்க்கு திரு.வி.க.பற்றி எழுதிய பத்துப் பாடல்கள்.

88. பாவாணரைப் பற்றிய சுருக்க விளக்கம். பாவாணர் அவர்களின் பிறந்தநாளுக்குக்கென எழுதப் பெற்றுத் தென்மொழியில் வெளியான பாடல்.

89. பெரியார் மறைவின் பொழுது பாடிய பாடல். பெரியாரைப் பற்றிய அருமையான படப்பிடிப்பு.

90. ஈழத்து ஓவியர் பெனடிக்ட்டு, ஐயா அவர்களை அமர்த்தி நேருருவை வரைந்தார். பாவேந்தர் உள்ளிட்டப் பலரையும் நேருருவாய் வரைந்தவர் அவர். அவர் ஐயா அவர்களைப் பார்ப்பதும், வரைவதுமான அந்நேர இடைவெளியில் – அவர் எத்தனைமுறை பார்த்தாரோ அதையும் கணக்கிட்டதோடு அவர் வரைந்து முடித்தவுடன் – ஐயா அவர்கள் அவரைப் பற்றிய இப் பாடலையும் எழுதிக் கொடுத்தார்கள்.

91. சென்னைப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பேரகரமுதலி (Madras University Tamil Lexicon) என்ற ஓர் அகர முதலியைத் தப்பும் தவறுமாகவும் தகுதிக் குறைவாகவும் 1939–இல் வெளியிட்டது. அதன் தொகுப்பாசிரியர் குழுவின் தலைவராகவும் உறுப்பினராகவும் எசு.வையாபுரி, முதலிய தமிழ்நலம் கருதாத பேராசிரியர் பலர் இருந்தனர். 1913 முதல் 1939வரை இருபத்தேழு ஆண்டுகள் இடைவெளி கொண்டதும், ஏறத்தாழ நான்கு இலக்கத்துப் பத்தாயிரம் உருபா செலவில் வெளிவந்ததுமான இவ்வகரமுதலியால் தமிழ்மொழியின் பல பெருமைகளும் தனிச் சிறப்புகளும் குறைவுற்றுப் போயின. அதனைப் பலவகையாலும் தொடர்ந்து கண்டித்து வந்தார் மொழிப் பேறிஞர் ஞா.தேவநேயப் பாவாணர் என்னும் பன்மொழி ஆய்வு வல்லுநர். அதன் பொருட்டுத் தமிழ்ப் பகைவரால் அவர் புறந்தள்ளப் பெற்றார். எனவே வாழ்நாள் முழுவதும் அவர் தம் தகுதிக் கேற்பவும் அஃகியகன்ற அறிவு வெளிப்படுமாறும் ஒரு பதவியிலும் அமர்த்தப் பெறாமலும் வாழ்வியல் நலம் கெட்டும் வாழவேண்டியிருந்தது. இவரின் உண்மையான அறிவுத்திறன் நன்கு புலப்படுமாறு தென்மொழியில் தொடக்கக் காலத்திலிருந்து ஆசிரியர் பல கட்டுரைகளையும்

பாடல்களையும் எழுதி வெளிப்படுத்தி வந்தார். பாவலரேறு அவர்கள், மொழிப் பேரறிஞரின் மாணவர் ஆகையால், அவர்க்குச் செய்ய வேண்டிய இன்றியமையாக் கடமையாகவும் பலர்க்கும் தம் ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலம் நன்கு விளங்குமாறும் அவர் பலமுறை கருத்துரைகளை வெளிப்படுத்தி வந்ததன் பயனாக, இறுதியில், கலைஞர் கருணாநிதியின் ஆட்சிக் காலத்துப் பாவாணர், 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட' நெறியாளராக அரசுப் பதவியில் அமர்த்தப் பெற்றார். அவ்வமர்த்தத்திற்கு மகிழ்ந்து கலைஞரையும் அவர் செயலையும் பாராட்டி எழுதிய பாடல் இது.

92. குடந்தைப் பண்ணாராய்ச்சிப் பேரறிஞர் ப.சுந்தரேசனார் அவர்களின் மணிவிழா வாழ்த்தாக 1974–இல் எழுதி விடுத்தது.

93. ஆசிரியரின் சிங்கை மலையகச் செலவின்பொழுது சிங்கைத் தமிழ்முரசு ஆசிரியர் தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்களின் மறைவு குறித்து எழுதிய இரங்கற்பா.

94. காமராசர் மறைவின்பொழுது பாடியது.

95. 1975–இல் தமிழக விடுதலை மாநாடு நடத்திய ஆசிரியர் சிறைப்படுத்தப் பட்டார். ஐயா சிறையிலிருந்தபொழுது அவர் நடத்தி வந்த தென்மொழி இதழும் அரசால் தடைப்படுத்தப்பட்டதாகச் செய்தி வந்தது- அக்கால் கலைஞர் கருணாநிதி (அருட்செல்வர்) ஆட்சி நடந்து கொண்டிருந்தது. தமிழ்மொழிக்குப் பாடுபடுவதாகக் கூறப்பெறும் கலைஞரே தென்மொழியைத் தடை செய்தாரே என்று வருந்தி யெழுதியன இப்பாடல்கள்.

96. தென்மொழி சென்னைக்கு மாற்றலானபின், பாவாணர் ஐயா அவர்கட்குத் துணைசெய்வதில் அரசு செய்த இழுத்தடிப்புகளை மனத்தில் கொண்டு, பாவாணர்க்குத் துணைநிற்காமல், தமிழ்க்காவாத பிறர்க்குத் துணைசெய்வது கல்லுக்குத் துணை செய்வதையொத்தது என்று கடுஞ்சினத்தொடு சாடுகிறார் பாவலரேறு.

97. பாவலரேறு ஐயா அவர்களின் குடும்ப நண்பரும், 'தமிழம்' இதழ் ஆசிரியருமான செ.பன்னீர்ச்செல்வம் – உலகமுதல்வி ஆகியோரின் மூத்தமகன் அறிவழகன் நீச்சல்குளத்தில் நேர்ச்சியில் மறைவுற்ற பேரவலச் செய்திக்கு மனம் வருந்திய ஐயா அவர்களின் பாடல். இந் நேர்ச்சி நிகழுகையில் ஐயா அவர்கள் 'மிசா'க் கொடுஞ்சிறையில் இருந்தார்கள். மறைவுற்ற அறிவழகனின் படத்திறப்பு நிகழ்ச்சிக்கு ஒருநாள் சிறைக்காவல் விடுப்பில் ஐயா அவர்கள் வந்து கலந்து கொண்டார்கள். அக்கால் இப்பாடலை ஐயா அவர்களின் இரண்டாம் மகள் தேன்மொழி பாடுகையில் அனைவரும் அழுது அரற்றிய நிலையிலேயே கேட்க முடிந்தது.

98. திருமலை முத்துச்சாமி வாழ்க! நூலக அறிஞர் திருமலை முத்துச்சாமியின் ஐம்பதாவது பிறந்த ஆண்டு மலர்க்கு அவரை வாழ்த்தி விடுத்தது.

99. புதுவைத் தனித்தமிழ்க்கழக அமைப்பாளரும் செயலாளரும் ஆகிய தமிழமல்லன் எழுதிய, 'பாவேந்தர் ஊட்டிய தமிழுணர்வு' என்னும் நூலுக்குத் தந்த முன்னுரை.

100. உண்மைத் தமிழ்க்கே உயிராய் வாழும் மொழியியல் ஞாயிறு பாவாணரை அவரின் பணிச்சிறப்புவழி இளைஞர்க்கு உணர்த்திக் காட்டுகிறார் பாவலரேறு.

101. நல்லாசிரியர் விருது பெற்ற புலவர் பழனி மாணிக்கத்தின் பாராட்டு விழாவிற்கு விடுத்த வாழ்த்துப்பா.

102.நெடுநாள் தென்மொழி அன்பரும், மணப்பாறை திருக்குறள் பயிற்றக நிறுவனருமான புலவர் திருக்குறள் நாவை – சிவம் அவர்கள் 1978–ஆம் ஆண்டு புலவர் பட்டம் பெற்றபோது அவரை வாழ்த்தி எழுதிய பாவலரேறு அவர்களின் பாடல்.

103. பெரியாரின் நூற்றாண்டு நிறைவையொட்டி பெரியார் நம்மிடைப் பிறந்திராவிட்டால் நரியார் நாயகமே இங்கு நடந்திடும் என்று பெரியாரின் அருஞ்சிறப்பை விளக்குகிறார் பாவலரேறு அவர்கள்.

104.தமிழ்ச்சிட்டு அட்டைப்பாடலில் குழந்தைப் படங்களுடன் வெளியிடப் பெற்ற பாடல் வரிசையில் புத்தரொடு இருக்கும் குழந்தைப் படத்திற்கான பாடல் இது. புத்தனின் வாழ்வியல் சிறப்பை எளிய நடையில் சொல்கிறார் பாவலரேறு. குழந்தையாய் இருப்பவர் சித்திரச் செந்தாழை. (ஐயா அவர்களின் மூன்றாம் மகள் குழந்தையாய் இருந்தபோது எடுத்த படம்)

105.தெசிணி அவர்களின் ‘கவிதை’இதழ் பதினெட்டு ஆண்டுகளாய்த் தொடர்ந்து நடத்தப்பெற்றுவருவதற்காகப் பாவலரேறு அவர்கள் எழுதி அனுப்பிய வாழ்த்துப் பாடல், அன்னாரின் சிறப்பையும் குறித்ததாய் அமைந்தது.

106. நாய்ப்புலவர் வாழ்கின்ற நாளினிலே, நாப்புலர் சோமசுந்தர பாரதியார் சிறப்புக்குப் பாப்புகழ் பாடுகிறார் பாவலரேறு. சோமசுந்தர பாரதியாரின் நூற்றாண்டு நிறைவுக்குத் ‘தென்மொழி’ – சிறப்பிதழாகவும், ஐயா அவர்களின் இப்பாடலுடனும் வெளிவந்தது.

107. பெரியார் உவக்கும் பெருந்தொண்டர் நெடுஞ்செழியனார் பல்லாண்டு வாழ்க! பெரியார் தொண்டராய் இருந்த நெடுஞ்செழியன் அவர்களின் அறுபானாண்டு விழா மலர்க்கு வாழ்த்துப் ‘பா’வாய்ப் பாவலரேறுவின் பாடல்.

108. தம் பள்ளிப்பருவத்தினின்று பாவாணரோடு நல் ஆசிரியர்க்கான மாணவராய்ப் பயின்று, பேணிப், புரந்து வாழ்ந்த பாவலரேறு ஐயா அவர்கள், பாவாணர் அவர்களின் பிரிவால் உளந்தாளாமல் அழுந்திப் பாடிய பாடல்.

109. உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்களின் மறைவுக்கு வருந்தி அவர் புகழ் பாடிய பாவலரேறுவின் பாடல்.

110. பண்ணாராய்ச்சிப் பாவாணர் குடந்தை சுந்தரேசனார் மறைவினால் இனி யார் தமிழ்ப்பண்ணுக்குக் காப்பு? என்று வருந்திப் பாடுகிறார் பாவலரேறு.

111. திராவிடர் கழகம் அறிவித்திருந்த மநுநூல் எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டதால் கோவைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பாவலரேறு அங்கு எழுதிய பாடல்.

ஐயை – முதல்பகுதியை வேலூர்ச் சிறையில் எழுதுகையில் அந்நாலுக்குப் படையலாய்த் ‘தண்ணியல் மனைவி தாமரைக் கிதுவே’ – என்று மொழிந்த பாவலரேறு ஐயா அவர்கள் தம் மனைவி தாமரை அவர்களின் அன்பின், பண்பின் சிறப்பு குறித்து விரித்துப்பாடிய பாடல் இது.

112. மணியும் நேரமும் காலமும் பாராது மக்கட் குழைத்த மணவழகனார் திரு.வி.க. அவர்களின் நூற்றாண்டில் அவரின் தெய்வ வாழ்வை தெளிவுறுத்துகிறது பாவலரேறு அவர்களின் இப்பாடல்.

113.முனைவர் ஆறு.அழகப்பன் அவர்கள் சென்னையிலிருந்து செயற்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின், தமிழ், சமற்கிருதம் மற்றும் பிற இந்திய மொழியாராய்ச்சி நிறுவன இயக்குநர் பொறுப்பை விடுத்து 21.7.1983 அன்று வீடுவந்து விருந்தேற்று விடைபெற்றபோது அவர்க்கு ஐயா தம் நூல்களின் தொகுதி ஒன்றைத் தந்து வாழ்த்தியெழுதிய பாடல் இது.

114. உலகத்தமிழின முன்னேற்றக் கழகம் தொடங்கப்பெற்றபின் – அதன் கொள்கைகளில் ஒன்றான "தமிழ்த்தேசியத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்" என்பது குறித்துப் பாவலரேறு அவர்களின் சிறப்பாசிரியப் பொறுப்பில் வந்த 'தமிழ் நிலம்' இதழில் செய்திகள் நிறைய வந்தன. பொதுவுடைமை குறித்த அறிவியல் நோக்கினர். இந்தியப் பொதுவுடைமைச் சிந்தனையர் பலரும் தமிழ்த் தேசியப் பார்வைக்கு வரலானார்கள் – காரல் மார்க்கசின் சிறப்பினைத் தொழிலாளர் நாளையொட்டி வந்த தமிழ்நிலத்தில் பாடலாய்த் தந்தார் பாவலரேறு.

115. கல்லும் கரம்பும் கனலெறி காற்றும் நிறைந்திருந்தாலும் பல்லடம் எனும் ஊர் பாவலரேறு ஐயா அவர்களின் பாச்சிறப்பு பெற்ற விளைநிலமாய்த் திகழக் காரணமானவர்கள் தென்மொழி முத்துக்குமரனும், பல்லடம் ஆறுமுகமும், தென்மொழி துரையரசனும் ஆவர். அவர்களின் சிறப்புக்கே பாவலரேறு அவர்களின் இப்பாடல்.

116. நெஞ்சம் புண்ணாகிப் புலம்பிடும் பொழுதில் கண்ணாகித் தம்மைக் காத்திடும் அன்பினர் என வெங்காலூர்ப் பொற்செழியன் அவர்களையும் நெடுஞ்சேரலாதன் என்னும் முத்து அவர்களையும் அன்பு பாராட்டும் பாவலரேறு அவர்களின் பாடல்.

117. தீதிலா நெஞ்சொடும், தீந்தமிழ் உணர்வொடும் எதனைத் தாம் எண்ணினும் அதனை செயலாக்கும் குன்றா அன்பினர் என்றும் இப்பாடலில் அரிமா வளங்கோ அவர்களின் புகழ் பாராட்டுகிறார் பாவலரேறு ஐயா அவர்கள்.

118. தமிழக விடுதலைக்கான வரலாற்றில் 'தமிழ் நாடு விடுதலைப் படை' என்று படைகட்டிப் போராட எழுந்த வீரர் தமிழரசன் அவர்கள் 1.9.1987–அன்று ஒற்றர்களால் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டார். விடுதலைசேர் தமிழகத்தில் வீழ்ச்சியின்றி அவர்புகழ் வாழும் என்கிற பாவலரேறு ஐயா அவர்களின் பாடல்.

119. அப்பாத்துரையார் எனும் அறிவாட்சியர் அடங்கினரே என உள்ளங்குமுறுகிறார் பாவலரேறு அவர்கள்.

120. வாழ்வுரிமை மீட்கும் வாலையோர்க்குச் சான்றாளராய் வாழும் இனவீரன் நெல்சன் மண்டேலா என்று இப்பாடலில் புகழ்கிறார் பாவலரேறு.

121. பாவேந்தர் நூற்றாண்டு விழாவினையொட்டி அவர் சிறப்பை விரிந்துரைக்கின்றார் பாவலரேறு அவர்கள்.

122. அம்பேத்கரின் நூற்றாண்டு விழாவில் அவருக்கு நன்றி கூறி வாழ்த்துகிறார் பாவலரேறு.

123. பொன்விழாக் காணும் கோபிப்பாளையம் தூய திரேசாள் முதனிலைப் பள்ளியில் முப்பானாண்டுகளாய் ஏற்றமுடன் தொண்டாற்றிய புலவர் அரசு அவர்களின் தொண்டு செய் உளத்தினை உளம் நிறைந்து பாராட்டுகிறார் பாவலரேறு ஐயா அவர்கள்.

124. முப்பத்தோராண்டுகளாய் வெளிவந்து கொண்டிருந்த ‘கவிதை’ இதழ் இடையில் நின்று வெளிவரும் நிலையில் அவ்விதழையும் அதன் ஆசிரியர் புலவர் தெசிணியையும் பாராட்டுகிறார் பாவலரேறு ஐயா அவர்கள்.

125. தென்மொழியன்பர் சீரங்கராயன் தம்பியும், தமிழினமீட்சிப்படை வழக்கின்வழி ‘தடா’வில் இருந்தவருமான ஆறுமுகம் எனும் இளைஞர் தாம் தடாவில் இருக்கையில் பெருந்துணையாய்ச் செய்த பணிகளை நினைந்து மகிழ்ந்து பாவலரேறு ஐயா அவர்கள் எழுதிய பாடல்.

126. ‘தடா’க் கொடுஞ்சிறையில் ஐயா அடைக்கப் பட்டிருக்கையில், தம் பெயரன்களுள் ஒருவனான தெள்ளியனுக்கு (சொல்லாய்வறிஞர் அருளியார் – தேன்மொழியரின் இரண்டாம் மகன்) பாடலாய் எழுதிய மடல். சிறுவனோடு பழகும் குழந்தைமை உணர்வோடு எழுதியிருக்கிறார் பாவலரேறு ஐயா அவர்கள்.

127. உமிழ்க்கின்ற அரசியலில் உரசாமல் அங்கும் இங்கும் ஊசலாடாமல், சிமிழ்க்கின்ற பார்வையிலே சீரழிக்கும் பகை நடுங்கச் செயல் கொண்ட அருமைத் தந்தை தம் (இரண்டாம்) மகள் தேன்மொழிக்கு ‘தடா’க் கொடுஞ்சிறையில் இருக்கையில் தம் கொள்கை வாழ்வின் வீறு என்றும் குன்றாது என்றுரைத்து எழுதிய பாமடல்.

128. ‘விடுதலைச் சிறுத்தைகள்’ அமைப்பு வெளியிட்ட ஒலிப்பேழைக்கென்றும், ‘உழைக்கும் மக்கள் தமிழகம்’ இதழுக்கென்றும் பாவலரேறு ஐயா அவர்களின் அம்பேத்கர் பற்றிய இசைப்பாடல்.

129. தமிழ்மீது பற்று கொண்டும், ஐயாமீது நல்லன்பும் பற்றும் கொண்ட திரைப்பட நடிகர் மன்சூர் அலிகான் – தம் பெயரைத் தமிழ்ப்படுத்திக் கேட்டிடப் பாவலரேறு ஐயா அவர்கள் நடிகரின் அன்புள்ளங் கண்டு தமிழாகரன் எனப் பெயர்ச் சூட்டிப் பாடலாகவே எழுதிக் கொடுத்தது.

130. 1995ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கடும்காய்ச்சலில் இருந்த நம் ஐயா அவர்களைச் சென்னை இராமச்சந்திரா மருத்துவமனை உள்ளுறைஅலுவலர் திரு.மல்லிகேசன் அவர்கள் தம் பொறுப்பில் பண்டுவம் செய்து துணை இருந்ததற்கு மருத்துவமனையில் இருக்கையிலேயே கைக்குறிப்புச் சுவடியில் நன்றியுடன் ஐயா அவர்கள் எழுதி வைத்திருந்த பாடல் இது.

### பொது ‘இ’ விழா – சிறப்புப் பாடல்கள்

131. அறுபது அகவைக் கிழவி, தன் பெயர்த்தியிடம் தான் கழித்த அறுபது பொங்கல் நாட்களைப் பற்றிக் கூறியது.

132. தென்மொழி தொடங்கப்பெற்று வந்த முதல் பொங்கலுக்குச் சிறப்பிதழாக வந்த இதழில் வெளியான பொங்கல் வாழ்த்துப் பாடல்.

133. பொங்கல் வாழ்த்துப் பாடல்.

134. பொங்கல் வாழ்த்துப் பாடல்.

135. தமிழர்தம் அறிவியல், மருந்தியல், விண்ணியல், அறிவு வளர்ந்தோங்க வாழ்த்துப்பாடல்.

136. 1962–இல் கடலூர் ஆண்கள் அடிப்படைப் பயிற்சிப் பள்ளி முத்தமிழ் விழாவிற்கு விடுத்த வாழ்த்து இது.

137. தென்மொழி இடைநின்று மீண்டும் வரத்தொடங்கிய பின் வந்த பொங்கல் காலத்தில் எழுதப்பெற்ற பாடல் இது.

138. தமிழ்க்குமுகத்தின் இழிநிலையில் பொங்கும் பொங்கல் என்கிறார் பாவலரேறு.

139. எதிரிகள் போர்ப்பண் இசைத்து நிற்க, தமிழா, பொங்கல் விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறாயே! மரமா நீ? என்கிறார் பாவலரேறு.

140. வெங்காலூர்ப் பாவாணர் தமிழ் மன்றத்திற்கு நேரில் சென்ற பொழுது வாழ்த்தியது.

141. தமிழினம் எல்லா நிலைகளிலும் அடிமைப்பட்டிருக்கும் நிலையில், என்றைக்கு அந்த அடிமை நிலைகளெல்லாம் மாறுகிறதோ அன்றுதான் பொங்கல் திருநாள் என்கிறார் பாவலரேறு.

142. உண்மையான தன்னுணர்வு பெறாமல் தன்னுரிமையை எய்தாமல் எந்த விழாக்களிலும் ஈடுபடுவதில்லை மனம். இதைப்பற்றி நினையாதவர்களே விழா வேடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அவர்களை மெய்ம்மைத் தமிழர் என்று சொல்லலாமா!

## பொது 'ஈ' திருமணம், பிற வாழ்த்துப் பாடல்கள்

143. சு. மன்னர்மன்னன் – சாவித்திரி: பாவேந்தர் மகன் மன்னர்மன்னனின் திருமணத்திற்குப் பாவலரேறுவின் வாழ்த்து இது. 1954–இல் புதுச்சேரிக்கே வந்துவிட்ட நிலையில் பாவேந்தர் குடும்பத்துடன் நெருங்கிய பழக்கம் கொண்டிருந்தார் பாவலரேறு.

144. க. பழனியப்பன் – செயமணி :ஆசிரியரின் கல்லூரி நண்பர் க.பழனியப்பனின் திருமண வாழ்த்துப் பாடல் இது. ஆசிரியர் தலைமையேற்று நடத்திய முதல் திருமணம் இது.

145. வேங்கடேசன் – புட்பராணியம்மாள்: அன்பர் ஒருவர்க்குத் திருமண வாழ்த்துப் பாடல்.

146. உ.வே. பாலசுப்பிரமணியம் – துளசியம்மாள்: 1958 ஆம் ஆண்டிலேயே சீர்திருத்தக் காதல் கலப்புமணம் செய்துகொண்ட உ.வே.பாலசுப்பிரமணியன் – துளசியம்மாள் இணையருக்கு வாழ்த்துரைத்து விடுத்த பாடலிது.

147. மு. சாத்தையா – செயலெட்சுமி (தமிழ்க்குடிமகன் – வெற்றிச்செல்வி) :ஆசிரியரின் தென்மொழிக்குத் தொடக்கக் காலத்தில் உறுதுணையாக நின்ற தமிழ்க்குடிமகனார்க்குத் திருமண வாழ்த்துப் பாடல். ஆசிரியர் தலைமையில் நடந்த திருமணம். திருமணத்தில் மகபுகுவஞ்சி – நூல் வெளியிடப் பெற்றது.

148. இராசு – செயா: ஐயாவின் நண்பர் இராசுவுக்கும் – செயாவுக்கும் பின்நாளில் திருமணம் கைகூடும் என்று முன்பே கூறியிருந்தபடி 1960 இல் அவர்களுக்கு நடைபெற்ற திருமணத்தில் கலந்துகொள்ளும் வாய்பில்லாத நிலையில் எழுதிவிடுத்த வாழ்த்துப்பா.

149. மாரி. அறவாழி – தாயம்மை : சிறுகதை எழுத்தாளர் திரு. மாரி அறவாழி அவர்களுக்கும் ஆசிரியரின் தங்கை தாயம்மை (சானகி)க்கும் நடந்த திருமணத்தின்பொழுது வாழ்த்தாக வெளியிட்ட சிறு நூல் இது. சில திருத்தங்களுடன் வெளியிடப் பெறுகிறது.

இதன் கற்பனை வருமாறு:

மணம் பெற்ற மணவாளனும், மணவாட்டியும் தலைநாள் இரவில் முதலாம் பிறையில் நிலா முற்றத்து அமர்ந்திருக்கின்றனர். அக்கால், அவர் மணந்த சிறப்பும், அவர் நடத்தப் போகும் இல்லறத்தின் நலனும் அதனால் அவர் பெறப்போகும் பெருமையும் புகழும் இவற்றால் அவர் இடையறாது பெறவிருக்கும் இன்பமும் விளங்குமாறு பாடி யாழை மீட்டி இசைக்கின்றனர் தலைவியின் தோழியர்.

இருளின் அமைதியிலும், மணமக்களின் இன்பப் பூரிப்பிலும்பட்டுத் தெறித்த அவ்விசைப் பாடல்கள் வளர்பிறை முதல்நாள் தொடங்கி முழுநிலவு நாள்வரை நாளொன்றுக்குப் பாடல் ஒன்றாகத் தொடர்ந்து பாடப் பெற்று முழுநிலவில் முற்றுப் பெறுமாறு அமைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு ஒவ்வொரு திங்கள் வளர்பிறையிலும் பாடிக் களிக்குமாறு இயங்குவன.

பதினைந்து பாடல்களிலும் வளர்பிறையின் பதினைந்து நிலைகளுக்கும் பதினைந்து உவமைகள் கொடுக்கப் பெற்றிருப்பது இன்பம் பயக்கும்.

150. புலவர் சீனி. சட்டையப்பன் – மணிமேகலை: தொடக்கக்காலத்தில், ஆசிரியரின் தென்மொழி வெளிவரத் துணையிருந்த அன்பர்களுள் ஒருவர் புலவர் சீனி.சட்டையப்பன். பாவாணர் தலைமையில் ஆசிரியர் சிறப்புரையுடன் நடந்த அவர் திருமணத்தில் வாழ்த்திய வாழ்த்துப்பாடல் இது.

151. இளஞ்செழியன் – முல்லைவடிவு : திருமணவாழ்த்துப்பா

152. சி. இராமச்சந்திரன் – பார்வதி: திருமண அழைப்பிதழாக எழுதிக் கொடுத்தப்பாடல்

153. நாவை சிவம் – தாமரை, முதல்மகன் சிவ. தமிழ்க்கதிரவன் பிறப்புக்கு வாழ்த்து!

154. நாவை. சிவம் – தாமரை, மகள் தமிழ்மலர் பிறப்புக்கு வாழ்த்து!

155. அ. தெ. தமிழநம்பி – மலர்க்கொடி: ஆசிரியர் தலைமையேற்று நடத்திய, நெடுநாளையத் தென்மொழியன்பரும், தொண்டருமாகிய தமிழநம்பியின் திருமணத்தில் வாழ்த்திப் பாடியது. இது. தென்மொழிக் குடும்பத்தினர் அனைவரும் திருமணத்தில் பங்கேற்றனர்.

156. அரசிறைவன் – கதிர்மதி: நெருங்கிய தென்மொழி அன்பர் அரசிறைவன் திருமணத்தில் ஆசிரியர் வாழ்த்து இது. திருமணம் ஆசிரியர் தலைமையில் நடந்தது.

157. முத்தையன் – அரசிறைவி: தென்மொழியன்பர் புலவர் கதிர்.தமிழ்வாணன் அவர்களின் இளவல் திருமணம் இது. ஆசிரியர் நெருக்கடி நிலைக்காலத்தில் சிறையிலிருந்தபொழுது நடந்த இத்திருமணத்திற்குச் சிறையிலிருந்தே விடுத்த வாழ்த்துப்பாடல் இது.

158. இளவழகன் – வளர்மதி: உரத்தநாடு தென்மொழியன்பர் திரு.கோ.இளவழகன் அவர்கள் திருமணம் ஆசிரியர்நெருக்கடி நிலையில் சிறையிலிருந்த பொழுது நடந்தது. அதற்குச் சிறையிலிருந்து விடுத்த வாழ்த்து இது. (இக்கால் தமிழ்மண் பதிப்பகம் வைத்துத் தொண்டாற்றி வருபவர்)

159. புலவர் சிவ சண்முகம் – செல்வி கலாவதி: தமிழர் நலங்கருதும் புலவர் சிவ சண்முகம் அவர்களின் திருமணம் பாவலரேறு ஐயா அவர்கள் தலைமையில் நடந்தது. திருமணத்தில் ஐயா அவர்களின் நூறாசிரியம் (முதல் பத்துப்பாடல்கள்) நூலைப் புலவர் வெளியிட்டார்.

(அவரின் மணிவிழா 2009–ஆம் ஆண்டு நடந்த பொழுது பாவலரேறு ஐயா அவர்களின் திருக்குறள் மெய்ப்பொருளுரைச் சுருக்கத்தையும் வெளியிட்டார்) அவரின் திருமணத்திற்கு ஐயா அவர்களின் வாழ்த்து.

160. முத்துப்பாண்டியன் – மலர்விழி: பாவலர் முத்துப்பாண்டியன் திருமணத்திற்குப் பாவலரேறுவின் வாழ்த்துப்பாடல்.

161. ஈரோடு பெரு. தமிழ்வேந்தன் – பூங்கொடி: பாவலர் ஈரோடு பெரு.தமிழ்வேந்தன் திருமணத்திற்கு பாவலரேறுவின் வாழ்த்து.

162. பேராசிரியர் ஆறு. அழகப்பனாரின் மகள் காவிரியின் திருமணத்திற்குப் – பாவலரேறுவின் வாழ்த்துப்பா.

163. இராணி – சந்திரன்: பாவலரேறு தலைமையில் நடைபெற்ற பெரியார் தொண்டர் சத்திமோகன் மகள் இராணி – சந்திரன் திருமணத்திற்கு ஐயாவின் வாழ்த்து.

164. அறிவுச்செல்வன் – கல்யாணி: திருமணத்திற்குப் பாவலரேறுவின் வாழ்த்து.

### பொது ‘உ’ நூல்கள் அணிந்துரை

165. ஐயா தம் 15–ஆம் அகவையில் எழுதிய பாவியமே மல்லிகை. அதை ஒரு சுவடியில் தாமே அட்டைப்படம் வரைந்து அழகாக வடிவமைத்திருந்தார்கள். தொடக்கத்தில் மல்லிகையை இதழாகக் கொண்டு வர எண்ணியவர் அதற்கெனச் சுவடியில் எழுதியிருந்த மதிப்புரைப் பாடலே இது. பழமை காரணமாக எழுத்து மங்கிப் போனதில் சில எழுத்துகள் தெளிவில்லாமல் இருப்பதால் விடுபட்ட பகுதியாகக் காட்டப்பட்டுள்ளது.

166. பதின்மூன்றாம் அகவை தொட்டு ஐயா தாம் எழுதிய தனிப்பாடல்களைத் தம் பதினைந்தாம் அகவையில் தாமே தொகுத்துக் ‘கனிச்சாறு’ எனும் பெயரில் கையெழுத்துப்படியாக வடிவமைத்திருக்கிறார். அக் ‘கனிச்சாறு’ தொகுப்பைப் பாவேந்தருக்குப் படையல் செய்து எழுதப் பெற்றதே இப்பாடல். தொடக்கக் காலத்திலேயே பாவேந்தர்மீது அவர்க்கிருந்த பேரன்பு இதில் வெளிப்படுகிறது.

167. கொய்யாக்கனி நூலுக்குப் படையல்! தம் முதல் நூல் ‘கொய்யாக்கனி’யைத் தம் ஆசான் பாவாணர் ஐயா அவர்களுக்குப் படையல் செய்திருக்கிறார் பாவலரேறு.

168. தென்மொழி’ இதழின் முகப்புப் பாடல்!

169. ‘தென்மொழி’ முதல் தொகுப்பிற்கு முன்னுரை! தென்மொழியின் முதல் ஆண்டுத் தொகுப்பு கட்டம் செய்யப்பெற்று ஒரு தொகுப்பு நூலாக வெளியிடப் பெற்றது. பாவலரேறு. அதற்களித்த முன்னுரை இது!

170. பாவியக் கொத்து நூலுக்குப் படையல்! தம்முடைய ‘பாவியக்கொத்து’ நூலினைத் தம் பெற்றோர்க்குப் படையலாக்கியிருக்கிறார் பாவலரேறு.

171. தென்மொழியில் வெளிவரும் நூல்நிறை – பகுதிக்குரிய முன்னுரையாக இப்பாடல் எழுதப்பெற்றது.

172. ‘தமிழ்ச்சிட்டு’ இதழின் முகப்புப் பாடல்!

173. ‘மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்’ பகுதிக்கு முன்னுரை!

174. தென்மொழியில் வெளிவரும் பாவலர்கள் பலரின் பாடல்களை கொண்ட பாட்டரங்கப் பகுதிக்குரிய முன்னுரைப் பாடல் இது.

175. பேராசிரியர் சி.இலக்குவனார் நடத்திய 'குறள்நெறி' என்னும் இதழை, அவர் மகன் இ.மறைமலை பொறுப்பேற்று நடத்தத் தொடங்கினார். அவ்விதழ்க்கு விடுத்த வாழ்த்து இது.

176. இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில் அன்றைய தமிழக முதல்வர் பத்தவத்சலத்தின் இந்தி(ய) வெறிப் போக்கையும், தமிழ்ப்பகை உணர்வையும் கண்டித்து ஆசிரியவுரை எழுதியதற்காகத் தண்டிக்கப்பட்டு இரண்டுமாதம் சிறையிலிருந்தார் பாவலரேறு ஐயா. வேலூர்ச் சிறையிலிருந்த அக்காலத்தில் பாவலரேறு ஐயாவால் படைக்கப்பெற்ற பாவியமே 'ஐயை'. அந்த ஐயை நூலைத் தம் துணைவியார் தாமரையம்மைக்குப் படையல் செய்தார் பாவலரேறு.

177. மாந்த வாழ்வின் உணர்வுச் சுவைகளை அழகுற விளக்கும் பண்சுவைப் பாவியமான 'எண்சுவை எண்பது' நூலைப் பாவேந்தருக்குப் படையலாக்கி இருக்கிறார் பாவலரேறு.

178. பேரா.தமிழ்க்குடிமகன் தொடங்கிய 'அறிவு' இதழுக்கு அளித்த வாழ்த்து இது.

179. பாவாணரின் திருக்குறள் தமிழ் மரபுரைக்குத் தந்த சிறப்புப் பாயிரம் இது. நூல் அச்சாகி வெளிவந்த பின்னர் எழுதியதால் நூலினுள் சேர்க்கப் பெறவில்லை. தென்மொழியில் வெளிவந்தது.

180. பாவலரேறு ஐயா அவர்களின் அக்காள் திரு. இராசம்மாள் ஐயா அவர்கள்மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்டவர். நேர்ச்சியால் அவர் மறைவுறவே, அவருக்குக் 'கற்பனை ஊற்று' நூலைப் படையலாக்கியிருக்கிறார் பாவலரேறு.

181. திருவாரூரில் 'இயற்றமிழ்ப் பயிற்றகம்' நடத்தி வந்த புலவர் சரவணத் தமிழன் அவர்களின் தமிழ் இலக்கணக் காப்பு நூலான 'தமிழ் நூலு'க்கு பாவலரேறு அவர்களின் பாயிரம்.

182. புலவர் இறைக்குருவனார் அவர்கள் மதுரையில் இருந்தபோது 'வலம்புரி' என்னும் இதழை நடத்தினார். அதற்கு முன்னர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலையில் படித்துக் கொண்டிருந்தபோது 'பாவை' எனும் இதழை நடத்திய பட்டறிவுள்ளவர். அவ்வகையில் இதழ் நடத்த முனைந்த புலவர் அவர்களின் 'வலம்புரி' இதழுக்குப் பாவலரேறு அளித்த வாழ்த்துப்பா இது.

183. பாவலரேறு ஐயாவைச் சிறப்பாசிரியராகக் கொண்டு திரு.க.வெ.நெடுஞ்சேரலாதன் சனவரி 1973–இல் மதுரையின்று தொடங்கிய 'தீச்சுடர்' எனும் திங்களிதழ்க்குத் தந்த வாழ்த்துப்பா.

184. பாவலர் செங்கை அழகன் அவர்களின் 'ஆயிரம் மலர்கள்' நூலுக்குப் பாவலரேறு அளித்த அருமையான ஊக்கப் பாடல்.

185. ஓவியப் பாவலர் வலவன் தொடங்கிய வண்ணச்சிறகு என்னும் இதழ் முதல் முறை நின்று. இரண்டாம் முறை தொடர்ந்தது. அதற்கு விடுத்த வாழ்த்து இது.

186. புதுவை தமிழமல்லன் அவர்களின் நூலாகிய 'தனித்தமிழ்'க்குப் பாவலரேறு தந்த அணிந்துரை.

187. தென்மொழிக்குத் தூணாக இருந்து சிங்கையில் செயல்பட்ட பாவலர் முல்லைவாணன் அவர்களின் குழந்தைப்பாடல் தொகுதிக்கு ஐயா அவர்கள் எழுதிய மதிப்புரைப்பாடல் இது.

188. மலேசியப் பாவலர் பொன். அன்பரசன் அவர்களின் 'உதிரிப்பூக்கள்' எனும் பாடல் தொகுப்பு நூலுக்குப் பாவலரேறு ஐயா அவர்களின் மதிப்புரைப் பாடல்.

189. அந்தமான் முரசு – மாத இதழாகத் தொடங்கப்பெற்று பின் கிழமை இதழாக வருகின்ற முயற்சிக்கும் அதன் ஆசிரியர் சுப. சுப்பிரமணியனார்க்கும் பாவலரேறு ஐயா அவர்களின் வாழ்த்துப்பா.

190. 'கவிதை' – எனும் தலைப்பில் 'தெசிணி' என்பார் பத்தொன்பது ஆண்டுகளாய்த் தொடர்ந்து இதழ் நடத்தி வந்ததையும் அவ்விதழ் இருபதாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதையும் வாழ்த்திப் பாவலரேறு எழுதிய வாழ்த்துப்பாடல்.

191. திருக்குறளுக்குப் பொருளுரையை எளிய பாடல்களின் வடிவிலேயே உருவாக்கிக் 'குறளும் பொருளும்' என்னும் தலைப்பில் வெளியிட முனைந்த பாவலர் இறையரசன் அவர்களின் முயற்சியை வாழ்த்திப் பாவலரேறு எழுதிய வாழ்த்துப்பாடல்.

192. 'தமிழ் நிலம்' இதழின் முகப்புப் பாடல்!

193. பாவலர் கடவூர் ப. மணிமாறன் அவர்களின் முதல் முயற்சியாக அவரின் பாடல் தொகுப்பு நூல் 'எதிர்நீச்சல்' எனும் பெயரில் வெளிவந்தது. அதற்குப் பாவலரேறு ஐயா அவர்கள் அளித்த வாழ்த்துப்பா.

194. பாவலர் கடவூர் ப. மணிமாறன் அவர்களின் இரண்டாவது பாடல் தொகுப்பு 'விடியல் விதைகள்' நூலுக்குப் பாவலரேறு எழுதிய அனுப்பிய வாழ்த்துப்பா.

195. புலவர் செல்லத்துரை நூலுக்கு வாழ்த்து! புலவர் அருள் செல்லத்துரை அவர்களின் 'ஏசுபிரான் பிள்ளைத்தமிழ்' நூலுக்கு ஐயா அவர்கள் எழுதிய வாழ்த்துப்பாடல்.

196. பாசறை மணிகண்டனின் பாடல் நூல் 'கூட்டுக்குயில் பாட்டுக்குரல்' என்னும் நூலுக்குப் பாவலரேறு தந்த மதிப்புரை.

197. அன்புத் தமிழுளம் கொண்டடோரய்ப் பாவலரேறு மதித்திட்ட பாவலர் எழில்வாணன் அவர்களின் 'ஒரு சொட்டுக் கண்ணீர்' நூலுக்குப் பாவலரேறுவின் அணிந்துரை.

198. சின்னத் தாராபுரம் பாவலர் இறையரசனின் 'சிந்தனை ஊற்று' பாடல் நூலிலிருந்து பல்சுவைவிருந்து உண்டதாகப் பாராட்டுப் பா எழுதி அளித்தார் பாவலரேறு.

199 . வெங்காலூர்ப் பாவலர் வில்வநாதனின் பாடல் நூலான 'பூங்கொத்து' என்னும் நூலுக்குப் பாவலரேறு எழுதி அளித்த வாழ்த்துப்பா!

200. பாவலர் தமிழியக்கன் அவர்களின் 'அறிவியல் இலக்கியம்' எனும் நூல் எட்டாத அறிவியலை எடுத்தளித்த நல்விளக்க நூலெனப் பாவலரேறு அணிந்துரை அளித்துள்ள பாடல்.

201. தென்மொழிப் பாவலர் கடவூர் ப. மணிமாறன் அவர்களின் பாடல் தொகுப்பு 'சிவப்புமலர்கள்' ஒரு நிலைத்த தமிழினத்தின் தேடல் – என்பதாக வாழ்த்துப்பா அளித்துள்ளார் பாவலரேறு.

202. பாவலர் தெசிணி அவர்களின் கவிதை – இதழ் இருபத்தைந்தாம் ஆண்டின் நுழைவுக்காகப் பாவலரேறு எழுதிய வாழ்த்துப்பா.

203. கருவூர் பாவலர் கன்னல் அவர்களின் அழகுநடை கூத்தாடும் 'பிஞ்சுதமிழ்' நூலுக்குப் பாவலரேறு அளித்த வாழ்த்துப்பா.

204. நூலுக்கு வாழ்த்து! பாவலர் எழில்வாணன் அவர்களின் இழுக்கா யாப்புடைய நீ தமிழ்மகனா? நூலின் சிறப்புக்கு வாழ்த்துரைக்கிறார் பாவலரேறு.

205. 'செயலும் செயல் திறனும்' – நூல் படையல் ! காலச்சூழல்கள், வினையழுத்தங்கள், பொருள் நெருக்கடிகள் – ஆகியவற்றுக்கிடையில் தொடர்ந்து சில ஆண்டுகளாகத் 'தமிழ்ச்சிட்டு' – சிறுவர் கலையிதழில் பாவலரேறு எழுதிய நெடிய தொடர் கட்டுரையே செயலும் செயல் திறனும். அவ்வரிய கட்டுரையைப் புதுவை அரிமா வளங்கோ அவர்களுக்குப் படையலாக்கிப் பாவலரேறு எழுதிய பாடலே இது. தொடக்கங்காலந்தொட்டே தென்மொழியோடு உழன்ற அன்பரே அரிமா வளங்கோ.

206. கடலூர் பாவலர் ப. மணிமாறன் அவர்களின் பாவேந்தும் செம்புரட்சி நூலே 'சங்கே முழங்கு' – என வாழ்த்துகிறார் பாவலரேறு.

207. தென்மொழி, தமிழ்நிலம் இதழ்களில் தமிழீழம் குறித்து வெளிவந்த பாவலரேறு அவர்களின் கட்டுரைகள், ஆசிரியவுரைகள், பாடல்களுடன் அரிய வரலாற்று முன்னுரையையும் கொண்ட தொகுப்பு நூலே தமிழீழம். அவ்வரிய நூலினைப் பாவலரேறு அவர்கள் தம்பால் உழுவலன்பு கொண்ட வெங்காலூர் அருள்மணிக்குப் படையலாக்கி எழுதிய பாடல் இது.

208. பாவலர் எழில்வாணன் அவர்களின் பண்ணியல்பு நலங்கொழிக்கும் 'செந்தமிழ்ச் செய்யுட் கோவை' நூலுக்குப் பாவலரேறு அவர்களின் அணிந்துரைப்பாடல்.

209. பாவலர் தெசிணியின் கவிதை இதழ் முப்பதாம் ஆண்டில் காலடி எடுத்துவைப்பதறிந்து 'கவிதை'க்கு பாவலரேறுவின் பாடல்.

210. புதுவைப் பாவலர் தமிழமல்லன் அவர்களின் 'பாவேந்தரும் பைந்தமிழும்' என்னும் ஆய்வுரை நூலுக்குப் பாவலரேறு அவர்களின் அணிந்துரைப்பாடல்.

211. குறளுக்குப் பாடலிலேயே உரையெழுதிய பாவலர் இறையரசன் அவர்களின் அடுத்த முயற்சியாக நாலடியாருக்கு எழுதிய பாடல் உரைக்குப் பாவலரேறு எழுதிய வாழ்த்துரை இது.

212. தமிழ்ச்சிட்டு இதழ்களில் பாவலரேறு அவர்கள் எழுதிய ஆசிரியவுரைக் கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்த 'இளமைவிடியல்' நூலுக்குப் பாவலரேறு எழுதிய படையல் வாழ்த்துப் பாடல் இது.

ஐயா அவர்களின் அம்மையார் குஞ்சம்மாள் அதற்கு முந்தைய ஆண்டு மறைவுற்றநிலையில் அவருக்குப் படையலாக இளமை விடியல் நூலைப் படைத்து எழுதப்பட்டது இப்பாடல்.

# கனிச்சாறு ஏழாம் தொகுதி

(தன்னிலைப் பாடல்கள், பெருமக்கள் சிறப்பு, திருநாள் வாழ்த்து, திருமண வாழ்த்து, மதிப்புரைகள்)

## பாடல் முதல்குறிப்பு அகரவரிசை


| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| அச்சாகும் நூலெல்லாம் | 171 |
| அடிமை அறியாமை | 25 |
| அணிகண்டேன் ; நல்ல | 196 |
| அதிர்தமிழ் நந்நாவால் | 157 |
| அமெரிக்க புரூக்ளின் | 130 |
| அருந்துகின்ற பொருளிலரை | 8 |
| அருமைமகள் தேன்மொழிக்கும், | 127 |
| அருளுளார், துன்பங் கண்டால் | 5 |
| அல்லிக்குளம் எனும் | 86 |
| அறிவுச்செல்வன் ,கல்யாணியோ | 164 |
| அன்பிருந்த நெஞ்சம்! | 180 |
| அன்பிலே மழைத்தண்ணீர்! | 37 |
| அன்புக்கு நான் அடிமை; | 29 |
| அன்புத் தம்பியே! | 141 |
| அன்புத் தமிழன் ; | 95 |
| அன்புருவே! எங்கள் அறிவழகா! | 97 |
| அன்புள்ள தெள்ளிக்குட்டி! | 126 |
| அன்புள்ள நெஞ்சே! | 66 |
| அன்புளமும் ஆழும் | 70 |
| அன்பூறும் நெஞ்சினன்; | 205 |
| அன்பென்று சொல்லுவார்; | 41 |
| அன்னைத் தமிழ்க்கும் | 156 |
| அன்னையின் அன்பிற் | 207 |
| ஆர்விடுத்தா லென்ன? | 174 |
| ஆறு அழகப்பன் அன்புத் தமிழுள்ளம் | 113 |
| இக்காலை மேவும் | 92 |
| இங்குவிளையாடினேன்; | 31 |
| இங்கோ அங்கோ | 142 |
| இசையில் தனித்தமிழை | 110 |
| இருந்தழிந் தின்றைக் கெழுந்தொளிர் | 135 |
| இருபத்தே ழாண்டுகளாய் | 120 |
| இருபதின் ஐந்தாம் ஆண்டில் | 202 |

| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| இலக்கணத்துப் புலியென்பார்; | 74 |
| இவர்களில் நானுமா ஒருவன்? | 54 |
| இறைவருக்குத் தாயாகி | 195 |
| இறைவன் திருவுளம் | 58 |
| இறைவா! நின் அருளறஞ்சேர் | 17 |
| இன் பத் தமிழ்மொழிக் கென்றும் | 6 |
| இன்பினும் துன்பினும் | 176 |
| இன்புறு நண்பர் | 148 |
| இன்றைய பயனோ நேற்றைய உழைப்பு! | 172 |
| இனிது அவளது நினைவு | 111 |
| உண்மைக் கென்றும் | 34 |
| உதிரிப் பூக்களென் றொரு | 188 |
| உயிர்தமிழுக் குடல்மண்ணுக்கு | 87 |
| உரத்த நாடென்றன் | 158 |
| உரைவேந்தர் என்றுபுகழ் | 109 |
| உலகம்மை மாரிமுத்தர் | 123 |
| உள்ளத்தால் நலிந்துள்ளேன்; | 53 |
| உள்ளமெனும் பானையிலே | 134 |
| உள்ளமோ ஓட்டைப் பானை, | 138 |
| உன்னைப் போல கோடிப்பேர்கள் | 46 |
| ஊரவர் கேண்மோ | 19 |
| ஊருக்கு நல்லன | 44 |
| எண்ணங்கள் சிதர்ந்தோடி | 80 |
| எண்ணா யிரங்கோடி | 77 |
| எத்தனை இழிவுகள் | 43 |
| எத்தனை முறைஎனைச் சிறையில் | 52 |
| எத்திரு விழாவும் | 133 |
| எந்தமிழ் நெசஞ்திளசெழிய! | 151 |
| எந்தமிழ் மொழியின் | 189 |
| எந்தமிழ்த்தாய் வீற்றிருக்கை | 160 |
| எல்லையறும் அகன் புடவி | 150 |
| எவரெனைத் தடுக்கினும் | 28 |
| எழில்வாணப் பாவலர் | 208 |
| எழுதி எழுதிச் செல்கின்றேன், | 11 |
| என் மேல் பழிகளை | 45 |
| என் மொழி இனம்நா டென் றும் | 99 |
| என் மொழி, என் னினம், | 26 |

| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
| --- | --- |
| என்றன் உள்ளம் | 60 |
| என்றன் பாட்டு நல்ல பாட்டு! | 22 |
| என்னை நினைத்தேன் | 23 |
| என்னை விளங்கிக் கொள்ளாத | 35 |
| என்னைப் பற்றி | 61 |
| என்னைப் பற்றி நான் | 55 |
| என்னையே கட்டி யிழுத்து | 69 |
| எனக்குக் குழந்தையாய் | 21 |
| எனக்கொரு கொள்கை! | 40 |
| எனைவேண் டாதவர் | 27 |
| ஏழை உழவனை, | 197 |
| ஏறுகின்ற வெய்யில்போல் | 12 |
| ஏறுமுகம் இன்றி இறங்குமுகமும்இன்றி | 125 |
| ஐந்து பொறிகளும் | 50 |
| ஓய்ந்திடல் இல்லை, | 192 |
| ஓவியர் பெனடிக் டென்றன் | 90 |
| கண்ணீர் வற்றிக் கடல்வற்றி | 108 |
| கருத்துமணம் | 146 |
| 'கல்'லென் றெடுத்து,நீ | 2 |
| கல்வி வளர்ச்சியை | 84 |
| கவிஞர் மேல் காதல் | 10 |
| காமரா சென்னும் | 94 |
| காற் றோடு காற் றாய் | 36 |
| குமிழ்த் தெழுந்த சீர்மறந்த | 14 |
| கூட்டைத் திறந்ததும் | 64 |
| கெஞ்சுவதில்லை பிறர்பால்! | 168 |
| கெடாத என்னுடல் | 62 |
| கொஞ்சித் தமிழ்பயிலும் | 203 |
| கோதிலகம் எழுந்துலவும் | 147 |
| சாகின்ற தமிழ்க்குலத்தின் | 71 |
| சிங்கை மலையகத் தமிழரை | 93 |
| சிங்கைவாழ் முல்லைவாணன் | 187 |
| சிந்தனைஊற் றென்னும் | 198 |
| சீறுகின்ற நாகத்திடை | 1 |
| சுவரை இடித்துப்பல் | 39 |
| சுற்றியிருக்கு மிந்நான்கு | 7 |
| செத்தூசிக் கொண்டுவருந் | 68 |

| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| செந்தமிழ்மறவன் சின்னச்சாமி | 76 |
| செந்தமிழ்சேர் நல்லுறவே! | 72 |
| செந்தமிழ்ப் பாட்டு நூறாயிரங் | 15 |
| செந்தமிழும் சிந்தனையும் | 206 |
| செந்தமிழை வாழ்த்தி | 38 |
| செவ்வணக்கக் கைதூக்கிச் | 118 |
| சொல்வகையும் பொருள்வகையும் | 91 |
| சோம்பல், அடிமை, | 173 |
| தங்கக்கதிர் முற்றித் தாழ்ந்தபின் | 132 |
| தப்பாய்த்தவறாய்த் தமக்காய்ப் | 119 |
| தம்மனை நினையான் | 75 |
| தமிழ் புகுந்த நெஞ்சிற்குத் | 67 |
| தமிழ்க்குடி புகுந்த நெஞ்சம்; | 178 |
| தமிழ்க்கெனப் பிறந்து | 88 |
| தமிழ்நாடு கோரிக்கை | 57 |
| தமிழ்மொழித் திருவைப் | 186 |
| தமிழநம்பி! எமை, உயிர்ப்பிக்கும் | 155 |
| தமிழுக்குத் தெசிணி செய்யும் | 209 |
| தனரா சென்னும் தன் பெயர் தவிர்த்தே | 117 |
| தனித்தமிழ் நெஞ்சால் | 193 |
| தனித்துப் பார்க்காதீர்! | 24 |
| தாம்பட்ட இழிவும் துன்பும் | 122 |
| தாழ்வுற்றுக் கிடந்திடும் | 128 |
| திருமலை முத்துச்சாமி | 98 |
| திறந்தநல் மனத்தொடு | 59 |
| திறந்திருக்கும், மற்றோரின் | 18 |
| தீந்தமிழ்ப் பாவலர்! | 190 |
| துருவுந் தூசியும் | 83 |
| துள்ளிவரும் இளங்குழந்தை | 3 |
| தூய்மையான ஓர் உள்ளத்தினை | 42 |
| தூவலினால்பொருள் | 200 |
| தென்மொழி இதழைத் தமிழக அரசு | 30 |
| தென்மொழி காத்த நெடுஞ்சேரலாதனென் | 183 |
| தென்மொழிப் பாவலர் கடலூர் மணிமாறன் | 201 |
| தென்மொழி முத்துக்குமரனின் திருவுளம் | 115 |
| நச்சுவிதை தூவுகின்ற | 194 |
| நல்லவிருள்! தூங்குகின்றார் | 4 |

| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| நாட்டுப் படத்தைக் கொளுத்துதற்கே | 63 |
| நாவை சிவம் எனும் நற் றமிழ் மகற்கு | 153 |
| நாவை சிவம் எனும் நறுந்தனித் தமிழ்மகன் | 102 |
| நாவை சிவம் தாமரை சிவம் | 154 |
| நான் மறைந்தபின்தான் | 51 |
| நிலம் பெரிது | 182 |
| நினைத்ததை யெல்லாம் | 33 |
| நீண்ட சுருட்குழல் | 131 |
| நீயும் பொய்நின் நெஞ்சும் | 16 |
| நுனிவளைந்த கூருகிர்வாய் | 85 |
| பண்டை யிருந்தே பாவலர்க்கும் | 184 |
| பத்துரைக்கு மேலும் | 179 |
| பழுத்த தமிழன் | 101 |
| பன்மொழி இலக்கணப் பரவை | 167 |
| பன்மொழி கற்றவர் | 78 |
| பாச்சுவை மல்கிப் படர்ந்த பைந்தமிழ் | 143 |
| பாட்டினில், பதினெட்டாண்டாய் | 105 |
| பாட்டுக்கு வேந்தர் | 81 |
| பாடியடங்கிய வாயொடும் | 13 |
| பாப்புலவன் பாரதி | 106 |
| பார்ப்பான் ஒருவன்; | 139 |
| பாரினில் பாட்டாளி | 114 |
| பாவலர் தெசிணி உள்ளம் | 124 |
| பாவாணர் ஒருவர்க்கு | 96 |
| பாவாணர்! இவர் பாவாணர்! | 100 |
| பாவிலுரை செய்புலவர் | 211 |
| பாவேந்தர்எனும் பாரதிதாசனார் | 177 |
| பாவேந்த ரும்தனித்தமிழும் | 210 |
| பீடுதமிழ் காக்கும் பெருதமிழ் வேந்தனொடு | 161 |
| புகழ்எனக்குப் பொருட்டில்லை; | 56 |
| புத்தனைப் போற்று | 104 |
| பூக்களைக் கண்டால் | 165 |
| பூக்கும் பொழிலுட் | 73 |
| பூத்துக் குலுங்குநகை | 144 |
| பெண்ணியல் போவியம் | 79 |
| பெரியார் உவக்கும் பெருந் தொண்டர் | 107 |
| பெரியார் தொண்டர் சக்தி மோகனின் | 163 |

| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| பெரியார் நம்மிடைப் பிறந்திராவிட்டால் | 103 |
| பெரும்பணியைச் சுமந்த உடல்! | 89 |
| பெற்றீர்; மகிழ்ந்தீர்; | 170 |
| பெற்றெடுட்து மோந்து | 212 |
| பேரன் புடையீர்! | 152 |
| பொங்குங் கடல்சூழ்ந்த | 140 |
| பொறாமையால் ஒருமனம் | 32 |
| போற்றியென் றும் பாவாலே | 166 |
| மடிப்புடை, கலையா | 136 |
| மணவழகர்க்கு நூற்றாண்டு,விழா! | 112 |
| மழைக்குக் கரையாது; | 48 |
| மற் றவர்க்குச் சொல்லும் | 47 |
| மறைமலை என்னும் | 65 |
| மறைமலையடிகளே | 82 |
| மறையரசன் வள்ளுவன் | 191 |
| மாலிருக்கும் நெஞ்சிற்கு | 169 |
| முப்புடை முந்நீர் | 181 |
| முப்பொழுதும் சிரித்தமுகம், | 204 |
| முன்சேர் ஒலிவெளிப்பட்டு | 129 |
| முன்புதை உண்டஎம் | 20 |
| மூவேந்தர் எல்லாரும் | 121 |
| மொழிஆய் இலக்குவன் | 175 |
| மொழியுங் கவலாய்; | 137 |
| வஞ்சகப் பூனைகள் | 49 |
| வண்ணச்சிறகு வலவன் | 185 |
| வாய்மை நெஞ்சிலும், | 9 |
| வில்வநாதனின் | 199 |
| விழிநோக் கொன்றி | 149 |
| வீறுதமிழ் வளர்க்கும் | 162 |
| வெங்காலூர்எனும் வியன்பெயர் சொன்னதும் | 116 |
| வெப்புமனம் வினைக்கோணல் | 159 |
| வையகத்து நிற்கும் | 145 |

# தன்னிலைப் பாடல்கள்

## 1 என்னே செய்வேன்?

சீறுகின்ற நாகத்திடை மணியும், சேற்றில்
சிரிக்கின்ற தாமரையும், காட்டி னூடே
நாறுகின்ற அகில் மரமும், மண்ணுக் குள்ளே
நற்பொன்னும், சிப்பியிடை முத்தும், ஆற்றில்
ஊறுகின்ற நல்லூற்றும், தீயைக் கக்கும்
உயர்மலையில் இயற்பொருளும் இருக்க, என்போல்
தேறுகின்ற பாவலர்க்கிங்(கு) இலக்கி யத்தில்
''திறமில்லை'' என்கின்றார், என்னே செய்வேன்?

மணக்கின்ற தமிழாலே இன்பம் சேர்த்து
மக்களிடை யெழுத்தாலே ஓர்பு ரட்சி
கணக்கின்ற வகைசெய்ய எண்ணங் கொண்டு,
'கவி' வாழும் மலர்க்காட்டின் வாழ்வி டத்தில்
''எனக்கொன்று'' வேண்டுமென்றேன்; இலக்கி யத்தை
எடுத்தியம்பும் பெருமக்கள் என்னை முத்து
''மணக்கின்ற விதமில்லை'' என்று கூறி
மறுத்துவிட்டார் 'புலவனென' என்னே செய்வேன்?

''மலைகொடுக்கும் அழகையெல்லாம் சேர்த்தும், வானின்
மகிழ்கின்ற செம்பரிதி அழகும், நீல
அலைசூழும் கடல்பாடும் பாட்டும், காலை
அழகோடும் மங்கையர்கள் எழிலும், வாழ்வில்
நிலைகுன்றி வாழ்கின்ற மக்கள் நெஞ்சில்
நினைப்பூட்டும் பாடலெலாம் வரைவேன்'' என்று
கலைவல்லார் பாற்சொன்னேன்; என்றன் பாட்டில்
''கருத்தில்லை'' என்கின்றார் என்னே செய்வேன்?

-1949

(பாவேந்தர் பாரதிதாசனைப் பார்த்துவிட்டுப் புதுச்சேரிக் கடற்கரையில் அமர்ந்து எழுதியது. ஓரிரு வடசொற்கள் களையப்பெற்றுள்ளன)

## 2 'கவி' தோன்றாதென் புலமை மண்!

“ 'கல்'லென் றெடுத்து,நீ 'மண்'ணென்று முடி”யென்று
கழறினான் என்னை நண்பன்.
'கவி'காள மேகமோ கம்பனோ வில்லியோ
கபிலனோ யாருமில்லாப்
புல்லனைக் கேட்டானே' என்றெண்ணி மிகவருந்தி
புதுக்'கவி'யைப் புனைய ஏதும்
புலமின்றி நின்று நீள் பொழுதைத் கழித்து வரப்
புலப்படா நின்றிருந் தே
தொல்லை யிது எனமுடிவு கண்டவனாய் 'வார்த்தை'களில்
தொலை சென்று நின்று கண்டேன்;
தொன்தமிழைக் கற்பதோ கடினமதைக் கற்றுப்பின்
தோய்வதோ சொல்ல வொண்ணாத்
தொல்லையென எண்ணியெந் தலை தொங்க நாணிப்பின்
தோய்கால்க ளெடுத்த வோட்டம்
தொலைசென்று எண்ணினேன் 'கவி'யொன்றென் னுள்ளத்தில்
தோன்றாத என் புலமை மண்.”

-1949 (?)

## 3 நண்பரின் இனிய நட்பே யாவையினும் இன்பம்!

துள்ளிவரும் இளங்குழந்தை குளிர்க்கையால் என்னைத்
தொட்டளிக்கும் இன்பத்தை என்றென்றும் ஒளியால்
அள்ளிவரும் வெண்ணிலவே! ஒருசெய்தி சொல்வேன்.
அழகென்னைக் கவர்ந்தென்றன் எண்ணத்தைக் கொஞ்சம்
கிள்ளிவிடும்; அக்காலை என்னெஞ்சிற் பாடல்
கிளர்ந்துவரும்; அந்நிலையே இன்பமெனச் சில்லோர்
தெள்ளியதா யுரைத்திடுவர்! என்மட்டில் இன்பம்
தெரிகின்ற பொருளில்லை என்றிருந்து வந்தேன்!

பாடிவரும் வெள்ளருவி இன்பமென்று சொல்வோர்
பாங்கினிலே சென்றுமெனக் கின்பம் கிட்டவில்லை;
கூடிவரும் சிட்டிரண்டு கொஞ்சுகின்ற மொழியில்,
கொள்ளைஇன்பம் என்றுரைத்தார் அங்குமதைக் காணேன்!
ஊடிவரும் கிள்ளையது தென்னைப் பொன்னூசல்
உட்கார்ந்தே ஆடுகையில் ஆண்கிள்ளை அங்கே
தேடிவரும்; கண்டபின்னை கொவ்வை மூக் கொட்டும்
திளைக்காத காட்சியின்பம் என்றுரைப்பார்; காணேன்!

''நீலவுடை குளிர்ஆழிப் பெண்ணுடுத்தி நிற்பாள்;
நினைவழியாப் பொன்பரிதிக் காதலனைக் கண்டு
கோலமிகு பொன்னுடையை யுடுத்தி மகிழ் விப்பாள்!
கொள்ளைகொள்வாள் உள்ளத்தை;
நெஞ்சிலின்பம் தோயும்
ஓலமிடும் கடலைப்பார்;'' என்றுரைத்தார்க் கொப்ப
ஓடியதைக் கண்டுமெனக் கின்பமென்ப தில்லை.
ஞாலமெலா மின்பத்தின் சாயலதே என்றார்;
நான்தேடி யலைந்துவிட்டேன் இன்பமெனக் கில்லை.

''நம்முடலில் தீங்கென்றால் அவளுயிரில் தீயாம்''
நற்பெண்டிர் கொஞ்சுமொழி கோடி யின்ப மென்றார்.
இம் மொழியின் வழிநின்றும் இன்பமொரு துளியும்
எனக்கில்லை! 'தமிழ்ச்சுவடி செய்கின்ற புலவர்
செம்மொழியில் சுவையில்லை எனிற்பேதை' யென்று
செப்பியவர் முறைநின்று பழஞ்சுவடி கண்டேன்.
அம்மொழியும் இன்பத்தை எனக்கூட்ட வில்லை!
அலைந்துகண்ட இடமெல்லாம் இன்பமிலாக் காடு!

ஒல்லியிடைப் பெண்டிரெலா மோடோடிப் பாயும்
ஓங்கிவளர் பசுங்கொடியில் பூத்து மணம் வீசும்,
மல்லிகையின் மணம்நுகரின் இன்பமெலாந் தோன்றும்;
மறுத்தல் முடி யாதென்றார் ஒருசிலபேர்! அங்கும்
இல்லையெனக் கின்பமதை யாரிடஞ் சொன்னாலும்
ஏதுமிலாப் பேதையென்றும் உணர்வில்லான் என்றும்
சொல்லியெனை யிகழ்ந்தவர்கள் கணக்கில்லை - ஆயின்
சொல்லிவிளக் கிடுவார்கள் இதுவரையில் காணேன்.

உழவரையான் கேட்டேன் ''செல் நெல்'' லின்ப மென்றார்.
உழைப்போரைக் கேட்கஅவர் ''ஓய்வு''தனைச் சொன்னார்.
''குழவி''யின்பம் என்றுசில கோதையர் சொன் னார்கள்.
''குறிஞ்சித்தேன்'' என்றுசில குறவர் மொழிந் தார்கள்
மழவர்தமை வினவ, அவர் 'போர்' என்றே ஆர்த்தார்!
மதப்பித்தர் தமைவிளிக்கப் பிறைமுடியோன் தன்னின்
கழலின்பம் என்றார்கள்! ''கன'' வென்றார் புலவர்!
கருத்தொன்றும் பயனில்லை;
வெறுத்தொதுக்கி விட்டேன்.

வருவிருந்தை பரவுவதில் இன்பம்மிக வென்றார்;
வருவோர்க்கு இலையென்னா திலைவிரித்துப் போட்டேன்.
ஒருதுளியும் இன்பமிலை எங்கெங்குச் சென்றும்!
''ஓடிப்பார்'' மலையுச்சி மீதிருந்தே உலகை,
பெருகின்பம் தேன்றுமென ஒருவர்சொல ஓடி,
பெருமலையில் மீதிருந்து கீழ்க்கண்டோ அச்சம்
பருகிவந்தேன், அல்லால் நான் இன்பத்தைக் காணேன்.
பார்க்குமிடம் எங்குமெனக் கின்பமிலாப் பாலை!

குளிரொளியால் எனைத்தழுவி யின்ப மளிக்கின்ற
கோலமதி! உன்னொளியால் மகிழ்கின்றேன் என்றால்,
வளரன்பால் என்னுயிரை வளர்க்கின்ற அன்பர்,
வாழ்கின்றார்; அவருடன்யான் நட்புக்கொள் கின்றேன்!
தளிரின்பம் துளிர்விட்டு வளர்கின்ற வாறு
தன்னுணர்வால் பூரித்து மகிழ்கின்றேன் அடடா!
நெளிகின்ற பொருளிளெல்லாம் இன்பத்தைக் காணும்
நெறி யென்ன நெறியென்றால் அவரினிய நட்பே!

-1950

## 4 இருளின் அணைப்பு!

நல்லவிருள்! தூங்கு கின்றார்,
நானிலத்து மக்கள்;
மெல்ல மெல்ல இரவுப்பெண்
மேலிமைகள் மூடி,
வெல்ல என்னை வருடுகின்றாள்,
விரியிருட்கை நீட்டி!
வல்லுறக்கம் கலைந்த(து) இரு
விழிவருந்த எழுந்தேன்!

பகலுழைப் பால் பயன டைந்தார்,
படுத்த யர்ந்து விட்டார்!
அகல் விளக்கில் எண்ணெயில்லை!
அயரு கின்ற நேரம்!
துகள் கொணரும் காற்றில்லை!
தென்றல் என்னை நீவ
அகமெழுந்த துயர மென்னை
அலைக் கலைப்ப தேனோ?

இருட்டியதால் உறங்குகின்றாள்
இல்லாள் என்றன் அருகில்!
உருட்டுவிழி மூடியவா
றுறங்கிய தெம் குழந்தை!
திரட்டு பெருஞ் செல்வத்தினார்
தூங்குகின்றார் நன்கு!
மருட்டு மெனை வறுமை வந்து!
மாய்க்க வில்லை ஏனோ?

விடிந்துவிட்டால் வெம்பசிக்கு
வேக வைக்க, அரிசி
முடிந்து விட்ட தாலெனக்கு
மூளைசரி யில்லை!
கடிந்து கொண்டார் குடியிருப்புக்
கூலிக் கென்ன செய்வேன்?
மடிந்து விட்டால் 'கோழை' யென்பார்
மாந்தரெனை; அறிவேன்!

வேலைக்கென வெளியிற் சென்று
வீடு நோக்கி வந்தேன்!
''மாலை வரக் கூறினை நீ
மாதமென்ன'' என்றான்;
'காலை' யென்று பல்லைக் காட்டக்
கடிந்து கொண்டான், செட்டி!
ஆலை சூழும் பஞ்சுபோல
அலைந்த தெவர் கண்டார்?

''சாலுக்குள்ளே அரிசி தேடித்
தேளைத் தொட்டு விட்டேன்;
''ஆளுக் கொன்றும் ஏதமில்லை''
என்று சொன்னான் ஐயன்!
பாலுக்கென நடை நடந்தாள்
பத்து தரம்'' என்றாள்!
''நாலுக்குள்ளே ஒன்று சொல்வீர்''
என்று கேட்டாள் இல்லாள்!

'இரண் டென்றேன்; 'கட்டாயம்
இது நடக்கும்' என்றாள்;
'புரண்டுவரும் வெள்ளத்தின்
புதுச்சுவடி யிரண்டும்
திரண்டொருங்கே அச்சாகும்'
என்பதுதான் கருத்தாம்!
மருண்டபடி நின்றி ருந்தேன்!
செய்தி யொன்று கண்டேன்!

பகலிரவாய் அமர்ந் தெழுதிப்
பாவரிசை கொண்டு
திகழ்நூலை அச்சகத்தார்
திருப்பி யிருந் தாரே!
மகள் விழித்துக் கொண்டாள்!
மனைவி விரைந் தெழுந்தாள்!
அகல் விளக்கில் எண்ணெயில்லை!
அணைத்த தெம்மை இருளே!

-1951

## 5 நெஞ்சே!

அருளுளார், துன்பங் கண்டால்
அணுகுவார், இன் சொற் காத்த
பொருளினால் தாமும் உண்டு,
புரக்குநர், சமயம் சாதி
மருளினால் மடமை தோயார்,
மாண்புளார், இருப்பா ராகில்
இருளினால் மாய்வோ னெம்மை
எடுத்தேகாய் அவர்பால் நெஞ்சே!

முதியராய் அறிவால், அன்பு
முறையினால் மகவாய், மற்றோர்
புதியராய் வருவோ ரென்னில்
புதுமகிழ் வுற்றா ராகிப்
பொதியதாய் வளமும் வாழ்வும்
பூத்துநல் லின்பம் பூத்த,
பதியுள தாகின், எம்மைப்
பரிந்தெடுத் தேகாய் நெஞ்சே!

கற்றவர், ஒழுங்கைப் பெற்றார்,
கவலறப் பணியைச் செய்வார்,
உற்றவர் நாட்டை ஆள
உரிமையும், அன்புந் தேங்கி
மற்றவர் வாழத் துன்பம்
மாய்த்தலும், ஏய்ப்புந் தீங்கும்
அற்றவர் வாழின் எம்மை
அவணெடுத் தேகாய் நெஞ்சே!

அல்வழிப் பொருளை ஆக்கல்,
ஆக்காளை இழித்துப் பேசல்,
பல்வழி மடமை காட்டல்,
பிறப்பினால் உயர்தல், தாழ்தல்,
தொல்வழி முறையென் றீவை
தோயாமல், உயர்வொ ழுக்கம்
செல்வழிச் செல்லு வோர்பால்
சேர்த்தெனை உய்ப்பாய் நெஞ்சே!

-1952

## 6 மூச்சும் பேச்சும்!

இன்பத் தமிழ்மொழிக் கென்றும்
என் மூச்சும்,
இனிய தமிழ்நாட்டைப் பற்றி
என் பேச்சும்,
அன்பின் பிணைப்பினுக் கென்றன்
கை வீச்சும்,
அடங்காமல் என்றும்இத் தரையில்
நின் றோச்சும்!

-1952

## 7 என் பள்ளிக்கூடம்!

சுற்றி யிருக்குமிந் நான்கு சுவர்கட்குள்
இன்பத் தமிழ் படித்தேன், அன்பைச்
சொல்லில் விளைத்த முதியவர்பால் இன்பச்
செந்தமிழ்த் தேன் குடித்தேன்!
வற்றி யிருக்குங் களர்நிலம் போல், வெறும்
வான வெளியினைப் போல்,நின்ற
வன்னெஞ்சை நன்னெஞ்சா யாக்கி அறிவெனும்
வளந்தனை இங்குப் பெற்றேன்!
பற்றி யிருக்குங் கல்லாமை யெனுமொரு
பாழிருள் நீங்கப் பெற்றேன்! மனப்
பான்மையும் மேன்மையும் நல்லுளத் திண்மையும்
பாங்குற இங்குக் கற்றேன்!
முற்றி யிருக்குங் கதிரினைப் போல், மழை
மூண்ட முகிலினைப் போல்,உளம்
மொய்க்கும் பயன்நிறை வாகிப் பொழிந்திட
முந்துறப் பாடுகின்றேன்!

சிட்டுக் குருவியைப் போல உரிமையும்
சிற்றெறும்பின் ஒழுங்கும்,ஒரு
சேரக் கற்றேன்! பெரும் இன்பம்பெற்றேன், இந்தச்
சுற்றுச் சுவர்களுக் குள்!
பட்டுப் புழுதரு நற்பயன் போல், உளப்
பாங்குறும் நூற்பயனும்,இந்தப்
பார்தனி லுள்ளவர் யாவரும் ஒன்றெனும்,
பண்பதும் இங்குக் கற்றேன்!
எட்டுணை மேலவர் ஆயினும் கற்கிலார்
என்றும் இழிந்த வரே! நிலை
எத்துணைத் தாழ்ந்தவர் ஆயினும் கற்றவர்
யாண்டும் உயர்ந்த வரே!
நட்டுவைத்த விதை நற்பயன் காண்டலை
நல்ல தொரு விளைவை, இந்த
நானிலம் வாழ்த்தும்! அறம்வளர்க்கும் என்றன்
நற்பள்ளி வாழிய வே!

\- 1955

## 8 சென்னை சென்றேன்...!

“அருந்துகின்ற பொருளிலரை உண்ணுகின்ற
அரும்பொருளிற் பாதியெனக் கூறிநின்றும்
மருந்தெனினும் மறைக்காமல் மறுக்கா...
மரபினஎந் தமிழரது பண்டைக்காலம்!
விருந்தென்றாற் காதவழி யோடுகின்ற
வெறுஞ் சொல்லில் வல்லார்வாழ் கின்றா”ரென்றே
இருந்துவந்தேன், ‘இல்லை’யெனக் கூறிநெஞ்சில்
இடம்பெற்றோர் வழியனுப்பச் சென்னை சென்றேன்.

விஞ்சுகின்ற அன்பை யள்ளி வீசுகின்ற
வாயெல்லா மென்பெயரே யொலிக்கும் அன்பால்
கெஞ்சுகின்ற கண்களில்நான் நிற்பேன் என்றும்
கிளர்த்துகின்ற சொல்லிலெல்லாம் ஒலிநான், நண்பர்

நெஞ்சுகளில் நிற்கின்றேன்; அஃதே யாற்றில்
நண்பரெல்லாம் என்னுடலில் ஓடுகின்ற
உஞ்சியெழும் குருதியிலே உயிராய் அன்பாய்
ஓடுகின்றார்; அவரனுப்ப, சென்னை சென்றேன்.

கண்ணோடென் கண்பிரிய, இனிய சொற்கள்
கழறும்வா யோடென்வாய் பிரிய, நெஞ்சு
புண்ணாகிப் போகந்தப் புண்ணில் வேலைப்
போட்டிட்டாற் போல் துடிக்க, நிலவுதன்னை
விண்பிரிதல் போல், நத்தை ஓடுவிட்டே
விலகுதல்போல், குருடனைக்கோல் பிரிதல் போலப்
பண்பாலும், அன்பாலும் ஒன்றாய் வாழ்ந்த
பறவையைப் போன் றன்பர்விட்டுச் சென்னை சென்றேன்.

படைதிரண்டு வரல்போல நண்பர் கூட்டம்
பதைபதைக்கும் பேச்சோடும் உள்ளத்தோடும்
விடைகொடுக்க, நானழுக, வந்தா ரெல்லாம்
விசித்தழுக, உடல்வருந்த உள்ளம் வேக
இடையில்வந்த புகைவண்டி என்னை ஏற்றி
இழுத்துச்செலப் பிரிந்த தந்தோ, குதித்து நீந்தும்
மடைவிட்ட தரைமீனாய்த் துடிதுடிக்க
மாண்புடையார் வழியனுப்பச் சென்னை சென்றேன்.

உருகுகின்ற உள்ளங்களைப் பிரிந்து வண்டி
ஓடிற்று! மடமையினால் சாகும் நாட்டைத்
தருகின்ற நல்லறிவால் திருந்து வோர்க்குத்
தளர்வூட்ட அறிவில்லா மக்கள் தம்மால்
வருகின்ற எதிர்ப்பு தன்னைப் பிளந்துசெல்லும்
வகைபோல இருள்கிழித்து வண்டி செல்லும்!
பருகுகின்ற காட்சிபல கண்டேன் நண்பர்
பிரிவினையும் ஒருவாறு மறந்து சென்றேன்.

பொருள்வைக்கும் பலகையிலே படுக்கை நீட்டிப்
புரண்டார்கள் ஓரிருவர் அவற்றிற் கெல்லாம்
அருள்கொடுத்து வைக்காத ஆட்கள் சில்லோர்,
அடித்தளத்தில் உருண்டார்கள்! அவர்கள் தம்மேல்
சுருள்சுருளாய் வட்டமிட்டுப் புகைகள் செல்லச்
சுருட்டுகளைப் பிடித்தார்கள் கிழவர் சில்லோர்!
இருள்வெளியின் தலைநீட்டிச் சிலபேர் என்போல்
எழுந்துவரும் வெண்ணிலவைக் கண்டு சென்றார்.

தடித்தசிலர் சிரிசிரித்துக் கூச்சல் செய்து
தறுதலைபோல் பெண்கள்பாற் றிரும்பிப்பார்த்தே
இடித்தஇடி போல்சிரிப்பார்! சிலரோ பெண்ணை
இடித்துவிட்டு 'வண்டியின தசைவே' என்பார்!
படித்தபடி சிலபேர்கள் இருப்பார்; ஆனால்
பார்வையெலாம் நூல்நோக்கும் எண்ணம் பெண்மேல்!
மெத்ததலை யாடுதல்போல் சிலபேர் நன்றாய்க்
குறட்டைவிட்டுத் தூங்கி யசைந் தாடுவார்கள்!

வண்டி விரைந்தோட, அதனின்வாய் சங்கூத
வால்போல் வருந்தொடர்கள் தாளம்போட
எண்டிசையும் இருள்தோய்ந்த காற்றின் ஊடே
எதிரொலிக்க, மலைகடந்து, வெளிகடந்து,
மண்டியுள்ள மரக்காடு கடந்தே, ஓடை
மரப்பாலம் பலகடந்து, ஊர்கடந்து
அண்டியுள்ள நிலையங்கள் கடந்து செல்ல,
அரைத்தூக்கத் தோடேநான் அமர்ந்து சென்றேன்.

கவிந்துள்ள மையிருளும் மறைந்துசெல்லக்
கீழ்வானும் வெளுத்துவரப் பரிதிச் செல்வன்,
குவிந்துள்ள தாமரைமொக் கவிழ்தல் போலக்
கொல்லனுலைக் களத்திரும்பின் செம்மை பூசிக்
கவின்செய்தான்; வண்டியினுள் ளிருந்த வாறே,
காட்சியினைக் கண்டுணர்வால் பூரித்தேனே!
நவில்கின்ற செந்தமிழால் இனிக்கும் உள்ளம்;
நற்காட்சி தனைக்கண்டு குளிரும் கண்கள்!

'இரவி'யெழுந் தொருமணிக்குள் வண்டி சென்று
இறக்கிற்று! நடுநிலையம்!! அடடா, அங்கு
அரவந்தான் என்ன! அங்கே ஆட்கள்கூட்டம்
அழகொழுகும் கண்காட்சி! இவைக ளூடே
வரவுக்குக் காத்திருந்தான் உறவோன்; ஓடி
வந்தெனது பெட்டியினை வாங்கிக் கொண்டு
பரவியுள்ள மக்கள்புன லூடே சென்று
பாதையினை அடைந்திட்டான்! பின்னால் சென்றேன்.

கொண்டுவரும் பெட்டியினைப் பிடுங்கிக் கொண்டு
கூலியாள் வேண்டுமா என்பார்! வந்து
வண்டியினுள் ஏறிப்பெரும் மூட்டை தூக்கி
வந்திடுவார்! ஓர்புறத்தில் தேநீர் விற்கும்!

''ரண்டி, ரண்டி'' என்றிடுவார் ஒருவர் ''ஈதர்
ஆவ் ஜீ'' என்பார் ஒருவர்; வந்து நின்ற
வண்டியினின் வந்தவரைச் சென்று பார்த்(து) ''ஐ
வெல்கம் யூ'' என்றிடுவார் தமிழைக் காணேன்!

ஆங்கிலத்தில் அரைகுறையாய்ப் பேசுவோர்கள்!
அதுவிளங்காத் தெலுங்கினிலே விடைசொல் வோர்கள்;
காங்கிரசு உடையணிந்தார் இந்தி பேசிக்
களித்திருப்பார்! அண்டையுள்ள பெண்கள் எல்லாம்
பாங்கோடு செல்லுகையில் உதட்டுச் சாயம்
பூசிப்பின் கண்ணாடி பார்ப்பார்! ஈதை
யான்கண்டு மனம்புழுங்கி நின்றேன்; செம்மை
யறிவுள்ள செந்தமிழ்த்தேன் நாடாம்; ஈதோ?

விரிந்துள்ள பாதை! ஒரு மருங்கினின்று
விரைந்து வரும் இயங்கிகளோ தொடர்ந்து காணும்
சரிந்துவிழும் போலவரும் பின்னி யங்கி!
சாலையின திருமருங்கும் மக்கள் கூட்டம்!
வரிந்தபடி இடுப்பினிலோர் வேட்டி கட்டி,
வண்டிகளை மாடுகள்போ லிழுத்துச் செல்வர்!
புரிந்துவரும் புன்னகையால் குடைகள் ஆட்டிப்
போவதுமாய் இருப்பதுமாய் இருப்பர் பெண்கள்!

''கோட்டுகள்''மேல் தொங்கும்! ஒரு நீண்டசட்டை
குதிகால்கள் தெரியாது தொங்கும்; வாயில்
பாட்டு தெறித் தோடுமதன் 'பாணி'வேறு!
பார்க்குமிட மெல்லாம்ஆங் கிலமே தோன்றும்!
'சேட்டு'களும், தெலுங்கர்களும் அவர்கள் பேச்சில்
சொல்லிமகிழ் வெய்திடுவார்! தமிழர் மேலை
நாட்டுமொழி பேசிடுவார் நாடோ சென்னை!
நடப்ப தெல்லாம் 'மதராசு'ம் 'மெட்ராசு'மாம்!

மக்களுடை ஆங்கிலத்தைக் காட்டும்; மக்கள்
மனத்தினிலே ஆங்கிலநீ ரோட்டம்! பேச்சில்
திக்கிவரும் 'வார்த்தைகள்', பத் தென்றால், பாதித்
தெலுங்கினிலும், ஆங்கிலத்தில் மூன்றும் போனால்
சிக்கியிருக் குமிரண்டு தமிழுங் கூடச்,
சரிக்குநிகர் வடமொழியாம்! தேடித் தேடித்
திக்குமுக்க லாடிவிட்டேன் தமிழைக் காண!
தெருவெல்லாம் தமிழ்த்தெருவே உருவம் வேறு!

மாடன்ன கைவண்டி இழுப்பார்! உள்ளே
மனைவியொடு கணவன் அவர் குழவியொன்று
ஓடன்ன கன்னம்!உலர் வயிறுகொண்டே
ஓடிடுவான் வைத்திழுத்துத் திணறும் மூச்சு!
நாடென்ன வென்றால்செந் தமிழ் நாடென்பேன்!
நடையென்ன வென்றால் காட்டிடையில் வாழும்
கேடுசூழ் 'மிருக'நடை என்பேன்! தூய
குறள்பிறந்த நாடேநீ இருள்வாய் என்பேன்!

'இல்'லென்னும் வண்டிதனை இழுக்கச் செய்வார்
என்றென்றும் பெண்டிரெல்லாம் ஆண்கள் தம்மை;
'நில்'லென்றும் 'போ'வென்றும் கூறி ஆட்டும்
நிலையாகக் கையிழுப்பு வண்டி யேறிப்
'பல்'லெல்லாங் காட்டியே மைக் கண்களாட்டிப்
பாதத்தில் வண்ணத்தோல் குறடு தோயக்
'கொல்'லென்று பிறர்நகைக்கக் கால்மேல் மற்றோர்
கால்போட்டே யிருப்பாரை யிழுப்பார்க் கண்டேன்!

சுட்டெரிக் கின்றவெய்யில் பட்டுப் பட்டுச்
சுருண்டுவிழும் தோல்கருமை நிறத்தை வெல்லும்!
தட்டுத்தடு மாறிவண்டி யிழுத்துச் செல்லும்,
தளர்வுடையார்! வண்டிக்குள் வெளியிற் றொங்கும்
சுட்டுவிரல் நுனியும்வெம் பரிதிகாணாச்
சிவந்திருக்கும் செல்வத்தார் தம்மை ஏற்றி
முட்டிக்கா லொடியும்வகை யிழுத்துச் செல்லும்,
முதுகுவளைந் தாரிருக்கும் கருத்துத் தோன்றும்!

தெட்டுகின்ற மக்களெலாம் நடந்து செல்வார்!
தெருக்களிலே நடப்பவர்கள் வறுமை காண்போர்!
பட்டுடையில் பாதியுடல் மூடிப் பின்னைப்
பகட்டுடையிற் காலுடலை மூடிக் காலை
வெட்டவெளி யோடுவாய்ப் பண்ணும் பெண்டிர்,
வேளைக்கொரு மேற்றுணியும் நாளைக் கெட்டும்
கட்டுகையில் நடந்து செல்லும் வண்டிக்காரன்
கன்னிகளின் வெற்றுடலை வெய்யில் தீய்க்கும்!

இரக்கம் மென்ப துள்ளத்திற் கொள்ளாமக்கள்!
ஏன்வாழ வேண்டுமென் றெண்ணும் மக்கள்!
உறக்கமில தூணுமிலை பொருளைச் சேர்க்கும்!
உயர்மாடிக் காரருக்கே யுள்ளம் மட்டும்,

குறுக்கம் ஏன்? ஏழைகளின் எலும்பை வைத்தே
குருதியினைச் சேறாகப் பூசி, வானிற்
பறக்கின்ற கழுகுக்குப் பாது காப்பாய்ப்
பண்ணிவைத்த மாளிகைகள் கண்டேன் கண்டேன்!

கண்டுகண்டு கொதித் தெழுந்த குருதிதன்னைக்
கடற்காற்று குளிர்மைசெய் வகையால் நெஞ்சில்
பண்டுதமிழ் நூல்களையான் படிக்குங் காலைப்
படிப்படியாய் உயர்கின்ற இன்பத் தூற்றை
மொண்டுமொண்டு அருந்துதல் போல் இன்பஞ்செய்தும்
முன்கண்ட காட்சியெலாம் ஒன்று சேர்ந்து
'தொண்டுசெய், தொண்டுசெய்' என்று...
துணைசெய்யத் தமிழ்த்தாயை வேண்டி நின்றேன்!

'கடற்கரைக்கு வரச்சொல்வாய்' என்று சொன்னாள்
'கவிதை'ப் பெண், "காற் றென்னுந் தோழியண்டை!
'இடருற்ற நெஞ்சுக்கோ ருவகை' என்றே
என்னைவந் தழைத்திட்ட தோழி யோடு,
கடற்கரைக்குச் சென்றே னோர்மாலை! நீலக்
கடல்தன்னை மறைத்துவிடும் மக்கள் கூட்டம்!
சுடரொளியாய்ச் செம்பரிதி பவளத் தூறல்
சொறிந்திற்று! மக்கள்சூழாம் கோவைக் காடு!

மேனாட்டி னுடையால்தம் மேனி மூடி
மேற்காகக் கிழக்காகப் போனார் சில்லோர்
கூனாட்டம் போடுகின்ற பெண்க ளோடே
குறுக்காக நடந்துமணல் மேல் கிடப்பர்!
தேனீட்டும் ஈக்கள்போல் சிறுவர் கூட்டம்
தின்பண்டக் கடைசூழும் பல்லாறாகத்
தானீட்டும் பொருள்பற்றி ஒருவன் பேசத்
தலையாட்டிச் செல்வார்நா லைந்து பேர்கள்!

'கடலைப்பார் அலைவருது' என்பா னோர்சேய்!
'கடலைவாங் கித்தாநீ' என்பா ளோர்பெண்!
'உடலைப்பார்; அழகைப்பார்; இடைதன்னைப்பார்
ஒடிந்து விடும்போல் காணும்' என்பான்காளை!
இடம்விடுங்கள் என்பானோர் வண்டிக்காரன்;
இழுத்தபடி ஓடிடுவான்; வண்டிக்குள்ளே,
"விடுடா, நீ, விடு விரைவில்" என்று கூறும்
வெறிபிடித்த கல்நெஞ்சன்! ஏழ்மைக்கூற்று!

காலைமுதல் மாலைவரைக் கொடியர் வாழ்வைக்
கண்டுள்ளம் வெந்தவகை மீற, மீற,
மாலையிலே பகலவனின் குருதி ஆறு,
மடைதிறந்து விட்டதுபோல் செம்மைப்பூச்சு,
சாலையிலும், மனைகளிலும், விழுந்துதங்கச்
சாயலினை யூட்டிப்பின் நீலவண்ண
வேலையிலும் வெள்ளிநிற அருவிமேலும்,
விழுந்ததுசெம் மணலெல் லாம்தங்கத்தூவல்!

செம்பரிதிப் பெருவிளக்கை யணைத்துவிட்டுச்
செம்மையெழி லோடுகுளிர் ஒளியைவீசும்
அம்புலியாஞ் சிறுவிளக்கை இயற்கைநங்கை
'அவனி'யெனுந் திருவீட்டிற் கேற்றிவைத்தாள்.
செம்மைநிறம் நீங்கியெழில் நிலவுப்பூசல்
சிறுபொருளி னுருத்தெரியும் வகையில்நிற்க
தம்மைமறந் தின்காற்றி லுடலைத் தோய்க்கும்
தன்னலத்தார் கன்மனத்தார் வீடுசென்றார்!

நிலவினொளி யோடுமின் னொளிவிளக்கு
நெடும்பாதை யிருமருங்கு மெழிலைப்பூசும்
பலவகையின் வண்ணவொளி விளக்குதோயும்
பகட்டெல்லாம் அந்நகரின் பெருமைகாட்டும்
உலவிவரும் மக்களெல்லாம் நெடியபாதை
ஓரங்கள்தாம் மறையும் வகையாய்ச்சென்றார்!
குலவிவரும் காதலர்கள்; குழவிக்கூட்டம்!
கூன்கிழடோ டேழைமக்கள் திரும்பக்கண்டேன்.

வெளிநாட்டி னின்றுவருங் கலங்கட்கெல்லாம்,
வழிவிளக்கும், நெடியமனை முகட்டினின்று
ஒளிவீசும்! 'சென்னையிது; சென்னை'யென்று
ஓடுகடல் மீதுவரும் மக்கள்நெஞ்சில்
களியூட்டும் வகையாக வானைமுட்டும்
கலங்கரையின் விளக்கத்தின் விளக்கம்கூறின்,
'எளியோர்கள் மாள, அவர்கள் உழைப்பில்வாழும்
ஏழுமனைக் காரர்களின் ஊர்' என்றோதும்!

நடுத்தெருவின் இயங்கிகளோ டியங்கும்மக்கள்,
நாளடங்க நடக்கின்ற பாதைதன்னில்
படுத்துறங்கும் காட்சியினைக் கண்டுகண்டு
பதைபதைத்துத் துடிதுடித்துப் போனேன்! பெண்கள்

உடுத்திருக்கும் சேலையொரு முழமாமென்றால்
உலவிவரும் ஆண்களுக்கோர் கோவணந்தான்!
எடுத்தெறியும் செல்வர்மனைப் பொருளையெல்லாம்
ஏந்துகின்ற வயிறுடையார் நகரில்கண்டேன்!

படுத்தற்குப் பாயில்லாத் துன்பம், பெற்ற
பிள்ளைக்குப் பாலில்லாத் துன்பம், வாழ
நடுத்தெருவைப் பயன்படுத்திக் குடிலொன்றில்லார்
நலிவோடு, தலையணைக்கோ ருறையில்லாது,
படுத்திருக்கும் ஓர்எத்தன் கொள்ளுந்துன்பம்,
படித்தற்கும், கேட்டற்கும் ஒன்றாம்; ஆனால்
உடுத்தற்கே யுடையில்லா துழலுந்துன்பம்
உலகளவாம்; ஓரணுவாய் மாற்றான்துன்பம்!

துன்பத்தின் ஆழத்தைக் கண்ணீர் ஊ....
துளைக்கின்ற கடும்மிடியை, உடையில்காண
என்புத்தோல் உடலையெல்லாம் கண்ட...
எழில்துள்ளி விளையாடும் இடத்தில்மக்கள்
இன்பத்தோ டோங்குமனை மீதில்வாழ்ந்தே
இருப்பாரை மினுமினுக்கும் பெண்கள்தம்மோ
டன்பொழுகப் பேசியவர் வாயினிப்பில்
ஆழ்ந்தாரை யெல்லாம் நான் கண்டேன் அங்கே!

கைகோத்துக் கொண்டிருவர் போவார்தம்மைக்
கைநீட்டி யொருகுருடன் கதறிக்கேட்பான்
மெய்வேர்த்த வாறொருவன் இழுப்பான்வண்டி;
மேலேறித் தூங்கிவிழுந் தெழுந்து கையில்
பைபார்த்த வாறுபணந் தொட்டுப்பார்த்துப்
பல்லிளிப்பான்; ஒருபுறத்தில் இருவர்கூடி
மைவார்த்த கண்ணுடையாள் வரவைக்கண்டு,
மனச்சோர்வு நீங்கிமகிழ் வெய்துவோரே!

சென்னைஒரு பெருநகரம்! உலகில்இன்னும்
சிறப்புள்ள நகரங்கள் கணக்கில் இல்லை!
சென்னைக்குச் சென்றேன்ஓர் உண்மைகண்டேன்!
செறிந்துள்ள காடுகளின் நடுவில் உள்ள
மண்ணைக்கொண் டொருகுடிசை கட்டிவாழ்ந்து
மலைகளையும் முகில்களையும் கண்டுகண்டு
கண்ணுக்கும் கருத்திற்கும் சேர்க்கும்இன்பம்
கவினுள்ள நகரத்தில் காணேன்காணேன்!

-1953(?)

## 9 தாய்மை வணக்கம்!

வாய்மை நெஞ்சிலும், வான்பொறை சொல்லிலும்
தூய்மை நிகழ்விலும், துடிப்புநற் பணியிலும்
சேய்மை புரப்பிலும் சிறப்புறக் கொள்ளுமோர்
தாய்மை மகட்குயான் தலைதாழ்த் துவனே!

-1960

## 10 கவிஞர் மேல் காதல்!

கவிஞர் மேல் காதல் கொண்டேன் - புதுவைக்
கவிஞர் மேல் காதல் கொண்டேன் - புரட்சிக் (கவிஞர்)

செவிபருக எழிலைச் செந்தமிழில் காட்டிச்
சிந்தனை விழிப்பினைச் சொல்லெல்லாம் மூட்டி
அவிகின்ற நெஞ்சத்தை அழியாது காக்கும்
அழகுக் கவிதைபாடி உள்ளந்தனையே ஊக்கும் (கவிஞர்)

சந்தனக் குளிர்இசை ஓடையில் குளிக்க,
சந்தத்தில் நெஞ்சத்து மயில் என்றும் களிக்க,
நொந்தவர் நோமறந் தேயின்பம் ஏந்தும்
நந்தமிழ் இசைபாடி உள்ளந்தனையே காந்தும் (கவிஞர்)

அழகிய தீந்தமிழ்ச் சொல் ஒவ்வொன்றும் கோத்து
அணிபெற மாலையெனுந் தமிழ்ப்பாடல் யாத்துப்
பழகிய மாப்புலவன், பாடலின் வென்றி,
பைந்தமிழ் மணஞ் சேர்க்கும் இசையினில் ஒன்றி (கவிஞர்)

-1960

## 11 நெஞ்சின் அழுகை!

எழுதி எழுதிச் செல்கின் றேன், நான்!
என்ன பயன், என எண்ணிப் பார்க்கிலேன்!
உழுது விதைத்தவை ஒருநாள் விளையுமோ?
ஊமை விதைகளாய்ச் சாவியாய் ஒழியுமோ?
புழுதியுள் மறையுமோ? பூக்களாய் மலருமோ?
அழுகியும் உலுத்தும் அமுங்கிப்போகுமோ?
பழுதென் றுரைத்து, அவை பழித்திடப் படுமோ?
பயன்ப டாதென விலக்கிடப் படுமோ?
தொழுது போற்றுமோர் காலந் தோன்றுமோ?
துயரச் சுமைக்கொரு தூண்என நிற்குமோ?

பசித்த அறிவினால் புசித்திடு வார்களோ?
பரபரப் புணர்வொடு கொறித்திடு வார்களோ?
விசித்து விசித்து, நான் அழுத அழுகையும்
விடிய விடிய, நான் வடித்த கண்ணீரும்,
மக்கள் இனத்தின் கடைசி மாந்தனின்
ஒக்க அழுகையோ டொன்றாய் இணையுமோ?
ஒழுகுகண் ணீரோ(டு) ஓடிக் கலக்குமோ?
எழுதி எழுதிச் செல்கின் றேன், நான்!
என்ன பயன், என எண்ணிப் பார்க்கிலேன்!

- 1960

## 12 கவிஞர் அன்றோ!

ஏறுகின்ற வெய்யில்போல் எழுத்து வானில்
எத்தர்களும் பித்தர்களும் புகுந்து விட்டார்
கூறுகின்ற வாய்மொழியும், கூட்டம் போட்டுக்
குவிக்கின்ற சொற்பொழிவும் காற்றில் மாயும்
மாறுகின்ற மக்கள்முன், அன்பும், தீய
மாசில்லா மனமுமதன் செயலும் சொல்லும்
ஊறுகின்ற நல்லூற்றாய்க் கருத்தின் ஊற்றை
உணர்வோடு தரவல்லார் கவிஞர் அன்றோ?

கேட்டலினும் இனிதன்றோ காண்டல்! இன்பம்
கிடைப்பதில்லை உரைநடையில்! அறிவை விட்டு
வேட்டதெலாம் உரைநடையில் தீட்டிப் பார்த்தால்
விளைவதில்லை ஒருதுளியும் இன்பம்! ஈண்டுக்
கேட்டதெலாம் உரைநடையாய்க் கொண்டால் காண்டல்
கிளர்த்தெழுந்த கவிதையன்றோ! வரைந்த ஒவ்வோர்
ஏட்டிலும் நற்சருக்கரையை இட்டாற் போல
இனிக்கின்ற மொழிசொல்வார் கவிஞர் அன்றோ?

பொருளற்ற பெரும்பேச்சைச் சொல்லைக் கேட்டால்
பொறுத்தாலும் பொறுத்திடுவர் மக்கள், ஆனால்
மருளற்றுக் கண்சிவந்து போவார் நூலை
மருவறக்கற் றுணர்ந்தவர்கள்! அவர்கள் காயும்
அருளற்ற உள்ளமதில் அழுந்தும் மக்கள்
அறிவற்ற நிலையினையும் கண்டு போர்த்த
இருளற்றுப் போவதற்கு அழகாய்க் கூறி
ஈர்த்தவரை உய்த்திடுவோர் கவிஞர் அன்றோ?

உரைநடையாய் அரைப்பக்கம் பாடஞ் செய்ய
ஒல்லுமோ? தொல்லையொடு படிந்தும் விட்டால்
விரைநடையாய் மக்கள்முன் கூறி நெஞ்சை
விறுவிறுக்கச் செய்யுமோ? செய்தாலுந் தான்
அரைகுறையாய்ப் போமன்றோ அப்பால் சென்றால்
அத்துணையும் செத்தொழிந்து போகாதோ? நல்
லுரைகூறும் கவிகளிலோ ராயிரத்தை
அவ்வாறே பதித்திடுவோர் கவிஞர் அன்றோ?

சின்னாட்கு முன்கற்றோர் உரை நடையிற்
சொன்ன தென்ன வென்றுணரோம் கற்கும்போது
தின்னாத தீஞ்சுளையின் இனிமை போலத்
தெரிந்தாலும், சுவைத்தாலும் நாட்கள் மாள
இன்னாமற் போமன்றோ! கவியோ யாண்டும்
இன்பத்தைத் தருகின்ற தீஞ் சாறன்றோ?
பின்னாளிற் படிக்குங்கால் முன்னாள்கொண்ட
பேரின்பந் தரவல்லார் கவிஞர் அன்றோ?

உண்ணுங்கால் இன்பத்தைத் தருதற் குற்ற
உரைநடையே பெண்கள்தம் உடல்கள்! அன்பை
எண்ணுங்கால் மகிழ்கின்றோம்; கவிதை யந்த
யின்பத்தைப் போன்றதெனின் வேறே என்ன?
மண்ணுக்குள் உடல் மாய்ந்தால், மக்கள் நெஞ்சில்
மாளாது வாழ்வதென்ன உள்ளம் அன்றோ?
பெண்ணென்றால் இலக்கியத்தைக் கவியே உள்ளம்
பேரின்பந் தரவல்லார் கவிஞர் அன்றோ?

அரைகுறையாய்க் கற்றவரு முரையில் நூலை
ஆக்குதல்சா லும்அந்நூல் நன்னூ லாகி
உரைதருமோ? அறிவாமோ? ஆகா தென்னின்
உணராதான் ஏனெழுத வேண்டும் என்றால்
உரைநடைக்கே யறிவிலிக்குத் துணிவி ருக்கும்
ஒருகவிதை யெழுத மனந் துணியானன்றோ?
கரையுடைத்தே யெழுந்துவரு முணர்வா லின்பங்
காண்டவர்க்கும் ஈந்துவப்பான் கவிஞன் அன்றோ?

கற்றதையே உரைநடையில் கூறல் வேண்டும்;
கற்றிடப்பல் வேறு வகையாகக் கூற
உற்றவரோ எழுத்தாளர்? கவிஞன் என்னின்
ஒருசின்ன பொருள்தனிலும் புதுக் கருத்தைப்
பெற்றதனை மற்றவர்க்கு மீவான்; ஈண்டுப்
பெறுவதென்ன? இயற்கை கலைக் கூடமாகும்
சுற்றுமுள தோடதனைச் சூழ்வர் முன்னோர்;
சொலவல்ல கணக்காயர் கவிஞர் அன்றோ?

-1960 (?)

## 13 பாடியடங்கிய வாய்!

பாடி யடங்கிய வாயொடும் பன்னாட் பகலிரவாய்
ஓடி யடங்கிய காலொடும் ஒண்டமிழ் ஓங்கிடவே
நாடி யடங்கிய நெஞ்சொடும் நட்டார் நலம்பெறவே
தேடி யடங்கிய கண்ணொடும் நிற்பேன் திகைப்புறவே! 1

பேசிய யடங்கிய நாவொடும் பேணாப் பெருந்தமிழ்மேல்
மூசி யடங்கிய முன்னுணர் வோடும் முனைப்பிலர்பால்
ஏசி யடங்கிய வெஞ்சினத் தோடும் இரவுபகல்
வீசி யடங்கிய கையொடும் நிற்பேன் வினையறவே! 2

தூக்கிய தூவல் துவண்டிட உள்ளந் துணிவுறவே
ஆக்கிய பாடல் அடுக்கடுக் காய்ப்போய் அயர்ந்தவரை
ஊக்கிய நாள்போய் ஒடுங்கிட உண்மைக் கொருவரையான்
நோக்கிய கண்ணாய்க் குறியாய் அமர்ந்தேன் நொடிந்துளமே! 3

அன்னைமுன் தந்த அமிழ்து புளித்ததிங் காருயிரைப்
பின்னிய தீந்தமிழ் பின்னும் இனித்தது; பின்னுணர்வில்
என்னைப் பிணித்ததும், என்னைஅணைத்ததும் என்னுளத்தில்
தன்னைக் குடிவைத்துக் கொண்டதும் அற்றைத் தனித்தமிழே!4

ஆடித் துளும்பிய நல்லுணர் வெல்லாம் அடங்கினவே!
பாடித் தெறித்த பசுந்தமிழ்ப் பாக்கள் படிந்தனவே!
காடிப் புளிப்பினை உண்டு கசந்தேன்; கனிவிலர்பால்
ஓடித் தொழுவதோ? வீழ்வதோ ஒண்டமிழ் உய்வுறவே! 5

உள்ளமிங் கொன்றி உணர்வதும் ஒன்றி உரைத்ததமிழ்
வெள்ளமிங் கொன்றி வினைமுடி வொன்றி விளக்கமிலாக்
கள்ளமில் அன்புங் கலந்துயிர் ஒன்றிக் கனிகையிலே
கொள்ளலு முண்டோ மனக்குறை வேநெஞ்சக் கொள்கலனே!6

மெய்தொட்ட உள்ளமும் மின்தொட்ட தாய்த்தொட்ட வல்லுணர்வும்
பொய்விட்ட நெஞ்சும் புரையிலாச் சொல்லும் புரிந்தவரே!
வெய்பட்ட போதெல்லாம் தண்ணிழல் காட்டி விரித்திருந்த
கைப்பட்ட தால்வெறுந் தெள்ளிடு மோசுடர்க் கண்விழியே! 7

-1961

## 14 'தடுப்பார் யாரே!'

"குமிழ்த் தெழுந்த சீர்மறந்த தமிழர் தம்மைக்
கூட்டுவிக்க, யெம் வாழ்வின் நலத்தை முற்றும்
உமிழ்த்தொதுக்கி, இரவுபகல் மறந்து, பேணும்
ஒருதுணைவி நலம்மறந்து, பெற்ற மக்கள்
அமிழ்தொத்த சொல்மறந்து, பெற்றோர் தம்மை
அடியோடு மறந்தேனை அணைத்துக் கொண்ட
தமிழ்த்தாயும் மறந்ததனால் மறந்தீர் போலும்
தங்குமுயிர் உடல் மறந்தால் தடுப்பார் யாரே!"

-1961

## 15 பாச்சுடர்!

செந்தமிழ்ப் பாட்டுநூ றாயிரங் கூறவென்
நெஞ்சந் துடிக்குது காண்- அதில்
தந்தனதோம் தனதோம் தனதோமென
தாளங்கள் கேட்பன - காண்!
சிந்தையுள் பற்பல எண்ணங்கள் காண்; அங்குச்
சீற்றம் மிகுந்திடல் காண் - உளம்
மந்திரப் பாவையின் கூத்தினைப் போல் - இந்த
மாநிலம் காட்டுதல் காண்!

கொட்டு முழக்கினைப் போல்அலை வார்கடல்
கோல நடத்தினைப் போல் - உயிர்
கட்டுத் தளர்ந்திட ஆர்த்திடல் காண் - பெருங்
காட்டு நெருப்பினைப் போல்!
வெட்டிச் சுடர்ந்திடும் மின்னலைப்போல் - புயல்
வீங்கி யலைப்பதைப் போல் - இடி
பட்டுச் சரிந்திடும் மாமலை போல் - உளம்
பாடிக் குதித்திடல் காண்!

ஏறுதல் காண்; பின் இறங்குதல் காண்; உடல்
ஏங்கி யிளைத்திடல் காண் - நிலை
மாறுதல் காண்; சுடர் மங்குதல் காண்; முது
மாலைக் கதிரவன் போல்!
வீறுதல் காண்; உளம் வீங்குதல் காண்! பல
வித்து முளைத்திடல் காண்! - அறி
வூறுதல் காண்; கரை மீறுதல் காண்! - புது
ஊற்றுச் சுனையதைப் போல்!

- 1962

## 16 நன்றியில் செல்வர்!

*(கலிநிலைத் துறை)*

நீயும் பொய்நின் நெஞ்சும் பொய்நின் நிலைதருக்கும்
வாயும் பொய்நின் வழியும் பொய்நின் வாழ்வும்பொய்!
தேயும் அன்புத் திறமும் பொய்யென் றெண்ணாமல்
போயும் நின்பால் ஓரீராண்டைப் புதைத்தேனே! 1

இன்றே செய்வம் அன்றே செய்வம் எனக்கூறி
அன்றன் றென்னை அழைப்பாய் ஏலா தனவுரைப்பாய்
ஒன்றே யவற்றுள் செய்தா யில்லை; உளமிறுகிக்
குன்றே போலும் நின்றாய்! எண்ணங் குலைந்தேனே! 2

மருளா நின்றேன்; என்னை யணைத்தே மகிழ்வூட்டி
அருளா நிற்பேன்; அஞ்சல் தவிர்கென் றுரைசாற்றிப்
பொருளால் என்னை நம்புதல் செய்தே புறங்கடையில்
இருளாம் வழியைக் காட்டினை; ஏகினை எனைவிடுத்தே! 3

வண்டமிழ்ந் தூறுங் கள்ளுண் வகையால், வறியவனெத்
தண்டமிழ்ப் பற்றால், நின்பொருட் பாங்கில் தமிழிருக்கக்
கண்டமிழ் தென்றே எண்ணிக் களித்தொரு கையள்ளி
உண்டுமிழ்ந் தேனது நஞ்சென் றறிந்தினி வுய்ந்தேனே! 4

புன்செவி மகிழப் புகழ்ந்திடு முள்ளப் போலியரை
என்செவி கைப்பவென் னிருவிழி கரிப்பநின் னருகிருத்திப்
புன்மொழி கேட்டு நீயுவந் தவரால் பொருள்பறிக்கும்
நின்வழி சிறந்ததென் றியம்புவை யாயினென் நிகழ்த்துவனே! 5

சீரிற் குறைந்தவென் மனையு மாகருஞ் சிறப்புறவே
வாரிக் கொடுக்குவை எனயான் நின்பால் வரவில்லை!
தேரிற் படர்கென முல்லைக் கிரங்கித் தமிழ்காத்த
பாரிக் கிணைநிற் பாயென வந்தேன் நினைப்படர்ந்தே! 6

பின்னுறல் முன்னறிந் துணர்த்துமென் றுணைவி பேச்சிகந்து
பன்னரு நண்பர் நின்னுளங் கூறிய பயன்துறந்தே
என்னருந் தமிழ்க்கே இவன்றுணை என்றே இருகையால்
உன்னெடுந் தோளைப் பற்றினேன் ஊழ்த்தினை உயர்விழ்வே! 7

தருவன் நீயிலை; தண்டமிழ்த் தாய்க்குத் தலைதாழ்த்தும்
ஒருவன் நீயிலை; உண்டிங் கோரா யிரமிளைஞர்!
புருவம் உயர்த்தித், தோளிரண் டுயர்த்திப் புடையெழுந்தால்
வருவது நின்போல் எப்பகை யாயினும் வணங்கிடுமே. 8

எக்கர் போலுநின் செல்வம்! எம்மோர்க் கிழிவுதரின்
பொக்கெனப் போதலும் சேய்மையிலில்லைப் பொலி நிலவைக்
குக்கல் ஒன்று குரைப்பதால் என்றுங் குறைவிலையே!
நக்கல் ஆகுநின் நிலையே! அதற்கொரு நாள்வருமே! 9

தாழா திருந்து நாளுஞ் சிறக்குமெந் தாய்த்தமிழை
வாழா திருந்திடச் செய்தார் பலரும் வாழ்ந்ததிலை!
வீழா தெழுந்து வீறொடு நடக்கு மோர் வேழமதைப்
பாழாய்த் தடுத்து வீழ்த்துமோ ஆங்கோர்ப் பசும்புல்லே!

-1962

## 17 கண்ணீர் நெஞ்சம்!

இறைவா! நின் அருளறஞ்சேர் பேருள் ளத்தை
இயற்கைசெயும் அசைவிலெல்லாம் நெளிவி லெல்லாம்
நிறைவாக அறிகின்றேன்; உணரு கின்றேன்;
நீள்விசும்பு, கதிர், உடுக்கள், புடவி எங்கும்
மறைவான செய்தியில்லை; அறிந்து கொள்ள
மலைப்பூட்டும் உண்மையில்லை; எனினும் ஒன்றைப்
பொறைதீர நினைக்கின்றேன்; விளக்கம் இல்லை;
‘புவி’க்குள்ளே ஏன் என்னை உலவ விட்டாய்?

பொய்மாந்தர் நடுவினிலே மெய்ம்மை பேணிப்
போராடும் நெஞ்சினையேன் எனக்குள் வைத்தாய்?
செய்வினையில் தூய்மையற்றே அறம்பே ணாத
சிறுமையினார் கூட்டத்தில் எனையேன் விட்டாய்?
வெய்யகொடும் நினைவினிலே தீப்போல் காந்தும்
வீறார்ப்பு மக்களிடை, சிறுதீங் கிற்கும்
தொய்வுற்றுச் சாத்துயரம் கொள்ளு கின்ற
தூங்காத உள்ளத்தை எனக்கேன் தந்தாய்?

கரடுமுர டாய்விளர்ந்த கறம்புக் காட்டுள்
கள்ளியெனத் திருகியுளம் முறுக்கம் கொண்ட
திருடரிடை நேர்மை, அறம், உண்மை, வாய்ந்து
தீமைக்கு நடுநடுங்க எனையேன் வைத்தாய்?
குருடரிடை விழிக்க வைத்தாய்; இருளில் விட்டாய்!
கூசுகிலா மக்களின்முன் கூச வைத்தாய்!
அருள்தவிர்ந்த கயவரிடம் அலையச் செய்தாய்!
அமைதியிலா துழலுகின்ற உளமேன் தந்தாய்?

அன்பவிந்த கல்நெஞ்சர்க் கிடையில் அன்பை
அணைகட்டித் தேக்குமொரு நெஞ்சேன் தந்தாய்?
துன்பறிந்தே எனைவிட்டு விலகு வோரின்
தொடர்பெண்ணி வருந்துகின்ற உளமேன் தந்தாய்?
முன்பிருந்து, நட்பாடி, வாய்மை பேணி
முகமலர்ந்தே, உரையாடிச், செயலில் ஒன்றிப்
பின்பிரிந்து, தலைவளர்க்கும் சிறுமை யோர்க்கும்
பிழைநினையா உள்ளத்தை எனக்கேன் தந்தாய்?

தேன்றமிழில் உளங்கிறங்கும் திறமேன் தந்தாய்?
திறமறியா மக்களிடைத் தமிழைப் பாய்ச்சும்
ஆன்றவியா எண்ணத்தை எனக்கேன் ஈந்தாய்?
அவலத்துத் துடிதுடித்(து) ஏன் புரள வைத்தாய்?
கான்றுமிழத் தக்கவரைக் கனிவால் பேணும்
கரவறியா உள்ளத்தை துயர்வந் தாலும்
சான்றாண்மை தவிராமல் வாய்மைப் போக்கில்
சலிப்படையாக் கவல்நெஞ்சை எனக்கேன் தந்தாய்?

இருள்மாந்தர் நிரம்பிவழி கின்ற நாட்டில்
இடமறியா துழலுகின்ற மான்போல், நெஞ்ச
அள்தேடி அலைகின்ற தனிஉள் ளத்தில்
அலைகின்ற நினைவுகளை எதற்கென் றீந்தாய்?
பொருள்தேடிக் கயமைசெய்து வாழ்வார் பாங்கில்
பொருட்கெனவே நடைநடந்து கண்ணீர் தேங்கும்
திருவுளத்தை விளக்கவிலா மாட்சி தன்னைத்
தீதறியா வல்லுணர்வை எனக்கேன் தந்தாய்?

முத்தரிக்கும் பெருஞ்செயலை எனக்குத் தந்தாய்!
முங்கிவரும் துயரலைக்குள் மூழ்கு வித்தாய்!
தத்தளிக்கும் உணர்வோடும் உயிர்ப்பி னோடும்
தவிக்குமெனக் கிடர்களையே துணைக்கு வைத்தாய்!
பித்தருக்கும் தீயருக்கும் பிழைசெய் வோர்க்கும்
பீடிழந்த பேடியர்க்கும் வினையால், சொல்லால்
கத்தரிக்கும் நெஞ்சினர்க்கும் இடையில் நின்று
கைசலிக்கும் உள்ளத்தை எனக்கேன் தந்தாய்?

குலைக்கின்ற தெருநாய்க்கும், மலந்தின் கின்ற
கூர்முகத்துப் பன்றிக்கும், சேற்றில் தோய்ந்தே
அலைக்கின்ற எருமைக்கும் கழுதை கட்கும்
அருவருப்புக் கொள்ளாமல் இருக்கும் உள்ளம்!
மலைக்கின்ற பெருந்துயர்க்கும் மலைந்த தில்லை,
மண்புனல்தீ வளிவிசும்பும் அஞ்சா(து); ஆனால்
உலைக்கின்ற தீயர்க்கும் கரவி னார்க்கும்
உள்நடுங்கும் நெஞ்சத்தை எனக்கேன் தந்தாய்?

தேறுமுறை அறியாமல் வழிகா ணாமல்
திசையெட்டும் தேடியலைந் துயிர்வ ருந்தி
ஏறுமுறை காணாமல் இளைப்பா றாமல்
ஏச்சினுக்கும் பேச்சினுக்கும் குலைந்தி டாமல்
வீறுகுறை யாமல்உளம் நிலைநிற் கின்றேன்;
வினைகளுக்கும் போக்குக்கும் இணைவார் தம்மை
நூறுமுறை நம்பிவிட் டேன்; நம்பு கின்றேன்;
நோகார்க்கு நோகின்ற நெஞ்சேன் தந்தாய்?

யாமாற்றும் பணிகளுக்கும் பொதுத்தொண் டிற்கும்
யாம்யாமென் றிணைந்துவந்து துணைநிற் பார்போல்
தாமாற்றும் வினைகளிலே தூய்மை காட்டித்
தாங்கிடுவார் போல்இருந்தே முடிவில் என்னை
ஏமாற்றும் திறன்மிகுந்தார் கரவை முன்பே
எடைபோட்டுப் பார்க்கின்ற திறன்தா ராமல்
நீமாற்றும் காட்சிகளின் அசைவிற் கெல்லாம்
நிலைகலங்கும் நெஞ்சத்தை எனக்கேன் தந்தாய்?

-1965

## 18 திறந்திருக்கும்!

திறந்திருக்கும், மற்றோரின்
துயர்காண, விழிகள்!
தீராத வெறுப்புற்றோர்க்
கின்மொழிகள் கூறத்
திறந்திருக்கும் என்றன்வாய்!
தெளிவான புலமைத்
திறமுடையார், அறமுடையார்
கூறுமொழி கேட்கத்
திறந்திருக்கும் இருசெவிகள்!
தேடிவரு வோர்க்குத்
திறந்திருக்கும் எனதில்லம்!
திறந்திருக்கும் படையல்!
சிறந்திருக்கும் உள்ளங்கட்
கெங்கும், எக்காலும்
செறிவன்பைச் செலுத்துதற்குத்
திறந்திருக்கும் நெஞ்சே!

-1965

## 19 அவனொரு தனியன்; நடந்து கொண்டிருந்தான்!

ஊரவர் கேண்மோ! உலகவர் கேண்மோ!
சீருடைப் பாக்கள் செறிப்பக் கொளுத்தும்
வீறுடைப் பாவலர் விளம்பக் கேண்மோ!
நட்டார் கேளுதிர்! நயப்பார் கேளுதிர்!
ஒட்டார் கேளுதிர்! உவப்பார் கேளுதிர்!
இருநீர் வையத்து எழுந்துயிர்த் தியங்கும்
பெருநிலை மக்கள் பின்றைக் கேளுதிர்!

கொழுபொருட் குவட்டில் பிறந்தோன் அல்லன்;
எழுநிலை மாடத்து இருந்தோன் அல்லன்;
வகைதெரி கூட்டத்து வாழ்ந்தோன் அல்லன்;
தொகைநிறை வளங்கள் துய்த்தோன் அல்லன்;
புரையில் நெஞ்சன்; கறையில் கொள்கையன்!
வரையறு நுட்பம் வாங்கறி வுணர்வோன்!
அறம்பிற ழாத அறவோர் நெறிக்கே
வரம்பில் வேட்கையன்; வாழற்கு வாழாஅன்!
கொடுக்கை குறுக்கான்; பெறுகை பெருக்கான்;
உடுக்கை உவப்பிலன்; உண்கை குறியிலன்!
பிறநலம் விரும்பி! அறநலத் தும்பி!
பண்தேர்ந் துண்குயில்! பாடற்கு உளம்மயில்!
எழுத்தெழுத் தூர்ந்து சொற்சொல் புகுந்து
செழுந்தொடர் யாப்பில் நல்லுயிர் துவண்டு
பொருட்சுனை குளித்துப் புதுநலம் மூழ்கிப்
பாநறுந் தேறல் பருகிப் பருகி
வாழ்நறுந் தென்றல்! வாழ்ந்திலா வான்வில்!
கற்பனை விரிவான் கலைமுகில் ஏறிக்
கடக்கும் மடவோன்! கவின்தமிழ்க் கடிமை!
கூர்த்த நோக்கினன்; குனியாப் போக்கினன்!
ஆர்த்த வாயினன்; ஆராச் செவியினன்;
எண்ணிய நெஞ்சன்; திண்ணிய சொல்லன்;
நிலைத்த கருத்தன்; நிலையாச் சினத்தன்;
குலைத்த மடியினன்; குலையாத் துடிப்பினன்!
தாய்க்குநல் பிள்ளை; தந்தைக்குத் தக்கோன்!
மனைக்குநல் கொழுநன்; மகர்க்குநல் தந்தை!
நண்புக்கு அன்பன்; பண்புக்கு உறவோன்!
மன்பதை விரும்பி! மனந்தின் கரும்பு!

பகைக்குப் பகலவன்! பாவுண் தும்பி!
அன்பினுக் கினியவன்! அவனொரு தனியன்!

(வேறு)

முப்புறம் பதிந்த நோக்கில்
முரணிலா நடந்த கால்கள்!
குப்புற வீழ்தல் இல்லாக்
கொள்கையால் துவண்ட வாழ்க்கை!
செப்பமும் ஒழுங்கும் சேரச் சீர்மையும் நேர்மை பாய
ஒப்பிய கொள்கை ஒன்றால் ஒருதனி நடைய னானான்!

ஒருதனி நடையனாகி உலகெலாம் நடக்க லுற்றான்;
வருதலிற் றீமை சேரான்;
வாய்மையில் கருமை காட்டான்!
வெருதலும் குலைவு மின்றி
வினைவயப் பட்டான்; தீமை
பொருதலும் படையு மாகப்
புதுநெறி புதுக்க லானான்!

மொழிக்கென மொழிந்தான்; மக்கள்
முழுமலர்ச் சிக்கென் றார்த்தான்!
செழிக்கிலாத் தமிழர் வாழ்க்கை
செழிக்கெனக் குரல்கொ டுத்தான்!
அழிக்கிலாப் பொய்மைப் போக்கை
அழித்திடக் குரல்மேல் ஏற்றி
விழிக்கிலாத் தமிழர் பாங்கில்
விடிந்ததிங் கெழுக வென்றான்!

மறத்தினும் மறத்த நெஞ்சம்!
மலையினும் நிலைத்த கொள்கை!
அறத்தினும் சிறந்த போக்கே!
ஆழியின் அகன்ற அன்பு!
திறத்தினும் தெரித்த சொற்கள்!
தீமைக்குக் கூசும் மெய்வாய்!
புறத்தினும் இனிய ஆகம்!
புலப்பினும் அணைக்கும் கைகள்!

இருளில் நடந்த கால்கள்!
இமைப்பிலா விழித்த கண்கள்!
மருளுக்கு மருண்டான் அல்லன்!
மயக்கினில் திகைத்தான் அல்லன்!

பொருளுக்குப் பொய்த்தான் அல்லன்!
பொய்யுக்குப் புகழ்ந்தான் அல்லன்!
அருளுக்கு நெகிழ்ந்தான் அல்லன்!
அரசுக்குப் பணிந்தான் அல்லன்!

தாளுக்குப் பணிந்த தாளான்;
தண்மைக்குக் குளிர்ந்த தண்மை!
தோளுக்குத் துணைதோள் அன்னான்!
துயருக்குச் சுமைகள் தாங்கி!
வாளுக்குத் தலை கை தாழான்;
வாடிக்கை மொழிவே டிக்கை!
கேளுக்குக் கேளான்; உள்ளக்
கீழ்மைக்குச் சேய்மை யோனே!

(வேறு)

ஒருதனி நடந்தான்; நடப்பினில் உவந்தான்;
விரிந்ததிவ் வுலகம் என்னினும் வெருளான்!
நடந்தான் நடந்தான்; நடந்துகொண் டிருந்தான்!
தடந்தெரிந் தெடுத்த தகைமையில் நடந்தான்
இடர்கள் எதிர்ந்தன; என்னினும் நடந்தான்!
சுடர்வழி நோக்கிச் சோர்வற நடந்தான்,
படர்ந்த கொள்கைப் பாதையில்
நடந்தான் நடந்தான் நடந்துகொண் டிருந்தான்!

-1965

## 20 எம் வாழ்க்கை!

முன்புதை உண்டஎம்
முத்தமிழ்ச் சிறப்பினை,
மன்பதைக் குணர்த்தல்எம்
மண்ணுயிர் வாழ்க்கை!

- 1968

21

## எனக்குக் குழந்தைதான்; இருப்பினும் அவள் தாய்!

எனக்குக் குழந்தையாய்
இருந்தவள், இவள்தான்!
என்னிரு தோளினில்
வளர்ந்தவள், இவள்தான்!
தனக்குப் பிறந்தது - எனக்கூறி, ஒருநாள்
தாமரை மொக்கொன்றை
என்மடி யிட்டாள் - உவந்
திட்டாள் - ஒரு
தாயெனத் தனைக்கூறி விட்டாள்!

குதலை மொழியினைச்
சிதர்ந்தவள், இவள்தான்!
கொஞ்சியென் நெஞ்சில்
கிடந்தவள், இவள்தான்!
மதலை பிறந்தது - எனக்கூறி, ஒருநாள்
மணிப்புறாக் குஞ்சொன்றை
என்கையில் தந்தாள்
மகிழ்ந்தாள் - ஒரு
மகவுக்குத் தாயென் றுவந்தாள்!

தாயின் அணைப்பினில்
உறங்கியவள், இவள்தான்!
தந்தையென் முதுகினில்
புதைந்தவள், இவள்தான்!
சேயொன்று பிறந்தது எனக்கூறி ஒருநாள்
செம்மா துளையொன்றை
கைகளில் வைத்தாள்
சுவைத்தாள் - நான்
சேயில்லை; தாயென் றுரைத்தாள்!

பாடிடுங் குயில்; இவள்
பசும்பச்சை மயில்தான்!
பாடகச் சீரடி
தடுமாறுங் கால்தான்!
ஆடி யசைந்திட வந்தனள், ஒருநாள்;

அழகுக் கிளியொன்றை
என்மடி யிட்டாள்! - மகிழ்ந்
திட்டாள் - தான்
'அன்னை' எனக்கூறி விட்டாள்!

-1971

## 22 என்றன் பாட்டு!

என்றன் பாட்டு நல்ல பாட்டு!
இவ்வுல கெல்லாம்
அதைப் படிக்கும்
என்றன் பாட்டு கரும்புப் பாட்டு!
இனிவரும் மாந்தம்
அதைக் கடிக்கும்!

என்றன் பாட்டே இனிய பாட்டு!
இயற்கை உலகம்
அதில் குலுங்கும்!
என்றன் பாட்டே எளிமைப் பாட்டு!
எல்லா உயிர்க்கும்
அது விளங்கும்!

என்றன் பாட்டு குழந்தைப் பாட்டு!
எல்லாக் குழந்தையும்
அதைப் பாடும்!
என்றன் பாட்டே இயற்கைப் பாட்டு!
இவ்வுல கெல்லாம்
இலை போடும்!

என்றன் பாட்டு பொதுமைப் பாட்டு!
எனக்கும் அதுதான்
உயர் வூட்டும்!
என்றன் பாட்டே உரிமைப் பாட்டு!
எல்லா நலனும்
அது கூட்டும்!

என்றன் பாட்டே நிலைக்கும் பாட்டு!
எல்லாப் பாட்டும்
உலகுடைமை!
என்றன் பாட்டே புதுமைப் பாட்டு!
எல்லாப் பாட்டும்
பொது வுடைமை!

-1972

## 23 நானும் பழையவன்! எண்ணமும் பழையது!

என்னை நினைத்தேன்
எண்ணம் வந்தது!
வந்த எண்ணம்
எழுத்தாய் வடிந்தது!
வடிந்த எழுத்தைத்
தாளில் வாங்கினேன்!
வாங்கிய தாள்களை
வடித்தனர் அச்சில்!
அச்சில் வடித்ததைப்
பொத்தகம் ஆக்கினர்!
ஆக்கிய பொத்தகம்
அனைவரும் வாங்கினர்!
வாங்கிய அனைவரும்
வழியில் தொலைத்தனர்!
தொலைந்த பொத்தகம்
அலையாய் அலைந்தது!
அலைந்தபின் ஒருநாள்
என்னை அடைந்தது!
அடைந்தது புதிதென
ஆசையாய்ப் படித்தேன்!
படித்தது மீண்டும்
என்னுள் பதிந்தது!
பதிந்தது ஒருநாள்
பழைய படியே,
என்னை நினைக்கையில்
எண்ணமாய் வந்ததே!

-1972

## 24 தனித்துப் பார்க்காதீர்!

தனித்துப் பார்க்காதீர்! - என்னைத்
தனித்துப் பார்க்காதீர்! - என்
இனத்தை நீக்கி,
'என்'னையும் 'என'தையும்
தனித்துப் பார்க்காதீர்! - இனியும்
தனித்துப் பார்க்காதீர்!

'என்'என்று சொன்னாலும்
எனக்குள்ளும் 'நீர்' தாம்!
'என' தென்று சொலும் சொல்லும்
இனங்காக்கும் 'நீர்' தான்!
'உன்' என்று சொன்னாலும்
உமக்குள்ளும் 'நான்' தான்!
உமதென்று சொலும் சொல்லும்
உரிமைக்குப் பூண்தான்! (தனித்துப்)

இனித் 'தமிழ்' என்றாலும்
எனைத் தாங்கும் 'உயிர்' தான்!
என் 'உடல்' 'பொருள்' யாவும்
என் இனப் பயிர்தான்!
தனித்தவன் ஆனாலும்
'தமிழ்' ஈன்ற சேய்நான்!
தாய் அவள் நமக்கெல்லாம்;
தமர் நீங்கள்! வாய் நான்! (தனித்துப்)

என்னுடல் எனதில்லை;
தமிழ்விளை வயல்தான்!
என்னின்ற விளைவெல்லாம்
செந்தமிழ்ப் பயிர்தான்!
இன்னலும் இடர்ப்பாடும்
எனையேற்றும் 'படி' தான்!
ஏற்றமோ இறக்கமோ
எதும்வெற்றிக் கொடிதான்! (தனித்துப்)

ஊரென்ப தெனக்கில்லை;
ஊர்யாவும் ஊர்தாம்!
உறவென்பார், 'தமிழ்காக்க
உழைப்போம்' என் பார்தாம்!
சீரென்ப தெனக்கில்லை;
செந்தமிழ்ச் சீர்தான்!
சிறப்பென்ப தெல்லாமும்
அவள்பெற்ற பேர்தான்! (தனித்துப்)

பாராட்டு, பழிப்பெல்லாம்
பயன்கொள்வார் கருத்தாம்!
பணியாற்றி உடல் தேய்த்தல்
என்னுயிர் விருப்பாம்!
போராட்டம் அகத்தில்லை;
புறத்துண்டு; தமிழ்தான்
பொய், தாழ்வு, மடம்,யாவும்
போழும் கை வாள்தான்! (தனித்துப்)

-1973

## 25 எம் கோள்!

அடிமை அறியாமை உட்பகைமை ஆழ்ந்த
மடிமை பொசுக்கி மணித்தமிழும் நாடும்
குடியும் உயர்த்தலெம் கோள்!

-1973

## 26 என் எண்ணம், எழுத்து, செயல், இயக்கம்!

என்மொழி, என்னினம், என்நாடு நலிகையில்
எதனையும் பெரிதென எண்ண மாட்டேன் - வேறு
எவரையும் புகழ்ந்துரை, சொல்ல மாட்டேன்! - வரும்
புன்மொழி, பழியுரை, துன்பங்கள் யாவையும்
பொருட்டென மதித்துளம் கொள்ள மாட்டேன்! - இந்தப்
பூட்கையில் ஓரடி தள்ள மாட்டேன்!

கண்ணிலும் கருத்திலும் காதிலும் உயிர்க்கின்ற
காற்றிலும் மிளிர்வது தமிழேதான்! - என்
கவலைக்கும் கரணியம் அதுவேதான்! - உளம்
எண்ணியும் எழுதியும் எடுத்தெடுத் தியம்பியும்
இன்புறச் செய்வதும் தமிழேதான் - அதற்
கிணையென நிற்பதும் அதுவேதான்!
உடுக்கையில் உண்கையில் ஓரடி நடக்கையில்
உறக்கத்தும் வேறெதும் எண்ணி யறியேன் - மனை
உறவிலும் காதலைப் பண்ணியறியேன் - உயிர்
விடுக்கினும் தமிழெனும் நினைவொடு விடுத்திட
வேண்டுமென் றிறைவனைக் கேட்டுத் தொழுவேன் - ஒரு
வேற்றுமையும் இல்லையதில் உள்ளம் வழுவேன்!

என்மொழி தாய்மொழி, இன்மொழி அதைவிடுத்
தெவர்மொழி ஆயினும் கற்க மாட்டேன்! - வேறு
எவரையும் கைதொழ நிற்க மாட்டேன். ஒரு
புன்மொழி புலைமொழி புதுமொழி எதுவுமிப்
புலத்தினில் கால்வைக்க ஒப்ப மாட்டேன்! - கோடிப்
பொன்னுக்கும் தமிழ்மனம் விற்க மாட்டேன்!

(ஓரசை மாற்று)

மனைவிக்கும் மக்களுக்கும் மாளிகையில் வாழ்வதற்கும்
மற்றெதற்கும் பல்லிளிப்புக் காட்ட மாட்டேன் - தன்
மானமின்றிக் கையதற்கு நீட்ட மாட்டேன் - தமிழ்
நினைவுக்கும் செயலுக்கும் நீண்டநெடுந் தொண்டினுக்கும்
நீட்டியதோர் காசெனினும் கூச மாட்டேன் - என்னை
நிற்கவைத்துப் 'போ' எனினும் ஏச மாட்டேன்!

என்மொழியை என்னினத்தை என்நிலத்தை மாற்றானிடம்
இட்டுவிட்டுச் சோம்பிவிட உள்ளம் இசையேன் - அவன்
எடுத்தெறியும் காசுக்கிரு கைகள் பிசையேன் - என்
தென்மொழியை, கண்ணொளியை, மூச்சுயிர்ப்பைச் சாகும்வரை
தேர்ந்தஉயிர்த் தொண்டெனவே ஆற்றிவருவேன் - வாழ்வு
தீர்ந்துவிடின் வேற்றுடலம் மாற்றி வருவேன்!

-1973

## 27 குளிர்தமிழ் உலவிடும் நெஞ்சமன்றோ?

எனைவேண் டாதவர் சிலரிங் கிருக்கலாம்
எனக்குவேண் டாதவர் எவருமிலர்! - ஒரு
தினைவேண் டாதஓர் எறும்புளதோ? - பூந்
தேன்வேண் டாத,தே னீஉளதோ?

தமிழ்வேண் டாதவர் சிலரிங் கிருக்கலாம்;
தமிழ்க்குவேண் டாதவர் எவருமிலர்! - மணங்
கமழ்நறு மலரினை விரும்பிலரேல் - அவர்
கண்ணிலும் உணர்விலும் கசடுமுண்டே!

மலைவிரும் பாதவர் சிலரிங் கிருக்கலாம்;
மலைக்குவேண் டாதவர் எவருமிலர்! - இசைக்
கலைதரும் இன்பினை வெறுப்பவரேல் - அவர்
காதிலும் கருத்திலும் குறைகளுண்டே!

தென்றலை நிலவினைப் பகைப்பவ ரே - நறுந்
தீந்தமிழ் உளத்தினைப் பகைப்பவராம்! - உயர்
குன்றினைத் தழுவிடும் அருவியைப்போல் - என்
குளிர்தமிழ் உலவிடும் நெஞ்சமன்றோ?

அன்புரை பலகால் வெளிப்பட லாம்; கடும்
அனலுரை சிலகால் புலப்படலாம்! - அதால்
துன்பிருந் தாலும்நற் பயனிருக்கும் - பின்
துயர்ப்படுங் கால், உளந் துணைவருமே!

ஒன்றினை எண்ணியும் உதவியெண் ணியும்பல
உளவுகள் நினைந்தெனை நெருங்கிடலாம் - அவை
நன்றென முடிந்திடல் புகழ்வதுவோ? - நிலை
நலிந்திடில் முனிந்தெனை இகழ்வதுவோ?

பொதுநலம் நினைந்துநான் இயங்கையி லே - தனிப்
போக்கினுக் கொருகால் தடைவரலாம்! - உடன்
எதுவிளை வெதுசரி எனநினைந்தே - உயர்
வேற்றத்தைக் கருதிடில் முரண்வருமோ!

கதிரினை வானினை மழையினைக் கடலினைக்
காற்றினை யாவையும் நினைக்கையிலே - அவை
சிதர்தரும் ஒளி, வெளி, துளி, உலர்ப்பை - கடுஞ்
சீற்றத்தைக் கண்டுளம் வெறுப்பதுண்டோ?

-1974

## 28 உறுதியும் நன்றியும்!

எவரெனைத் தடுக்கினும் எவரெனைக் கெடுக்கினும்
என்கை வீசி நடையிடுவேன்! - ஒரு
சுவர்எனைத் தாங்கினும், துரும்பு கை கொடுக்கினும்
செந்தமிழ் மாலைகள் அவைக்கிடுவேன்!

மலையே குலுங்கினும், வானே இடியினும்
மனங்குலை யாமல்மேல் நடப்பேன்! - துயர்
அலைகளுக் கிடையோர் கட்டையே உதவினும்
அதன்திறம் நினைந்து புகழ் கொடுப்பேன்!

கடுஞ்சொல் வீசினும், கணைகளைத் தொடுக்கினும்
கடமையில் துவளேன்; வினைமுடிப்பேன்! - நான்
படுந்துயர்க் கிரங்கிக் கைகொடுப் போர்க்குப்
பைந்தமிழ் மாளிகை கட்டிடுவேன்!

எனைவெறுத் தாலும், எனைச்சிதைத் தாலும்
ஏற்றுள கொள்கைக் குயிர்தருவேன்! - ஒரு
தினையள வேனும் துணைவரு வோரைத்
தீந்தமி ழால்நிலை நிறுத்திடுவேன்!

-1975

## 29 என்பும் தசையும் தமிழ் ஏற்றத்திற்கே!

அன்புக்கு நான் அடிமை;
அறிவுக்கு நான் தொழும்பன்;
என்பும் தசையும் தமிழ் ஏற்றத்திற்கே! - என்
இயக்க மெல்லாம் இழிவு மாற்றத்திற்கே!

தென்புக்கு நான் துணைவன்;
தெளிவுக்கு நான் கிளைஞன்;
முன்பும் பின்பும் ஒரு நோக்கினனே! - நான்
முனைப்பில் என்றும் நெகிழாப் போக்கினனே!

உண்மைக்கு நான் உறவன்;
உழைப்பிற்கு நான் மறவன்;
திண்மைக்கும் திண்மைநிலை சோராதவன்; - நான்
தேர்ந்துவிட்ட கொள்கையிலே மாறாதவன்!

இன்பத்தில் நான் கொடைஞன்
ஏழ்மைக்கு நான் தலைவன்;
துன்பத்தில் நான் உடலம் வேகாதவன் - பல
தோல்விக்கும் உள்ள உரம் சாகாதவன்!

பொய்மைக்கு நான் பகைவன்;
போலிக்கு நான் உரைகல்;
மெய்ம்மைக்கு நான் அலையும் வேட்கையுள்ளவன் - கூர்
வேலெடுத்தால் கீழ்வையாப் பூட்கையுள்ளவன்!

சொல்லுக்கு நான் வினைஞன்;
சோர்வுக்கு நான் எதிரி;
மல்லுக்கும் நான்மலையாத் தோளினனே! - தாய்
மண்ணடிமை நீக்கும் கை வாளினனே!

பகைவர்க்கு நான் கதிரோன்;
பழகற்கு நான் நிலவோன்;
தகைமைக்குத் தோழமைசெய் ஆவலனே! - செந்
தமிழ்மொழிக்குக் கண்துயிலாக் காவலனே!

-1975

## 30 சிறை என் செய்யும்?

‘தென்மொழி’ இதழைத் தமிழக அரசு
தன்பழி காத்திடத் தடைசெய் துவந்தது!

‘தென்மொழி’ இதழால் தீந்தமிழ் மக்கட்கு
என்பிழை நேர்ந்ததோ, யாமதை அறியோம்!

‘அருட்செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க’
என்று எழுதினோம், இதுதான் பிழையோ?

இன்று பிறந்த இனமெலாம் உரிமையால்
நன்று சிறந்து நனிவாழ் கையிலே,
என்றோ பிறந்த ஏமாளித் தமிழினம்
தின்பதே தொழிலாய்த் தெருத்தெரு வாக,
ஊர்ஊ ராக, நாடுநா டாக
ஆர்க்கும்வல் லடிமையாய் அலைந்து திரிவதைப்
பதினா றாண்டாய்ப் பதைக்கும் நெஞ்சோடு
அதிர முழக்கினோம் அதுதான் பிழையோ?

‘குமுதம்’ போலும் குப்பை இதழ்கள்
தமிழைக் கெடுத்துத் தரந்தாழ்த் துகையிலே
தூய்தமிழ் நடையால் தொல்தமிழ் எழுதித்
தாய்மொழி காத்தோம்; தவறிது தானோ?

திரவிடர் உரிமைகள் தெருவெலாம் முழக்கியோர்
கரவடர் போல்தமைக் காத்துக் கொள்ளவே,
அஞ்சியும் கெஞ்சியும் அயலவர் ஆட்சிக்
கஞ்சி யோடுகிறார் எனக் கதறினோம்!
இதுதான் பிழையோ? ஏதென அறிகிலோம்!

ஒன்று மட்டும் உண்மையென் றறிவோம்!
‘இந்திரா’ எய்த நெருக்கடி அம்புக்குத்
‘தென்மொழி’ கேடய மாகத் திகழ்ந்து,
கலைஞர் மார்பைக் காத்து நின்றது!
நிலையெனில், நமக்கது விலையிலாப் பெருமை!
‘கலைஞரைக் காக்க’,வென் றெழுதிய கையைக்
‘கலைஞரும் காத்தார்’ என்பதா பெருமை?

காத்தவர் கைகளால் கழுத்து முரிபடும்
மாத்தவம் செய்தது ‘தென்மொழி’ மாதிகை!

பதினா றாண்டுமுன் பிறந்தது; வளர்ந்தது,
அதிர்நடை யிட்டே அரிமாப் போல
உரிமை முழக்கி உலாவந் திருந்தது!
நரிமை யாரிடை நம்மினம் காத்தது!
கனித்தமிழ் காக்கும் கலைஞரால் தன்பெருந்
தனித்தமிழ்த் தொண்டைத் தடுத்துக் கொண்டது!
அதுவரை ‘தமிழ்ச்சிட்டு’ அதன் பணி செய்யும்!

எதுவரை எம்மூச் சியங்கு கின்றதோ,
எதுவரை எம்முடல் இம்மண் தோயுமோ,
எதுவரை எம்மனம் நினைவலை எழுப்புமோ,
அதுவரை மொழி,இன ஆர்ப்படங் காது!

நறைபிழி தீந்தமிழ் நலங்கரு துகையிலே
சிறையின் கதவுகள் என்செயும் எம்மை?

அடிமைத் தமிழரின் விடிவெண் ணுகையிலே
மிடிமைச் சிறைக்கத வென்செயும் எம்மை?
ஒண்புகழ்த் தமிழ்நிலம் உரிமை மீட்கையில்
திண்சிறைக் கம்பிகள் என்செயும் எம்மை?

விடியாத் தமிழ்நலம் வித்திடும் எமக்குப்
படியாத் துன்பம் படரினும் படர்க!
துடியா நிற்கும்என் நாவும் உயிரும்
வடியா உணர்வும் வன்மை எய்துக!

அடிமை மீட்கும் அரும்பணி செய்கையில்
குடிமை பெயர்ந்ததெம் உயிரெனில், கொண்டிடும்
உடலுக் கதுதான் உவகை;
அடலுக் கதுதான் அரும்பெறல் வாழ்வே!

-1975

## 31 உறவாடிய பழைய ஊர் நினைவு!

இங்குவிளை யாடினேன்;
இவ்வெளியில் தூங்கினேன்;
இம்மணலைத் தோண்டி, ஊற்று
நீரைக் குடித்தேன்!
சங்குகிளிஞ் சில்களைத்
தள்ளும் அலைநீரிலே
கால்நனைந்தே, ஈரமணல்
அப்பி மகிழ்ந்தேன்!

இந்தமரத் தின்னிளநீர்
வாய்நிரம்ப மண்டினேன்;
இம்மரத்தின் ஈச்சம்பழம்
வாய்கு தப்பினேன்!
சொந்தமெனப் புல்வெளியில்
பாறையின்மேல் ஓடினேன்;
சிந்திசைத்தேன்; தெம்மாங்கிலோர்
பாட்டுப் பாடினேன்!

மூர்த்திக்குப்பம் குப்பம்மாளின்
திண்ணையில்நான் சோறுண்டேன்;
முழுநிலவில் தென்னங்கீற்றில்
படுத்துத் தூங்கினேன்!
ஊர்த்தெருவில் குடும்பத்தோடு
உலாக்கள்வரச் சுற்றினேன்;
ஓங்கியுள்ள ஆலமரத்
தூஞ்சல் ஆடினேன்!

குறள்பெருமாள் வாய்துவைந்த
கொஞ்சுதமிழ் மாந்தினேன்;
குழந்தைபோல இளம்பனங்காய்
நுங்கை முங்கினேன்;
விரலளவில் சுட்டெடுத்த
முந்திரிப்ப ருப்புகளைக்
குப்பெடுத்துப் பெருமாள்தரத்
தின்று மகிழ்ந்தேன்!
நண்பருடன் பெண்ணையாற்றில்

நாள்முழுவதும் பேசினேன்;
நள்ளிரவு சேரும்வரை
மணலில் உருண்டேன்!
கண்பதிந்த காட்சியெல்லாம்
கால்பதிய வாழ்ந்தவன்!
காலம்வந்து தேய்த்தழித்தும்
கற்பனையில் ஆழ்ந்தவன்!

-1975

## 32 ஒரு மனம்!

பொறாமையால் ஒருமனம் புழுங்கிச் செத்தது!
இராமை யாலும் இருக்கின்ற மையாலும்
எழுந்தெழுந் தமர்ந்து விழுந்து கொண் டிருந்தது!
உழுந்தளவு கருத்தும் உரலளவு எரிச்சலும்
கலந்து கலந்து எங்கும் கதைத்துக் கொண் டிருந்தது!
புலந்துள நெஞ்சம் புகைவான் சூழ்ந்தது!
மக்கள் அதற்கு மரங்களாய்ப் பட்டனர்!
சிக்கலே உளத்தில் சிணுக்குவிழுந் திருந்தது!

வருவோர் போவோர் எல்லா ரிடமும்,
தெருவோ ரத்தின் சிறுசிறு பிள்ளைகள்
குட்டான் குட்டானாய்க் கொள்ளைக்குப் போதல்போல்
முட்டி முட்டி முடியாமல், பலமுறை
கழிச்சல் கண்டவன் கால்மேல் எல்லாம்
இழுப்பிக் கொண்டே எழுவது போல,
எழுதி எழுதி மனவளம் இளைத்தது!
புழுதியில் புரண்டு, புழுக்கையில் உருண்டு,
தூவலைச் சேற்றிலே துவைத்துத் துவைத்து
வெள்ளை யேறாமல் வெளுத்துக் கட்டியது!
நொள்ளையர் சிற்சிலர் கொள்ளை என்றே
தம்பல வாயர் தின்பது போல
அம்பலில் எல்லாம் அதக்கிக் காட்டினர்!

எதனைப் பார்க்கினும் எரிச்சல் படுமது!
குதலைச் சிரிப்பும் குடைச்சலே அதற்கு!
இல்லாது சொல்லி இருப்பது தவிர்க்கும்!
நல்ல சொற்களே நாவில் ஊறா!
நாற்றச் சொற்களே நறுக்கு நறுக்கென,
ஊற்றெடுத் ததனின் உளத்தொடு குதிக்கும்!
வெந்த உணர்வொடும் வேகாத அறிவொடும்,
சந்தனம் ஒருபுறம் சாணி ஒருபுறம்
இருந்தால், சாணியை எடுத்தெடுத்து முகர்ந்து
விருந்து போட்டதாய் எண்ணி வெதும்பும்!
ஒப்புர வில்லாது ஓயாமல் குடைந்து
குப்புறப் படுக்கும் குள்ள மனம், அது,
எவருடைய போக்கினும் எதிரேறிப் போகும்!
துவருடை பூணாத் துறவியே போலும்,
தண்ணீர் புகாத தக்கையே போலும்,
கண்ணீர் விட்டுக் கசிவதே போலும்,
எதனையும் நிறைவுறா திழித்து வெறுக்கும்!
புதைவதும் இல்லை! புலர்வதும் இல்லை!
சதையும் இன்றி எலும்பும் இன்றியோர்
விதையடிக் காத வெற்று நரம்பது!

இந்த மனத்தைத்தான் எந்தமிழ்ப் புலவோர்
வெந்தும் வேகாத மனமென விளம்பினர்!
தொண்டு பேணுவோர் தொடையில் எத்தனைக்
குண்டு குழிகள், வெள்ளை முடிகள் என
எண்ணிப் பார்த்தே எடுத்த கணக்கை,
உண்ணி பிடித்த நாய்அணற் றுதல்போல்
எந்தத் தாளிலோ எழுதி எழுதிச்
சொந்தத் தலைமயிர் புய்த்துப் புய்த்துச்
சொட்டையாய்ச் செய்து மொட்டையாய் நின்றது!
கட்டைபோ மளவும் இந்தக் கணக்குதான்!
ஐயா ஐயா அதன் பேர்
பொய்யா மொழியெனப் புகன்று கொண்டதே!

-1976

## 33 உள்ளத்தை ஒளியாமல் உலகில் பதிக்கிறேன்!

'நினைத்ததை' யெல்லாம் எழுதுகின் றேனாம்!
நினையாத தெல்லாம் எழுதப் புகுந்த - என்
நெடுநாள் நண்பர் ஒருவர்சொல் கின்றார்!
நினைத்தெழு தாமல் எதை,எழு துவது?
நினையாமல் எழுதும் 'நிலை' யெனக் கில்லையே!

'எண்ணிய' தெல்லாம் எழுதுகின் றேனாம்!
எண்ணாத தெல்லாம் எழுதப் புகுந்த - என்
இனிய நண்பர் ஒருவர்சொல் கின்றார்!
எண்ணி எழுதாமல் எதை,எழு துவது?
எண்ணாமல் எழுதும் 'இழி' வெனக் கில்லையே!

'வந்ததை' யெல்லாம் எழுதுகின் றேனாம்!
வாராத தெல்லாம் எழுதப் புகுந்த - என்
வாழ்கின்ற நண்பர் ஒருவர்சொல் கின்றார்!
வந்ததை எழுதாமல் எதை,எழு துவது?
வராததை எழுதும் 'வழக்'கெனக் கில்லையே!

'கண்டதை' யெல்லாம் எழுதுகின் றேனாம்!
காணாத தெல்லாம் எழுதப் புகுந்த - என்
கனிவான நண்பர் ஒருவர்சொல் கின்றார்!
கண்டெழு தாமல் எதை,எழு துவது?
காணாமல் எழுதும் 'கை' எனக் கில்லையே!

'மனம்போன' வாறெலாம் எழுதுகின் றேனாம்!
மனம்போகா வாறெலாம் எழுதப் புகுந்த - என்
மதிப்புடை நண்பர் ஒருவர்சொல் கின்றார்!
மனம்போன தெழுதாமல் எதை,எழு துவது?
மனம்போகா தெழுதிடும் 'மலிவு' எனக் கில்லையே!

'உள்ளத்தை' ஒளியாமல் உலகில் பதிக்கிறேன்!
உலகுக்கு ஒளியாமல் உள்ளதைச் சொல்கிறேன்!
கள்ளத்தைப் பழகிடும் 'கணக்கு' எனக் கில்லை!
காசுக்கு எழுதிடும் 'கர' வெனக் கில்லையே!

-1976

## 34 என் வாழ்வும் தமிழும் ஒன்றன்றோ?

உண்மைக் கென்றும் அழிவில்லை - என்
உயிர்மைக் கென்றும் இழிவில்லை!
திண்மைக் கென்றும் தளர்வில்லை - என்
தெளிவுக் கென்றும் அசைவில்லை! 1

நேர்மைக் கென்றும் தாழ்வில்லை - என்
நிகழ்வுக் கென்றும் வீழ்வில்லை!
கூர்மைக் கென்றும் மழுக்கில்லை - என்
கொள்கைக் கென்றும் இழுக்கில்லை! 2

அன்புக் கென்றும் காய்வில்லை - என்
ஆண்மைக் கென்றும் தேய்வில்லை!
இன்புக் கென்றும் குறைவில்லை - என்
எழுத்துக் கென்றும் மறைவில்லை! 3

அறிவுக் கென்றும் மருளில்லை - என்
ஆய்வுக் கென்றும் இருளில்லை!
செறிவுக் கென்றும் குழிவில்லை - என்
செம்மைக் கென்றும் சுழிவில்லை! 4

முயற்சிக் கென்றும் களைப்பில்லை - என்
முனைப்புக் கென்றும் இளைப்பில்லை!
பயிற்சிக் கென்றும் ஓய்வில்லை! - என்
பண்புக் கென்றும் சாய்வில்லை! 5

போக்குக் கென்றும் முடிவில்லை! - என்
புலனுக் கென்றும் நொடிவில்லை!
நோக்குக் கென்றும் ஒடிவில்லை! - என்
நுகர்ச்சிக் கென்றும் வடிவில்லை! 6

பேச்சுக் கென்றும் இடையில்லை - என்
பிடிப்புக் கென்றும் தடையில்லை!
மூச்சுக் கென்றும் முட்டில்லை - என்
மொய்ம்புக் கென்றும் தட்டில்லை! 7

தோளுக் கென்றும் தொய்வில்லை - என்
தொண்டுக் கென்றும் நைவில்லை!
வாளுக் கென்றும் பழுதில்லை! - என்
வாழ்வும் தமிழும் ஒன்றன்றோ!

-1977

## 35 என் உடலும் உயிரும் நானும்!

என்னை விளங்கிக் கொள்ளா தவருளென்
மனைவியும் மக்களும் முதலில் நிற்பவர்;
அன்னையுந் தந்தையும் அவர்களை அடுத்தவர்;
அன்பரும் நண்பரும் அவர்களின் பின்னவர்!
பொன்னையும் பொருளையும் புறம்பார்ப் பவர்க்கும்
பொய்யும் புனைவும் திறம் பே சுவர்க்கும்
தன்னை யறிவதோ, தன்னை யறிந்தபின்
தவறிலா என்னை யறிவதோ பெரும்புதிர்! 1

வீடும் வாயிலும் விளங்குதல் வேண்டும்;
வீணரின் பேச்சுக் கிசைந்திடல் வேண்டும்;
ஓடும் தங்கமும் ஒக்கக் காணுமென்
உணர்வைக் கொன்(று), அவர்க் குவந்திடல் வேண்டும்!
தேடும் பொருள்களில் பங்கென்ன வென்பார்;
நீங்கிலா மனத்தையும் அறிவையும் மதியார்!
நாடும் மக்களும் நறுந்தாய்த் தமிழையும்
நலிவு நீக்குமென் நயத்தையும் உணரார்! 2

தீதிலா என்னுளத் தெளிவையும் தேரார்;
தேய்விலா அதனொளித் திறமையும் அறியார்!
ஓதிலா நிலையொடு வந்தெனை அளப்பார்;
ஒருகை ஒருமுழம் ஒருமார் பென்பார்!
ஏதிலா வினைபல இயங்கிடும் புல்லியர்
என்வினை முதல்இழப் பூதியம் கேட்பார்!
மூதிலா இளமையர் பிஞ்சினர் குடுக்கையர்
மூத்தஎன் உணர்வெழும் பாத்திறன் நிறுப்பார்! 3

பூவொடும் பிஞ்சொடும் காயொடுந் தழையொடும்
புலம்புலம் நிற்பவர், பழுத்துக் குலுங்குமென்
ஈவொடும் பேறொடும் இணையெனப் பேசுவர்;
இன்னுஞ் சிலரெனை இழிவொடும் ஏசுவர்!

நாவொடும் வினையொடும் மனத்தொடும் ஒன்றிய
நல்லுணர் வாளனை அறிவினும் ஆய்குவர்!
பாவொடும் ஊறிய பைந்தமிழ் மைந்தனை
பயன்படுத் தும்வகை அறிகிலாப் பேதையர் 4

சொன்னசொல் யாப்பொடும் கோப்பொடும் மிளிர்ந்திடும்;
சுடர்விடும் கதிரதில் கோடி ஒளிர்ந்திடும்!
மின்னியுள் ளத்துளே தோன்றி மெருகிடும்
மீவொளிக் கீற்றுகள் நூறுநூ றாயிரம்!
முன்னிய எண்ணி முடிப்பதற் குள்ளுளம்
மூண்டிடும் கோடியங் கோடிச் சிதறல்கள்!
என்னிலை எதுவெனும் ஏற்றமி லாதவர்
என்றனைப் புறத்திலே இதுவெனப் பிதற்றுவர்! 5

மண்ணை யறிந்தவர் மண்ணென மதிக்குவர்;
மலரை நுகர்ந்தவர் மணமெனக் கூறுவர்.
திண்ணை யறிந்தவர் திசைப்பரப் பறிவரோ?
திவலை அளப்பவர் திரைகடல் அளப்பரோ?
கண்ணை யறிந்தவர் கதிரொளி தெளிவரோ?
காற்றை யறிந்தவர் கடும்புயல் நிறுப்பரோ?
மொண்ணை யறிந்தவர் முழுக்கூர் உணர்வரோ?
முகட்டை யறிந்தவர் முழுவான் காண்பரோ? 6

நான்ஒரு பெரும்புதிர்! தனிக்கதிர்! தமிழின
நன்மையை நாடிப் பிறந்துள நல்லுயிர்!
வான்படு கதிர்மதி வன்மையும் தண்மையும்
வந்திணை யாளுமோர் ஆட்சியுட் படும்உயிர்!
கூன்படு கொள்கையும் குழைவதும் நெளிவதும்
குடற்புழை மானம்விற் றடைத்திடும் குறுமையும்
ஊன்படு வாழ்க்கையில் ஒருதுளி யிலாஉயிர்!
உண்மையும் நேர்மையும் ஒழுக்கமும் உயிர்க்குயிர்! 7

மண்தரை கால்படும்; மனம்வான் வெளிபடும்!
மனம், அறி(வு) இணைந்துவாய் மண்டுரை பொழிதரும்!
புண்புரை யாளரைப் புளுகரைப் பொய்யரைப்
புகுமுகம் புரிந்திடும் புல்லரைப் பொருதிட
கண்பொறை கழன்றுதீக் கனன்றிடுஞ் சொல்வரும்!
கனிவினால் நல்லுள மாந்தரைக் காத்திடும்!
பண்புறை மனம்; ஒழுங் குடல்; ஒளி நிறைபுலன்;
பணியுமன் பறிவெனில்; பதைக்குமற் றெதற்குமே! 8

-1978

## 36 அன்றையும் இருந்தேன்; இன்றையும் இருந்தேன்; என்றையும் இருப்பேன்!

காற்றோடு காற்றாய் உருக்கரந் திருந்தேன்!
கதிரொடும் ஒளியாய் இருந்தேன்!
ஊற்றொடும் ஊற்றாய் உருவெளிப் பட்டேன்;
ஒழுகுவெள் ளருவியாக் குதித்தேன்!
ஆற்றொடும் ஆறாய் அகல்வழி நடந்தேன்;
ஆழியிற் கலந்துடல் பரந்தேன்!
நாற்றோடு நாற்றாய் நல்வயல் விளைந்தேன்!
நறுநெல் மணியெனப் பொலிந்தேன்! 1

மேலொளி வானில் முகிலொடு மிதந்தேன்;
மின்னலில் இடியினில் தெறித்தேன்;
காலொழி விசும்பில் கண்ணிமை மீனக்
காட்டிடை ஊழிபல் ஒளிர்ந்தேன்!
பால்வெளி மண்டிலப் பாதையில் திரிந்தேன்;
பாழினுள் நெடுநாட் புதைந்தேன்!
வாலறி மெய்ப்பொருள் வாய்த்துயிர் கலந்து
வாய்க்கொணா இன்புணர்ந் திருந்தேன்! 2

தென்றலிற் கலந்து பூவோடு மணந்தேன்!
தேன்எனத் தும்பியுட் புகுந்தேன்!
குன்றிடைக் குருவிக் குழாத்தொடு பறந்து
குயிற்கிளி இசையொடு பேசி,
மென்றுமிழ் கோதில் மீள்வெளிப் பட்டு
மேய்தரு பசும்புலாய் விளைந்தேன்!
தின்றமிழ் தளிக்கும் ஆவொடு மேவித்
திரிதரு விலங்கொடு திரிந்தேன்! 3

அன்றையு மிருந்தேன்; இன்றையு மிருந்தேன்;
ஆனபின் என்றையும் இருப்பேன்!
ஒன்றையுந் தவிரா துயிருணர் வுடலாய்
ஒன்றினுள் ஒன்றாய் உயிர்ப்பேன்!
என்றையு மில்லா இருள்நினை வில்லேன்!
என்றையும் பின்றையு மிருந்தேன்!
மன்றையும் நிறைத்து மனத்தையும் குவித்து
மலர்த்துமெய்த் தமிழாய் மணப்பேன்! 4

-1978

## 37 துவளாத வாழ்வு, என் வாழ்வு!

அன்பிலே மழைத்தண்ணீர்!
அறிவிலே பெருநெருப்பு!
ஆற்றலில் சூறைக் காற்று! - உளத்
தென்பில் மாமலை!
தெளிவிலே நீர்நிலை!
திரிதலில் வானப் பறவை!
என்பிலே நல்லுறுதி!
இயல்பிலே தமிழுணர்வு
எண்ணத்தில் தமிழர் மேன்மை! - வருந்
துன்பிலே துணிந்தமனம்
துயிலிலே விழித்த நிலை!
துவளாத வாழ்வென் வாழ்வே!

பட்டம் என் மூக்குப்பீ!
பதவியென் கால்தூசு!
பாராட்டென் காதுக்குறும்பீ - பெருந்
திட்டமுடன் இயங்குவேன்!
தீரமுடி வெய்துவேன்!
தேர்வதனை முனைந்து செய்வேன்!
வெட்டெனவே பேசுவேன்!
விளக்கமுற எழுதுவேன்!
வீணரை விலக்கிவைப்பேன்! - வரின்
கட்டாயம் பேசுவேன்;
கருத்தைப்பரி மாறுவேன்!
கடுகளவும் பகைகொள் ளேனே!

-1978

## 38 வாழும் என் உயிரும் அகமும்!

செந்தமிழை வாழ்த்தித்
திருத்தமிழர் சீர்வாழ்த்தி
என்தமிழ் நாட்டின்
எழில்வாழ்த்தி, முந்தையர்தம்
பேர்வாழ்த்தி, அன்னார்
பெரும்புலமைத் தாள்வாழ்த்தி
ஊர்வாழ்த்தி வாழ்மென்
உயிர்!

வாழ்வுயர்ந்து செந்தமிழ்தான்
வையம் பரவிடவும்,
தாம்விழிவு நீங்கித்
தமிழரினம் வாழ்ந்திடவும்
வீழ்வின்றி நல்லறமே
யாண்டும் விளங்கிடவும்
ஆழ்நினைவால் வாழ்மென்
அகம்!

-1981

## 39 கொள்கையை ஆற்ற மறப்பேனா?

"சுவரை இடித்துப்பல் வண்ணங் குழைத்தொரு
சித்திரம் தீட்டுவதா? - உள்ள,
துவரை விதையினைத் தொலைத்துப் பருப்புக்குத்
துன்புற் றலைகுவதோ?
அவரை விதைத்தொரு பந்தலை நாட்டாமல்
அண்ணாந்து பார்ப்பதுவோ? - அட,
எவரை நினைத்துளம் கசங்கியிவ் வாறொரு
ஏதம் நினைத்து விட்டீர்!"

"மலையை இடித்தொரு சுவரை எழுப்பிட
மனமுந் துணிவதுவோ? - நெஞ்சாங்
குலையைப் பிழிந்தொரு குவளைக் குருதிக்குக்
கொள்கை வகுப்பதுவோ?
சிலையை அழித்தொரு செங்கல் வடித்திடச்
சிற்றுளி ஏந்துவதோ? - தாய்
முலையை யறுத்திட்டுக் குழந்தைவாய்ப் பாலுக்கிங்
கலைய முனைந்துவிட்டீர்!"

"நிலவைப் பழித்தொரு மின்மினிப் பூச்சிக்கு
நெட்டுயிர்த் தோடுவதோ? - தொங்கும்
பலவைத் தவிர்த்தேஓர் இலந்தைப் பழத்தினைப்
பார்த்துளம் ஏங்குவதோ? - சாந்துக்
கலவைக் குழையினை மார்புறப் பூசாமல்
களிமண்ணை மோப்பதுவோ? - வரும்
உலவை மனம்நொந்து தென்றலைத் தவிர்த்திட
உள்ளந் துணிந்து விட்டீர்!"

என்றுரை கூறி இடித்தனர், பற்பலர்,
என்னுளந் தாழ்ந்திடுமோ? - ஒரு
குன்று பொடிந்து நொறுங்குதல் யாங்கேனும்
கூறிடக் கேட்டதுண்டோ?
நின்று படித்தயெம் பாடத்தைக் கேட்டவர்
நெட்டப் படுத்திடினும் - உயிர்
அன்று துணிந்(து) உடல், ஆகிய கொள்கையை
ஆற்றமறப் பேனோ?

சுமந்து சுமந்தென்றன் வல்லுடல் கூனியே
சுருண்டு படுத்திடினும் - தமிழ்
கமழ்ந்து மணக்குமென் நெஞ்சாங் குலையினைக்
கசக்கிப் பிழிந்திடினும்,
அமிழ்ந்து கிடக்குமென் இனத்தையும் நாட்டையும்
ஆருயிர்த் தமிழினையும் - வான்
நிமிர்ந்து நிறுத்திமுன் னேறிடச் செய்யாமல்
நீட்டிப் படுப்பேனோ?

-1983

## 40 எனக்கொரு கொள்கை!

எனக்கொரு கொள்கை!
எனக்கது கடமை!
என்னுயிர் இயக்கமும் அதற்கே!
தனக்கொரு போக்கைத்
தழுவுவார் என்றன்
தடத்தினில் குறுக்கிடல் எதற்கே?

தமிழ்மொழிக் கென்றன்
தனிமுதல் உழைப்பு!
தமிழின நலம்பெறல் இரண்டு!
தமிழ்நில விடுதலைக்
குழைத்திடல் மூன்று!
தாழ்விலும் கைவிடேன் மிரண்டு!

அரசியல் நன்மை
ஆயிரம் வரினும்
அதன்வழித் துளிநலம் நாடேன்!
முரசென முழங்கி
முனைப்புடன் எழுதி
முழுவுழைப் பளிப்பேன்! வாடேன்!

தனிநலம் நாடும்
அணிகளில் சேரேன்!
தம்செயல் குழுக்களில் இணையேன்!
பனி, குளிர், வெயில், மழை
மானமும் பாரேன்;
பைந்தமிழ், இனநலம் முனைவேன்!

- 1983

## 41 அன்புணர்வும்! அறிவுணர்வும்! செயலுணர்வும்!

அன்பென்று சொல்லுவார்;
அறிவென்று கூறுவார்;
அருந்துணை வரத்தயங்குவார்!
என்பென்றும் தசையென்றும்
நாரென்றும் பூட்டிய
இணைத்தொண்டர் நாங்களென்பார்!
முன்பென்று வந்தென்றன்
முழுநேரத் தொண்டுக்கும்
முதுகுச்சுமை தாங்கமாட்டார்!
பின்பென்றன் அறிவுக்கும்
செயலுக்கும் பெரும்பிழை
பேசியெனைப் பழிகாண்பாரே!

-1983

## 42 தீதிலாது இனம் ஆற்றுவேன்!

தூய்மை யான, ஓர் உளத்தினை - ஒளி
துலக்க மான, ஓர் அறிவினை,
வாய்மை யான,ஓர் உணர்வினை - ஒரு
வளப்ப மானநன் னெறியினைச்
சேய்மை யான, ஓர் இயல்பினை - மிகச்
சிறந்த தான, ஓர் உயிரினை,
நோய்மை யானஇத் தமிழர்கள் - தொலை
நோக்கு வார்என நினைத்திலேன்!

காணு மாறொரு தாழ்வினை - அறக்
களையு மாறொரு கடமையை,
நாணு மாறொரு நேர்மையால் - அட
நானும் நலிவுற ஆற்றினேன்!
வேணு மாறிவண் தமிழர்கள்! - அதை
விளங்கி னாரெனக் கருதிலேன்!
பேணு வாரென நம்பிலேன்! - எனில்
பின்னும் அதனையே செய்குவேன்!

குற்றங் குறைகளும் சாற்றுவார்! - யான்
கூறும் கூற்றையும் மாற்றுவார்!
தொற்றும் மடமையில் உழலுவார்! - ஒரு
தோழமை உளம் அறிகிலார்!
கற்றும் கலாதவர் போலவே - பெருங்
கயமை செய்வரை நம்புவார்!
மற்றும் யான்எனச் செய்குவேன் - மன
மாசி லா(து)இனம் ஆற்றுவேன்!

உண்மை யிலாதவர் நம்புவார் - ஓர்
உண்மை உளத்தினை நம்பிலார்!
வெண்மை உரைகளைப் பற்றுவார் - தூய்
வெள்ளை நெஞ்சினை எற்றுவார்!
பெண்மை மனமென ஐயுற - ஒரு
பேதை போலெனைப் பேசுவார்!
திண்மை தவித்திடல் அல்லனாய் - ஒரு
தீதி லா(து)இனம் ஆற்றுவேன்!

-1984

## 43 தமிழருக் குலகினில் புகழ் சேர்ப்பேன்!

எத்தனை இழிவுகள் பழிகளைக் கூறினும்
என்செயல் நடக்கும் விடமாட்டேன்! - ஒரு
சித்தனைப் போலமுன் பின் உணர்ந் ததனால்
சிறுஅள வதிர்ச்சியும் படமாட்டேன்!
பித்தனைப் போலவும் பேடியர் போலவும்
பிதற்றுவார் தூற்றலுக் குளம் நடுங்கேன்! - ஒளி
முத்தனை தமிழில், இனத்தினில், நாட்டில்
முழுவுளம் பதித்தேன்! வினைஒடுங்கேன்!

தனியனாய் நடப்பினும் தனிவழி போகினும்
தாழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் நடைதளரேன் - மிகு
பனியினும் குளிரினும் வெயில்மழை சூழினும்
பதுங்கிட மாட்டேன்; மனம் உலரேன்!
இனியராய்ப் பேசி இழிஞராய் மாறும்
எத்தரை அணுகேன்; நிலைமாறேன்! - ஒரு
முனிவனாய் இருந்து முதுபொருள் உரைப்பேன்!
முதுதமிழ்க் குழைப்பேன்; பழி கூறேன்!

உழைப்பவர் உழைப்பினுக் குறுதுணை யாவேன்!
உலுத்தரை இடித்திடித் துரைதருவேன்! - பிழை
இழைப்பவர் எவரெனி னும்அவர்க் கடிவேன்!
ஏழையர்க் குதவுவார்க் கிணை வருவேன்!
அழைப்பவர் அன்பினுக் கறிவினுக் கடியேன்!
அதிகார ஆளுமைக் கடிபணியேன் - நெறி
பிழைப்பவர் பிழையை நேருற உரைப்பேன்!
பேதையர் பிழைகளை உடன்மறப்பேன்!

இந்தநூற் றாண்டில் இதுதலை முறையில்
எந்தமிழ், இனம், நலம் தன்னுரிமை பெற
வந்துழைத் திடுவார் எவரெனி னும் அவர்
வருகையை வாழ்த்துவேன், வரவேற்பேன்!
வெந்துநீ றாயினும் தமிழ்மொழிக் கென்னுயிர்,
விறகுடல் தருவேன்! பொருள் தோற்பேன்! - பலி
தந்தினம் மீட்பேன்! விடுதலை பெறுவேன்!
தமிழருக் குலகினில் புகழ் சேர்ப்பேன்!

-1984

## 44 உண்மை உழைப்பு!

ஊருக்கு நல்லன செய்யும் - ஓர்
உண்மை உழைப்பின னாக,
நேருக்கு நேர்நின்று பேசும் - ஒரு
நேர்மை உளத்தின னாக,
யாருக்கும் அஞ்சுதல் இன்றி - ஒரு
யானை வலிமையி னோடு,
போருக்கென வந்து விட்டேன் - என்
போக்கில் மறுதலை இல்லை!

தேருக்கோர் அச்சாணி யாகத் - தமிழ்த்
தெளிவினைக் காப்பதென் கொள்கை!
வேருக்குள் நீர்விடும் வேலை - நான்
விரும்பும் இனநலத் தொண்டு!
பேருக்கும் பொருளுக்கும் மாயேன் - எந்தப்
பேயர்க்கும் நாயர்க்கும் சாயேன்!
பாருக்குள் உலாதரும் வேளை - என்
பணிக்குச் சடைவுகள் இல்லை!

-1984

## 45 வினையும் விளைவும் தோற்றமும்!

என்மேல் பழிகளை இறைக்கின் றார்களாம்;
இழிவுகள் என்மேல் சாற்றுகின் றார்களாம்;
புன்மொழி செவிசுடப் புகலுகின் றார்களாம்;
பொருளையும் புகழையும் விரும்புகின் றேனாம்!
'என்னிவற் றிற்கு(உ)ம் விளக்கம்?' - என்றோர்
இன்னரும் அன்பர் எழுதி யிருந்தார்!
'சொன்னவை யாவிலும் ஒருதுளி யாகிலும்
சொல்லுக, உண்மை இராதா?' -என்கிறார்!

உண்மையாய் அவர்போல் உள்ளவர்க் குரைக்கிறேன்;
உண்மை இருக்கலாம்! ஆயினவ் வுண்மையின்
ஒண்மை வடிவினை யார்வந் துரைப்பது?
உரைப்பவர் மெய்யரா பொய்யரா என்பதைத்
திண்மையாய் எதைக்கொண் டளப்பது? தீர்வுசெய்
தீங்கனை மூங்கனை எப்படித் தெளிவது?
நுண்மையாய் அவர்திறம் நம்பிடு வீரெனில்,
நுவலுக, என்னையேன் நம்பிட வில்லை,நீர்?

பனைமரத் தடியிலே பாலினை அருந்துவார்
பார்ப்பவர்க் கெங்ஙனம் படுவரோ அவர்போல்,
எனைநிறத் தாயினும் பொதுநிலைக் குற்றவர்
எவர்விழிக் காயினும் அவர்மனக் காட்சியர்!
தினைமனங் கொண்டு பனைமனம் தேறுவார்
தேற்றம் நிறுப்பன காலமும் செயலுமே!
வினைபடல் வகையினில் பற்பல விளைவுகள்
வேறு வேறு தோற்றமென் றுணர்கவே!

-1985

## 46 இருள் உனக்கு விடியுமா?

உன்னைப் போலக் கோடிப் பேர்கள்
ஒருங்கிணைந்து புறப்பட் டாலும்
என்னை வீழ்த்த முடியா தென்று
- தெரியுமா? அட,

மின்னைப் போலக் கதிரைப் போல
மேலெழும்பும் காற்றைப் போல
அன்னைத் தமிழில் கரைந்து விட்டேன்;
- புரியுமா?

பொய்யைச் சொல்லிப் புளுகைச் சொல்லிப்
புழுக்கை யெல்லாம் எண்ணி னாலும்
மெய்யை வீழ்த்த முடியா தென்று
- விளங்குமா? அட,

எய்யச் சொல்லி அம்பைச் சிலரும்
எடுத்தெடுத்துக் கொடுத்திட் டாலும்,
மையக் குத்தித் தவிட்டில் அரிசி
- துலங்குமா?

பழியைச் கூறி இழிவைக் கூறிப்
பரக்க எழுதிப் பரப்பி னாலும்
வழியைத் தடுத்தென் திசையைத் திருப்ப
- முடியுமா? அட,

விழியைத் திறந்தே குழியில் விழுந்து,
விலாவ லிக்க எம்பி னாலும்
அழியச் சூழும் இருள் உனக்கு
- விடியுமா?

-1985

## 47 சூழ்நிலைகளில் நான்!

மற்றவர்க்குச் சொல்லும் போது
என்னையும் நான் நினைக்கிறேன்!
மற்றவரை ஏவும் போது
நானும் இணைந்து செய்கிறேன்!

கற்றவரைக் காணும் போது
கல்லாதன எண்ணுவேன்;
கல்லாதவரைப் பார்க்கும் போது
கற்றவற்றைச் சொல்லுவேன்!

நல்லவரைக் கூடும் போது
நயவுரைகள் கூறுவேன்;
நடிப்பவரைப் பார்க்கும் போது
நாவை உள்ளே வாங்குவேன்!

அல்லவரைக் காணும் போது
அடுத்த இடம் மாறுவேன்;
அன்பர்களைப் பார்க்கும் போது
நெஞ்சைப் பரி மாறுவேன்!

துன்பம் வந்து சூழும் போது
துவண்டு விழுவ தில்லை, நான்!
தோல்வி தொடர்ந்து தாக்கும்போது
தொய்வு கொண்ட தில்லை,தோள்!

இன்பம் கொழித்து வழிந்த போதும்
எக்களித்த தில்லைகாண்!
ஏழ்மை நெருங்கி நின்றபோதும்
இடிந்து போன தில்லையே!

-1986

## 48 தொண்டில் எனது மனம்!

மழைக்குக் கரையாது;
வெயிலுக்குக் காயாது;
மருள்பனிக்கு நனைந்திடாது!
தழைக்கத் தவிராது;
தளிர்க்கக் குறையாது;
தணலுக்குப் பொசுங்கிடாது!
உழைக்கத் தளராது; இங்(கு)
உணக்க வதங்காது; எஃ(கு)
ஒளிர்வாட்குச் சிதைந்திடாது!
குழைக்கத் தமிழ்மணக்கும்
தொண்டில் எனதுமனம்
கூத்தாடும் காலமதிலே!

ஏசலுக்கு மழுங்கா(து); ஓர்
எதிர்ப்புக்குக் குலையாது;இங்(கு)
இழிவுக்குச் சாய்ந்திடாது!
பூசலுக்கு வருந்தாது;
பொய்யுரைக்கும் அழுங்காது;
பொறாமைக்குப் புழுங்கிடாது!
ஊசலுக்குத் துஞ்சாது;
உலுத்தர்க்கும் அஞ்சாது
உதவாமைக் கொடுங்கிடாது!
பேசலுக்கும் மீறி,இனத்
தொண்டில் எனதுமனம்
பெயராத காலமதிலே!

நலிவில் நசுங்காது;
நயப்பில் மயங்காது!
நடிப்புக்கு மசிந்திடாது!
மெலிவில் நெகிழ்க்காது;
மிகைவாழ்வுக் கேங்காது;
மெச்சுதற்கும் வீங்கிடாது!
பொலிவில்ஏ மாறாது;
பூட்டறைக்கும் வாடாது
புன்துயர்க்கும் வருந்திடாது
வலிவில் - தமிழ்நிலத்தை
வாங்கும் செயலில்மனம்
வழக்காடும் காலமதிலே!

-1986

## 49 வஞ்சகப் பூனைகள்!

வஞ்சகப் பூனைகள் என்பதால் வந்தே
நெஞ்சுரம் மறைத்துச் சிற்சில நேரம்
கொஞ்சியும் அன்பு கொழுவியும் தொண்டினால்
விஞ்சிடும் என்துயர் விளங்கக் கேட்டும்
இரங்குதல் போலும், இனிமேல் துணையாய்
நெருங்க நிற்பது போலும் நெகிழ்ந்துரை
செய்திடும்! இதனைச் சிறப்புற ஒப்பி
எய்யாப் பெருமகிழ் வெய்தி யிருப்பேன்!

ஆனால், ஐயகோ, அவைபுறஞ் சென்று
வீணுரை பரப்பி, வெய்ய உரைத்து - என்
மாண்பினைக் குறைத்திட பற்பல மலவினை
நோன்பெனக் கொண்டு செய்து திரிவதை
எங்கன் தடுத்திடற் கியலும்? இப் பூனைகள்
தங்கள் தங்கள் பிறவிக்குத் தக்க-
குண நிலை பெற்றும் குறுமதி யுற்றும்
உணவுக் காகவும் உயிர்ப்பதற் காகவும்,
இவ்வா றியங்கிடல் இயல்பாய் இருக்க
எவ்வா றிவைதமை மாற்றிடற் கியலும்?

பொதுநிலை வாழ்வெனப் புகுந்தவர் - காயும்
கதிரவன் போன்றவர்! காற்றைப் போன்றவர்!
ஓடும் ஆற்றுநீர் ஒத்தவர்! அவரிடைக்
கூடும் மனங்களைக் கோல்கொண் டளந்தே
இன்னவர் இன்ன தன்மையர் - இவரிடம்
என்ன வாறாய் இயங்குவ தென்றெலாம்
கணக்கிட்டுப் பழகுதல் - கரவொடு பயிலுதல் -
எனக்குக் கைவரா எத்துகள் என்க!

ஆற்று நீரையும் அழற்கதி ரொளியையும்
காற்றையும் அவரவர் கருமத்திற் கேற்பவும்,
அறிநிலை மனநிலை அமைவினுக் கொப்பவும்
நெறிமைப் படுத்துதல் நிகழும் உலகியல்.
இத்தகு நிலையில் அவரவர்க் கேற்ப
ஒத்தியங் குதல்எனக் குதவா தென்க!

பயன்படு பொருள்நான்! பலர்க்கும் உரியவன்!
வயன்படல் என்பதென் வாழ்க்கையில் இல்லை!
எதைநான் வெறுப்பது? எதைநான் விழைவது?
விதைநான்! விளைவோ விளைப்பவர் கையுள்!
அதையதை அவரே அமைத்துக் கொள்க!
கதையிலை! கற்பனை கடுகள வில்லை!
பேணாதும் பேணலும் பெற்றவர் கடமை!
வேணாதும் வேட்பதும் வித்துக் கில்லையே!

-1988

## 50 நடிப்பார் ஆட்சியுள் நானிருந்தேனே!

ஐந்து பொறிகளும்
அற்றுளம் செத்தும்,
பிய்ந்த பெருமைகள்
பீற்றித் திரிந்தும்,
உய்ந்த பிழைப்பொடும்
உய்யா வாழ்வொடும்,
நைந்த தமிழரொடு
நானிருந் தேனே!

படிப்பார் அறிவெலாம்,
பாழாய்ப் போகவும்,
இடிப்பார் கருத்துரை
இழிவுரை யாகவும்,
துடிப்பார் உள்ளம்
துவண்டுசோர் வுறவும்,
நடிப்பார் ஆட்சியுள்
நானிருந் தேனே!

-1988

## 51 நெருப்பாற்றில் எதிர் நீச்சல்!

நான் மறைந்த பின்தான் - என்
நன்மை வாழ்க்கை தெரியும்
வான்விரியப் புகழ்வார் - வெறும்
வாயரற்றிப் பொழிவார்!

கத்திக் கத்திச் சொன்ன - என்
கருத்தைத் தேடி அலைவார்!
பொத்தகங்கள் ஆய்வார் - வெறும்
புகழ்ச்சிக் கூரை வேய்வார்!

எழுதி எழுதிப் போட்ட - என்
எழுத்தை யாவும் தேடிப்
பழுதில் லாமல் பதித்து - பெரும்
பணங்கள் திரட்டி வாழ்வார்!

பட்டி மன்றம் கூட்டி - என்
பாவும் கருத்தும் தேறி
வெட்டிக் கதைகள் பேசிப் - பல
வேடிக் கைகள் செய்வார்!

நினைவில் நிற்க வேண்டி - என்
நிழற்ப டங்கள், சிலைகள்
புனைவு விழாக்கள் பலவும் - சிலர்
பொழுது போக்க உதவும்!

ஆர வாரம் செய்து - நான்
அப்படி இப்படி என்று
நேரம் கொன்று வாழ்வார் - என்
நிழலைப் பிடிக்க முயல்வார்!

உண்மை தேடி அலைந்தேன் - உயர்
உள்ளம் காண முனைந்தேன்!
கண்கள் இருண்ட தல்லால் - இரு
காலும் சோர்ந்த தல்லால்,

வெண்மை முடிகள் எய்த - உடல்
விறகு போல வற்ற
பெண்மை ஆண்மை வடிவில் - பல
பிறவி உருவம் கண்டேன்!

மெழுகைப் போன்ற உடலார் - புது
மெருகு கூட்ட அலைவார்;
கழுகைப் போன்ற நோக்கர் - பல
கயமை செய்து வாழ்வார்!

மானம் நாணம் பாரார்! - திரை
மறைவில் சூழ்ச்சி செய்வார்!
கூனல் தாங்கிப் போன - ஏழைக்
கூட்டம் நொந்து சாகும்!

என்னை விரும்பி னோர்கள் - பின்
என்னை வெறுத்த பேர்கள்,
முன்னை அன்பு காட்டி - என்
முதுகில் குத்தி யோர்கள்,

பன்னிப் பன்னிப் பேசி - உயிர்
பழகப் பழகக் கூடித்
தன்னை உயர்த்திக் கொண்டார் - எனும்
தாழ்ச்சி வரிசை நீளும்!

பொய்யும் புளுகும் சொல்லி - என்
புரைகள் பெருகப் பண்ணி,
எய்யும் பொருள்கள், பெருமை - என
யாவும் மிகுத்துக் கொள்வார்!

தொண்டு தொண்டு என்றே - என்
வாழ்வைத் தொலைத்துக் கொண்டேன்!
பெண்டு பிள்ளை எல்லாம் - என்
பிழைப்பைக் கண்டு தூற்றும்!

மொழியும் இனமும் நாடும் - முன்
இழந்த உரிமை மீள நல்
வழியும் கண்டு சொன்னேன் - நாய்
வாலும் மதிக்க வில்லை!

என்னைக் கொன்று கொண்டேன்! - இவ்
வினத்தை மீட்க நின்றேன்!
சின்ன துணையும் இல்லை - ஒரு
சிறிய உதவி இல்லை!

தன்னந் தனிய னானேன்! - என்
தாயும் இரக்கப் பட்டாள்!
முன்னில் வணங்கிச் சென்றார்! - என்
முதுகுப் புறத்தில் மென்றார்!

இழித்துப் பேசி எழுதி - எனை
இகழ்ந்து தூற்றி நின்றார்!
சுழித்த நெருப்பின் ஆற்றில் - எதிர்
நீச்சல் அடித்துச் சோர்ந்தேன்!

விலைக்குப் பேச வந்தார் - என்
கொள்கை விடுக்கச் சொன்னார்!
வலைக்குள் வீழ வைத்தார்! - என்
வாயைக் கட்டச் சொன்னார்!

கட்சிக் கூண்டில் அடைக்க - என்
கருத்தை மாற்றக் கேட்டார்!
முட்சி தர்ந்த தடத்தில் - எனை
முடுகி நடக்கச் சொன்னார்!

உதவிக் காக எண்ணி - என்
உளத்தை மறைக்கச் சொன்னார்!
பதவிக் காக வென்றே - என்
பணியை மாற்றக் கேட்டார்!

தமிழை எங்ஙன் மறப்பேன் - தமிழ்
இனத்தை எங்ஙன் தவிர்ப்பேன்!
குமிழ்க்கும் நாட்டின் உரிமை - என்
குலையின் துடிப்பே அன்றோ?

என்னைப் புகழ வேண்டாம் - என்
எழுத்தை மதிக்க வேண்டாம்!
கன்னல் தமிழை யன்றோ - நான்
காத்துக் கொள்ளச் சொன்னேன்!

இனத்தை நாட்டை மீட்க - ஓர்
எழுச்சி வேண்டும் என்றேன்!
மனத்தை மானம் தன்னை - உடன்
மாய்த்துக் கொள்ளச் சொல்வார்!

மூச்சைத் தவிர்க்கச் சொன்னால் - ஒரு
நொடியில் மூச்சை முடிப்பேன்! - என்
பேச்சை மாற்றச் சொன்னால் - என்
பிறப்பை மாற்ற வேண்டும்!

-1989

## 52 எத்தனைமுறை எனைச் சிறையிலிட்டாலுமே என் கொள்கை மாறாது!

எத்தனை முறைஎனைச் சிறையிலிட் டாலுமே
என் கொள்கை மாறாது! - ஒரு
பித்தனை, ஆண்டியைப் போல்என்றன் உள்ளமும்
பேதைமை கூறாது!
எத்தனை அரசியல் புரட்டர்கள்! எத்தர்கள்!
ஏய்ப்பதே வாழ்வு(அ)வர்க்கே! - ஒரு
சித்தனை, அறிவனைப் போல்மக்கள் வாழ்க்கையே
சிந்தனை, செயல் எனக்கே!

ஏச்சுகள் இழிவுகள் எவையுமென் தொண்டினை
இம்மியும் அசைப்பதில்லை! - வாள்
வீச்சுகள், குண்டுகள் உடல்பிளந் தாலுமே
விளைவினில் மாற்றமில்லை!
பூச்சுகள், புனைவுகள், புரட்டுகள் - எத்துகள்,
பொய்,எனைச் சார்வதில்லை! - விடும்
மூச்சுகள் ஒவ்வொன்றும் தமிழ்,இனம், நாடு - எனும்
முழக்கினில் சோர்வதில்லை!

அரசெனை எதிர்த்தாலும், அதிகாரம் பணித்தாலும்
அச்சமென் நெஞ்சிலில்லை! - ஒரு
முரசினைப் போலவே கொள்கை முழக்குவேன்!
மூச்சிலும் கெஞ்சலில்லை!
உரசியென் உடலினைப் பாறையில் தேய்த்தாலும்
உறுதியில் குறைவதில்லை! - தமிழ்
அரசினை நிறுவவே உண்கிறேன்; உடுக்கிறேன்!
அஃதின்றி மறைவதில்லை!

-1990

## 53 உள்ளச் சிதைவுகள்!

உள்ளத்தால் நலிந்துள்ளேன்; உடலாலும்
மெலிந்துள்ளேன்; உறவோர் போலும்
கள்ளத்தால் இயங்குகின்ற,கனிவாக
நடிக்கின்ற,கரவு நெஞ்சர்,
கொள்ளத்தான் இயலாத கொடுமைகளைச்
செய்கின்றார்! குடும்பம் என்னும்
தள்ளத்தான் முடியாத தடஞ்சுமையும்
தோள்அழுத்தத் தளர்கின் றேனே!

அறிஞர்களைப் பேணாத அழிவரசும்,
ஆள்கின்ற அமைச்சர் தாமும்
வெறிஞர்களைப் போல்,பயனில் வீணர்களைப்
போல்,வெற்று வினைகள் செய்வார்!
வறிஞர்களாய் உழைப்பவர்கள் வாடிநிலை
குலைகின்றார்! வரும்பொ ருள்மேல்
குறிஞர்களாய் ஆட்சியினர் கொள்ளையிடு
வதுகண்டும் குமைகின் றேனே!

மக்களெல்லாம் வழிமாறி மாண்பிழந்தே
எதைச்செயவும் மனம்து ணிந்தார்!
தக்கபடி அன்னவரைத் தகும்வழியில்
செலுத்தவும் ஓர் தலைவ ரில்லை!
வக்கில்லை; என்போலும் வருந்துவர்க்கும்
வழியில்லை; வாய்ப்பும் இல்லை!
திக்கறியா நெடுங்கடலுள் சீறுபுயல்
சுழல்மணலாய்ச் சிதைகின் றேனே!

-1990

## 54 இவர்களில் நானுமா ஒருவன்?

எடுப்பு

இவர்களில் நானுமா ஒருவன்?
இழிவு! மிக இழிவு!
சுவர்களில் இதுவுமோர் குட்டிச்
சுவர் எனக் கூறுதல்போல். (இவர்களில்)

தொடுப்பு

துவர்முகம், எரிப்புவிழி, உவர்ப்புரை,
கசப்புளம், புளிப்புநடை,
கவர்வுசெய் இனிப்புநகை,எனவே
திரிந்திடும் கயமையராம். (இவர்களில்)

முடிப்பு

எதற்குநாம் பிறந்தோம், எதற்குநாம்
வாழ்வோம் என நினையாப்
பதர்க்கிணை யானவர் பலபடப்
பேசுவார், பழிநினையார் (இவர்களில்)

அன்பிலே போலியர்; அறிவிலே
மூளியர்; ஆசைகளைத்
துன்பிலே துவட்டித் தொழுவிலே
கட்டிய தொழும்பர்களாம் (இவர்களில்)

வாயிலே சர்க்கரை! கையிலே
தொக்கரை! வழிப்பறிக்கும்
நோயிலே உழன்று கழிசடை
நீரிலே நொதிந்தழியும் (இவர்களில்)

முன்னும் நினையார்! பின்னும்
உணரார்! முங்கிமுங்கித்
தின்னும் வயிறொடும் உடுத்தும்
உடலொடும் திரிபவரே (இவர்களில்)

மன்னும் சீரறி யார், பொதி
மலைச்சதைக் கொழுப்புஒளிச்
சின்னஞ் சிறியர்; சீழ்வடி
நெஞ்சக் கிறுக்கரிவர் (இவர்களில்)

-1992

## 55 என் தொடக்கமும் முடிவும்!

என்னைப் பற்றி நான் எண்ணுவ தில்லை!
முன்னைத் தமிழும் முனைப்பிலாத் தமிழரும்
இன்னும் இருப்பதால் நானும் இருக்கிறேன்!

பின்னும் ஓர் காரணம் பிழைப்பினுக் குண்டு!
தமிழும் தமிழரும் தாமுயர் வதற்கும்
அமிழ்ந்தநம் நாட்டின் அடிமை நீக்கியே
நரிமைப் பகையிடம் நான் றுகொண் டுள்ள
உரிமைமீட் பதற்குமே உயிர்வாழ் கின்றேன்!
அன்னைத் தமிழ்க்கே ஆருயிர் இயங்கலால்
என்னைப் புகழ்வதில் எள்மூக் களவும்
எனக்கு மகிழ்ச்சி ஏற்படல் இல்லை!

மனக்குகை எல்லாம் மறம்மண்டி யிருப்பதால்,
இகழ்ச்சியும் புகழ்ச்சியும் எனக்குவெற் றொலிகளே!
நெகிழ்ச்சியோ இறுக்கமோ நேர்வதங் கில்லை!
இமைப்பினில் மூச்சினில் இயங்கலில் எல்லாம்
அமைப்பும் ஆக்கமும் அவற்றின் வளர்ச்சியும்
பொதிந்து கிடப்பதால் பொருள்நினை வும்இலை!
பதிந்த பாதையில் பாதங்கள் சுமக்கும்!

ஆக்கம் தமிழ்க்கெனில் அகமகிழ் கின்றேன்!
தாக்கம் தமிழ்க்கோ தமிழருக் கோஎனில்
உடலும் உள்ளமும் உயிரும்நோ கின்றேன்!

விடலரும் கொள்கையோ,வியன்தமிழ் ஏற்றமும்
தமிழர் உரிமையைத் தாம்பெறு வதுமே!
இமிழா துழைப்பதே என்னுடை வாழ்க்கை!

விழிப்பதில் தொடங்கிடும் வினையோ பகையினை
அழிப்பதில் முடியும்! அதுவரை இயக்கம்!

என்றுநான் பிறந்தேன்? என்றுநான் இறப்பேன்?
ஒன்றும் நினைவிலை! உயிரால் அழிவிலேன்!
என்னுடல் அழியினும் என்றும்நான் இருப்பேன்!
தின்னுவ திலை எனை, மண், மழை, தீ, வளி!

உண்டல் உடுத்தல் உறங்கல் தவிர்ந்ததும்
அண்ட வெளியினுள் அடக்கம் பெறுகிறேன்!

-1992

## 56 அனைத்தும் ஒன்றே!

புகழ்எனக்குப் பொருட்டில்லை; நோக்கமில்லை;
பெருமையில்லை; பொருளும் இல்லை!
இகழ் எனக்குத் தாக்கமில்லை; துன்பமில்லை;
இழிவில்லை; இழப்பும் இல்லை!
திகழ்தமிழின் இனம்நாட்டின் பெருமையெலாம்
தேய்ந்தழிந்த உரிமை எல்லாம்
அகழ்வெடுக்கும் முயற்சியிலே இழிவெனினும்
அழிவெனினும் அனைத்தும் ஒன்றே!

துன்பம்எனைத் தொளைப்பதில்லை; அரிப்பதில்லை;
தொய்வடையச் செய்வ தில்லை!
இன்பம்எனக் கினிப்பதில்லை; உவப்பதில்லை;
ஏக்கழுத்தும் செருக்கும் இல்லை!
அன்புறுநம் செந்தமிழ்க்கும் இனத்திற்கும்
நாட்டிற்கும் உழைக்கும் என்னைத்
தென்புறுத்தும் நல்லுணர்வில் மூழ்கிவிட்ட
திளைப்பினிலே எவையும் ஒன்றே!

சிறையெனக்குத் துன்பமில்லை; கொடுமையில்லை;
சிறிதுமெனைச் சிதைப்ப தில்லை!
நிறைபணியால் சோர்வதில்லை; சலிப்பதில்லை;
நேர்மைநிலை குறைவ தில்லை!
குறைவறுநம் தூய்தமிழ்க்கும் மக்கட்கும்
நாட்டிற்கும் தொண்டு செய்தே
மறைவுறுநம் பெருமைகளை, உரிமைகளை
மலர்த்துகையில் அனைத்தும் ஒன்றே!

-1993

## 57 குடியரசு நாடா இஃது?

தமிழ்நாடு கோரிக்கை எழுப்புவதால்
தான்எனக்குத் 'தடா'வென் பீரேல்,
இமிழ்கடல்சூழ் உலகெங்கும் வாழ்கின்ற
தமிழர்மேல் ஆணையிட்டேன்!
கமழும்என் தமிழ்மொழியும் தமிழினமும்
தமிழ்நாடும் மீட்பதற்கே
அமிழும்வெஞ் சிறையினில்ஓர் ஆயிரமாண்
டிருப்பினும்நான் அகமகிழ்வேன்!

கோரிக்கை எழுப்புதற்கே சிறையென்றால்
குடியரசு நாடா இஃது?
பாருக்குள் இல்லாத வன்முறைகள்
வடநாட்டுப் பார்ப்பான் செய்ய,
பேருக்கு வளமனைக்குள் சிறைவைக்கும்
பேயாட்சி உணர்தல் வேண்டும்!
போருக்கு நமையெல்லாம் புறப்படுத்தும்
செயலிதுவாம் புரிந்துகொள்க!

-1993

## 58 என் பயனே!

இறைவன் திருவுளம் எதுவோ அதுவே
எனக்குமு ளம்!
இறைவன் திருவினை எதுவோ அதுவே
எனக்கும் வினை!
இறைவன் திருவிளை வெதுவோ அதுவே
என்விளைவும்!
இறைவன் திருப்பயன் எதுவோ அதுவே
என்பயனே!

-1993

## 59 பிறந்தநாள் நினைவிலோர் பெருமையும் இல்லை!

திறந்தநல் மனத்தொடு தெரிவிக் கின்றேன்,
தீந்தமிழ் மொழி, இனம், நாடு
சிறந்துசீர் விளங்குநாள் சிறந்தநாள் எனக்கு!
சிதைவுறும் நாளெலாம் தீநாள்!
பிறந்தநாள் நினைவிலோர் பெருமையும் இல்லை!
பிறந்துவாழ் நோக்கமே பெரிது!
மறந்தநம் மொழியையும் மடிந்தநம் இனத்தையும்
மலர்த்தி, நம் நிலம்பெறல் வாழ்வே!

(வேறு)

முன்னே போய்க்கொண் டிருக்கின் றேன்;ஒரு
முழமே சறுக்கி விரற்கடை ஏறினும்
பின்னே திரும்பி, நான் பார்த்திடேன்; உடல்தரும்
பிணிகளைத் தடைகளைப் பொருட்டென எண்ணிடேன்!
என்னேர் உயிரினை இழப்பினும் தயங்கிடேன்;
ஏற்றுள கொள்கையே பெரிதென் றியங்குவேன்!
அன்னை மொழி, இனம், நாட்டினை எதிரிகள்
ஆள்வதை மீட்டிடும் வரை, விழி உறங்கிடேன்!

இம்மா நிலந்தனில் எண்ணிலா ஏழைகள்,
ஏற்றத் தாழ்வுகள் எங்கணும் இருக்கையில்
சும்மா இருந்திட மனம்வர வில்லையே!
சொகுசாய் வாழவும் அறிவிசைந் தில்லையே!
எம்மா நிலத்தையும் இனத்தையும் மொழியையும்
எத்தனை முயற்சிகள் செய்தே ஆயினும்
வெம்மாப் பெரும்படை நடத்தியே ஆயினும்
விடுதலை செய்வதே உலகில்,என் வேலையாம்!

-1994

## 60 என்றன் வாழ்க்கை மழையின் பொழிவு!

என்றன் உள்ளம்
வெட்ட வெளிச்சம்;
எங்கும் ஒளிவு மறைவில்லை!
என்றன் அறிவு
பழங்கள் தோட்டம்!
எவர்க்கும் உரிமைக் குறைவில்லை!

என்றன் செயல்கள்
நலம்விளை வயல்கள்!
எவரும் விளைவின் பயன் பெறலாம்!
என்றன் விளைவு
பொதுமைப் பூங்கா!
எவரும் நுகர்ந்தே மகிழ் வுறலாம்!

என்றன் வாழ்க்கை
மழையின் பொழிவு!
எவரும் நனைந்தே பருகிடலாம்!
என்றன் மறைவு
கதிரவன் வீழ்ச்சி!
எவரும் அதற்கே மெருகிடலாம்!

-1994

## 61 அருந்தமிழ் நினையுங்கள்!

என்னைப் பற்றி எழுதா தீர்கள்;
எந்தமிழ் மொழிக்கே எழுதுங்கள்!
என்னைப் பற்றிப் பேசா தீர்கள்;
இனமேம் பாட்டைப் பேசுங்கள்!
என்னைப் பற்றி இரங்கா தீர்கள்;
ஏழைத் தமிழர்க் கிரங்குங்கள்!
என்பைப் பற்றி வருந்தாதீர்கள்;
இனத்துக் காக வருந்துங்கள்!

மொழியை இனத்தை நாட்டை மீட்க
முனைந்து துணிந்து நில்லுங்கள்!
பழியைத் துயரைப் பார்க்க வேண்டாம்;
பணிசெய் கடமை பாருங்கள்!
இழிவை இழப்பை எண்ணாதீர்கள்;
இனத்தின் ஏற்றம் எண்ணுங்கள்!
அழிவைப் பற்றி நினையா தீர்கள்
அருந்தமிழ் ஆக்கம் நினையுங்கள்!

-1995

## 62 காய்ச்சல் என்னை மேய்ச்சல் கொண்டது!

கெடாத என்னுடல் கெழுநலம் குன்றி
விடாத காய்ச்சலால் வெடவெடக்கும் குளிரால்
திண்மை யிழந்தும் தேய்ந்தும் நலிந்தும்
அண்மையில் பலநாள் அழற்சி யுற்றுப்
படாத துன்பத்தால் படுத்தே கிடந்து!

'தடா'வும் 'மிசா'வும் வீழ்த்தாத என்னை
அடாத காய்ச்சல் அடியொடு சாய்த்தது!
எடாத வாந்தியால் என்னுயிர் இளைத்தது!

உழைத்துழைத் தே,உருக் குலையாத என்னுடல்
இழைத்த தசையிலும் எலும்பிலும் மூட்டிலும்
மிதிமிதி என்னும் வலிகளால் மெலிந்தது!
புதுப்புது நோவுகள் உடலுள் புகுந்தன!
வயிற்றினுள் எரிச்சல் வறுத்தது குடலை!
மயிர்க்கால், கை, கால், மனம், உடல் காந்தின!
என்றும் நோய்எனை எதிர்த்ததே இலை, என
அன்று போலவே அகந்தைகொண் டிருந்தேன்!

'இடும்பைக்கே கொள்கலன் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு', எனக் கூறிய
திருவள் ளுவரும் தீய்க்கும் காய்ச்சலால்
கருவழிந் தேதான் கழறிஇருப் பாரோ?

ஈழஏ திலிகள் இன்னலம் காக்க
ஈழ வேந்தனை என்னோடு கூட்டி
உடுமலைப் பேட்டையில் உயர்தன் மானன்
கடுமையாய் முயன்றஓர் கடமை நிகழ்ச்சிக்கு
இருவரும் சென்றோம்! இடையில் திண்டுக்கல்
நெருங்கிடக் காய்ச்சல் நெருப்பு மூண்டது!
கழராம்பன், வேனில் கனிந்தஅன் பில்லத்தில்
எழவிய லாமல் ஈழ வேந்தனை
நிகழ்ச்சிக் கனுப்பி இருநாள் நின்று
திகழ்சென் னைக்கே ஈகையோடு திரும்பினேன்!
ஏறத் தாழ முப்பது நாள்கள்
ஆறத் தாழா அனலில் உருகினேன்!

எந்தமருத்துவமும் எடுபட வில்லை!
சொந்தமருத் துவமோ கைகளைச் சுட்டது!
அன்னையாய் மாறிய அருமைத் துணைவி
என்னை எழுந்தெழுந்(து) இமைமூ டாமல்
காத்துப் பேணிக் கவலையால் உருகி
பூத்த கண்ணும் பூவாத மனமுமாய்க்
கைகால் சோர்ந்தும் உடல்நலம் கருகியும்
மெய்யிழந்து இருநாள் மேனி கிடத்தினாள்!
பற்பல மருந்தால் பழைவா றெழுந்தாள்!
மற்போ ராட்ட வாழ்க்கையில் இதுபோல்
அவள்பால் துன்பம் அணுகிய தில்லை!
எவ்வகைத் துயர்க்கும் இளைக்கா மனத்தவள்!
வறுமைக் கொள்ளைக்கும் வாடா உரத்தவள்!
வெறுமை வயிற்றிலும் வீழாது நின்றவள்!

இன்றுஎன் காய்ச்சலால் எல்லாரும் வாடினர்!
ஒன்றுபின் ஒன்றாய் உவகை மடிந்தது!

தலைமகள் வாடிய தவமாய் நின்றாள்!
தலைமகள் உள்ளம் துன்பினால் தவித்தது!
மூத்த மருமகள் கவலையுள் மூழ்கினாள்!
மாத்தமிழ் மறவன் இளமகன் மருகினான்!
செல்லப் பிறையும் மருகரும் தொய்ந்தனர்!
வெல்ல மழலைப் பெயரர் பெயர்த்தியர்
வந்து வந்துஅறை வாயிலில் நின்று
நொந்துகண் கலங்கி நொடிந்து திரும்பினர்!
புதுவையில் அருளியும் பூமனத் தேனும்
இதுசெய்தி அறிந்தும் இணையாத சூழலால்
வரவிய லாது வருந்திப் பெயரனை
விரைவின் விடுத்து நலம்பெறல் விளங்கினர்!

இடையொரு நிகழ்வாய்த் தொலைக்காட்சித் திரையில்
நடைபெற்ற தொருபடம் 'முதல்மரி யாதை'!
நலங்குன்றி சிவாசி நார்பிணை கட்டிலில்
கலங்கி வருந்திக் கண்மூடிக் கிடக்கும்
இறுதிக் காட்சியை இளையமகள் கண்டு
மறுகி அழுததாய் மனைவி புலம்பினாள்!

அனல்போல் காய்ச்சலின் அந்த நிலையிலும்
முனம்இசைந் திருந்து முழுமையாய் அமைந்த

திருவண் ணாமலைத் திருமண நிகழ்வினை
அருந்துணை ஈக வரசனொடு சென்றே
அனைவரும் மகிழ்ந்திட அழகுற நிகழ்த்தி
எனைமேய்ந்த காய்ச்சலோ டில்லம் திரும்பினேன்!

என்நலம் குன்றி இருந்த நாளெலாம்
தென்மொழித் தொண்டும் திருக்குறள் பணியும்
தொய்வுற்றுப் போயின! அலுவல்கள் தொய்ந்தன!
அயராப் பணிசெய் அமைச்சரும் நலமின்றி
அச்சகம் இடையிடை அடைத்துக் கிடந்தது!
எச்ச நாள்களில் ஈகைபோய் வந்தார்!

அறுபத்து மூன்றாம் பிறந்தநாள் மாதம்
மறுபுதுப் பிறவிக்கு மறுவாழ்த்து உரைத்தது!

காணாத காய்ச்சலால் களைப்புற் றிருப்பனோ?
பேணாத உடல்நலம் பின்வந்து கூடுமோ?
அசையாத சுடர்விழி அசைவுற் றிருக்குமோ?
இசையாத எஃகுளம் இடர்ப்பட் டிருந்ததோ?
ஐம்பதாண் டாற்றிய அருந்தமிழ்த் தொண்டின்
எம்முடல், உளவுரம் இளைத்தா இருக்கும்?
எண்ணிப் பார்த்திட இயல வில்லை!
திண்ணிய அழுத்தம்! தேற்றிடா மருந்துகள்!

வெம்மை மூச்சில் விடிய விடிய
அம்மா அம்மா அப்பா அப்பா
என்றே எனைப்பெற்ற மூலத்தைத் தேடிச்
சென்றே விசும்புவான் முழுவதும் தேடிய
துன்பக் கூவல்கள் கோடி இருக்குமா?

வன்மைசேர் நெஞ்சமும் வலிமைசேர் உடலும்
பெற்ற நானே இவ்வகைப் பிதற்றி
உற்ற நோயினைத் தாங்குகி லாமல்
ஆ ஊ என்றே அரற்றினேன் என்றால்,
சாவிலே வாழும் ஏழ்மைச் சடலங்கள்
என்ன வகையால் இத்துயர் தாங்கும்?
அன்ன காட்சிகள் அடுக்கடுக் காக
அறிவில் மனத்தில் ஆடிக்கொண் டிருந்தன!
செறிவான உயிர்க்குள் எனைப்பார்த்துச் சிரித்தன!

கடுமைக் காய்ச்சலால் என்னினம் கலங்கக்
கொடுமைக் குளிரால் என்மொழி குலுங்க
நாட்டை நசுக்கும் நயவஞ் சகர்களின்
பாட்டைச் சிதைக்காமல் என்னுடல் படுப்பதா?
ஐயகோ! கொடுமை! அந்நிலை தாளேன்!
ஐயனே! எனையிங்கு அனுப்பிய மெய்யனே!
எனக்குஎன் கடமையை இயற்றிடும் வலிவு,தா!
எனக்குள் நீயிருந்து இயக்கிடல் பொய்யா?

-1995

# தனியார் சிறப்புப் பாடல்கள்

## 63 நாட்டுப்பட எதிர்ப்புப் போராட்டம்!

நாட்டுப் படத்தைக் கொளுத்துதற் கே, ஒரு
நாளைக் குறித்தார் பெரியார்- இதைக்
கேட்டுக் கொளுத்தும் தமிழர் எல்லாம்
எந்தமிழ் நாட்டுக் குரியார்!
வீட்டுக் கொருவர் இருவர் வந்திவ்
விடுதலைப் போரில் குதிப்பீர்! - பொன்
ஏட்டுக் குறிப்பில் உங்களின் பெயரை
எவர்க்கும் முதலில் பதிப்பீர்!

முதியோர், இளைஞர், தாய்மா ரெல்லாம்
முன்வந் தே,புகழ் உண்பீர்! - ஒரு
முதியோர் எழுந்தார்! எழுந்தனர் மக்கள்!
முகிழ்த்தது தமிழகம் என்பீர்!
மதியார் தம்மை மதித்திடல் வேண்டாம்!
மக்களே போல்வர் கயவர்! - அவர்
புதியவ ரன்றே! என்றும் முளைத்த
புற்கள், செந்தமிழ் வயலில்!

அவரவர் நாட்டை அவரவர் மொழியில்
அவரவர் ஆளுதல் வேண்டும்! - இதை
எவரவர் தடுப்பவர்? மக்களின் எழுச்சி
எதையும் நொடியில் தாண்டும்!
இவரிவர் தமிழக மீட்சிக் கெழுந்தார்;
இவரிவர் உயிரைக் கொடுத்தார் - என
அவரவர் வரலா றெழுதுதற் கெழுக!
அழிவார் நம்மைத் தடுத்தார்!

உண்மைத் தமிழர் என்போ ரெல்லாம்
உணர்வால் பொங்கித் துடிப்பீர்! - உளத்
திண்மை கொள்வீர்! மாற்றார் பிணித்த
தீமை விலங்கினை ஒடிப்பீர்!
பெண்மையுந் தீங்கெனில் பெருந்தீ யாகும்!
பிறர்தருந் தீமை வேகும்! - அதன்
அண்மையில் நெருங்கிச் செய்வார் தீங்கும்
அன்றே அன்றே சாகும்!
அழைப்பார் பெரியார்! அறிவோர் வருக!

அறவோர், மறவோர் வருக! - இனும்
உழைப்பார் வருக! உழுவார் வருக!
ஊர்த்தொண் டாற்றுவர் வருக!
தழைப்போம் என்றே முயல்வார் வருக!
தாயர், தமக்கையர் வருக! - இதைப்
பிழைப்போம் ஆகில் இழிந்தோர் ஆவோம்!
பெரும்பயன் காண்போம் வருக!

-1958

## 64 எழுந்தது அரிமா!

(1958இல் பெரியார் சிறைமீண்டபொழுது எழுதியது.)

கூட்டைத் திறந்ததும் கடுங்குரல் எழுப்பிக்
குறுநடை போட்டதே அரிமா! - சாதிக்
கேட்டை ஒழித்திட, சிறுநரிக் கூட்டம்
கிடுகிடுத் தொடுங்கின எங்கும்!
நாட்டைக் குழப்பிடும் சாதியும் - மதமும்,
நசுங்கிட வெழுந்ததே அரிமா - அதன்
பாட்டைக் கெடுத்திடும் நாய்க்குல மழிக்கப்
பெரும்படை திரண்டதே எங்கும்!

பேச்சும், துணிவும் 'பெருந்திறல் உரனும்'
பணிவும் அதன்கை வாளாம் - அதன்
மூச்சும், வாழ்வும் முத்தமிழ்த் தொண்டாம்!
மாற்றார் அதன்முன் தூளாம்!
காய்ச்சும் வெயிற்கும், கடுங்குளிர் மழைக்குஞ்
கம்பிச் சிறைக்குமஞ் சாது! - சாதி
பாய்ச்சும் கொடுமைப் பாதையைத் தூர்க்கப்
பகலும் இரவும்துஞ் சாது !

-1958

## 65 பாவாணரின் பணிநீக்கம்!

மறைமலை என்னும் மறையா மலையின்
நிறைமலை யாகியென் நெஞ்சினுள் நிற்கும்
ஒருதனி ஆசான்! உளத்தின் குரிசில்!
பெருந்தனிச் சீரே! பிழையிலாக் கொள்கையீர்!
தூய்தமிழ் காத்திடத் தோன்றித் திறல்பெறத்
தாய்நிலம் பேணும் தனிப்பெருந் தன்மையோய்!

உண்ணா மலைப்பொருள் ஊர்க்கென வாக்கிய
அண்ணா மலைப்பல் கலைக்கழ கத்தின்
நிழலிருந் தகற்றிய நீர்மையில் லாரின்
விழலறி வெண்ணி வெயிற்புழு வாகித்
துடித்துளம் வெந்து துயருறல் வேண்டா!
எளியவன் நெஞ்சில் இடமுண் டதனில்
அளியின் ஒதுங்கி அருள்க பெரும!

மொழிவளங் குன்றி முழுநலம் போகிப்
பழிபடு கொள்கைப் பதரெனு மாக்கள்
விழுப்பத் திறங்கி வெளிநா கரிகப்
புழுக்கத் தழுங்கிய புன்மை ஒருகால்;
சமையப் புரட்டினுஞ் சாதிப் பகட்டின்
குமைந்த புகையினும், தீமைக் குளிரிலும்
அல்லற் படூஉம் அறியாத் தமிழரின்
தொல்லைக் குரலொலி தோய்தல் ஒருபால்;
எனைத்திறத் தாயினும் ஏழையர் தம்மை
வினைப்படுப் பித்து விலாவை நொறுக்கி
கசக்கிப் பிழிந்து கணக்கில் பொருளைத்
தொகுத்ததன் மேலே துயில்வார் ஒருபுறம்!

இன்னபல் வாறாய் இருள்போர்த் திருக்குநம்
அன்னையின் நாட்டில் அணிவிளக் கேற்ற
உணர்வு குமிழ்த்த ஒருபெருங் கூட்டம்
உணவில் உடையில் உளங்கொளல் இன்றிப்
பனியில் வெயிலில் பகலும் இரவும்
நனியுழன்று தம்மின் நலத்தை நசுக்கி,
'உரமிகுந் துள்ள உடலும் உளமும்
திருத்தமிழ் நாட்டின் திறத்துக் குதுவுக'

என்றுகூ ளுற்றே எழுந்த படைக்குமுன்
நின்றுவழி காட்டி நெடுஞ்சீர் பெறுவீர்,
கொழுந்தமிழ் ஆர்க்குங் கொடிக்கீழ்ப் படுத்த
செழுந்தண் நிழலிற் சிறந்து!

-1961

## 66 அன்புள்ள சாத்தையா! உங்களை யான் உள்ளுகின்றேன்!

அன்புள்ள நெஞ்சே! அறிவறிந்த நல்லுயிரே!
இன்புள்ள நற்பொருள்கள் எத்துணையோ உயிர்த்தும்
தனித்தமிழைக் கூறுங்கால் கேட்குங்கால் உள்ளம்
இனித்தவகை போலெதுவும் என்றும் இனித்ததில்லை.
அந்த இனிப்புஞ்‘சாத் தையா’வின் நாநனைந்து
வந்த மொழிச்சுவைபோல் வந்துயிரைக் கவ்வவில்லை;
ஏழையவன் உள்ளத் தெழுந்துவரும் பாவுணர்வுப்
பேழை திறந்ததுபோல், குற்றாலப் பேரருவி
உச்சித் தலைமீதே ‘ஓ’ வென் றிழிந்தது போல்,
சொற்சிலம்பங் காட்டிச் சுழிவுநெளி வூட்டியொரு
கல்போன்ற நெஞ்சுங் கசிந்துருகு மாறுயர்ந்த
சொல்லிசைக்கச் செய்யுமுங்கள் சொல்திறனை நாள்முழுதும்
கேட்டுக் கிறங்கியதும், உள்ளம் கிளுகிளுக்கப்
பாட்டுக் கொருகோடிப் பண்ணமைத்துக் கொண்டதுவும்
வாட்டமுற்றே நெஞ்சம் வதங்கிடுமுன் னோடிவந்து
கேட்டதொகை தந்தென்னைத் தாழாமல் காத்ததுவும்
நான் மறந்த பின்னை,செய் நன்றிகொன்ற பின்னை,யுடல்
ஊன்மறந்து மற்றும் உயிர்மறந்த பின்னை, அன்றோ
உம்மை மறந்திடுவேன்; ஆனால் உங்களுளம்
வெம்மை யுறும்படியோர் அஞ்சல் விடுத்துவிட்டேன்,
ஆங்கதற்கும் காரணமொன் றன்புடையீர் ஈங்குரைப்பேன்;
தாங்குதற்குத் தோள்தந்தீர்; தண்ணென் னுளந்தந்தீர்;
வீங்குதமிழ் நெஞ்சம்போல் வீங்கியவென் துன்பினையே

தாங்குசுமைக் கல்லென்று தன்னுரிமைப் பேருணர்வால்
எண்ணி முனைந்துவிட் டேன்; ஆக, எடுத்துரைத்தேன்;
நண்ணி எனைவதைத்த நானா வகைத்துயரும்
கூறிவிட வில்லை;நான் கூறியது காற்பங்கே!

ஏறிவிட்ட துன்பம் எடுத்துரைக்கின் ஐயகோ
வெள்ளிப் பனிமலையோர் வெண்கடுகாம்; பேரலைகள்
துள்ளிக் குதிக்கும் கடலுந் துளியாகும்!
வான்விரிவும் கைக்குள்ளே வந்தடங்கும்; அன்புடையீர்
நானின்ன கூறுங்கால், நெஞ்சம் நகைத்திதனை
மிக்கவுரை என்றுரைக்க வேண்டாம்; மெலிவுளத்தீர்;
தக்கவுரை யன்றாயின் தொக்கவுரை வேறில்லை;
கூறா திருந்ததிலோர் கூறுதான் கேட்டிருப்பீர்,
வேறாக யெண்ணி யிருந்திடிலோ விண்டிருக்கேன்,
நான்பட்ட வெந்துயரை நானே மதிக்கவில்லை,
ஏன்பட்டேன் என்றொருவர் என்னைவந்து கேட்டிடினும்
கூறுதற்கு மாட்டுகிலேன்; ஆயினொன்று கூறிடுவேன்,
ஆருக்குந் தீங்குதனை அன்றுமின்றும் எண்ணவில்லை;
எல்லார்க்கு மின்பத்தை எண்ணியென்றன் இன்பத்தை
இல்லாமற் செய்ததனால் ஐயா,இடர்ப்பெற்றேன்.
ஆன இவற்றிடையில் அன்புமிகு உள்ளத்திற்
கான தொரு நிகழ்ச்சி ஆன்று மதைமறந்தேன்
இத்தனையும் உங்கட்கோ இம்மி விளங்காது,
பித்துரையும் அன்று; இவற்றைப் பின்னுரைப்பி னும், உரைப்பேன்,
எத்துணையோ துன்பம் எதிர்ப்பட்டுச் சாய்ந்தாலும்
முத்தமிழ்ப்பாற் கொண்ட முழுப்பற்றில் தீதில்லை;
மூண்ட தழற்கிடையில் மின்னுகின்ற பொன்போல
ஆண்டதமிழ் என்றன் அகத்திலொளி வீசுதையே!
தண்ணீர்ச் சிதர்போலத் தோன்றித் துளியாகி
மண்ணி ஒளிபெற்று மணியாகிக் குன்றாகி
எல்லையறு வானாய் எரிகதிராய், உள்ளத்தே
வல்லாமை யாத்தி வளர்த்ததுவுந் தாய்த்தமிழே!
எள்ளற் சிறுபுழுவாய் இன்பிழந்து நின்றயெனைத்
தள்ளற் கரிதாகத் தந்ததுவும் தாய்த்தமிழே!
என்னை யறியா திருமாந் திருந்தவனைத்
தன்னை யறிவித்துத் தானொளிர்ந்த துந்தமிழே!
அந்தத் தமிழுக் கடிமைநான்; அத்தமிழ்க்குச்
சொந்தமென் பார்க்கடிமை; சொல்லுபவர்க் கும்அடிமை!
இவ்வாறு செந்தமிழுக் கேற்றவொரு தொண்டனாய்

வெளவி யிருக்கையிலே வந்தென்முன் பட்டுவிட்டீர்.
கொட்டிவைத்த வல்லுணர்வுக் குன்றம் சிதர்ந்ததுபோல்
கட்டிவெல்லம் நீரிற் கரைந்தொன்றிப் போனதுபோல்
ஓலத்திரைமேல் ஒளிக்கற்றை வீழ்ந்ததுபோல்!
கோலக் கவின்காட்சி கொள்விழிபோல் யானொன்றி
உங்கள் முகமறியா துங்கள் நிலையறியா
துங்கள் நலமறியா துள்ளத் துணர்வறிந்தேன்.
அவ்வுணர்வும் நான்கொண்ட அன்னை மொழியுணர்வாய்ச்,
செவ்விதாய்ப், பாட்டுச் சிறப்புணரப் பெற்றுதுவாய்,
நான்கண்ட போது, நெஞ்சில் நான்பெற்ற இன்பத்தை
நான்பெற் றிருக்கின்றேன்! என்றுரைப்பார் பொய்யுரைப்பார்,
அன்புள்ள சாத்தையா! அன்றுபோ லின்றைக்கும்
துன்பமுறும் போதெல்லாம் உங்களையான் உள்ளுகின்றேன்.
பூத்த முகமும் புதுநகைப்பும் எந்தமிழைக்
காத்த திருவாயும், கைகூப்பும், நல்லுருவும்,
அங்காந்த வாயில் அமிழ்து சுரந்ததுபோல்
பொங்கித் துளும்பவைக்கும்; பூரித்த வல்லுணர்வால்
தூக்கியநற் றூவல் துவண்டுவிழ ஓர்கோடிப்
பாக்கள்முன் வந்துவிழுந் தென்னைப் பணிந்தெழுமே!
முன்னை எனைப்பெற்ற அன்னையினும் முத்தமிழ்த்தாய்
என்னை அணைத்தமிழ்தை இன்பமுற ஊட்டுவள்காண்.
ஆகையினால் நெஞ்சம் அழுங்கற்க! ‘அன்புள்ளம்
நோகையினால் வந்ததிந்த நோ’ வென்றே உள்க!
வெறுங்கை யொருவாரின் வெறுக்கையீண் டில்லை,
தருங்கை பொருள்தாரின் தருக்கைப்பெற லில்லை
தருகை யிருக்கட்டும்! தழலுள்ளம் தண்ண
வருகை தருகதன்பின் ‘வஞ்சி’பற்றிப் பேசுவோம்!
என்றுமிந் நெஞ்சத் திருப்பீர்; எளியேமும்
என்றுமங் காப்பே மினிது!

-1961

## 67 நாவலர் சோமசுந்தர பாரதியார்க்குப் பாமலர்!

தமிழ் புகுந்த நெஞ்சிற்குத் தளர்வில்லை
உடலுக்கும் முதுமை யில்லை;
தமிழ் புகுந்த உயிருக்கும் இறப்பில்லை
நினைவிற்கும் இறுதி யில்லை;
தமிழ் புகுந்த வாழ்விற்குத் தாழ்வில்லை;
கொள்கைக்கும் சிறுமை யில்லை;
தமிழ் புகுந்த நாவலனே! தமிழோடு
கலந்தனையோ வாழ்க நன்றே!

ஆய்ந்த பல துறையிருந்தும், திறமிருந்தும்
அவைவழியிற் பொருளை ஈட்ட
வாய்ந்த பல நிலையிருந்தும், வழுவென்று
கண்டவற்றைத் தூவென் றெள்ளி
ஓய்ந்தமரும் வேலையிலும் ஓயாமல்
மாயாமல் தமிழ்த்தொண் டாற்றி
மாய்ந்திரு நாவலனே! பாவலனே!
மணித்தமிழால் போற்று வோமே!

-1962

## 68 குத்தூசி வாழ்க!

செத்தூசிக் கொண்டுவருந் தமிழர்க் கென்று
சிறந்ததமிழ்த் தாளிகையைத் துவக்கி விட்டார்,
'குத்தூசி' குருசாமி! அவர்க்கெம் வாழ்த்து!
குடும்பநலம், வாழ்க்கைநலம் என்பவற்றைத்
துத்துத்தூ வெனவுமிழ்ந்து, பெரியார் பாங்கில்
தூயதனித் தொண்டரென விருந்தார்; பின்னைப்
பித்தேறி யோர்சிலரால் பிரிக்கப் பெற்றார்!
பிறந்ததினித் தனிப்பெருமை! துணிவுற் றாரே!

பழிதுறந்த அறிவோர்க்கும் பண்புள் ளார்க்கும்
பகலிரவாய் நாட்டுநலம் விரும்பு வார்க்கும்
இழிவடைந்த தமிழகத்தில் நிறைய வேலை!
எழுந்ததவர் இதழ்என்றால் தமிழர்க் கங்கே,
வழியிருக்கும்; குறியிருக்கும்; அறிவிருக்கும்!
வழுக்கிடுவார் தமக்குக்கைக் கோலிருக்கும்,
மொழியிருக்கும்; செந்தமிழ்த்தாய் முழக்கிருக்கும்;
முன்னிருக்குங் கொள்கையிலோர் வலிவிருக்கும்!

பெயர்களிலே 'சாதி'யெனும் வாலிருக்கும்,
பெரியதிரு வுருக்களுக்கு 'வாள்' இருக்கும்!
துயர்வடைந்த ஏழையரை வந்து தாங்கத்
தோளிருக்கும்! அவர்க்கிரங்கும் நெஞ்சிருக்கும்!
மயர்வறவே சோர்வறவே தமிழர்க் காக
மணிமணியாய்க் கருத்திருக்கும் 'குத்தூசி'க்கே
உயர்வுறவே நாவார மனமுமார
ஒலியெழுப்பி வாழ்த்தளிப்போம் 'வாழ்க' நன்றே!

-1962

## 69 வல்லுயிர் ஓட்டமும் உள்ளமும் செந்தமிழ் அன்றோ!

என்னையே கட்டி யிழுத்துளம் பின்னி எழுவுணர்வை
முன்னையே கொண்டு பிணித்துயிர்மாட்டி முகிழ்த்ததமிழ்
அன்னையே! பண்டை அறக்குலச் செல்வி! அருந்தமிழால்
நின்னையே பாடிப் புகழ்ந்திடல் ஒன்றே நெடும்பிறப்பே!

பாடிப் பரவுதல் என்னெனில் செந்தமிழ்ப் பைங்கிளியே
கூடிக் கிடந்துயிர்ச் செந்தமிழ் காத்த குலத்தினரைத்
தேடிப் பிடித்துக் கொணர்ந்திவன் சேர்த்தொளி தேய்ந்தபுகழ்
நாடிப் புதுக்கும் வகைக்குத் துணைபெறும் நாட்டமொன்றே!

நாட்டமஃ தாகிட நெஞ்செனும் நற்றமிழ் நன்
ஈட்டமும் வேறென ஒன்றிலா காரணத் தாலெமக்கே
வாட்டமே சேர்வன ஆயினும் வாடேன்; வல்லுயிரின்
ஓட்டமும், உள்ளமும் செந்தமிழ் அன்றோ!...

நின்துணை யாலே நினைநான் நினைந்து நினைந்துளத்தை
என்துணை யாக்கி இரும்பாய்த் திணித்தே எதுவரினும்
புன்துணி தூளாய்ப் பொக்கென ஊதிப் புதுப் பொலிவைத்
தென்தமிழ் மக்களும் நாடும் தெளிவுறத் தேற்றுவனே!

தேற்றுவ னேதீந் தமிழ்த்தாய் அரசே! திகைந்தநிலை
மாற்றுவ னே!மற் றயலுறு நாட்டால் மலிந்ததுயர்
ஆற்றுவ னே!முன் னெழிலின் ஒளிர்ந்துன் றணைந்தசுடர்
ஏற்றுவ னே!நின் இணையடி ஆணை இயம்பினேனே!

-1962

## 70 வெள்ளத் துணர்வை விளைவாக்கி வாழுங்கள்!

அன்புளமும் ஆழும் அறிவுணர்வுஞ் செந்தமிழைத்
தென்புடனே காக்குந் திறலறமும் நல்வினையும்
ஏய்ந்திருக்கும் வாய்மையும், எப்பொழுதும் ஏழையன்...
மேய்ந்திருக்கும் நந்நெஞ்சும் மேவியசீர்த் தாய்நிலத்...
பாய்ந்திருக்கும் நஞ்சைப் பதைபதைக்கப் போக்கிமுன்...
வாய்ந்திருக்கும் தொல்புகழ்க்கு வாழ்வளிக்கும் எண்ண...
தீமைக்குக் கொல்விழியும், தீந்தமிழ்க்கு வெல்வழி...
ஊமைக்குஞ் செந்தமிழ்ப்பால் ஊட்டுமொரு வல்லமை...
தேர்ந்தொருங்கே சேர்ந்திலங்கும் தேவரா சென்னு...
ஈர்ந்தமிழ் மாணவர்க்கே யாமெழுதும் பாவோலை.

தங்கள் மடலோடு தம்பி சரவணனின்
பொங்குதமிழ்ப் பாமடலும் போதரவே பூரித்தோம்.
ஆய்விற்கும் எண்ண அலைப்பிற்கும் நூல்களிடைத்...
தோய்விற்கும் ஏற்றபணித் தொல்லைக்கும் முப்பொழு...
தேய்விக்கும் போக்கும் திகழ்மனைவி மக்கட்கே
காய்விற்கும் சேய்மைக் கடைபோய் வர, வெ...
சாய்விக்கும் காற்பொழுதும் சென்றால் சலித்த
ஓய்விற்கும் உள்ள துறக்கந்தான்! இந் நிலையில்
பெற்றவர்க்கும் உற்றவர்க்கும் பேருற்ற நண்பர்
மற்றவர்க்கும் நாளும் மடல்விடுக்க வாய்ப்பதி...
ஆதலினால் மன்னியுங்கள்! அன்பர் சரவணற்கும்
ஓதி யுணர்த்துங்கள்! உண்மைநினை வுண்டிங்கு!
மற்றபடி உம்மை மறந்திங்கு நான் வாழேன்.
பெற்ற நண்பர் எல்லாம் பிழையாத நன்மணிகள்!
உள்ளத்தே என்றும் ஒளிர்கின்றீர்! ஒண்டமிழ்க்கு
வெள்ளத் துணர்வை விளைவாக்கி வாழுங்கள்.
சீரில்லா வாழ்வு சிதைந்தநிலை! வந்தீரேல்
நேரில் விரிப்பேன் நிலை!

பின்குறிப்பு

செந்தமிழ்வாய்ச் சாத்தையன் செல்வி இவர்கட்கு
வந்து பிறந்தானோர் வண்டமிழ்சேர் வாயனெனச்
செய்தி யறிந்தேன்! இலெனின் உடல் நலிவால்
எய்திப் புதுவை மருந்தகத்தில் உள்ளார்!

-1962

## 71

## அருட்கொடையாளர்களே! பாவாணர்க்குப் பொருட்கொடை தாருங்கள்!

சாகின்ற தமிழ்க்குலத்தின் பழம்பெருமை
தனிச்சீர்மை எண்ணி எண்ணி
நோகின்ற நெஞ்சுடையான்; நொடிகின்ற
நிலையுடையான் தமிழ்ப் பகைக்கே,
வேகின்ற செந்தீயின் வெப்பன்னான்;
விறல் மறவன்! இளம்பயிர்க்கே
ஆகின்ற மழைபோலத் தண்ணளியால்
அருந்தமிழ்க்கே வாழ்வா னிங்கே! 1

உயிர்ப்பாடும் முக்கழகம்! உணர்வாடும்
தமிழ்க்குரிசில்! உறைந்த கட்டித்
தயிர்ப்போலும் செழுஞ் சொல்லால் மொழிப்பெருமை
காத்துவரும் தமிழ்மா வேந்தன்!
அயர்ப்பூருந் தமிழர்க்கு நினைவூட்டி
அயர்வகற்றும் தமிழ்ப்பே ராசான்!
செயிர்ப்பூரும் புலிப்பாய்ச்சால் அரிமாவின்
செந்நோக்கால் தமிழைக் காப்பான்! 2

பசித்தெழுந்த வயிறடக்கிப் பணிந்தெழுந்த
மனையாளின் விழைவ டக்கி,
விசித்தழுத மகவடக்கிச் செந்தமிழின்
பகையடக்கி, வீணர் தீங்கை
முசித்தெறிந்தான்! தமிழ்ப்பெருமை முழுதுணர்ந்தான்!
மொய்ம்புகழே அல்லால், இற்றைப்
புசித்திடவும் சோறறியான்; வாழ்ந்திடவும்
வீடறியான்; மனஞ்சோ ரானே! 3

''பூவார்ந்த முல்லைக்குத் தேரீந்தான்;
மயிலுக்குப் போர்வை ஈந்தான்;
காவார்ந்த புலம்நோக்கி வந்தார்க்குத்
தலையீந்தான் தமிழன்'' என்றே
பாவார்ந்த செந்தமிழின் பாட்டார்ந்த
தமிழர்களே, பாவா ணர்க்கே
நாவார்ந்த செழுந்தமிழால் வாழ்த்துரைத்துப்
பெரும்பொருளை நல்கு வீரே 4

கையெடுத்துத் தருகின்ற பொற்காசிங்
கொவ்வொன்றும் சேர்த்தெ டுத்த
பையெடுத்துத் தருமுணர்வால் பாவாணர்
வீறெடுத்துப் போரெ டுத்தால்,
பொய்யெடுத்து வீசுகின்ற புலையெடுத்த
நெஞ்சுடையார் நீட்டி வைத்த
கையெடுத்து வாலெடுத்துப் போகாரோ
காலெடுத்துத் தலைமேல் வைத்தே! 5

வகைதிரட்டி, ஆள்திரட்டி, அரசாளும்
வல்லமையால் நம்மைச் சாய்க்கும்
பகைதிரட்டிக் கொண்டுள்ளார் வடநாட்டார்,
இந்தியெனும் கருவி கொண்டே!
புகைதிரட்டி உருச்சமைக்கும் பொய்யாட்டம்
காட்டுகின்றார்! அன்னோர் நாணத்
தொகைதிரட்டித் தாருங்கள் தமிழர்களே,
பாவாணர் தொண்டுக் கின்றே! 6

நாடகத்துக் கீகின்றிர்; நடுத்தெருவில்
உடல்காட்டிக் கொட்டி யாடும்
ஆடகத்துச் சிறுமகளிர்க் குதவுகின்றீர்!
அருந்தமிழ்வாழ் பசும் பயிர்க்குள்
ஊடகத்து வருகின்ற இந்தியெனும்
காட்டெருமை ஓட்டு தற்கே
பாடகத்த பான்மையினான் பாவாணர்க்
குதவுக பைம் பொன்னெ டுத்தே! 7

அடியேந்தி நின்றவர்கள் முடியேந்தி
அமர்ந்திருப்பார்; அவர்கள் பாங்கில்
குடியேந்திச் செந்தமிழ்த்தாய் நொடிகின்றாள்;
துவள்கின்றாள்; அவளை மீட்க,
மடியேந்தி, தமிழிளைஞீர், தமிழ்மகளீர்
தெருத்தெருவாய் வீடு வீடாய்ப்
படியேந்திச் சென்றுபொருள் திரட்டுவீர்
பாவாணர் மகிழு மாறே! 8

-1963

## 72 நாளையும் நீ வாழ்வாய்!

செந்தமிழ்சேர் நல்லுறவே! முத்தமிழ்வாழ் நெஞ்சே!
செத்திருந்த தமிழினத்தை நல்லுணர்வால் கூட்டி
எந்தமிழால் உயிரூட்டி எழுந்துலவ விட்ட
இணையற்ற பாவரசே! ஏற்றமிகு குன்றே!
தந்தபெரும் பாக்களினால் தமிழினத்தார் கொண்ட
தணிப்பறியா வேட்கையினைத் தணித்துயர்ந்த வேந்தே!
எந்தநினை வேற்பதனால் உன்நினைவு சாகும்?
எத்தனைநாட் சென்றிடினும் நினைக்கில்உளம் வேகும்!

தமிழ்க்கின்பம் சேர்த்தாயே அதையெண்ணு வோமா?
தமிழ்ப்பகைமுன் ஒருதனியாய் நின்றுமொழிப் போரைச்
சிமிழ்க்காமல் நடத்தினையே அதைநினைந்தே உள்ளம்
சிலிர்ப்போமா? செழுந்தண்வாய் தமிழ்மணக்கப் பேசிக்
குமிழ்ச்சிரிப்பால் கவர்ந்தனையே! அதனைநினைப் போமா?
குலைவதிலா வல்லுரத்தோ டுலவியவெம் புலியே!
தமிழ்ப்பொழிலே! உணர்வூற்றே! சொற்குவையே! பெய்த
தண்டமிழ்த்தேன் பாமழையே! எங்ஙன்மறப் போமே?

பெருந்துன்பம் வாய்த்திடினும் வாய்மையறம் தாழாப்
பீடுறநீ வாழ்ந்தனையே அதனைநினைப் போமா?
விருந்தென்று பெருந்தமிழை நெஞ்ச இலை இட்டு
வேண்டுமட்டும் வழங்கிய நீ, பசிதீரத் தீர
இருந்தின்னும் வழங்காமற் போயினையே அஃதை
எண்ணி எண்ணி உடலுயிரும் ஏங்கிடநிற் போமா?
அருந்துன்பம் தமிழ்மொழிக்கே வாய்த்ததடா இக்கால்!
ஆர்த்தெழுந்த இடிக்குரலோ டணையிடுவார் யாரே?

போற்றுகிலாத் தமிழரிடைத் தமிழ்போற்றி வாழ்ந்தாய்!
பொய்மாந்தர் கூட்டத்திடை மெய்ப்பணியில் ஆழ்ந்தாய்!
ஆற்றுகிலாத் தமிழர்துயர் துடைத்திடத் தொண் டாற்றி,
ஆழ்ந்தகன்ற இருளுளத்தில் தமிழ்விளக்கம் ஏற்றி,
வேற்றினத்தார் தமிழழிக்க, வெகுண்டெழுந்து நின்றாய்!
விறல்பெறவே பகைவர்தமின் உடலுயிரைத் தின்றாய்!
நேற்றிருந்தாய்; இன்றிருப்பாய்; நாளையும் நீ வாழ்வாய்!
நெஞ்சிருக்குந் தமிழினத்தின் நினைவினில் நீ ஆழ்வாய்!

-1964

## 73 பாரதிதாசன் பத்து!

பூக்கும் பொழிலுட்
புகுந்திதழ் நீக்கிப் புதுநறவம்
தேக்கும் பொறியுடல்
தும்பீ! எமக்குத் தெரிந்துரைப்பாய்!
தூக்கும் தமிழப்பொழில்
பாரதிதாசன் தருசுவை தீம்
பாக்கும் உயர்ந்த
பனிமலர்த் தேறல் பயின்றதுவே! 1

பயில்வண் டயின்ற
பசுந்தேன் இலைபடு பாசடை சூழ்ந்
தயில் மண் டொளிர்தா
மரையே! உயர்வே தறிந்துரைப்பாய்;
மயல்கொண் டிலங்குயர்
பாரதி தாசன் மணித்தமிழோ?
வெயில்கண் டுவக்கும்
வெறிமலர்த் தேனோ? விளங்கிடவே! 2

வெறித்த குரலெடுத்
தின்னிசை வல்லவர் வெள்கிடயான்
குறித்த தமிழ்ப்பா
கொழிக்கும் குயிலே! குரைகடலும்
தெறித்த அலைக்கை
ஒலித்துவந் தேற்கும் தமிழ்த்திறமை
பொறித்த புலவனெம்
பாரதி தாசன்சீர் பாடுவையே! 3

பாடுங் குயிலின்
பழகின் னிசைக்கொரு பண்தவறா
தாடுங் கடிமயி
லே, அயர் வுற்றோர் அகங்குளிரத்
தேடுங் கவின்பா
முழக்கிடும் பாரதி தாசனவன்
நீடும் இசை மழைக்
காடுவை யோ, நெடுங் காலெடுத்தே? 4

எடுத்த நெடுமா
மலையில் எழுந்தே எழில்மலர் மேல்
படுத்த மணம் புணர்ந்
தின்சுனைத் தண்ணீர் பயின்றுடலங்
கடுத்த நிலைதவிர்
தென்றலே! பாரதி தாசனிசை
மடுத்த செவிக்குள்
அவன்புகழ் பாடி மலர்த்துவையே! 5

மன்னும் பெரும்பெயர்ப்
பாரதிதாசன் மணித்தமிழைத்
தின்னுங் கிளியே!
தனித்தேன் தினைமா தினக்கொடுப்பேன்;
மின்னும் படியுயிர்
மீளும் படியவன் மேம்பெயரை
இன்னும் ஒருமுறை
சொல்லுவை யோசெவி இன்புறவே! 6

இழைத்த கொடுமையொன்
றில்லா திருக்க எனைச்சுடுவாய்,
மழைத்த முகில்வந்
தெழில்மறைக் காத மணிநிலவே!
தழைத்த பெரும் புகழ்ப்
பாரதிதாசன் தனிப்புலமை
குழைத்த தமிழ்போல்
குளிர்பொழி வாயோ குலமகட்கே? 7

ஆர்த்த கழகத்
தருந்தமிழ் மீதே அழிபகைவர்
போர்த்த பழியிருள்
நீக்க வெழுந்த பரிதியெனும்
கூர்த்த மதிதிகழ்
பாரதி தாசன் கொழுந்தமிழ் போல்
சீர்த்தி நினக்கிலை
யே, கடல் சீர்த்தெழு செங்கதிரே! 8

கதிர்முன் பனியாய்க்
கனல்முன் பொறியாய்க் கனித்தமிழின்
முதிர்தீஞ் சுவைதரு
பாரதிதாசன் முழுப்புலமை
எதிர்முன் னிழிபடப்
பாடல் எழுதி இடர்ப்பட்டோர்
அதிர்வுற லுண்டுளம்
அஞ்சலு முண்டே அலமரவே! 9

அலங்கலை ஆழ்கடல்
சூழ்ந்த வியன்பொழில் ஆர்புதுவை
இலங்குயர் சீர்மிகு
பாரதிதாசன் எழில்மனத்தே
குலுங்கினள் செந்தமிழ்க்
கன்னி; குயிலெனக் கூவியுயிர்
துலங்கினள்; எந்தமிழ்
எங்கணும் பூக்கத் துணைசெயவே! 10

-1966

## 74

## பன்னாடைப் புலவர்!

இலக்கணத்துப் புலியென்பார்; இலக்கியத்துத்
தூணென்பார்; இறுமாப் புற்றுத்
துலக்கமிலா வெற்றறிவால் பிறர்தம்முன்
துகளென்பார்; தொண்டு பேணார்!
விலக்கவிலாச் சூழ்நிலையால் ஒரோவொருகால்
வினைமுடிப்பின் வியப்பார் தம்மை!
கலக்கலுறும் பன்னாடைப் புலவரிவர்;
உண்மையர்க்குக் காற்கீழ்ப் புல்லே!

-1966

## 75

# பொய்யிலாப் புலவன் புகழ் வாழியவே!

தம்மனை நினையான்; தமிழ்நினைத் திருந்தான்;
தம்மக்கள் பேணான்; தமிழைப் பேணினான்!
தம்பொருள் காவான்; தமிழ்காத் திருந்தான்!
தம்நலம் விழையான்; தமிழ்நலம் விழைந்தான்!
தம்துயர் போக்கான்; தமிழ்த்துயர்க் கெழுந்தான்!
மும்மைப் பொழுதும் முத்தமிழ் மொழிக்கெனத்
தம்மைத் தந்தான்; தம்வாழ் விழந்தான்!
தன்னேர் ஆவி தமிழுக் களித்த
மன்னன்! பாவலன்! மாத்தமிழ் மறவன்!
பாடலுக் கொருவன்! பைந்தமிழ் வென்றி!
கேடுறுந் தமிழ்க்குக் கேடயம்! நெடுவாள்!
கூனற் பகைமுன் குமுறும் எரிமலை!
வேனில் வெங்கதிர்! வீசும் கொடும்புயல்!
புதுவையி னின்று பாடிய பூங்குயில்!
எதுபைந் தமிழுக் கேற்றம் விளைக்கும்
என்றே கருதி இசைத்த பேரியாழ்!
குன்றா நாவும் கொதித்த நெஞ்சுமாய்
வானமும் அதிர முழங்கிய வல்லிடி!
கான வேங்கை! கனல்தெறி களிறு!
இமைநடுங் காமல் இரவும் பகலும்
நமையும் நாட்டையும் காத்த காவலன்!
அன்னோன் நல்லுடல் அழிந்த தாயினும்
என்றும் வாழ்ந்தது வாழ்ந்தது இவன்உயிர்!
வையப் பெரும்பெயர் வழிவழிக் கொண்ட
பொய்யிலாப் புலவன் புகழ்வா ழியவே!

-1967

## 76 செந்தமிழ்ச் சின்னச்சாமி!

செந்தமிழ் மறவன் **சின்னச் சாமி**
வெந்தழல் புகுந்து வெந்தனன்; என்றொரு
செய்திவந் தெம்செவி சேர்ந்ததும் உள்ளம்
வெய்துயிர்ப் புண்டது! வெயர்த்தது உடலம்!
தமிழ்க்குயிர் துறந்த தமிழ்மகன், தன்றாய்
அமிழ்தெனும் மனைவி மக்கட் கெல்லாம்
வைத்துச் சென்ற வைப்பெலாம் புகழே!
பொய்த்துயிர் வாழும் போலியர் தமக்குச்
சின்னச் சாமியின் ஈகச் சிறப்பும்
மன்னும் புகழும் மறையா திலங்குக!
தமிழ்க்குயிர் செகுக்கும் தகைமை யாளர்
தமக்கொரு நற்சொல்; தமிழ்க்கென உயிரை
ஈதல் என்றால், எரிநெய் ஊற்றிச்
சாதல் இல்லை! சாகுநாள் வரையில்
செந்தமிழ்க் குற்ற தீமைகள் களைதலும்
வெந்துயர் தருவார் தம்மை வீழ்த்தலும்
ஆகுமே அன்றித்தாம் அழிதல் அன்று;
சாகுவர் தம்மால் தமிழ்ப்படை சாகும்!
பகைப்புலன் அறுக்கப் பதைப்பார்
வகைப்பட முயல்வதே வழியென் றறிமே!

-1968

## 77 அண்ணா இரங்கற் பத்து!

எண்ணா யிரங்கோடி உள்ளமும் ஆவியும் ஏக்கமுற்றுப்
பண்ணா யிரங்கோடி பாடி வருந்திப் பரிதவித்தே
உண்ணா துறங்கா துழன்றதும் மாண்டதும் உண்மையென்றால்
அண்ணா துரையாம் அறிஞர் புகழ்க்கோர் அளவுமுண்டோ? 1

மக்களை ஈர்த்த தலைவன்; அரசியல் மாண்புணர்ந்தான்;
ஒக்கல் அவரென எண்ணி உழைத்தான்; உழைப்பிடையில்
பக்கல் இருந்தவர் நெஞ்சும் உயிரும் பதைபதைக்கப்
புக்கல் நலம்என் றுயிராய்ப் புகுந்தான் புகழுடம்பே! 2

பாலை நிகர்த்தது நெஞ்சம்! பனிநிகர் பைந்தமிழ்ச்சொல்!
வேலை நிகர்த்தது கூர்விழி! நீண்டு விரிந்த நெற்றி,
நூலை நிகர்த்தது; கல்லாப் பொதுநிலை மாந்தருக்கும்
சோலை நிகர்த்ததே அன்னவன் செந்தமிழ்ச் சொற்பொழிவே! *3*

மட்டில் முதுமைப் பெரியார் பயிற்றிய மாணவருள்
குட்டி அரிமா எனவெளி யேறிக் குழுக்குழுவாய்த்
தட்டி எழுப்பிடு வீறுரை யால்இத் தமிழ்நிலத்துள்
கொட்டி விதைத்தவை காய்க்குமுன் ஆவி குலைந்ததுவே! *4*

முந்தையர் மொய்ம்புகழ் மீளக் கொணர்ந்திட முன்னி முன்னி
வெந்துய ரோடமைச் சேற்றிந்திப் போரினில் வெற்றிகண்டு
செந்தமிழ்க் கேதகு செய்வினை முற்றுமாய்ச் செய்வதற்குள்
எந்தமிழ்ச் சேய்க்கிங் கிடர்வந்த தேஉயிர் ஏகுறவே! *5*

தந்தை பெரியார் தலைப்படு போர்க்குத் தலைப்படையாய்
முந்தை அவர்வழிப் பற்றி யெழுந்த முதல்மகனாய்
எந்தை தமிழ்க்கென் றிராப்பகல் ஆற்றுமோர் ஏவலனாய்
வந்து நறும்பணி கொண்டான்; முடியுமுன் வாடினனே! *6*

தமிழ்மொழிக் கென்றே தகவாம் சிலசெயல் தம்பெருமை
அமிழ்விலா வாறவன் ஆற்றலின் என்பதும் ஆமெனினும்
இமிழ்உல கெங்கும் புகழ்பெற இன்னும் இருந்திருந்தால்
தமிழ்நா டொருவா றுருப்பெறும் அன்னான் தலைமையிலே! *7*

மாற்றற் கிலராய் மதமும் குலமும் வலிந்து பற்றிச்
சாற்றற் கரிதாம் இழிவுகற் பித்துச் சமவுரிமை
ஆற்றற் கணையாய் அடுத்துக் கெடுத்திடும் ஆரியரும்
போற்ற நடந்தான் அதுதான் அவன்றன் புகழ்க்குறையே! *8*

அன்னை மொழிக்கும் இனத்தினுக் கும்வந்த ஆரியரால்
இன்னும் விலகாக் கொடுந்துயர் சீய்க்க எழுந்தயிவன்
முன்னை யெடுத்தநற் கொள்கைமுழுதும் முடித்திருந்தால்
பின்னை இலரென வேபெற் றிருப்பான் பெரும்புகழே! *9*

பனியுங் குளிரும் வெயிலும் கருதாக் கவலையொடு
தனியுந் திறமும் பழைமையும் வாய்ந்த தமிழ்க் குழைத்துக்
கனியும் மொழியும் உணர்வும் கருத்தும் கலந்தருந்த
இனியும் வருமோ ஒருவன் இவன்போலும் எம்மவர்க்கே! *10*

-1969

## 78 பாவாணர் தாத்தா தெரியுமா?

பன்மொழி கற்றவர்
பைந்தமிழ்க் குழைப்பவர்
பாவாணர் தாத்தா தெரியுமா? - தம்பி
பாவாணர் தாத்தா தெரியுமா? - அவர்
தென்மொழி ஆய்விலும்
தனித்தமிழ் வாழ்விலும்
திகழ்கின்ற ஞாயிறு புரியுமா?

அறிவினில் சிறந்தவர்!
அன்பினில் மிகுந்தவர்!
அருந்தமிழ் இலக்கணக் கடலவர் - ஒளி
அழகுசேர் கருநிற உடலவர்! - அற
நெறிபிற ழாதவர்!
நிலைகுலை யாதவர்!
நெடுவாடைக் காற்றுக்குப் படலவர்!

பலநூல்கள் யாத்தவர்!
பண்பாடு காத்தவர்!
பதவியைத் தூசென மதிப்பவர் - பொய்ப்
பாராட்டைக் காலினில் மிதிப்பவர்! - இந்த
உலகினில் முதன்மொழி
ஒண்டமிழ் மொழியென
உரைத்தவர்; தீங்கெனில் கொதிப்பவர்!

துன்புற்ற போதிலும்
துவளாத உளத்தவர்!
தொடங்கிய கொள்கையை முடித்தவர்! - திறந்
தோய்கின்ற நூல்பல வடித்தவர்! - நாம்
இன்புற்று வாழ்ந்திட
இராப்பகல் உழைப்பவர்!
என்றுமே நமக்கெலாம் பிடித்தவர்!

-1969

## 79 கழக ஆற்றுப்படை!

பெண்ணியல் போவியம் எண்ணியாங் கெழுதி
வண்ணம் பதித்த வழவழப் புத்தாள்
மின்னும் முகப்பொடு மிளிர்ந்திட உள்ளுரை
புன்மைக் கருத்தொடு பொலிவுறும் பொத்தகக்
கடைதொறும் புகுந்து கடாவித் திரியும்!
நடைமெலி மாணவ நல்லோய் கேளாய்!

புத்துலகம்புகு புதுமைக் காலத்து
நித்தலும் படித்திட நீ விரும் புவது
கலைநிறை முத்தமிழ்க் கழகநூ லாயினும்
நிலைபெற் றுயர்ந்த நெறிநூ லாயினும்
அறிவியல் தெரிக்கும் ஆய்வுநூ லென்னினும்
செறிவுறும் வாழ்வில் சிறக்குநூல் என்னினும்
பெருநூல் வாணிகப் பெயர்பெற் றோங்கிய
திருநெல் வேலிச் சைவசித் தாந்த
நூற்பதிப் பகத்து நுழைதல் நின்கடனே!
ஏற்புடை அதன்சிறப் பியம்பவும் அரிதே!

தீந்தமிழ் புரக்கத் திருவ ரங்கனார்
ஈந்தநற் பயனால் எழுந்தவக் கழகம்
மறைமலை யடிகளார் மாண்பினில் வளர்ந்தே
அரைநூற் றாண்டாய் ஆற்றிய தொண்டோ
தமிழ்வர லாற்றினும் தமிழகச் சிறப்பினும்
அமிழாப் பெயர்கொண் டகங்கமழ் வதுவே!

சுப்பையா வெனுமோ ரொப்பிலா மாமணி
முப்பொழு துந்தமிழ் முன்னேற் றத்தின்
விழைந்து நாடி வியத்தகு துறைபல
நுழைந்து புதுப்புது நூற்களாய்ப் பதித்தலை
எண்ணிய நெஞ்சம் இறும்பூ தெய்தும்!
பண்ணிலும் பாவிலும் பராவிக் களித்திடும்!
நுண்ணிய வினைத்திறம் நூலறி வுறுதிறம்
திண்ணிய மனவுரந் தேங்கியோ னவனே!

தொன்மைப் பெரும்புகழ்த் தொல்காப் பியமுதல்
நன்னூல் நம்பி யகப்பொருள் புறப்பொருள்
இறையனார் தண்டி காரிகை ஈறாய்
மறையா விலக்கண மாண்புறு நூல்களும்

பழகு தண்டமிழ்ப் பயனெலாங் கொளுவும்
கழக இலக்கியக் கவின்பே ராக்கமும்
யாப்பொடும் உரையொடும் யாத்தநூல் பலவும்
காப்பியம் உரைநடை கதைச்சுருக் கங்களும்
அகர முதலிகள் நிகண்டுகள் தம்மொடு
பகுபடப் பதித்த திருக்குறள் வகைகளும்
தூதுலாக் கலம்பகம் கோவையந் தாதி
ஓதரும் பரணியொடு பள்ளுகுற வஞ்சி
வெண்பா சதகம் பிள்ளைத் தமிழெனும்
ஒண்பா விலக்கிய உயர்நூல் தொகுதியும்
மெய்யறி வோங்கி மிளிருநூல் பலவும்
செய்முறை அறிவியல் சமயத் திருமுறை
தொல்வர லாறுகள் தொன்னாம் ஆய்வுகள்
மல்குசீர்ப் புலவர் மாக்கதை வரிசை
அறிவியல் அறிஞர்கள் அரசியல் தலைவர்கள்
நெறிமுறைப் படுத்திய மெய்வர லாறுகள்
கட்டுரை வரிசை கவினுறு நாடகம்
மட்டிலா வின்பம் மல்கிசை நூல்கள்
ஆங்கிலப் பெயர்ப்புகள் அறிவியல் கதைகள்
ஓங்கிய சிறப்பின் உள்ளுணர் வெழுப்பும்
தீங்கறு பனுவல்கள் சிறுவர் பாடல்கள்
பழமொழித் தொகுப்பொடு பல்துறை நூல்களும்
அழகுறு வடிவொடும் ஆய்வொடும் சிறப்புற
மூலமும் பெயர்ப்பும் முறைப்பட நோக்கி
ஆழமும் அகற்சியும் அருமையும் புலப்பட
உளியிட் டெழுதிய உருவமை எழுத்தினில்
வெளியிட் டுதவிய வினைத்திறம் பெரிதே!

பொருள்பெற லொன்றே குறிக்கோ ளாகி
இருள்நிறை நூல்பல எழுதுவித் தவற்றைத்
தப்புந் தவறுமாய்த் தாழ்மையும் கீழ்மையும்
எப்புடை நோக்கினும் இழிந்த நடையுமாய்
அச்சிட்டு விற்கும் அழிசினர் புலத்திடை
மெச்சும் படியமை மேலாண் மையின்கீழ்
நூலறி வோடு நுண்ணறி வெய்திய
சால்புறும் பல்துறை அறிஞரைச் சார்ந்தே
பன்னான்கு நூற்றுப் பைந்தமிழ் நூல்கள்
இந்நாள் பதித்தவிவ் வியன்கழ கத்தை
நன்னினை யாயின் நலம்பெறும்
என்னனறு நூல்களை எய்துவை நீயே!

-1970

## 80 ஆசிரியப் பெருமக்கள் வாழ்க!

எண்ணங்கள் சிதர்ந்தோடி இடர்ப்படுத்தும் பருவம்;
இருக்கையிலே தொடர்ந்தமர்தற் கிணங்காத பருவம்;
வண்ணங்கள், மலர், பறவை, மாடு, ஆடு - தம்மில்
மனம் வைத்துக் கல்வியிலே மனம்வையாப் பருவம்;
உண்ணற்கும் உடுத்தற்கும் உறங்குதற்கும் போக
ஒழிகின்ற நேரமெல்லாம் பள்ளிவந்து, தொல்லை
பண்ணற்கும் கற்றற்கும் வாய்த்ததொரு பருவம்;
பயிர்முளைத்து வருகின்ற பருவமன்றோ பருவம்!

அப்பருவக் குருளைகளை அடக்கி, யருள் கொண்டே
அகரமுதல் கற்பித்துக் கதை,பாடல் சொல்லி,
ஒப்பரிய கல்வியொடும் ஒழுங்கோடும் வாழ்க்கை
உயர்நெறியில் இயங்குதற்கே அடிப்படையைக் காட்டிச்
செப்பரிய தொண்டாற்றும் தொடக்கநிலைப் பள்ளிச்
சிறப்புமிகும் ஆசிரியப் பெருமக்கள் மாண்பை
எப்படியான் எடுத்துரைப்பேன்?, இவ்வுலக மாந்தர்க்
கெருவன்றோ? அறிவுதரும் இறைவர், அவர் அன்றோ?

அன்னவர்தம் வாழ்க்கையினை ஊர்பேணல் வேண்டும்.
ஆசிரியப் பெருந்தகையர்க் கரசுதவல் வேண்டும்.
சின்னவராய்ச் சிறப்பிலராய்ப் பெருமை, நலம் குன்றிச்
சீரற்ற வாழ்வினராய் அன்னவர்வாழ் கின்ற
புன்னிலையைத், தாழ்நிலையைப் போக்கிடுதல் வேண்டும்!
பூத்துவரும் உலகநலம் காத்திடுதல் வேண்டும்!
நன்னிலைக்கே அவருயர்ந்தால் நாமுயர்வோம்; கல்வி
நலம்பெருக்கும் தொடக்கநிலை ஆசிரியர் வாழ்க!

-1970

## 81 பாவேந்தர் பாரதிதாசன்!

பாட்டுக்கு வேந்தர்
பாவேந்தர் - அவர்
பாரதிதாசன்
எனும் வேந்தர் - தம்பி
ஏட்டுக்கு ஏடு
எழில்கொழிக்கும் - அவர்
எழுத்துக்கு எழுத்து
தமிழ் மணக்கும்! (பாட்டுக்கு)

கூட்டுக்குள் ஆவி
தமிழ்என்றார் - அவர்
குரலுக்குக் குரலால்
நமை வென்றார் - நம்
வீட்டுக்கு வீடு
அவர் பாடல் - பெரும்
வீதிக்கு வீதி
அவர் புகழாம்! (பாட்டுக்கு)

நரம்புக்கு நரம்பு
உணர்வேறும் - உயிர்
நாடிக்கு நாடி
தமிழ் ஊறும்!
கரம்புக்கு உழவாய்
மனம் உழுதார் - நல்ல
கழனிக்கு மழையாய்த்
தமிழ் பொழிந்தார்! (பாட்டுக்கு)

இருளுக்கு ஒளியாய்
அவர் திகழ்ந்தார்- நல்ல
இயற்கைக்கு உயிராய்
எழில் கொடுத்தார்!
மருளுக்கு மருந்தாய்த்
தமிழ் விளைத்தார்- தம்பி!
மடமைக்கு எதிராய்ப்
போர் தொடுத்தார்! (பாட்டுக்கு)

- 1970

# 82 மறைமலையடிகள்!

மறைமலை யடிகளே
நிறைதமிழ் வளர்த்தவர்!
மனங்கொள நினைத்திடுக! - அவரது
மாண்பினைப் புகழ்ந்திடுக!
குறைவறு நூல்பல
நிறைவுறத் தந்தவர்!
குனிதலை நிமிர்த்தியவர்! - செந்தமிழ்க்
குடியினை உயர்த்தியவர்!

துறைமிகு ஆங்கிலம்,
மறைவட மொழியொடு
தூய் தமிழ்ப் பேரறிஞர்! - தனித்தமிழ்
தோற்றிய ஓரறிஞர்!
கறைசெயும் பிறமொழி
முறையறப் புகுத்திய
கயமையை விலக்கியவர் - தமிழினைக்
கசடறத் துலக்கியவர்!

கலக்கமில் அறிவினால்
இலக்கண இலக்கியக்
கடல்கடந் தேறியவர்! - இந்தியைக்
கடிந்துரை வீறியவர்!
நலக்குறை வுறுந்தமிழ்க்
குலந்தழைத் தெழுந்திட
நாள்தொறும் எண்ணியவர்! - உரைதர
நாடெல்லாம் நண்ணியவர்!

அறிவியல் எழுதினார்;
நெறிமுறை கூறினார்;
ஆய்வுசெய் திறமுரைத்தார் - ஆரியர்
அடங்கிட மறமுரைத்தார்!
செறிவுறுங் கருத்தினால்
முறிவுற மடமையைச்
சினத்தொடு தாக்கியவர் - குலவெறிச்
சிறுமையைப் போக்கியவர்.

-1970

## 83 திருக்குறள் பெருமாள்!

துருவுந் தூசியும் துவைந்த புழுதியும்
எருவுஞ் சேறும் இறுகக் காய்ந்தே,
உருளை ஓரத்தும், உட்புற அச்சிலும்,
இருகால் மிதியிலும், கம்பிகள் இடுக்கிலும்,
அடையடை யாக அப்பிக் கிடந்து,
கடகடத் தாடுங் கற்கா லத்துக்
கட்டை வண்டிபோல் காட்சி யளிக்கும்
குட்டை யான மிதிவண்டிக் கூடு.

அமரும் இருக்கையில் ஆயிரம் கிழிசல்!
சுமைகள் வைத்திடுஞ் சுமப்பான் 'தொட! தொட!'
கால்மிதிக் கட்டைகள் கழன்று கழன்று
சாலையில் ஆளைச் சாய்த்திடும் நாடகம்!
கிழிசல் வேட்டி ஓரத்தைச் சுருட்டி
மைசேர் பற்களால் மென்று குதப்பி
ஆளைத் தள்ளும் 'அழகிய' தொடரி!
ஏனிவ் விரைவென இடையிடை மடங்கி
ஊன்றிக் கொள்ளும் ஒற்றைக்கால் தாங்கி!
கணகணக் காத கருந்தலைப் பருமணி!
தொணதொணக் கின்ற தொடரிச் சக்கரம்!
உராய்ந்து கிரீச்சிடும் நெளிந்த உருளைகள்!
மரமரக் கின்ற மண்பொதி தடைகள்!

இத்தகு பெருமையோ டெவ்விடத் தாகிலும்
தத்தட தடவெனும் மிதிவண்டி ஒன்று
சாய்ந்த நிலையில் சாலையோ ரத்துக்
காய்ந்த உடலொடு காண்பீ ராயின்
அந்த வண்டிதான் திருக்குறள் பெருமாள்
சொந்த வண்டி,எனச் சொல்லுக துணிந்தே!

அந்த வண்டிக்கு அண்மையில் உள்ள
சந்திலோ பொந்திலோ சாலைக் கடையிலோ
எங்கோ தான்அவர் இருந்திடல் வேண்டும்!

இங்கவர் தோற்றம் எப்படி என்றால்,
இயம்பிடு கின்றேன் மனத்தில் இறுத்துக;
நயம்படும் அவர்புகழ் நாற்புறம் நாட்டுக!

கோணியில் தைத்த குப்பா யம்போல்
சாணி நிறத்தினில் தொளதொள சட்டை!
ஏறியும் இறங்கியும் ஏழெட்டுக் கிழிசலால்
மாறியும் மடிந்தும் தொங்கிடும் வேட்டி!
உழைப்பின் மிகுதியால் ஓதந் தாக்கிடும்
தலைப்புறம் மறைக்குமோர் தலைமுண் டாசு!
முண்டாசின் உட்புறம் கறுப்பும் வெளுப்புமாய்
உண்டு, இல்லை எனுமா றுரைக்குந் தலைமயிர்!
மொச்சைக் கொட்டைபோல் இருந்த பல்லெலாம்
பச்சுப் பச்சென விழுந்திட்ட பைவாய்!
வாய்மிசை மருங்கிலும் முகவாய்ப் புறத்திலும்
தோய்ந்த வெண்மயிர் துளிர்த்த ஒளிமுகம்
தளர்ந்த மேனி; தளராத வீறு!
கிளர்ந்த நகைமுகம்; கிறக்கிடும் உரைத்திறன்!
உருக்குலைந் திட்ட உடல்தான் என்னினும்
கருக்குலை யாத கழகத் தமிழ், அவர்!
சாறு பிழிந்த சக்கைதான் எனினும்
வீறு குறையாத தீந்தமிழ் வேங்கை!

பாரதி தாசனார் பாடல்கள் முற்றும்
ஊரதி ரும்படி உணர முழக்கித்
தெருத்தெரு வாகத் திண்ணை திண்ணையாய்த்
திருக்குறள் பயிற்றிடும் திறல்மிகு ஆசான்!
அலைவுறும் விழிகளால் அள்ளி விழுங்கி
உலைப்பட் டடைபோல் உருப்பல சமைக்கும்
அங்காந்த நெஞ்சம்! அயர்விலா விளைவு!
மங்காத உணர்வு! மலையாத துணிவு!
'உருவுகண் டெள்ளாமை வேண்டும்' என் குறட்கே
ஒருதனி உருவமாய் உலவுந் திருக்குறள்!

சட்டைப் பையினுள் கைவிட் டெடுத்தால்
கற்றை பழந்தாள்; கணக்கிலாக் குறிப்புகள்!
கடைக்குறிப் பன்று! காலங் காலமாய்
இடையிடைக் கேட்டவை, எண்ணத் தெழுந்தவை,
பாக்களின் அடிகள், பற்பல கருத்துகள்,
நீக்கமற் றவரின் நினைவினில் தோய்ந்த
குறட்பா விளக்கம்,எனுந்தாட் குவியல்!
வரவும் செலவும் சட்டைக்கு வாரா,
கைப்பிடி அறுந்து தொளையிட்டு முடிந்த
பையொன்று கையில்; அதனுள் பலபடி!

மூர்த்திக் குப்பம் எனும்மூ தூரின்
சீர்த்திக் கிவருடைச் சிறப்பைக் கூறலாம்!

அஞ்சற் காரராய் ஆற்றும் பணியுடன்
எஞ்சும் பொழுதெலாம் எந்தமிழ்த் தொண்டராய்
உலாவரு கின்றார்; ஊரவர் இவர்பால்
பலாப்பழத் தீக்களாய்ப் பறப்பதைப் பார்க்கலாம்!

மடல்கள் கொடுப்பார்; மக்களைக் கண்டால்
சடக்கென இறங்குவார்; சாலையென் றாலும்,
சிற்றுண்டி, தேநீர்ச் சிறுகடை யெனினும்,
வெற்றிலை பாக்கு விற்பவர் என்னினும்,
அவலிடிக் கின்ற ஆயாள் எனினும்,
துவளாத நெஞ்சோடு துணிந்து, ஆங் கிறங்கி,

நலங்கேட் பதுபோல் நாலைந்து குறட்பா
வலிந்து புகுத்தித், தமிழ்வர லாறு,
''படிபடி'' என்னும் பாவேந்தர் பாடல்,
அடிதொறும் எதுகை அடுக்கி வரும்,
'சத்தி முத்தப் புலவ'ரின் பாட்டுள் அவர்
ஒத்த நிகழ்ச்சிக் கோரிரண் டடிகள்
நொண்டி யடிப்பது போல்சில நொடிகள்
வண்டியை ஒருகையில் பிடித்த வாறே
கொட்டி விட்டுக் குபுக்கெனத் தாவி
ஒட்டு வண்டியை ஓட்டிச் செல்லுவார்!

'தென்மொழி'ப் படைஞர்க்கு அடைவீடு அவர்மனை!
பன்மாண் திறலோ டிதழ்வினை பகிர்ந்து,
தேர்ந்து முடித்துத் திங்களில் ஒருமுறை,
காரியும் ஞாயிறும் கடற்கரை அடுக்கும்
முழுப்பொழு தெல்லாம் மூர்த்திக் குப்பம்
திருக்குறள் பெருமாள் சிறுகுடில் திண்ணை
தூளி படுக்கும்!
தென்மொழித் தம்பியர்
தோளொடு தோள்கள், தூய்தமிழ் நெஞ்சுகள்
கலந்துற வாடும் கருத்துப் பொழிவுகள்,
புலந்துண வுண்ணும் பொலிந்த காட்சிகள்,
நாட்டுதற் கியலா நாடக இலக்கியம்!

ஊட்டுதற்கலையும் உள்ளமும் கையுமாய்
முப்பொழு திருப்பினும் முகங்கோ ணாத
குப்பம்மாள் எனும் குடித்தனக் காரிக்குச்
செப்பமாய் அமைந்த சிறப்பெலாம் என்னெனின்,
ஒப்புரைக் கில்லாத 'தென்மொழி' உழைப்பால்
உடலும் நெஞ்சமும் ஒருங்குறச் சோர்ந்து,
கடற்கரை நண்ணும் காலத்தி லெல்லாம்,
கையில் கிடைத்ததை, மடியில் நிறைத்ததை,
பையில் பானையில் கைவிட்டுத் துழவிக்
கொஞ்சங் கொஞ்சமாய்க் கூட்டிச் சேர்த்ததை
எஞ்சுத லின்றி எடுத்தெடுத் தீந்து
தென்மொழிக் குடும்பம் தின்று மகிழ்வதைத்
தன்விழிப் பருப்பால் தான்விழுங் குவதே!

பெருமாள் பெற்ற பெருமை எல்லாம்
திருக்குறள் ஒன்று! தேய்விலா அன்பின்
குப்பம்மாள் எனும் குணக்குன்று ஒன்று!
தப்பில் லாமல் தமிழ்ப்பணி செய்யும்
திருக்குறள் பெருமாள் குடும்பம்
இருக்குநாள் எல்லாம் இருக்குமெந் தமிழே!

-1971

## 84 அண்ணாமலைநகர் அதிர்ச்சி!

கல்வி வளர்ச்சியைக் காலந் தின்றது!
பல்கலைக் கழகம் பரிந்து கொடுக்கும்
'பண்டா ரகர்' எனும் உயரிய பட்டம்
'சுண்டல்' ஆகுக! 'கடலை' யாகுக!
(அவைதாம் எனினும் அள்ளிக் கொடுக்க
எவரும் முன்வரார்!) எனவே, அதனை
'எவருக்' காகிலும் ஈந்து மகிழ்க!
'அவரும்' வாங்கி அடுக்கிக் கொள்க!
இதிலெலாம் நமக்குக் கவலையும் இல்லை!
புதிரிதை விளக்கப் பொழுதும் இல்லை!

அண்ணா மலையார் பல்கலைக் கழகம்
கண்ணா யிருக்கும் கல்வியால் பெருமை
பெற்ற நிலைபோய்ப் பெருங்கல கஞ்செயற்
குற்ற நிலைக்களன் ஆனதும் உண்மையே!

அண்மையில் பட்ட மளிப்பு விழாவினில்
அண்ணா மலையில் நடந்ததை அறிந்தால்
யாகியாக் கானே 'தோற்றேன்' என்பான்?
காக்கை குருவியைக் கற்களா லடித்து
விரட்டுதல் போல மாணவர் தம்மை
விரட்டி யுள்ளனர் காவலர் வேங்கைகள்!
முரட்டுத் தனமாய்க் கைகால் முறித்துளர்!
இருட்டு வேளையில் வண்டியில் ஏற்றிப்
பற்பல ஊரிலும் பாதி வழியிலும்
வற்புறுத்தி யவரை இறக்கி வந்துளர்.
பறங்கிப் பேட்டைக் கடலினுள் அமுக்கிக்
கிறங்கச் செய்துளர் மாணவ மணிகளை!

மாணவர் விடுதியுள் காவலர் புகுவதும்
வீணாய் அவரை அடித்து வீழ்ப்பதும்
'பத்த வச்சலப்' பாணியென் றறிக!
முத்து வேலர் 'கருணா நிதி'க்கும்
அந்தப் பாணிதான் ஆட்சிக்கு உரித்தெனில்
இந்தப் படியே இன்னும் நடக்கலாம்;
அவரின் முடிவையே இவரும் அடையலாம்
எவரும் தடுத்திடல் இயலாத வொன்றே!

-1971

## 85

## வங்க வாகை!

**களக் காட்சி:**

நுனிவளைந்த கூருகிர்வாய் நெடுங்கழுத்து
நுண்ணோக்குக் கருவிழிகள் செஞ்சிறைகள்
பனிபடர்ந்த கருமுகில்கள் ஊடே பாயும்
பருத்ததலைப் பெரும்பருந்துக் கூட்டம் எல்லாம்
கனிமுதிர்ந்த பேரால மரத்தைச் சுற்றும்
கருங்காக்கைக் கூட்டம் போல் பறந்து சுற்றி
நனிதின்று தசைகிழித்து நரம்பைச் சிய்க்கும்
நரக்காடாம் கீழ்வங்கங் காண்மின்! காண்மின்! 1

[1]எஃகம்பாய்ந் தெடுத்தெறிந்த தசைதுடிப்ப
எலும்புகளை நரிகடிப்ப நாயிழுப்ப
[2]அஃகம்போல் செங்குருதி ஊற்றெடுக்க
அடுக்கடுக்காய்ப் பசும்பிணங்கள் சாய்ந்துவீழ
[3]ஒஃகியசெந் நாவெயிற்றில் இடுக்கிக் கொள்ள
வெஃகாமை மனம்பெருக்கி விடுதலைக்கே
வேட்கைதரும் போர்க்களங்கள் காண்மின்! காண்மின்! 2

**கீழ்வங்காளியரின் துணிவைப் புகழ்ந்தது:**

வங்காளத் திருநாடே! உணர்வுக் காடே!
வன்னெஞ்சப் பேய்கிழித்த மறவர் மண்ணே!
எங்கோவென் னுடலுக்குள் ஊற்றெடுக்கும்
எம் நிலத்து விடுதலைக்கே உணர்வைச் சாய்க்கும்
மங்காத பெரும் புகழே! வயிரக் குன்றே!
மாநிலத்தின் பெருமூச்சை வரலாறாகச்
செங்காட்டின் குருதியைக்கொண் டெழுதிவைத்த
செந்தமிழின் புறப்பாட்டே வாழ்க! வாழ்க! 3

படைமுகத்துப் பைந்நிறச்சீ ராடை பூணீர்!
பயிற்சியின்றிப் பெருங்களத்தைத் துகைக்க லானீர்!
கடைமுகத்து நெஞ்சினரைக் கிழிக்க லானீர்!
கன்னியரின் உடல் மோந்த நாய்கள் தம்மின்
புடைமுகத்தின் எலும்புகளை நொறுக்க லானீர்!
பூணிகர்த்த தலைவர்க்கொளி யேற்ற லானீர்!
பெடைமுகத்தைப் பெற்றாரைத் துறந்தீர்! யாண்டும்
பெறற்கரிய பெரும்பேற்றைப் பெறல்கொண் டீரே! 4

### போரில் இறந்துபட்ட படைமறவர்க்கு இரங்கல் !

மைத்தடங்கள் மொய்த்தவழி வெறித்த தையோ!
மார்பகலத் துழுஞ் சிறுவர் கலுழ்வர் ஓ!ஓ!
வேய்த்தடந்தோள் தழுவவரும் உடன்பிறப்பார்
விம்மியழும் பேரவலம் யாண்டும்! யாண்டும்!
வைத்துமிழ்ந்த பெருவயிற்றின் தாயர்தம்மின்
வார்த்தெழுந்த விழிநீர்க்குள் வெற்றிபூண்ட
'கைத்துமுக்கிப் பெருமறவீர்! கீழ்வங் கத்தைக்
கனவினின்று நினைவுலகம் மீள்கொண் டீரே! 5

நிலவரணும் நீரரணுந் தாண்டிச் சென்றீர்!
நெஞ்சுருக நடை நடந்தீர்! வான் பறந்தீர்!
குலவரணும் மதவரணும் கடந்து நாட்டின்
கொடி மரத்தைக் காப்பதற்குப் பெரும்போ ரிட்டீர்!
புலவருளம் துடிதுடிக்க மொழிய முங்கப்
புறப்பட்டீர்! பொருதுகளஞ் செல்ல லானீர்!
'நிலவுவரும்; காற்றுவரும்; வருவீர்' என்றே
நின்றிருந்தோம்! வெற்றிவந்த தும்மை காணோம்! 6

### பாக்கித்தானியர் கொட்டம்:

கரிபுகுந்த வயல்போலக் கழுகு பாய்ந்த
கவின்மாடத் திளம்புறாவின் குஞ்சைப் போல
நரிபுகுந்த சிறைக்கோழிக் கூட்டைப் போல
நாய்புகுந்த தனிவீட்டின் அடுக்க ளைபோல்
எரிபுகுந்த வைத்தூறு போலக் கோடி
எலிக்கூட்டம் குடிபுகுந்த நெற்சாலைப் போல்
பரிபுகுந்த கொல்லையைப்போல் பாக்கித் தானின்
படைபுகுந்த கீழ்வங்கஞ் சிதைந்த தம்மா! 7

குற்றுயிராய்க் குலையுயிராய்த் துடிக்கக் கொன்றார்!
கூட்டத்தின் உட்புகுந்து சிதைத்தார்! எங்கும்
சுற்றிவந்து தெருத்தெருவாய் மக்கள் தம்மைச்
சுட்டழித்தார், இடையிடையே கண்ணில் பட்ட
நெற்றிளமைக் கன்னியரைக் கற்ப ழித்தார்,
நிற்கவைத்தே உடைகளைந்து குலைக்க லானார்!
வற்றலிலாப் பெண்வேட்கை, மண்ணின் வேட்கை,
வஞ்சகருக் கென்வேட்கை மிஞ்சிற் றம்மா! 8

**இந்திய படைஞர் வீரம்!**

மொழியுரிமை விடுதலைப்போ ராய்மு கிழ்ந்து
முசுபிர்இ ரகுமானின் தலைமை யின்கீழ்
வழியொன்று கண்டிடவே எழுச்சி கொண்ட
வங்கத்துப் புலிக்கூட்டம் வேண்டி நிற்க
'வழியன்றே; எரிபந்தம்! எங்கள் கைகள்
வேலன்றே, 'வேட்டெஃகம்! தோள்கள் குன்றம்!
பழியன்றே எங்கட்கு! பாக்கித் தானே
பார்த்துக்கொள்' என்றெழுந்தோம்!
துணைநின் றோம், நாம்! 9

நாமென்றால், நம்படைகள்! அரிமாக் கூட்டம்!
நரிக்கூட்டம் நடுங்கிற்று; பாய்ந்தோ டிற்று!
"தாமெ"ன்று "தூமெ"ன்று துவைத்திட் டார்கள்!
தரங்கெட்டுச் சிதறிற்று, படைகள்! ஐயோ!
'ஈமென்'றார்; 'ஆம்' என்றார், எவர்தாம் விட்டார்?
இருகிழமை போர்முட்டம்! அடடா; த்சொ! த்சொ!
தீமென்ற வாயினராய்த் துடித்தார்! நம்மின்
செருத்தலைவர் தம்காலைத் தொட்டார்; விட்டோம்! 10

**இந்தியர் ஒற்றுமை!**

ஐம்பத்துக் கோடியரும் ஒன்றாய் நின்றே
அரசுக்குக் கைகொடுத்த மாட்சி தன்னை
'மொய்ம்பற்ற கோழையரும் உணர்வ துண்டோ?
மூக்கற்ற தோல்விக்குப் பேச்சும் உண்டோ?
பைம்புற்கள் குத்துவதால் களிறு சாமோ?
பாக்கித்தான் படைநமக்கிங் கெந்த மூலை?
ஐம்புலனும் வென்றான்முன் ஆற்ற லற்ற
அரைக்கிறுக்கன் என் செய்வான்? தோற்றுப் போனான்! 11

**நம் வெற்றி:**

வாயுரத்துக் கத்திநின்றான் யாகி யாக்கான்!
வயிரத்துத் தோள்களெல்லாம் எழுந்து நின்று
பாயிரத்தைப் பாடுகையில் படுத்துப் போனான்!
பாட்டொன்றை முடித்திருந்தால் என்ன வாகும்?
நாயுரத்தை நம்பிஅமெரிக்கன் வந்தான்;
நம்முரத்தை நம்பியன்றோ நாமிருந்தோம்!
ஆயிரத்து நானூறு சதுரக் கற்கள்
அன்றோ நாம் பெற்றநிலம்! இழப்பைம் பத்தே! 12

**வெற்றிகொண்ட நம் படைஞர்க்கு வாழ்த்து !**

அறம்பாய்ந்த நன்னெஞ்சம், அருள்செய் நோக்கம்,
அடிநிலமும் பிறர்வெளவ இடங்கொ டாத
மறம்பாய்ந்த வல்லுடலம், இணைந்த தோள்கள்,
வாழ்ந்திருந்த பழம்பெருமை,இவற்றை எண்ணிச்
[7]செறும்பார்ந்த மிகுதுணிவு! [8]செற்றம் பாய்ச்சும்
செங்கண்ணார் எம்படைஞர்! அவரைப் போலும்
திறம்பாய்ந்த படைமறவர் உலகில் உண்டோ?
திசையெட்டும் புகழ்பெற்றே அவர்கள் வாழி! *13*

-1971

**சில அருஞ்சொற் பொருள்:**

1. எஃகம் - துமுக்கிக்குண்டு 2. அஃகம் - நீர் ஊற்று 3. ஒஃகிய - இடுக்கிய 4. கைத்துமுக்கி - கைத்துப்பாக்கி 5. வேட்டெஃகம் - துமுக்கி 6. மொய்ம்பு - வீரம் 7. செறும்பு - மனச்செருக்கு 8. செற்றம் - சினம்

## 86 அல்லிக் குளம்!

அல்லிக்குளம் எனும் அழகிய ஊரின்
எல்லையை அடைகையில் இருளும் சூழ்ந்தது!
உந்தினின் றிறங்கி ஒற்றடிப் பாதையில்
தன்னந் தனியனாய் நடந்துகொண் டிருந்தேன்.

கிழக்கு வானில் முழுநிலா கிளர்ந்து
பழக்கப்பட்ட பெருந்துணை போல
என்னொடுங் கூட இணைந்து வந்தது!

முன்னொரு தோப்பும் முடக்குங் கடந்தால்
குளம் வரும்; அப்பால் கூப்பிடு தொலைவே!
உளமெலாம் புதுமை உணர்வால் நிறைந்தது!
ஊர்புதி தன்று! நண்பரின் ஊர்தான்!
ஆர்வம் மிகுந்த அன்புடை யவர்,அவர்!
பத்தாண் டின்முன் வந்திருக் கின்றேன்!
இத்தனை ஆண்டும்நான் எங்குளேன் என்பதை
அவரும் அறியார்; அவரையும் அறியேன்!
சிவக்கொழுந் தவர்பெயர்; சிறந்த பண்பினர்!
பொதுத்தொண்டி லேயேஎம் பொழுது கழிவதால்
பழைய நண்பரைப் பார்க்கவும் ஒய்விலை!
பண்டைத் தமிழைப் பசிக்கருந்தி எம்பசிக்கே
உண்டிரு மென்றுவந் தளிப்பான் - கொண்ட
உறவாழி உள்ளத் துயர்வாழி காரை
அறவாழிக் கன்பழி ஆம்.

எள்ளல் இகழல் இணைந்திருந்த கைநெகிழ்ந்து
தள்ளல் எனுமிவற்றைத் தாம்கண்டேன் - வள்ளல்
எனப்படுவா ரைக்கண்ட தில்லை; நீ வந்தென்
மனப்படுவாய் என்றிந்நாள் மாட்டு.

-1971

## 87 திரு.வி.க. என்னும் மேலோன்!

"உயிர்தமிழுக் குடல்மண்ணுக்" கென்றுரைத்தான்
மணவழகன்; ஓர்ந்து சொன்ன
செயிர்தீர்ந்த பொன்னுரையைக் கடைப்பிடித்தால்
எந்தமிழர் சிறந்தி டாரோ?
வயிரமணி திரு.வி.க. தமிழர்க்குள்!
தமிழ்ப்பாலைக் காய்ச்சித் தோய்த்த
தயிரன்னான்! அத்தயிரைக் கடைந்தெடுத்த
நெய்யாம்,அத் தக்கோன் கூற்றே! 1

சப்பற்றுப் போனதுயர் வரலாற்றால்
ஆரியர்பால் அடிமை யுற்றே,
உப்பற்றுக் கூழற்றுக் குடிலற்றுப்
பழம்பெருமை ஒருங்கே யற்றுக்
கொப்பற்ற நெடுமரத்தின் குரங்குகளாய்
எந்தமிழர் குலைந்த போழ்தில்,
எப்பற்றும் பற்றாத தமிழுளத்தால்
அன்னவர்முன் எழுந்து நின்ற, 2

ஒப்பற்ற தமிழ்த்தலைவன்! தமிழ்ப்பற்றென்
றொருபற்றால் மண், பொன், பெண்ணாம்
முப்பற்றும் துறந்தமுனி! முனைப்புற்ற
தமிழ்த்தொண்டன்! வாழ்க்கை முற்றும்
மப்பற்ற வானத்தின் முழுமதிபோல்
பொதுத் தொண்டில் வலமாய் வந்தோன்!
தப்பற்ற பளிங்கனைய தூயவுளம்!
தமிழ்த் தென்றல் திரு.வி.க. வே! 3

சொல்வன்மை, அஞ்சாமை, நடுநிலைமை,
சோர்வின்மை, நேர்மை,தோய்ந்த
பல்வன்மைத் திறலாளன்! சொற்பொழிவால்
பகைவரையும் ஈர்க்கும் வல்லான்!
மல்வன்மைப் பயிற்சியினால் வல்லுடம்பு
வாய்த்திருந்தும் மறம்மே வாதான்!
கல்வன்மை யாயுறுதி கடைப்பிடித்தும்
கல்லாகாக் கனிந்த நெஞ்சன்! 4

ஆங்கிலத்தார் புகுந்ததனால், ஆங்கிலத்தால்
பேசிவந்த அந்த நாளில்,
“ஓங்குயர்ந்த செந்தமிழால் உரையுங்கள்,
எழுதுங்கள்; உயர்வாம்” -என்றே
மாங்குயிலாய்க் குரலெடுத்து, மணிமணியாய்த்
தமிழெழுதிக் காட்டி, யார்க்குந்
தீங்கறியாக் கொள்கையினால் தமிழ்ப்பற்றை
ஊட்டிநின்ற திறமை மிக்கோன்! 5

இருபத்து மூவாட்டை இதழ்ப்பணியால்
எந்தமிழை வளர்த்த ஆசான்!
வெருவற்றுத் தொழிலாளர் போராட்டம்
பலநடத்தி, அவர்தம் பாங்கில்
உருவொத்தும் உணர்வொத்தும் ஒன்றாகக்
கிடந்துழன்ற தலைவர் ஓங்கல்!
வரவற்றால் தொண்டிழக்கும் தலைவரிடை
வந்ததையும் தவிர்த்த வள்ளல்! 6

மொழித்தொண்டு, நாட்டுணர்வோ டரசியலில்
சீர்திருத்தம் முகிழ்க்கப் பேசிப்
பழித்தலிலாத் தொண்டுசெய்து, தொழிலாளர்
இயக்கத்தைப் பரக்கத் தோற்றி,
இழித்தொதுக்கும் மூடமதக் கொள்கைகளை
இடந்தோறும் இடித்துக் காட்டி,
விழித்தலிலாப் பெண்ணினத்திற் குயிரூட்டி
வித்தூன்றிப் போன மேலோன்! 7

குப்பத்தும் சேரியினும் கோபுரத்தும்
தொண்டுசெய நுழைந்த காலான்!
முப்பத்தேழ் நூலெழுதி அறிந்தார்க்கும்
அறிவுறுத்த முனைந்த கையான்!
ஒப்பித்தான் மணந்தமனை யிழந்தவிளம்
பருவத்தும் ஒருத்தி கையைத்
தப்பித்தான் பிடியாமல் பொதுத் தொண்டைத்
தலைப்பிடித்த தகையோன் அன்னோன்! 8

இளையோர்க்கும் வளையோர்க்கும் இனியவுரை
பலவெழுதிப் பேசி என்றும்
சளையாமல் தொண்டாற்றித் தனையுலகுக்
கொப்புவித்த இறைமை நெஞ்சன்!
வளையாமல் வெறிதுண்ணுஞ் செல்வர்களின்
தேட்டையெலாம் வறியோர் என்னும்
கிளையார்க்கே பொதுவுடைமை செயல்வேண்டும்
என்றுரைத்த கேண்மை யாளன்! 9

திரு.வி.க. வெனும்பெயரில் திருவிருக்கும்!
தமிழிருக்கும்! இனமி ருக்கும்!
திரு.வி.க. வெனும்பெயரால் திருவாரூர்ப்
பெயரிருக்கும். இந்த நாட்டில்
திரு.வி.க. வெனும் பெயரால் தொழிலாளர்
இயக்கங்கள் செறிவுற் றோங்கும்!
திரு.வி.க. வெனும்பெயரால் பொதுச்சமயம்
சீர்த்திருத்தம் திகழும் இங்கே! 10

-1973

## 88

## பாவாணர்!

தமிழ்க்கெனப் பிறந்து தமிழ்க்கென வளர்ந்து
தமிழ்க்கெனப் பயின்று தமிழ்க்கெனப் பயிற்றித்
தமிழ்க்கென ஓய்ந்து தமிழ்க்கென ஆய்ந்து
தமிழ்க்கென வாழுந் தமிழே வாழி!

-1973

## 89 பெரியாரைப் பெற்றிழந்தோம்! பெற்றியிழந்தோம்!

பெரும்பணியைச் சுமந்த உடல்!
பெரும்புகழைச் சுமந்த உயிர்
'பெரியார்' என்னும்
அரும்பெயரைச் சுமந்த நரை!
அழற்கதிரைச் சுமந்தமதி;
அறியா மைமேல்
இரும்புலக்கை மொத்துதல் போல்
எடுக்காமல் அடித்தஅடி!
எரிபோல் பேச்சு!
பெரும்புதுமை! அடடா,இப்
பெரியாரைத் தமிழ்நாடும்
பெற்றதம்மா! *1*

மணிச்சுரங்கம் போல்அவரின்
மதிச்சுரங்கத் தொளிர்ந்தெழுந்த
மழலைக் கொச்சை!
அணிச்சரம் போல் மளமளவென
அவிழ்கின்ற பச்சை நடை!
ஆரி யத்தைத்
துணிச்சலுடன் நின்றெதிர்த்துத்
துவைத்தெடுத்த வெங்களிறு!
தோல்வி யில்லாப்
பணிச்செங்கோ! அடடா,இப்
பகுத்தறிவைத் தமிழ் நாடும்
சுமந்த தம்மா! *2*

உரை யழகிங் கெவர்க்குவரும்?
உடலழகிங் கெவர்பெற்றார்?
ஒளிர்மு கத்தின்
நரையழகிங் கெவர்க்குண்டு?
நாளெல்லாம் வாழ்க்கையெல்லாம்
நடை நடந்து
திரையுடலை,நோயுடலைச்
சுமந்துபல ஊர்திரிந்து
தொண்டு செய்த

இரைகடலை அடடா,இவ்
வெரியேற்றைத் தமிழ்நாடும்
இழந்த தம்மா! 3

எப்பொழுதும் எவ்விடத்தும்
எந்நேர மும்தொண்டோ டிணைந்த பேச்சு!
முப்பொழுதும் நடந்தநடை!
முழுஇரவும் விழித்தவிழி! முழங்கு கின்ற
அப்பழுக்கி லாதவுரை!
அரிமாவை அடக்குகின்ற அடங்காச் சீற்றம்!
எப்பொழுதோ, அடடா,இவ்
வேந்தனையித் தமிழ்நாடும் ஏந்தும் அம்மா? 4

பெற்றிழந்தோம், பெரியாரை!
பெற்றியிழந் தோம்! அவரின்
பெருந்த லைமை
உற்றிழந்தோம்; உணர்விழந்தோம்
உயிரிழந்தோம்; உருவிழந்தோம்!
உலையாத் துன்பால்
குற்றுயிராய்க் குலையுயிராய்க்
கிடக்கின்ற தமிழினத்தைக்
கொண்டு செல்லும்
நெற்றுமணித் தலைவரினை,
அடடா,இத் தமிழ்நாடும்
நெகிழ்த்த தம்மா! 5

பெரியரைப் பேசுகின்றோம்;
பெரியாரை வாழ்த்துகின்றோம்;
பீடு, தாங்கப்
பெரியாரைப் பாடுகின்றோம்;
பெரியார்நூல் கற்கின்றோம்;
பீற்றிக் கொள்வோம்!
உரியாரைப் போற்றுவதின்
அவருரைத்த பலவற்றுள்
ஒன்றை யேனும்
சரியாகக் கடைப் பிடித்தால்
அடடா, இத் தமிழ்நாடும்
சரியா தம்மா! 6

-1974

## 90 ஓவியர் பௌடிக்ட்டு வாழ்க!

ஓவியர் பௌடிக் டென்றன்
உருவத்தை வரைந்த போதே
பாவிய லுருவில் அன்னார்
பண்பினை வரைய லானேன்!
மேவிய தமிழர் வாழ்வின்
மேன்மையை நினைக்கும் நெஞ்சம்!
ஆவியைத் தமிழ்மேல் வைத்தே
அடைகாக்கும் வாழ்க்கை! வாழ்க!

-1974

## 91 தமிழின்னும் வாழ்ந்ததிங்கே!

சொல்வகையும் பொருள்வகையும் மொழியறிவால் தேர்ந்திலராய்
ஆரியர்தம் சூழ்ச்சிக் கொப்பப்
புல்வகையும் தேராத புல்லறிவோர் பயிர்வகையை
ஆராயப் புகுந்த வாறு,
பல்வகையும் பிழைபடவே பல்கலைதேர் கழகத்தின்
பேரகர முதலி யென்றோர்
சொல்தொகையைப் புறத்துமிழ்ந்து பொருள் தொகையை விழுங்கினரே
செந்தமிழ்க்குப் புறம்பாய், அன்றே!

பொய்யாயும் புனைவாயும் தம்சரக்கைப் பலவிரித்துத்
தமிழகர முதலி யென்று: (அ)வ்
வையாபு ரிக்கூட்டம் செய்ததனைப் பாவாணர்
பலவாய்ந்து வரிசை காட்டி,
மெய்யான பேரறிவால் 'செந்தமிழ்ச்சொற் பிறப்பியல்(அ)
கர முதலி' ஒன்று செய்யப்
பொய்யாத நாவினராய்ப் பொருளில்லாக் கையினராய்ப்
புலனழுங்கிப் புழுங்கி னாரே!
முன்மொழியாம் செந்தமிழ்க்கேஒளிசேர்க்கும் அப்பணியை

மூதறிஞர் செய்வதற்கே
தென்மொழியோர் திட்டத்தைப் பிறப்பித்துத் தந்திடவும்,
தீந்தமிழ்மேல் காதல் கொண்டோர்
பன்வழியாய்த் தொகைதிரட்டிப் புரந்திடவும், அப்பணியும்
பயின்றிடவும் தொடர்ந்த காலை,
வன்பழிவந் தெய்திவிடா வண்ணம்மென அரசேற்றுக்
கொண்டததை வளர்ப்பதற்கே!

[1]சிதலமைச்சர் பலரிருந்தார், 'பக்தவச்ச லங்'கள்போல்;
செந்தமிழை அரித்தெ டுத்தார்!
[2]புதலமைச்சர் சிலரிருந்தார் 'சுப்பிரமணி யன்'கள் போல்;
வடவர்முன் புதைந்து கொண்டார்!
முதலைமச்சர் அருட்செல்வர் செந்தமிழ்க்கும் நாட்டுக்கும்
மக்கட்கும் முழுதாய் எண்ணும்முதல் அமைச்சர்! அவரெண்ணி
முடித்தவற்றும் இப்பணியே
முதற்பணியாம்; முழுமைத் தொண்டாம்!

செந்தமிழ்க்குக் காப்பாகச் செய்கின்ற எப்பணியும்
முதற்பணியாம்; சிறந்த தொன்றாம்!
எந்தமிழ்க்குக் காப்பானார் பாவாணர்; அன்னவர்செய்
இணையற்ற பணிக்கே காப்பாய்
வந்தமர்ந்தார் முதலைமச்சர் அருட்செல்வர் என்றாலே
தமிழின்னும் வாழ்ந்த திங்கே!
வெந்தமிழ்வார் மனக்காழ்ப்பால்
இனிமேல்தான் ஆரியரும் அவரடிக்கீழ் வீழ்ந்துள் ளாரும்!

பொருட்செல்வர் பலரிருந்தார் அந்நாளில் புலவர்களைப்
புரப்பதற்கும் போற்று தற்கும்!
இருட்செல்லும் மக்களினை, எனவே, அப் புலவர்களும்
அறவழியில் ஏகச் செய்தார்!
மருட்செல்வர் அரசாண்டார் பின்னாளில்; புலவர்களும்
வாழ்க்கையின்றி மறைந்து போனார்;
அருட்செல்வர் அந்நிலையைத் தடுத்தாள முற்பட்டார்;
அரும்புலவோர் வாழ்ந்தார் இங்கே!

-1974

1. சிதல் - கறையான் 2. புதல் - புதர்

## 92 இக்காலத்துப் புல்லிசையும், சுந்தரேசனார்தம் நல்லிசையும்!

இக்காலை மேவும் இசைநயத்தைக் கேட்பதற்குச்
செக்காடும் ஓசை சிறப்பெனலாம்! - அக்காலை
தக்க குருவழியாய்த் தாம்பயி ல்வார்! இக்காலை
திக்காலுக் கொன்றறிவார் தேர்ந்து! 1

பண்ணறிந்து தாளம் பயில்வறிந்து நல்லிசைமேல்
விண்ணெனன் குரலால் விளங்கும், அன்று! - மண்ணுதிரும்
மொத்தைச் சுவரடிபோல் மொத்தும் முழவடிக்குக்
கத்தலே நல்லிசை, இக் கால்! 2

சொல்லும் பொருளுமொரு சோர்வின் றிசையோடு
செல்லும்; மனம்செவியில் சேரும், அன்று! - கல்லோ
டொருபதமு மின்றிச்சோ றொன்றிரண்டாய் வெந்த(து)
இருபதாம் நூற்றாண் டிசை! 3

வானரமும் வந்தமரும்; வல்லரவந் தான்மயங்கும்;
ஏனற் புனத்தினற்றை இன்னிசைக்கே! - ஆனேறிங்(கு)
ஆவுக்குக் கத்தும் அனற்றல்போல் இக்காலை
ஈவுக்குக் கத்தல் இசை! 4

பக்கலிசை ஊடியொரு பக்கம்போம்; பாடுபவர்
முக்கலிசை தாளத்தை முட்டிநிற்கும்; - கக்கல்போல்
எக்கல் எடுக்கல் இரைக்கலெனும் ஓசையைத்தான்
இக்கால் இசையென்பார் இங்கு! 5

தேர்ந்தவிசை வேண்டின் தெலுங்கிசைதான்! மற்றெங்கும்
ஆர்ந்தவிசைக் கிந்திதான்ஆட்சிசெய்யும்! - ஏர்ந்தொருகால்
நல்லவிசை கேட்குமெனில் நல்லதமிழ்ப் பண்ணிருக்கும்;
சொல்லோ சமற்கிருதச் சொல்! 6

இரைப்பெடுத்த ஓசை! இழுப்பெடுத்த கூச்சல்
வரைப்படுத்த ஆகா வசையாம்! - திரைப்படத்தின்
பாடலைத்தான் சொன்னேன்; பயின்றுவரும் பாடலுக்கோ
ஆடலைத்தான் கண்டே அறி! 7

காட்டு விலங்குகள்போல் கத்தும் கருவியிசை!
பாட்டோ புயல்மழைசேர் பண்ணாகும்! - நீட்டுகின்ற
நெட்டிழுப்போ வெண்மூக்கு நீள்காதுப் பாடகனை
விட்டெழுப்பி யோட்டும் விரைந்து! 8

பெருங்குருகு நாரை இசைநுணுக்கம் தாளம்
ஒருங்குணர்ந்த பாப்புலவர் ஓர்கால் - வருங்கடையில்
இக்கால் பயிலும் இசைகேட் டுடனிறப்பார்;
எக்காலுந் தாம்பிறவார் இங்கு! 9

இந்தியிசை மேலை இழுப்பலிசை எல்லாமும்
செந்தமிழின் நல்லிசையைச் சீரழிக்கும் - நொந்ததமிழ்
உள்ளமே நீ இனிமேல் ஒப்பாரி வைத்திடுக!
பள்ளமுன் காதுப் பாறை! 10

இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று; நன்று
மழுக்குடைய புல்லிசைக்கு மாய்தல் - புழுக்கறையுள்
பட்டதே போலுமிந்நாள் பாட்டென்றால், பாம்பெடுத்து
விட்டதே போலும் இசை! 11

புல்லிசையில் இன்னே புழுங்குமனம் சுந்தரர்தம்
நல்லிசையில் ஆடி நனைந்ததே! - வல்ல இசைப்
பாவாணர் சுந்தரரால் பண்டைத் தமிழ்ப்பண்கள்
மேவாவோ இவ்வுலக மேல்! 12

பண்ணாய்வுப் பாவாணன் பாடும் தமிழிசையில்
புண்ணாகிப் போனவுளம் பூத்ததே! - மண்ணாகிப்
போகட்டும் புல்லிசைகள்! பூக்கட்டும் சுந்தரர்தம்
பாகிட்ட செந்தமிழ்த்தீம் பண்! 13

சுந்தரே சன்றன் சுரும்பாரும் இன்னிசையில்
செந்தமிழே ஆர்க்கும் சிறப்பறிவார் - எந்தமிழை
முத்தமிழே என்று முழங்காரோ? பின்வியந்தே,
அத்தமிழ்க்கா காரோ அரண்? 14

அறுபானாண் டாகும் அகவையினான்; மேலும்
அறுபானாண் டந்தமிழ்க்கே ஆகி - மறுபோக்கிப்
பண்ணாய்ந்து செந்தமிழ்த்தீம் பாவில் இசையேற்றி
விண்ணாய்ந் திடுக வியந்து!

-1974

## 93 ஈரங்கொள் தமிழ்போல் அவன்புகழ் என்றும் இருப்பதுவே!

சிங்கை மலையகத் தமிழரை ஒன்றாய்ச் சேர்த்திணைத்துத்
தங்கள் மொழி, இன உணர்வினை
ஊட்டித் தமிழ்வளர்த்துச்
செங்கதி ரோடும் நிலவொடும்
விண்மீன் செறிவொடும் போய்த்
தங்குதல் கொண்டான் சாரங்க பாணியென் தலைமகனே!

இன்பத் தமிழ்மொழிக் கிராப்பகல்
தன்னை ஈந்துயர்ந்தோன்!
அன்புத் தமிழினம் உயர்ந்திட என்றும் ஆர்த்திருந்தோன்!
என்புத் தசைநார் குருதியெல் லாமும் இனிதளித்துத்
தன்புத் துயிரையும் தந்தான் தன்னினம் தழைப்பதற்கே!

மொய்ம்புத் தமிழ்க்கே தாளிகை தோற்றி முரசறைந்து
நொய்ம்புத் தமிழரைத் திண்ணிய ராக்கி நொடிவகற்றச்
செய்ம்புத் திளையவன் போல உழைத்த செம்மலவன்!
அய்ம்பத் தாண்டுக் காலமென் னினத்தை ஆண்டவனே!

கல்குலைந் துருகிக் கலங்கினும் கலங்காக் கடமையினோன்!
சொல்குலைந் துரையா,வினைகுலைந்
தியற்றாச் சோர்வறியான்!
பல்கலை தேரும் மாணவர் பயிலப் பைந்தமிழை
எல்கலை ஞாயிறாய் ஏற்றிய திறலோன்; இணையிலனே!
பாரெங்கு முள்ள தமிழரின் இனத்தைப் பராவிடுவோர்,
சாரங்க பாணியென் தலைவனை ஓர்க! சார்ந்திடுக!
வீரங்கொள் அன்னவன் வினையினைப்
போலும் வினைவிளைக்க!
ஈரங்கொள் தமிழ்போல் அவன்புகழ்
என்றும் இருப்பதுவே!

-1974

## 94 காமரா சென்னும் கடமை மாமலை!

காமரா சென்னும் கடமை மாமலை;
தாமினை காணா அரசியல் தந்தை;
தலைமையை ஆக்கிய தகுபெருந் தலைவன்;
குலைவுறா நெஞ்சின் கோதிலா அமைச்சன்;
மக்களுக் குழைத்த மாபெருந் தொண்டன்;
சிக்கலை யிவிழ்க்குஞ் செயற்சீ ராளன்;
தமிழகத் தலைமையை வடவர்கள் ஒப்பும்
அமைவுக் குயர்த்திய ஆளுமை வல்லோன்;
எண்ணமும் பேச்சும் செயலோ டிணைந்த
உண்மை மாந்தனுக் கொருபே ருவமை;
தாழ்ச்சி நிலைக்குத் தலைதாழ்த் தாத
காழ்ச்செயல் மறவன்; கரும வீரன்;
உலகம் வியக்க அரசியல் வானில்
நிலவிய நேர்மைக் கொள்கை நெடியவன்;
செல்வரைச் செலுத்தி ஏழையர்க் காக்கிய
சொல்வரை யிட்ட சோர்விலா வினைஞன்;
புகழுரை விரும்பாப் பொறுமையின் குன்றம்;
இகழுரை யில்லா ஆட்சியின் ஏந்தல்;
நல்லர சாட்சிக்குத் தன்னை நாட்டிய
இல்லறந் துறந்த நல்லறத் துறவி;
ஏழையர்க் குதவிய எளிமை வாழ்வினன்;
ஊழையுப் பக்கம் ஓட்டிய திறலோன்;
இலவயக் கல்வி எங்கும் நிறுவிய
வலவன்,இவனை வாழ்த்துக நெஞ்சே!

-1975

## 95 அவனே இவன்!

அன்புத் தமிழன்; அருட்செல்வன்!
தான் வளர்ந்த
இன்பத் தமிழ்க்கே எனையீந்தேன்
என்பான் காண்!
இன்பத் தமிழ்க்கே எனையீந்தேன்
என்பானே
தென்புத் தமிழ்காக்கும் தென்மொழியைத்
தீய்த்தனனே!

மானத் தமிழன்; மறக்குலத்தோன்;
மண்ணாளுங்
கானக் குயிலாய்த் தமிழ்பாடுங்
காவலன் காண்!
கானக் குயிலாய்த் தமிழ்பாடுங்
காவலனே
மானத் தமிழ்வளர்க்கும் தென்மொழியை
மாய்த்தனனே!

கொற்றத் தமிழன், கொடும்பகையைக்
கோலோச்சால்
முற்றத் துவைக்கும் முனைவுள்ள
மொய்ம்போன் காண்!
முற்றத் துவைக்கும் முனைவுள்ள
மொய்ம்போனே
செற்றுத் தமிழ்புதுக்கும் தென்மொழியைச்
சீய்த்தனனே!

கூர்த்த மதியன்; குறைவில்லாக்
கொள்வினையன்;
கார்த்தண் முகிலாய்ச் செந்தமிழைக்
காப்போன் காண்!
கார்த்தண் முகிலாய்ச் செந்தமிழைக்
காப்போனே
போர்த்த இருள்கடியுந் தென்மொழியைப்
புய்த்தனனே!

-1975

## 96 பாவாணர்க்குத் துணைநிற்பதே பைந்தமிழ்க்குத் துணைநிற்பது!

பாவாணர் ஒருவர்க்குத் துணைநிற்பதே - நம்
பைந்தமிழ்க்குத் துணை நிற்பது! - தமிழ்
காவாத ஒருவற்குத் துணை நிற்பதோ - ஒரு
கல்லுக்குத் துணை நிற்பது!

நெல்விளை வயலுக்கு நீர் வார்ப்பதே - தேவ
நேயர்க்குத் துணை நிற்பது! - ஒரு
புல்விளை கரம்புக்கு நீர்வார்ப்பதே - ஒரு
பொய்யற்குத் துணை நிற்பது!

தமிழ்வாழும் முயற்சிக்குத் துணை சார்வதே - இனத்
தழைப்பிற்கு நீர் வார்ப்பது! - பொய்
உமிழ்கின்ற வாயர்க்குத் துணையாவதோ- ஓர்
ஒழுகையில் நீர் சேர்ப்பது!

உரமுள்ள நெஞ்சிற்குத் துணைபோவதே, நாம்
உண்மைக்குத் துணை போவது! - கீழ்த்
தரமுள்ள நினைவிற்குத் துணைபோவதோ - ஒரு
தக்கைக்குத் துணை போவது!

அறங்காக்கும் உழைப்போடு கைகோப்பதே - உயர்
ஆக்கத்திற் கெரு சேர்ப்பது! - மன
நிறமாற்றும் கோழைக்குப் படைசேர்ப்பதோ - வீட்டு
நெருப்புக்கு நெய் வார்ப்பது!

இருளுக்கு விளக்காவார்க் கிணைநிற்பதே - உயிர்
எழுச்சிக்குத் துணை நிற்பது! - வரும்
பொருளுக்கும் புரையோர்க்குப் புணையாவதோ - வெறும்
புழுவுக்கு நிழல் சாய்ப்பது!

பொதுவான மதிலுக்குக் கல்சேர்ப்பதே - பொது
விருந்துக்கு நெல் சேர்ப்பது - தன்
புதிதான வாழ்வுக்குப் பொருள் சேர்ப்பதோ - வரும்
புகழுக்கே இருள் சேர்ப்பது!

-1975

## 97 அன்புருவே, எங்கள் அறிவழகா!

அன்புருவே! எங்கள் அறிவழகா! பெற்றோர்க்கே
இன்புருவாய் வந்த இளையோனே! - மன்பதையின்
எண்ணற்ற பேர்களில் யானும் ஒருவனென
மண்ணுற்று மாய்ந்தாயோ, மன்? 1

தேன்பிலிற்றும் சொல்மழலை பேசித் திகழ்ந்துநடை
தான்பயின்று காட்டித் தளதளென - வான்பனையாய்
ஓங்கி வளர்ந்ததுவும் ஒண்கல்வி கற்றதுவும்
நீங்கிடவோ? ஏன் பிறந்தாய் நீ? 2

செந்தமிழைச் செற்றார் செருக்கழிக்க எங்களுடன்
வந்துழைப்பாய் என்றே வயினிருந்தோம்! - "நொந்தழுது
நீருகுத்தே என்னை நினைத்திருங்கள்" என்றோ,நீ
பாருகுத்தாய் நின்னுடல், நீர்ப் பாய்ந்து? 3

பூக்காத மொக்கானாய்! பொய்யில்லாச் சொல்லானாய்!
கோக்காத முத்தானாய்க் கோமகனே! - காக்காத
வெற்றோரராய்ப் போனோம்! விளைவின்றிப் போனாய் - நீ!
பெற்றோருக் காறுதலார் பின்? 4

கண்ணின் மணியே! கரவில்லா நல்லுளமே!
மண்ணின் பிறந்ததுவே மற்றல்லால் - பண்ணின்றிச்
செய்துடைந்த யாழாய்ச் சிறப்புணரா நல்லுடலாய்
எய்தியதேன், ஏகியதேன், இன்று? 5

பாடா, நல் தேனீ பறந்ததுவே! காலணிந்த
ஆடாச் சதங்கை அறுந்ததுவே! - ஏடேறா
உள்ளத் திருப்பாடல் ஓய்ந்ததுவே! நீந்தப்போய்
வெள்ளத் தமிழ்ந்ததுவே - வீண்! 6

நற்றாயோ டுந்தை நனியுவக்க நற்கல்வி
கற்றாய்; பணிக்கென்றே கால்நடந்தாய்! - பெற்றாயா?
இல்லை; பெருமகனே! ஏற்றோர் பணிதேடல்
தொல்லையெனப் போயினையோ? சொல்! 7

கல்வி பயில்வதற்குக் காத்திருந்தோம்; நின்னையொரு
செல்வி மணந்துவக்குஞ் சீர்காணப் பார்த்திருந்தோம்!
பல்வகையா எண்ணிப் பயன்கிடைக்கும் வேளையிலே
சொல்வதின்றிச் சென்றதெங்கு? சொல்! *8*

உன்னைப் பிரிந்த உடன்பிறப்பின், தந்தையரின்,
அன்னையின் துன்பத்தை ஆரளப்பார்? - பின்னைப்போல்
நீர்க்குள் முழுகையிலுன் நெஞ்சம் நினைத்திருந்தால்
ஆர்க்கும் உயிர்ப்போமோ அன்று? *9*

தந்தைக்கு நின்றுதவித் தாய்க்குத் தலைநின்று
முந்தைத் தமிழ்க்குழைத்த மொய்ம்போனே! - சிந்தையெல்லாம்
செங்குருதி கொப்பளிக்கச் சென்றனையால்! ஈங்கவர்க்கே
எங்குறுதி சொல்வோம் இனி? *10*

**-1976**

## 98 திருமலை முத்துச்சாமி வாழ்க!

திருமலை முத்துச் சாமி
தேர்ந்தநூல் பலவும் கற்றுப்
பெருமலை யாக நிற்கும்
பேரறி வாளர்! அன்னார்க்
கொருநூற்றில் பாதியாண்டிங்
குவகையின் கழிந்த தென்னும்
பெருமைநாள் அறிஞர்க் கெல்லாம்
பெருவிழாத் திருநாள் அன்றோ?

நுண்ணிய பன்னூற் கல்வி
நுழைபுலம் மிகுந்தாரேனும்
திண்ணிய துறையால் நூல
கத்துறை தெரிந்து தேறி
எண்ணிலாப் பெருமை பெற்றும்
இனியநூற் பலவுஞ் செய்தும்
நண்ணிய புகழால் இந்நாள்
தமிழர்க்கே நன்னாள் அன்றோ?

தீந்தமிழ் பரப்பி வாழும்
திருமலை முத்துச் சாமி
ஈந்தநூல் பெருமை இங்கே
இலங்குதல் போல்என் றென்றும்
ஏந்தலாய்த் திருவி னோடும்
இணையிலா மகிழ்வி னோடும்
போந்தநாள் மேலும் வாணாள்
பொலிந்திட வாழ்க! வாழ்க!

-1977

## 99 தமிழமல்லன் முயற்சி வெல்க!

"என்மொழி இனம்நா டென்றும்
ஏற்றமுற் றுய்ய வேண்டும்;
பன்மொழிக் கலப்பில் லாமல்
பைந்தமிழ் பொலிதல் வேண்டும்;
புன்மொழி தவிர்த்தல் வேண்டும்"
எனுங்கொள்கை போற்றி வாழும்
தென்மொழித் **தமிழ மல்லன்**
தீந்தமிழ்க் கமைந்த தொண்டர்!

தொண்டுசெய் உணர்வால், நாளும்
தூய்தமிழ் வளர்க்க வேண்டி
உண்டுறங் குகின்ற நேரம்
ஒழியமற் றெந்நே ரத்தும்,
மண்டுநல் அன்பர் கூட்டம்
மாணவர் கூட்டத் தெல்லாம்
வண்டெனச் சுற்றிப் பண்டை
வரலாறு புதுக்கும் வல்லார்!

ஏட்டினில் உரையில் வாழ்வில்
எங்கணுந் தமிழே ஆளும்
நாட்டினைக் காணல் வேண்டி
நம்முடைத் தமிழ மல்லன்
பாட்டினில் புரட்சி செய்த
பைந்தமிழ்ச் செழும் **'பா வேந்தர்**
**ஊட்டிய தமிழு ணர்'**வென்
றொருநூலை உவந்து செய்தார்!

தூயநல் நெஞ்சம்! ஆங்கே
தூய்தமிழ் உணர்வெ ழுச்சி!
ஏயநல் லுணர்வில் தோய்ந்தே
எழுந்தநற் கருத்தென் றெல்லாம்
ஆயநல் லுருவாய்ப் போந்த
அருந்தமிழ்ச் சுவடி இந்நூல்!
தாயருந் தமிழ்க்கே வாழுந்
தமிழமல்லன் முயற்சி வெல்க!

-1977

## 100 பாவாணர்! இவர் பாவாணர்!

பாவாணர்! இவர் பாவாணர்!
ஓவா முயற்சி! ஒழியா உழைப்பு!
உண்மைத் தமிழ்க்கே உயிராய் வாழும் (பாவாணர்)

மூவா நந்தமிழ் முழக்கஞ் செய்வார்;
மூடர் தலையின் மடமை கொய்வார்;
ஈவாய் நிற்கும் இன்தமிழ் காத்தே
இளைத்தார்க் கன்பின் மழையாய்ப் பெய்வார்! (பாவாணர்)

காவா நந்தமிழ் காக்கப் பிறந்தார்;
கடமைக் கெனவே வாழ்க்கை துறந்தார்;
நாவால் எழுத்தால் நடையால் அசைவால்
நறுந்தொண் டாற்றித் தமிழ்போல் சிறந்தார்! (பாவாணர்)

எழுத்தும் சொல்லும் பொருளும் ஆய்ந்தார்;
ஏனைய மொழிகள் இலக்கணம் தோய்ந்தார்;
பழுத்தபே ரறிவால் பைந்தமிழ்த் தாய்க்கே
பசும்பொன் வயிர மகுடமும் வேய்ந்தார்! (பாவாணர்)

மொழியால் இனமும் இனத்தால் நாடும்
முழுமுன் னேற்றம் பெறுதல்கை கூடும்!
விழியாம் நந்தமிழ்! தமிழரெல் லாரும்
விழிப்புற் றெழுக!, என்றிசை பாடும்! (பாவாணர்)

அடிகள் விரும்பிய அருந்தமிழ் அறிஞர்!
அன்னைத் தமிழின் மேன்மையில் குறிஞர்!
விடியாத் தமிழரின் விடிவினை விரும்பி
விடியலும் உழைக்கும் வாழ்வியல் வறிஞர்! (பாவாணர்)

செந்தமிழ்ச் சொற்பிறப் பியல்தெரி புலவர்;
செந்தமிழ்ச் சொற்களின் வேர்அகழ் வலவர்!
எந்தமிழ்த் தாயினுக் கெழில்நலஞ் சேர்க்கும்
எம்முடைக் குரிசில்! இனநல மறவர் (பாவாணர்)

-1978

## 101 புலவர் பழனி மாணிக்கத்திற்கு வாழ்த்துப்பா!

பழுத்த தமிழன் பழனிமா ணிக்கத்தின்
விழுத்தகு பாராட்டு விழாவினை எடுப்போர்
தமிழ்விழா வெடுக்கும் தகவினர் ஆவர்!
கமழ்தகும் உள்ளக் கனிவினா லன்னான்
நந்தமிழ்ப் பயிற்றும் நல்லா சிரியனாய்
செந்தமிழ் உலகம் சீர்பெற அமைந்தான்!
பழனிமா ணிக்கப் பைந்தமிழ் ஆசான்
கழனி போன்றவன் கனித்தமிழ்மொழிக்கு!
மாமழை போன்றவன் மாணவப் பயிர்க்கு!
தாமரை யொத்தவன் தனித்தமிழ் மதிக்கு!
தூய அன்பினன்; துவளாத் தொண்டினன்
பண்பினன்; வருவிருந்தோம்பும்
வாய்மையன்; மாண்பினன்
திருக்குறள் மணக்கும் வாழ்வினன்!
காண்புல வோரிடைக் கலக்கும் உறவினன்!
பொய்கல வாத பொதுமைப் பணியினன்;
வைகலும் வாழிய! வைகலும் வாழிய!
எப்புலத் துறையினும் அப்புலம்
முப்படி உயர்த்தும் மொய்ம்பினால் அவனே!

-1978

## 102 நாவை சிவம் வாழ்க!

நாவை சிவம்எனும் நறுந்தனித் தமிழ்மகன்
ஆவியும் உடலும் அருந்தமிழாகி
மொழியினம் நாடெனும் முப்படிக் குழைக்கும்
பழியிலா வாழ்வில் பன்னாட் பழகி
இனியதொண் டாற்றும் ஏந்தலாய் நின்றான்!
கனிய உரைசெயும் கசடிலா நெஞ்சினன்,
அன்புறும் வாழ்வினன்; அருமைப் பாவலன்!
தன்பெரும் முயல்வாய்த் தனித்தமிழ்ப் புலமை
பெற்றுத் தேறிப் பெருமையும் பெற்றான்!
கற்ற கல்வியும் கவின்பெறு கொள்கையும்
விற்றுப் பிழைக்கும் வீணர்க ளிடையில்
உற்ற பெருமையால் ஊரவர்க் குழைக்கும்
நற்றமிழ்ப் பாவலன் நாவை **சிவம்** எனும்
நெற்று முளைத்து நிழல்தரு மரமாய்
பல்கிப் படர்ந்து பைந்தமிழ்த் தொண்டெனும்
மல்கு நறுங்கனி மாந்தர்க் குதுக்கவே!

-1978

## 103 பெரியார் பிறந்தார்; பிறந்தது உள்ளொளி!

பெரியார் நம்மிடைப் பிறந்திரா விட்டால்
நரியார் நாயகம் இங்கே நடந்திடும்!
திரியாத் தமிழ்க்கும் திகழ்நா டதற்கும்
உரியார் நாமெனும் உண்மை, பொய்த் திருக்கும்!
ஆரியர்க் கின்னும் அடியராய்க் கிடப்போம்!
பூரியர் புராணப் புளுகுக் குப்பையுள்,
சாதிச் சகதியுள், சமயச் சேற்றினுள்,
புதையுண் டிருப்போம்! புழுக்களாய் இருப்போம்!
சிதைவுற் றிவ்வினம் சிதறுண் டிருக்கும்!
பெரியார் பிறந்தார்! பிறந்தது உள்ளொளி!
அரியார் நாமெனும் ஆக்கமும் சிறந்ததே!

-1978

## 104 புத்தனைப் போற்று!

புத்தனைப் போற்று - குழந்தாய்
புத்தனைப் போற்று!

எத்தனை தான் துன்பம் வரினும்
இன்பம் மலரும் அருள்முகத்தின் (புத்தனைப்)

சித்தனவன்; செறிவனவன்;
சீர்மை மிகுந்த அறிவனவன்;
இத்தரையின் துன்பம் நீங்க
இன்பம் அனைத்தும் துறந்தனவன்! (புத்தனைப்)

ஒழுங்கு, நேர்மை, உண்மை, அன்பு
உலக உயிர்கள் துன்பம் கண்டால்
அழுங்கும் உள்ளம் அவனின் உள்ளம்;
அனைத்துயிர்க்கும் அருளின் வெள்ளம்! (புத்தனைப்)

-1979

## 105 தெருள்மிகு தெசிணி வாழ்க!

பாட்டினில், பதினெட் டாண்டாய்ப்
பைந்தமிழ்க் 'கவிதை' என்னும்
ஏட்டினை நடத்து கின்றார்
'தெசிணி'என் றால்அ வர்க்கு
மேட்டிமை பலவும் உண்டு;
மேலான புலமை உண்டு
நாட்டினுள் தமிழ்த்தொண் டாற்றும்
நல்லாருள் நல்ல தொண்டர்!

பாடிய வெல்லாம் பாட்டென்
றியம்பிடும் பாழோர் பாங்கில்
நீடிய மரபும் யாப்பும்
நீங்காமல் பாக்கள் யாத்து
வாடிய தமிழ்ப்ப யிர்க்கே
வளஞ்சேர்க்கும் 'கவிதை' இன்னும்
கூடிய பெருமை யோடு
குவலயம் செழிக்க வாழ்க!

பொருள் தொண்டு செய்வார் சில்லோர்
புகழ்த் தொண்டு சில்லோர் செய்வார்;
அருள் தொண்டு செய்வோம் என்னும்
அடியார்கள் பலரிங் குள்ளார்!
இருள்மிகு தமிழ்நாட் டார்க்கே
ஏற்றநல் தமிழ்த்தொண் டாற்றும்
தெருள்மிகு **'தெசிணி'** என்னும்
திந்தமிழ்ப் புலவர் வாழ்க!

-1979

## 106 தமிழோடு வாழ்கின்றான்!

பாப்புலவன் பாரதிக்கு மேலாகப்
பாட்டெழுதி பாரதியென்
றோர்புலமைப் பட்டம் பெற்ற
நாப்புலவன் **சோமசுந்(த)ர நாவலன்**காண்!
நற்றமிழை நரிப்புலவர் நடுத்தெருவில்
நலிவேற் றுங்கால்,
மீப்புலமைத் தன்மையினால் மிதித்தெழுந்து
முழங்கியமா மறநெஞ்சன்!
மேன்மைமிகு தமிழ்செய் தொண்டன்!
சாப்புலவன் அல்லனிவன்; சாகாத
தமிழ்காத்த தால்தானும்
சாகாத புகழைப் பெற்றான்!

புன்மைமிகு இந்தியெனும் புரைமொழிசெந்
தமிழ்ப்புலத்தில் பொலபொலெனப்
புலையர்வழிப் புகுந்த காலை,
வன்மைமிகு அரிமாப்போல் சீர்த்தெழுந்து
வண்டமிழில் முழங்கி, யதன்
வாலறுத்த வாலை நெஞ்சன்!
சொன்மைமிகு செம்புலமைத் திறம்படைத்த
சொல்லாளன்; பொருளாளன்;
சூர்த்தடங்கண் பெருநோக் காளன்!
தொன்மைமிகு இலக்கணநூல் தொல்காப்பி
யம்புகுந்தே உரைகண்ட
தோய்புலமைச் சீர்மை யோனே!

வாய்ப்பிழந்தால் சிலநூறு வரவிழக்கும்
வகையெண்ணி வண்டமிழை
வன்பகைக்கு விலைசெய் கின்ற
நாய்ப்புலவர் வாழ்கின்ற நாளினிலே
நாம்வாழும், நலிவெல்லாம்
நாவலனை நினையுங் காலைப்
போய்ப்பதுங்கும் பெற்றியனாய் புலமிக்க
போராண்மை வல்லவனாய்
பூந்தமிழைக் காவல் செய்யும்
தாய்ப்புலமை மிக்கவனாய் தறுகணனாய்
நகையாளன் வாழ்ந்திருந்தான்!
தமிழோடு வாழ்கின் றானே!

-1979

## 107 பெரியார் உவக்கும் பெருந்தொண்டர் நெடுஞ்செழியனார் பல்லாண்டு வாழ்க!

பெரியார் உவக்கும் பெருந் தொண்டர்
என்னும் பெருமை பெற்று,
நரியார் நடுங்கும் நடுங்கா
நளிர்தமிழ் நாவலராய்
உரியார் மகிழும் உரமுடை
யோராய் உலவிவரும்
அரியார் அமைச்சர் நெடுஞ்செழி
யப்பேர் அருமையரே!

அண்ணா அமைத்த அமைச்ச
ரவையில் அமர்ந்தவர்க்குக்
கண்ணா யிருந்திரு கைகள்
கொடுத்துக் கடமை செய்தே
ஒண்ணார் அழுங்க, தமிழர்
உவக்க உயர் நலன்கள்
தண்ணார் தமிழ்க்கும் தமிழ்நா
டதற்கும் தகைந்தவரே!

தொகுத்துரை யாற்றும் உரைத்திறன்,
துன்பங்கள் சூழ்ந்துவிட்டால்
வகுத்தினி தாற்றுமோர் வல்லமை,
நல்லன வல்லவற்றைச்
செகுத்தயல் வீழ்த்தும் செழித்தசெம்
மாப்பு நெடுஞ்செழியப்
பகுத்தறி வாளராம் பல்லாண்டு
வாழ்க பயனுறவே!

**(வெண்பா)**

நெடிய உருவம், நெகிழாநேர் நோக்கு,
படிய உடுத்தவுடைப் பாங்கு - மடியாத
ஆள்திறமை நாவன்மை ஆர்த்த நெடுஞ்செழியன்
தோள்தழுவும் நந்தமிழர் தொண்டு.

-1980

## 108 பாவாணர் இரங்கல் பதிகம்!

கண்ணீர் வற்றிக் கடல்வற்றி - நீள்
கடலின் அருகில் ஊற்றெடுக்கும்
உண்ணீர் வற்றி உலகளிக்க - மேல்
உலாவும் மேகத் திரள் வற்றித்
தண்ணீர் வற்றித் தரை முழுதும் - செந்
தணலே பற்றித் தீய்த்ததுவே,
ஒண்ணீர் அறிவுப் பாவாண - நான்
உனையே பிரிந்த பொழ்தினிலே!

கண்கள் இருண்டு காதழன்று - இரு
காலும் சோர்ந்து கையற்று,
மண்கொள் மலைகள் இடிந்துருண்டு - என்
மண்டை யழுத்த வளிதிக்கித்
திண்கொள் நெஞ்சம் அறக்கிழிந்தே - எண்
திசையும் அரத்தம் பாய்ந்த துவே,
பண்கொள் நாவின் பாவாண - நீ
படுக்கை சாய்ந்த பொழ்தினிலே!

தசையும் காய்ந்து கரியாகி - மெய்த்
தண்டும் நரம்பும் பொடியாகிப்
பசையும் உருகி நெய்யாகிச் - செம்
பாலும் சுவர்ந்து வளியாகிப்
பிசையும் நெஞ்சக் குலை வெடித்துச், சாப்
பேய்க்குக் களமாய்ப் போயினவே,
வகையில் இசைசேர் பாவாண - நீ
வானம் புகுந்த பொழ்தினிலே!

நிலமும் வெந்து நீராகி - மண்
நீரும் கொதித்து வளியாகிப்
பொலமொண் தீயும் புகையாகி - வான்
போமும் வளியும் வெளியாகிப்
புலமெண் டிசையும் கிடுகிடுக்க - ஐம்
பூதத் தூழி ஆர்த்ததுவே,
அலமார் நெஞ்சில் பாவாண - நீ
ஆக்கை கழன்ற பொழ்தினிலே!

தமிழே தொகைந்து கருவாகித் - திந்
தமிழே புகுந்துள் ளுயிர்ப்பாகித்
தமிழே புலனாய்ப் பொறிகளுமாய்த் - தாய்த்
தமிழே உருவாய் உலாவந்து,
தமிழே புகட்டி ஒளிதந்தாய் - பின்
தவிர்ந்தாய் வெற்றுச் சருகானோம்,
தமிழாய் வாழ்ந்த பாவாண- நீ
தமிழாய்ப் பொலிந்த போழ்தினிலே!

ஒளிசேர் விழியும் சுடர்நுதலும் - நல்
லுரஞ்சேர் நெஞ்சும் தமிழ்நினைவும்,
வளிவார் முடியும் நரைதலையும் - உயர்
வல்லென் மூளைக் கொழுதிரளும்,
அளிசேர் தமிழ்தோய் ஆருயிரும் - ஓர்
அணுவாய் அணுவாய் உட்கரைந்தே
வெளிசேர்ந் தனவோ பாவாண - நீ
விண்ணில் ஏறிய போழ்தினிலே!

சோலை நிழல்போல் குளிரன்பும் - உயிர்
சோரா துயர்த்துந் தெள்ளறிவும்
காலை ஞாயிறு போலெழுந்து - தமிழ்க்
கதையாய்ச் சொன்னாய்; கதை நிறுத்திப்
பாலை நடுவில் எனை விடுத்தாய்! - உள்
பதைப்புற் றுயிருஞ் சிதைந்ததுவே,
வாலை அறிவுப் பாவாண- நீ
வாழ்க்கை துறந்த போழ்தினிலே!

பொன்னார் மாடத் திருக்கோயில் - நின்
புலனால் சமைத்துத் தமிழணங்கை
மின்னோர் இறைமைத் திருவுருவாய் - ஒளி
மிளிரச் செய்தே வழிபட்டாய்!
உன்னோர் அழுங்க ஊரழுங்க - என்
உயிரும் உடலும் ஒருங்கழுத,
என்னேர் ஆவிப் பாவண, நீ
எனையே தவிர்ந்த போழ்தினிலே!

உலவல் மறந்தாய் ஊண்மறந்தாய் - உன்
உறவே வாழ்வென் றுவந்ததுணைக்
குலவல் மறந்தாய் குளிமறந்தாய் - புதுக்
கூறை வாங்கும் நிலைமறந்தாய்!

கலவல் தமிழ்க்கே தனித்தமிழ்காண் - ஒளி
காழ்க்கும் நினைவின் பாவாண!
பலவல் லின்பம் மறந்தாயே - நீ
பாயல் மறந்த போழ்தினிலே!

வேட்கும் தமிழே விளைவாகிச் - சொல்
விளைக்கும் தொழிலே வாழ்வாகித்
தோட்கும் துண்டைப் போர்த்தாமல்; ஒரு
துறவியைப் போலும் மனங்கொண்டே
நாட்கும் மணிக்கும் உழைப்பெடுத்தாய்! - யாம்
நலிந்தோம் மெலிந்தோம் செந்தமிழை
மீட்கும் முயல்வில் பாவாண - நீ
மீளாத் துயில்காண் போழ்தினிலே!

-1981

## 109 செந்தமிழை வென்றெடுத்த சீரியலாளன் ஔவை!

உரைவேந்தர் என்றுபுகழ்
ஒண்புலவர் ஔவை
துரைசாமி தோன்றியபின்
அன்றோ - நரைவாரும்
தெள்ளுதமிழ் நூல்களெல்லாம்
தீந்தமிழாய்த் தித்திக்கக்
கொள்ளுமுயர் செம்பொருளைக்
கொண்டு!

ஆரியத்தால் வேய்ந்த
அழிவுரைகள் மாய்ந்தொழிய
வீரியத்தால் செந்தமிழை
வென்றெடுத்தார் - சீரியத்தால்
**ஔவை துரைசாமி**
ஆய்ந்துபல நூலுரைகள்
செவ்வியவாய் நேரியவாய்ச்
செய்து!

-1981

## 110 பண்ணாய்ந்த பாவாணன்!

இசையில் தனித் தமிழை
எங்கும் பரப்பி,
வசையின்றிக் காத்த
வலவன்! - திசைதோறும்
பண்ணாய்ந்த பாவாணன்!
பாடும்வா னம்பாடி!
கண்ணோய்ந்தான் யாரினிமேல்
காப்பு?

சுந்தரே சன்பாடும்
சொக்குந் தமிழிசையால்
மந்திரப் பண்ணும்
மலிந்ததே! - எந்தமிழை
யாரே இனிஇசைப்பார்?
யாரே சிலம்பொலிப்பார்?
யாரே, பண் ணாய்வார்
இனி?

-1981

## 111 என் மனைவி தாமரையாள்!

எடுப்பு

இனிது அவளது நினைவு - எனக்
கெத்துணை நீண்ட தொலைவில் இருப்பினும் (இனிது)

முடிப்பு!

கனிவு சான்ற அன்பு விழியினள்!
கதைகள் பேசும் பிள்ளை மொழியினள்!
முனிவு நீக்கும் தொண்டு வினையினள்!
முதிர்ந்த உணர்வின் இணைந்த துணையினள்! (இனிது)

காலை விழித்த பொழுது தொடங்கி
கணமும் ஓய்வில் லாமல் இயங்கி
வேலை குவிந்த வாழ்வு சுமந்தாள்;
விரிந்த உணர்வில் உயிரில் கலந்தாள்! (இனிது)

ஆறு நல் உயிர்களைத் தோற்றிய தாயவள்!
ஆயினும் என்னுடன் ஒன்றிய சேயவள்!
கூறுசொல் ஒவ்வொன்றும் அன்பினில் தோய்த்தவள்!
கொள்கை செய் வாழ்க்கையில் எனக்கென வாய்த்தவள்
(இனிது)

ஏற்காத கொள்கைக்கு வம்படி செய்வாள்!
இணையாத சூழலுக் கென்னொடும் நைவாள்!
தோற்காத உறுதிசெய் பேச்சவள் பேச்சு!
தோல்விக்கும் குலையாத வீச்சவள் வீச்சு! (இனிது)

எளிமையின் தோற்றத்தாள்! வலிமையின் போர்வாள்!
ஏழ்மையில் மனங்கோணா தென்னொடுந் தேர்வாள்!
களிமயில் போலாவாள் மகிழ்வாகும் நாளை!
கல்போலும் அமர்வாளோர் துயர்தோயும் வேளை! (இனிது)

விருந்துக்குச் சளைக்காத கைவினைக் காரி!
வெந்துயர்க் கிருவிழி பொழிதரும் மாரி!
வருந்துவார்க் கழுங்கியுளம் இரங்குகின்ற அன்னை!
வாழ்விக்க வந்தவளாம் கொள்கையோ டென்னை! (இனிது)

(இசைமாற்று)

பொன்னுக்கும் பட்டுக்கும் விழைவில்லாத் துறவி!
பொழுதுக்கும் காலாறா நடைபாவும் இறைவி!
சின்னக்கைக் குழந்தைக்கும் குழந்தையவள் நெஞ்சம்!
சிறியெழின் பெண்புலியின் சிற்றத்தை விஞ்சும்! (இனிது)

சிறு அழைப்பும் தவிராத ஓட்டநடைக் காரி!
சிணுங்கிவிட்டால் வணங்காத சினந்தேங்கும் ஏரி!
மறுமொழியும் பேசாமல் வினைசெயினும் செய்வாள்!
மனம் நோக விட்டாலோ கண்மழையும் பெய்வாள்! (இனிது)

பிள்ளைகள்மேல் உயிர்மொய்க்கும் பெருந்தாய்மைப் பேறு!
பெற்றவரை மறவாத நறும் பெண்மைக் கூறு!
கள்ளமிலா உள்ளத்தின் கனிவு நிறை தெய்வம்!
கரவில்லா மொழியுதிர்க்கும் அருளுணர்வு மெய்மம்!
(இனிது)

நல்லிளமைப் போதினிலே எனைத்தேடிக் கண்டாள்!
நறும்பிறவி உயிர்தொடர்பால் கணவனெனக் கொண்டாள்!
சொல்லுழவன் எனக்கவளை முழுஈகம் செய்தாள்!
சொந்தம் நான் முழுதுமவட் கென்றுரிமை கொய்தாள்!
(இனிது)

எனக்கெனவே வாழ்கின்றாள் எனக்கெனவே உயிர்ப்பாள்!
இனிவரும் எப் பிறவியிலும் எனைப்பிரிந்து வாழாள்!
தனக்கெனவோர் எண்ணமிலாள் செயலில்லாள் பேதை!
தாயுக்கும் தாயானாள் உயிர்கலந்தாள் கோதை! (இனிது)

இனியுயிர்க்கும் பிறவியிலே அவட்கடிமை செய்வேன்!
என்றனைநற் பெண்டாக்கித் தலைமையவட் குய்வேன்!
தனியுயிர்க்கும் நினைவில்லை, திறப்பாடும் இல்லை!
தாமரையாள் அன்புணர்வுக் கவளன்பே எல்லை! (இனிது)

-1981

## 112 திரு.வி.க. எனுந் தெய்வம்!

மணவழ கர்க்கு நூற்றாண் டு,விழா!
மணக்க மணக்க நடந்தது நாட்டில்!
உணவும் உடையுமே வாழ்க்கையென் றுலவும்
உலுத்தர்க் கிடையிலும் ஊசையர்க் கிடையிலும்
பணமே நோக்கம், பகட்டே ஆக்கமெனும்
பன்னாடை மக்கட் கிடையிலும் வாழ்ந்த
குணமே வியஒரு கொள்கையின் குன்றம்;
குற்றமில் லாதஓர் வாழ்க்கையின் கூறு, அவர்!

"பொய்யைச் சொல்லித்தான் வாழ்க்கை பண்ணலாம்,
புரட்டைச் செய்துதான் புகழைத் தேடலாம்;
மெய்யைச் சொன்னால் மெச்சுவ தார்"- எனும்
மேனா மினுக்கிகள் வாழ்ந்திடும் நாட்டினில்,
கையைக் கறைசெயா துடல்நலம் கருதாது
காலம் முழுதுமே கடமைகள் ஆற்றிட
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தநல் தெய்வம்!
வாழ்த்தினால் நாமும் வாழ்கின்ற மொய்ம்பு!

தூய்தமிழ் வழக்கைத் தோற்றிய பெருமை
துறவி மறைமலைக் குண்டெனில், இவர்க்கு
வாய்தமிழ் உரையை மேடைமேல் ஏற்றி
வையம் முழங்கிய பெருமைமிக் குண்டாம்!
ஓய்வும் ஒழிவும் இலாமல் 'என்றனின்
உடலம் மண்ணுக்கு; உயிர்தமி ழுக்'கென
ஏய்வுறு கூற்றை எழுதிச் செய்தவர்!
என்றென்றும் வாழும் எந்தமிழ் போன்றவர்!

'பணியுமாம் பெருமை' எனும்பைந் தமிழ்க்குப்
பயில்வுரை எழுதிப் பதிப்புரை தந்தவர்!
தணியாத் தமிழ்விடாய், தளர்வுறாக் கால்கள்,
தாழ்விலாச் செய்கை, தகைவுசேர் பயனுரை,
அணியம் தமிழ்க்கெனும் அருமை நூல்கள்
அயர்வுறா தேழையர்க் கலைந்து திரிந்து
மணியும் நேரமும் காலமும் பாராது
மக்கட் குழைத்த மணவழக னாரே!

தமிழ்மொழி உள்ள வரையிலும் வாழ்வீர்!
தமிழினம் வாழ்கின்ற வரையிலும் வாழ்வீர்!
இமிழ்கடல் உலகில் இயங்குதொழி லாளர்
ஏற்றம் எங்குண்டோ அங்கெலாம் வாழ்வீர்!
கமழ்தரும் தூய்தமிழ்க் கருத்திலே வாழ்வீர்!
கடமை, ஒழுக்கம், உண்மையில் வாழ்வீர்!
அமிழ்வுறா நேர்மையில் ஆண்மையில் வாழ்வீர்!
அன்னைக் குலத்தினர் அருளில் வாழ் வீரே!

-1982

## 113 ஆறு. அழகப்பன்

ஆறு அழகப்பன் அன்புத் தமிழுள்ளம்
மாறு கொளலின்றி மாண்தமிழை நாள்தோறும்
வீறு கொளமுழக்கி வியன்நா டகம்வளர்த்துத்
தேறு தமிழறிஞர் தேறுமொரு காவலனாய்
நின்று நெடும்புகழும் நேரில்லா நல்வளமும்
என்றென்றும் வாழும் எழில்பெயரும் பெற்றுயர்ந்து
குன்றுபோல் வான்போல் கோலக் கதிரவன்போல்
பொன்றாது வாழ்க பொலிந்து!

-1983

## 114 காரல் மார்க்சு எனுங்கதிரவன்!

பாரினில் பாட்டாளிப் பகுதியர் யாவரும்
காரிருள் மூடிக் கண்கலங் குகையில்
காரல் மார்க்சு,எனும் கதிரவன் தோன்றி
ஓரியல்பு எனும்பொது ஒளியைப் பாய்ச்சினான்!
துவண்டு கிடந்த தொழிலாளர் உலகம்
உவந்து நிமிர்ந்ததவ் வொளிவெள் ளத்தினால்!

கூனிக் கிடந்தவர் முதுகுநே ரானது!
குறுகிக் கிடந்தவர் கைகள் உயர்ந்தன!

உழைப்பவர் உலகம் ஒன்று சேர்ந்திட
அழைப்பு விடுத்தான் அறிஞர் தலைவன்!

அழைத்த குரல்கேட் டனைவரும் வியந்தனர்!
உழைத்த கைகள் ஒன்று சேர்ந்தன!
வெம்பிய உளங்கள் விழித்துக் கொண்டன!
கும்பி காய்ந்தவர் கொதிப்புற் றெழுந்தனர்!
உழைப்பவர்க் குலகம் உடைமை என்றான்!
தழைக்கும் முதலாளியர் தருக்கை உடைத்தான்!
''எங்கல் செ''னும்உயிர் நண்பனோ டிணைந்து
பொங்கும் அறிவியற் பொதுவுடை மைக்கே
வடிவம் தந்திவ் வுலகுக்கு வழங்கினான்!
மடிவுற லானது முதலாளி மாண்பு!
விடிவு பிறந்தது வெயர்வை உடற்கெலாம்!
கொடியவர் ஆட்சியைக் குழியில் புதைத்தனர்!

உழவும் உழைப்பும் உடைமைக்கு உரிய - என
முழவு கொட்டிய மூதறி வாளனின்,
பொதுஅறம் பாடிய புதுமைச் சிற்பியின்,
பொதுமைக் கொள்கை யாங்கணும் பொலிகவே!

-1983

## 115 அன்பின் விளைநிலங்கள்!

தென்மொழி முத்துக் குமரனின் திருவுளம்
என்மொழி, இன, நிலத் தொண்டுக்கு எருவாம்!
பல்லடம் பயந்த பண்புள்ள உருவம்!
சல்லடை போட்டுச் சலித்தெடுத் தாலும்
கரவும் கயமையும் கள்ளமும் நிறைந்த
உருவம் பற்பல உலாவரும் காலத்தில்
எங்கணும் காணா இறைமைத் திருவுளம்!
பொங்கும்அன் பருவி! புரையிலாப் பொய்கை!
அன்பின் விளைநிலம்! ஆருயிர் மருந்து!
என்பெலாம் நெகிழ்க்கும் இன்ப உணர்வுளம்!
குளிர்மதி நல்முகம்! குறையிலா உரைவாய்!
வெளிர்ஒளி உள்ளம்! விரிநிறை அறிமதி!

அத்தகு உளத்தோ டமைந்துளம் பொருந்திய
மெத்த அன்புரை மேன்மை உளங்கள்
இரண்டுள! அவற்றுள் இனியநல் ஒன்று,
திரண்டுள அன்பெலாந் திருமுகத் தொளிரும்
பல்லடம் ஆறு முகத்தின் திருவுளம்!

வல்லமற் றொன்று, வாழ்வுறுந் தென்மொழி
துரையர சாளும் தூய்மைப் பேருளம்
உரையிலும் செயலிலும் உண்மைமற் றில்லா
வேறறி யாத வியத்தகு உள்ளம்!
ஏறுமா றில்லா இன்சொல் வழங்கி
அன்றும் இன்றும் அகலா வுணர்வொடு
என்றும் ஒன்றுபோல் இருக்கும் தமிழுளம்!
வடியா அன்பொடு மாந்தன் இருக்க
முடியுமென் பதற்கு முழுச்சான் றவருளம்!

ஆறு முகமெனும் அணையா விளக்கம்!
ஏறுமென் உணர்வுக்கு ஏற்ற தூண்டுகோல்!
செல்வர் ஒருவர் சிதையா நெஞ்சொடும்
பல்வா றுணர்ந்த பட்டறி வோடும்
தண்டமிழ்ப் பணிக்கும் தமிழினத் தொண்டுக்கும்
'உண்டுநான் துணை', எனும் ஒருமை உணர்வொடும்
நின்று நிலைபெறு கின்றார் எனில், அது
தொன்றுதொட் டுயர்ந்த தூய்மர மன்றோ?

எத்தனைச் செல்வர் இழிந்து போயினர்!
எத்தனை உளங்கள் இருட்குழி ஆயின!
அத்தகைத் தாழ்ச்சிகள் அணுவும்அணு காது
மெத்தகு மேன்மையால் மேன்மேலும் சிறந்து
இம்மூ வுளங்கள் இருக்கும் சீர்மையால்,
தென்மூ வேந்தரின் திருநிலம் போலப்
பல்லடம் எனும்ஊர் பரவுசீர் ஊராய்க்,
கல்லும் கரம்பும் கனலெறி காற்றும்
நிறைந்திருந் தாலும் நெஞ்சினுள் நிற்கும்
மறைந்திலாப் பெயராய் மண்டுபுகழ் எய்தி
அன்பின் விளைநிலம் ஆகி
இன்பநல் ஊரென எம்மொடு விளங்குமே!

-1984

## 116 பொன்னும் முத்தும்!

வெங்கா லூர்எனும் வியன்பெயர் சொன்னதும்
பொங்கும் அன்பின் பொற்செழி யன்எனும்
குளிர்ந்த முகமும், குறைவிலா அன்பின்
தளிர்நகை நெடுஞ்சேர லாதன் என்னும்
முத்துவின் முகமும், முழுநில வுகளாய்,
ஒத்தவா றென்றன் உள்ளத்து வானில்
நீந்தி ஒளிதரும்! நினைவிலும் துணைவரும்!
காந்தியென் உள்ளக் கருத்தினை வளர்க்கும்!
அற்றைநாள் தொடங்கி இற்றைநாள் வரையிலும்

ஒற்றைஓர் இம்மியும் ஒதுங்கிடா தென்னைப்
பற்றிப் படருமிப் பச்சைக் கொடிகளில்
உற்றவை அன்பெனும் உயர்மணப் பூக்களே!

கள்ளமும் கவடும் கயமையும் நிறைந்தே
உள்ளம் ஒளித்தே உலாவரும் உலகில்,
வெள்ளப் பெருக்கென அன்பினால் விரிந்து,
கொள்ளை கொள்ளையாய்த் தமிழ்ப்பயிர் கொழிக்க,
ஒவ்வோ ராண்டும் ஓடோடி வந்தே
எவ்வொரு தயக்கமும் இன்றி, இருகையால்,
எனக்குப் பிறந்தநாள் எனநினை வூட்டி,
மனக்கனி வோடும், மகிழ்முகத் தோடும்,
கண்களும் வாய்களும் கன்னக் கனிகளும்
ஒண்சுடர் ஒளிக்கதிர் உமிழ, அன் பொழுக
கைகள் வழிந்திட ஈயும் கனிவினை,
மெய்யோ டுயிர்கலந் திருக்கும் வரையிலும்,
உயிரணுத் திரள்கள் உள்ளொளி காழ்ந்தே
உயிர்ப்பே ரொளியோ டொன்றும் வரையிலும்,
மறப்பேன் கொல்லோ! மாண்பினார் அன்பைத்
துறப்பேன் கொல்லோ!
தொன்தமிழ் வளர்க்கையில்
பொய்யரும் புளுகரும் புன்மைக் கயவரும்
வெய்ய பழியும் இழிவும் வீசலால்
புண்ணாகி நெஞ்சம் புலம்பிடும் பொழுதில்
கண்ணாகி என்றனைக் காத்திடும் அவர்திறம்
அன்னை அன்பினும் அத்தன் காப்பினும்
பன்னூறு மடங்காய்ப் பயிலுவ தன்றோ?

பொன்னும் முத்துமாய் ஒன்றிப் பொலிந்திடும்
இன்னரும் நட்பின் இருவரும், எந்தமிழ்
ஒளிர்வது போலும் ஒளிர்ந்து,
மிளிர்வதும் மெய்யே, மேன்மேலும் உயர்ந்தே!

-1985

## 117 அரிமா வளங்கோ!

தனரா சென்னும் தன்பெயர் தவிர்த்தே
இன மொழி, நாட்டை யாவினும் உயர்த்த
அரிமா வளங்கோ என, அரும் பெயரை
உரிமை ஆக்கிய உரவோன்! 'தென்மொழி'
தொடங்கிய பொழுதில் தோள்தந் தியங்கி
முடங்கிய பொழுதில் முழுத்துணை நின்று,
நாளுங் கிழமையும் நடுநடு வந்து,
வாளெனக் காத்து வருபொருள் உரைத்துப்
புதுவை வாழ்ந்த பொழுதெலாம் உழைத்தோன்!
எதுநான் எண்ணுவேன் அதுசெய லாக்கி,
ஆர்வ இளைஞர் அரிமா மகிழ்கோ
நேர்வுற வைத்து நிழல்போல் இருந்து,
'சிப்மர்' மலரினைச் சீருற வாக்கிய
மற்போர் மல்லன்! மதிநிறை குணத்தன்!

அருளியை ஆற்றுப் படுத்திய அறிஞன்!
மருளிலாக் கொள்கையன்! மாறிலா வினைஞன்!
குளிர்முகங் கோணாக் குன்றா அன்பினன்!
ஒளியுமிழ் கண்ணும் உரைதவழ் வாயும்
தீதிலா நெஞ்சும் தீந்தமிழ் உணர்வும்
கோதிலா நடையும் கொள்கைச் செருக்கும்
வாய்ந்த உயிரினன்!
வாழ்விடம் மாற்றி
ஆய்ந்த தமிழுக் காக்கம் தந்த
பிரஞ்சுப் பெருநா டேகிப் பிரிந்தும்
நறுஞ்சுவைத் தமிழின் நசைமா றாமல்
அன்புத் தமிழர்க்கு ஆர்வம் கொளுத்தி
என்புந் தசையும் இயக்கமுந் தமிழென
உலாவரும் உரவோன்! உலகத் தமிழினம்
அளாவும் முன்னேற்றக் கழகம் அமைத்தே
எனைமற வாமல் எண்ணருஞ் செல்வம்
தனையிறைத் தென்னைத் தாவி வருகென
அழைத்து விழாவெடுத் தமிழா நறும்புகழ்
உழைத்துப் பெற்ற உண்மைத் தொண்டன்!

இன்னருந் துணையோ டேழு குழந்தைகள்
நன்னர் பொருந்திய குடும்ப நயப்பினன்!
அவ்வப் பொழுது தென்மொழிக் கருங்கொடை
ஒவ்வக் கொடுத்த உளங்கொள் பெருந்தகை!
கொப்பொடுங் கிளையொடும் கொழிக்க
எப்பொழு தும்குடி ஏற்றமுற் றுயர்கவே!

-1985

## 118 முனைமழுங்கா வீரன் தமிழரசன்!

செவ்வணக்கக் கைதூக்கிச்
செங்கொடியை ஏந்திச்
சிரித்தமுக நெற்றியிலே
சிந்தனையைத் தேக்கி
முவ்வுரமும் எழுச்சியுற
முடுகிநடை யிட்ட
முனைமழுங்கா வீரனவன்,
தமிழரசன்! முன்னைக்
கவ்வியுள்ள இருள்போக்கக்
காளையரைக் கூட்டிக்
கடும்பகையை எதிர்த்திடவும்
கண்விழித்து நின்றான்!
வெவ்வதிகா ரக்கொடுமைச்
சூழ்ச்சியினால் வீழ்ந்தான்!
விடுதலைசேர் தமிழகத்தில்
வீழ்ச்சியின்றி வாழ்வான்!

பெற்றவரை மறந்தபெறும்
வீரனவன்! பெற்ற
பெருநிலத்தைத் தாய்மொழியைப்
பேணுகின்ற நோக்கில்
உற்றதுணை யாளர்களை
உருவாக்கிச் சேர்த்தே
ஒருபுரட்சி செய்திடவே
ஊரூராய்ச் சென்றே
கற்றகொள்கை பரப்பியவன்!
கனன்றெழுந்த போதில்
காளையவன் களத்தினிலே
கன்னிஉயிர் தந்தான்!
ஒற்றர்களால் உலுத்தர்களால்
உயிர்பறிக்கப் பட்டான்!
உரிமைபெறுந் தமிழ்நாட்டில்
உயிர்வாழ்ந்து நிற்பான்!

-1988

## 119 அப்பாத்துரையார் எனும் அறிவாட்சி அடங்கியதே!

தப்பாய்த் தவறாய்த் தமக்காய்ப்
படிக்கும் தரகரிடை
உப்பாய் உணவாய் உடம்பாய்த்
தமிழை உயிர்த்திருந்து,
'முப்பால் ஒளி'யாய் முகிழ்த்து
'மணிவிளக்' காய்எரிந்த
அப்பாத் துரையார் எனும்அறி
வாட்சி அடங்கியதே!

ஒப்பாய்த் தமிழ்கற்(று) உரைவிற்(று)
உயிர்வாழ் உடல்களிடை
மப்பாய்த் திரண்டு மழையாய்ப்
பொழிந்து தமிழ்வளர்த்துக்
கொப்பாய்க் கிளையாய் மலராய்க்
கனியாய்க் குலம்புரந்த
அப்பாத் துரையார் எனும்தமிழ்
மூச்சிங் கொடுங்கியதே!

செப்போ இரும்போ மரமோ
மணலோ எதுதரினும்
எப்போ திருந்தமிழ் மாறி
உயிர்வாழ் இழிஞரிடை
முப்போ திலுந்தமிழ் ஆய்ந்தே
களைத்த மொழிப்புலவர்
அப்பாத் துரையார் எனும்மூ
தறிவும் அயர்ந்ததுவே!

ஒருமொழிப் புலமை உறற்கே
வாணாள் ஒழியுமெனில்,
இருமொழி யன்று, பன் மூன்று
மொழிகள் இருந்தகழ்ந்தே
திருமொழி எனநந் தீந்தமிழ்த்
தாயைத் தெரிந்துயர்த்திக்
கருவிழி போலும் கருதிய
கண்ணும் கவிழ்ந்ததுவே!

குமரிஆ ரல்வாய் குமிழ்த்தமுத்
தம்மைக்குக் காசிநாதர்
திமிரிப் பயந்தஅப் பாத்துரை
என்னும் திருவளர்ந்து
நிமிர்த்துத் தமிழ்மொழி நீணில
மெங்கும் நிலைப்படுத்தும்
அமரிற் படுத்திங் கயர்ந்ததே
ஆரினி ஆந்துணையே!

செந்தமிழ் ஆங்கிலம் இந்தி
பிரெஞ்சு செருமனுடன்
வந்தச மற்கிரு தம்ருசி
யம்சப்பான் என்றயல்சார்
முந்துபன் மூன்று மொழிபயின்
றேபன் மொழிப்புலமை
வெந்துநீ றானதே, தாய்ப்புலம்
விம்ம வெறுமையுற்றே!

-1989

## 120 நெல்சன் மண்டேலா!

இருபத்தே ழாண்டுகளாய்ச்
சிறையிருந்த இனவீரன்!
உரிமையினை எல்லாருக்கும்
கருவித்தும் உணர் வெனவே
காட்டிவிளக் கம்செய்த
கடமை உரு! விடுதலைக்கே
மருவித்தம் மனைவி, மக்கள்
மனமகிழ்வைத் துறந்த நெல்சன்
மண்டேலா எனும் பெயரோன்!
வருவித்துக் கொளல்வேண்டும்
வாலையர்கள் அவர் உணர்வை
வாழ்வுரிமை மீட்பதற்கே!

-1990

## 121 பாவேந்தர் பதிகம்!

மூவேந்தர் எல்லாரும் மீண்டும் பிறப்பெடுத்துப்
பூவேந்த ராய்ஆட்சி பூண்டாலும் - பாவேந்தே!
உன்போல் புகழ்பெறவும் ஒல்லுமோ? ஒண்டமிழில்
மின்போல் கதிர்போல் மிளிர்ந்து!

புலக்கிழவர் எல்லாரும் பூந்தமிழில் நல்ல
இலக்கியம் அன்றோ முன் ஈந்தார்! - கலைக்கோவே!
நீயன்றோ பெய்தாய் இலக்கியத்தில் செந்தமிழைத்
தாயீன்ற வகையாகத் தந்து!

'நல்லுயிரும் நல்லுடம்பும் நற்றமிழும் 'நான்', என்று
சொல்லியன்றோ நீஉயிர்த்தாய், சோர்வின்றி! - வல்லியனே!
செந்தமிழை உள்ளுயிராய்ச் செப்பியதார் உன்போல்?
வெந்ததுண்டு வாழ்வர்,(அ)தை விற்று!

இனிமைத் தமிழில் எளியசொல் கூட்டித்
தனிமைச் செந்தமிழ்ப் பா தந்தாய்! - பனிமலரே!
உள்ளம் குளிர்வதுபோல் ஒண்டமிழை வாழ்வித்தாய்!
கள்ளம் கவடின்றிக் காத்து!

தொழிலா ளர்உயரத் தோள்தந்தாய்! அன்னார்க்(கு)
எழிலார் இலக்கியமும் ஈந்தாய்! - பொழில் ஆரும்
தென்றலுலா வந்ததுபோல் திங்கள்வான் நீந்துதல்போல்
என்றென்றும் வாழ்வாய் இருந்து!

பாவியமும் நாடகமும் பாடல் பலநூறும்
ஆவியுமாய்ச் செந்தமிழாய் ஆர்ந்து, வண்ண - ஓவியமாய்த்
தந்தாய்! ஒளிர்ந்தாய்! தமிழ்மொழிக்குத் தந்தைபோல்,
எந்தாய் போல்,என்றும் இரு!

எந்தமிழுக் கேற்றம் இனத்துக்கு மீட்சிதரச்
சொந்தநலம் எண்ணாமல் சோர்வின்றித் - தந்தபெரும்
நல்ல இலக்கியங்கள் நந்தமிழர் வாழ்வுயர்த்தும்;
வெல்லும்; பகைக்கெறிந்த வேல்!

செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
வெந்தணல் ஒன்று விரைந்ததென - முந்தியே
பின் விளைவாக் கூறினை, பெரும்புரட்சிப் பாவேந்தே!
இன்விளைவாக் கண்டோமே இன்று!

தந்தை பெரியார் தணல் கருத்தைப் பாவடிவில்
முந்தை நறுந்தமிழில் மூட்டுவித்தாய்! - சிந்தை
கனல்பற்றும்! செந்தமிழர் காட்டுத் தீயாய்க்கனல்!
அனல்பற்றும் பார், பகைமேல் ஆர்ந்து!

திருவள்ளு வர்க்குப்பின் தீந்தமிழின் மக்கள்
ஒருவல் லினமாய் உணர்ந்து - பெருவலிவு
கொள்ளுதற்குப் பாவேந்தே நீகொண்ட கொள்கையிலே
எள்ளுதற்கிங் கேதோர் இடம்?

-1990

## 122 அம்பேத்கர் வாழ்க!

தாம்பட்ட இழிவும் துன்பும்
தம்மக்கள் படக்கூ டாதென்
றோம்பிய ஒழுக்கம், கல்வி,
உயர்பணி, பதவி பெற்று
மேம்பட்ட அறிவுத் தொண்டால்
மிகப்பயன் தந்தே, மக்கள்
தேம்புற மறையா நின்றார்,
திகழ்அம்பேத் கராம்நல் மேதை!

உலகப்பே ரறிஞர்க் குள்ளே
உலவிய பெரும்பே ராற்றல்!
நிலவிய இழிவு, தாழ்ச்சி
நீங்கிட உழைத்தே, இந்த
நிலவுல குள்ள காலம்
நிலைத்திடும் புகழைப் பெற்றார்!
வலவராம் அவர்நூற் றாண்டில்
வாழ்த்துவோம் நன்றி கூறி!

-1991

## 123 புலவர் அரசு வாழியவே!

உலகம்மை - மாரிமுத்தர்
உவந்துபெற்ற 'அரசு' என்னும்
இலகு இராம சாமியவர்
எழில் உளத்திற் கிணைசொன்னால்
விலகுதமிழ்ப் பகைக்கெழுந்த
வீரத்தைச் சொலல்வேண்டும்!
பலகல்வித் தொண்டுசெய்து
பழுத்தவுளம் அவருளமே!

ஒப்பரிய பேரன்போ(டு)
ஒழுக்கமும்நல் நடைமுறையும்
செப்பரிய பண்புணர்வும்
மாணவர்பால் சேர்ந்திலங்க
முப்பொழுதும் உளம்நினைந்து
முழுவதுமாய்த் தமையீந்தே
அப்பழுக்கி லாதுழைக்கும்
ஆசிரியப் பெருமகனே!

குறைவில்லா நல்லுணர்வால்
கோபிப்பா ளையம் அரசு
நிறைவான பொதுப்பணிகள்
நித்தமுமே செய்துயர்ந்தே
'இறைவனவன் கற்பித்தோன்'
எனும்மொழிக்கே இலக்கியமாய்
உறைவூரார் புகழ்ந்தேத்த
ஊருணியாய் விளங்குவரே!

எளிமையிலே புறந்தோன்றி
ஏழ்மையிலே வளர்ந்தோங்கி
வெளிமயக்கில் உளந்திறம்பா
வீறுணவர்வால் கற்றுயர்ந்து
களிமயிலாய் மாணவர்க்குக்
கற்பிக்கும் கடமையொடு
தெளிவுறவே பாடாற்றித்
திருக்குறளாய் வாழ்பவரே!

கல்விப்பணி யோடுதமிழ்க்
கவின்பணியும் ஆற்றுவராய்
நல்விளக்கச் சான்றோரை
நயந்தழைத்து மாணவர்கள்
பல்வகையும் பயன்பெறவே
பலவுரைகள் பெறச்செய்து
தொல்வழியும் தூய்தமிழும்
துலங்கிடவும் உழைத்தவராம்!

தாம்பணிசெய் பள்ளியினைப்
பலவழியும் தரமுயர்த்தி
மேம்படவும் அவ்வூரார்
மெச்சிடவும் உழைப்பாற்றி
ஓம்புகின்ற நல்லொழுங்கால்
உண்மைநிறை தொண்டுளத்தால்
கூம்பாமல் ஒளிவீசிக்
கோபி.அரசு ஓங்குகவே!

தூயதிரே சாள்பள்ளித்
தலைமையா சிரியராக
ஏயமுப்பா னாண்டுகளாய்
ஏற்றமுடன் தொண்டாற்றி
நேயமுடன் பொன்விழாவை
நிகழ்த்தும்கோபி.அரசு
ஆயநலன் வளங்களுடன்
அருந்தமிழ்போல் வாழியவே!

-1991

## 124 பெரும்புகழ் பெறுக! (தெசிணி)

பாவலர் தெசிணி உள்ளம்
பண்பார்ந்த தமிழ்ப்பூஞ் சோலை!
ஆவலால் செந்த மிழ்க்கே
ஆக்கஞ்சேர் தொண்டு நோக்கில்,
மேவுறும் மரபுப் பாக்கள்,
மிளிரவே 'கவிதை' என்னும்
பாவலர் போற்றும் ஏட்டைப்
பயனுற நடத்து கின்றார்!

செந்தமிழ் வயலில் புற்கள்
செழிப்பன போலும் நாட்டில்
வந்தவர் மொழிகள் யாவும்
வளர்ந்திடத், தமிழோ தாழும்
நொந்திடும் நிலைக்கே உள்ளம்
நோகின்றார் குழுவில் 'யாமும்
வந்துழைக் கின்றோம்' என்றே
வந்தவர் தெசிணி யன்றோ?

முப்பத்தோ ராண்டுக் காலம்
முழுமையாய் ஈடு பட்டே
எப்பயன், வருவாய்,இன்றி
இதழொன்று நடத்தல் போல
மெப்புறும் செயலொன் றில்லை!
மேற்கொண்டோர் உணரு வார்கள்!
அப்புது மையும்,வி யப்பும்
அறிஞர்நம் தெசிணி செய்தார்!

உயர்பண்பு, நல்லொ ழுக்கம்,
ஊக்கம்,செந் துணிவு, கொள்கை,
அயர்வின்றி உழைக்கும் உள்ளம்,
அவியாத தமிழ்ப்பற்(று) உண்மை,
மயர்விலா அறிவுத் தேக்கம்,
மாண்புடை தெசிணி தொண்டு
பெயர்பெறும்! பெருமை சேர்க்கும்!
பெரும்புகழ் பெறுக! நன்றே!

-1992

## 125 ஆறுமுகம் காட்டுகின்ற அன்புணர்வு!

ஏறுமுகம் இன்றி இறங்குமுக மும்இன்றி
ஆறுமுகம் காட்டுகின்ற அன்புணர்வு - மாறுமுகம்
இல்லாத தாய்மைக் கிணையாகும் ஏவாமற்
பல்லானும் எம்மேல் பரிந்து.

-1993

## 126 அன்புள்ள தெள்ளிக்குட்டி!

அன்புள்ள தெள்ளிக்குட்டி!
அம்முப்பா எழுது கின்றேன்,
அன்பு அம்மா, அப்பா, அண்ணன்
ஆயாவும் நலமா கண்ணே!
முன்புபோல் நீங்கள் எல்லாம்
முழுஆண்டு விடுமு றையில்
இன்பமாய் இங்கு வந்தே
இருப்பீர்கள் வழக்க மாக!

இம்முறை மட்டும் நீங்கள்
ஏன் வர வில்லை? நானும்
வெம்சிறை யில்இ ருந்தால்
விளையாட ஆளா யில்லை?
அம்மும்மா, சித்தி, மாமா,
அன்புப்பெரி யம்மா, மொய்ம்பன்
செம்மலும் கதிர்நி றையும்
சேர்ந்தாட உள்ளார் அன்றோ?

எப்பொழு தென்னை இங்கே
விடுதலை செய்வார் என்றே
இப்போது தெரிய வில்லை.
இருந்தாலும் நீங்கள் எல்லாம்
அப்பா வோடுமம்மா வோடும்
வந்திங்கே அனைவ ரோடும்
எப்போது பள்ளி உண்டோ
அதுவரை இருந்து போங்கள்.

-1993

## 127 அருமை மகள் தேன்மொழிக்கு!

அருமைமகள் தேன்மொழிக்கும்,
அன்பினிய தம்பிக்கும்,
அறிவுச் செல்வர்
பெருமை மிகும் அறிவனுக்கும்,
பெருங்கடமைத் தெள்ளிக்கும்,
பெரியம் மைக்கும்,
ஒருமையுளம் கொண்டு, நலம்
உரைத்து, இதனை வரைகின்றேன்;
உவகை கொள்வீர்!
திருமைஒளிர் நெஞ்சத்தின்
திரள்நலமும் வாழ்த்துகளும்
திகழ்க நன்றே!

தேனம்மா! நீநலமும்
தேறியது கண்டுமகிழ்ந்
தேன், என் உள்ளம்!
ஏனம்மா, மனச்சோர்வும்?
இதன்பொருட்டும் உடல்நலியும்!
இளைத்துப் போகும்!
வானமும், மா நிலமும் உள்ள
வரைநிற்கும் குறள்உரையை
வரைந்து கொண்டு,
நான் இம்மாச் சிறையில்முழு
நலமாக இருக்கின்றேன்;
நலிதல் இல்லேன்!

ஆதலினால் நீ எதற்கும்
அஞ்சாமல் துணிந்து நின்றுன்
அப்பா வைப்போல்
தீதெனினும் சோர்வின்றித்
திளைப்பெனினும் செருக்கின்றித்
தேர்ந்த தொண்டின்
மீதுயர்ந்த கொள்கையுடன்
மேந்தமிழ்க்கும் இனத்திற்கும்
தமிழ்நாட்டிற்கும்
காதலுற்ற நின்கணவர்
கடமை செய்தல் போல்அவர்க்குக்
கைகோப் பாயே!

எனைப்போற்ற வில்லை இந்த
இனமும்,இந் நாட்டரசும்
என்றே நித்தம்
முனைப்புற்ற ஏக்கத்தால்,
முட்டிவரும் கண்ணீரால்,
முதிர்ந்த அன்பால்,
நினைப்புற்று நினைப்புற்று
நீயும்நின் அக்கை, அண்ணன்,
இனவோ ரோடும்,
சினைப்புற்று நுமையுயிர்த்துச்
சிறந்தஅன்னை துயர்வதெல்லாம்
சிந்தை நேர்வேன்!

எனைப்பற்றி நினைப்பதில்லை,
இளமைமுதல் இன்றுவரை
இன்பத் தேனே!
தனைப்பற்றி நினைத்திருப்பின்
தழைத்தமரம் நிழல், கனிகள்
தரும்மா, அம்மா?
நினைப்பற்றுஇம் மொழிநினைத்தேன்;
நீங்கள் எல்லாம்
எனைப் பற்றி வரநினைத்தேன்!
எவ்விடத்தும் எந்நாளும்
இழந்தேன், என்னை!

அதனால்தான் நூல்படித்தேன்;
ஆழ்ந்தவர லாறறிந்தேன்;
அவை சிந்தித்தேன்!
எதனால்நம் தமிழெல்லாம்
இனமெல்லாம் நாடெல்லாம்
இழந்தோம் - என்றே
முதல்நாளும் இடைநாளும்
கடைநாளும் சிந்தித்து,
முதுமை கண்டேன்!
இதனால்தான் அம்மா,நாம்
இருக்க இடம் இல்லாமல்
இடர்கள் உற்றோம்!

பணியேற்றுச் செய்து பணம்
படித்தெழுதி வந்தபணம்
பலநூல் வாங்கத்
துணிவேற்றுச் செலவழித்தேன்!
துயர்நீங்கக் கடன்பெற்றேன்!
தொல்லைப் பட்டேன்!

அணியேற்றம் இல்லை, உன்
அன்னைக்கும் உங்கட்கும்!
அன்றைக் கன்றைத்
தணிவுற்றுப் பெற்றதொகை
தனைக்கொண்டு வாழ்ந்தோம்,உன்
தாயும் நானும்!

மணம்சேர்த்து வைத்த எங்கள்
மகிழ்ச்சியிலே பெற்றெடுத்த
மக்கட் கெல்லாம்
பணம்சேர்த்து வைக்காமல்,
பயன்கல்வி தனைச்சேர்த்தோம்;
பண்பு சேர்த்தோம்!
குணம்சேர்த்தோம்; நீங்களெல்லாம்
கூனாமல் வாழ்வதற்குக்
கொள்கை சேர்த்தோம்;
கடமைசேர்த்த பார்வைகண்டு
காதல்மணம் ஒப்பி,உங்கள்
கைகள் சேர்த்தோம்!

தமிழுக்கும் தமிழர்க்கும்
தமிழ்நாட்டு விடுதலைக்கும்
தளராது உள்ளம்
அமிழ்க்காமல் அசையாமல்
ஆர்ப்பரிப்புக் கொள்ளாமல்
ஆய்ந்த கொள்கை
உமிழ்க்காமல் அரசியலில்
உரசாமல் அங்கும்இங்கும்
ஊசலா டாமல்,
சிமிழ்க்கின்ற பார்வையிலே
சீரழிக்கும் பகைநடுங்கச்
செயல்கொண் டேனே!

மகளே! உன் மனத்தூய்மை
மதித்திறம், வாய் மை, ஒழுங்கு
மாண்பு,என் றெல்லாம்
துகளறும்என் மனத்தெழுந்த
துளிர்ப்பன்றோ? தழைப்பன்றோ?
தொய்வில் லாத
வெருள் அரிமா வீறெல்லாம்
விளைவெல்லாம் இறையருள்தோய்
வேள்வி யன்றோ?
உகளறுமெய் பண்பறிவாய்
உலவும் உங்கள் உணர்வு உயிர்க்குள்
உள்ளேன் அம்மா!

-1993

## 128 அவர்தாம் பீமராவ் அம்பேத்கர்!

தாழ்வுற்றுக் கிடந்திடும் மக்கள் எல் லார்க்கும்
தலைவராய்க் கொதித்தெழுந்து நின்றார் - ஒரு
தனியராய்ப் போராடி வென்றார் - அவர்
வாழ்வுற்று மேலேற-
வழிவகுத்து உயர்வுபெற -
வாழ்வெல்லாம் போராடிச் சென்றார்! - இங்கு
வழியெல்லாம் சிலையாக நின்றார்!

அவர்தாம் பீமராவ் அம்பேத்கர்!
ஆரியத்தின் மேல்தொடுத்தார் அரிமாப் போர்!

அறிவுக்கு மாமலை!
அன்புக்குப் பழக்குலை!
உரிமைக்கு எரிமலை!
உழைப்புக்கு இரும்புவலை! (அவர்தாம்)

ஏழ்மையில் வாடினார்!
எதிரியைச் சாடினார்!
வீழாது போராடினார்! - அவர்
வெற்றியை முடிசூடினார்! (அவர்தாம்)

பட்டங்கள் பல பெற்றார்!
பல்கலை மிகக் கற்றார்!
சட்டங்கள் இந்தியர்க்குச் செய்தார் - அவர்
சாதிகள்மேல் அம்புகளை எய்தார்! (அவர்தாம்)

இழிவுகளின் வேரறுத்தார்!
ஏழ்மையர்க்கு நீர் உகுத்தார்!
பழிபுராண வேதங்கள் செய்த
பார்ப்பனர் மேல் போர் தொடுத்தார். (அவர்தாம்)

மக்களுக்குக் கற்பியுங்கள் என முழங்கினார் அவர்
மனங்கள் தெளிய அறிவு விளங்க நூல்கள் வழங்கினார்!
தக்கபடி உரிமை முழங்க அணிகள் திரட்டினார்:
தாழ்வு, அச்சம், மடமை, இழிவை அடித்து விரட்டினார்!
(அவர்தாம்)

-1994

## 129

## மன்சூர் அலிகான் என்னும் மாவீரத் திரைக் கலைஞன் மன்னு 'தமிழாகரன்' ஆகுக!

முன்சேர் ஒலி வெளிப்பட்டு
முத்துறையாய் ஒளிர்ந்ததமிழ்
மூவேந்தர் காத்திடவே
முப்பொழுதும் வாழ்ந்திருந்து
பின்சேர்ந்த ஆரியத்தால்
பிணியுண்டே ஒளிகுறைந்து
பீடழிய நின்றநிலை
பெயர்த்தெடுத்து மீட்டெடுக்கும்
வன்சேர்புல மக்கள்பலர்
வரிசையிலே கலைத்துறையில்
வந்துநிற்கும் உணர்வாளன்
வளர்தமிழ்க்கு நற்காவலன்
'மன்சூர் அலி கான்' என்னும்
மாவீரத் திரைக் கலைஞன்
மன்னு 'தமிழ் ஆகரன்' ஆய்
மக்கள்மனம் வாழ்ந்திடுக!

- 1994

## 130

## மல்லிகேசன் எனும் மனம் செயல் தூய்மையர்!

அமெரிக்க புரூக்ளின் அருமருத்துவ மனைபோல்
நம்தமிழ் நாட்டிலும் சென்னையில் நாட்டிய
இராமச் சந்திரா மருத்துவ மனையுள்
திராவிட மருத்துவர் தென்மொழி அன்பர்
மல்லிகே சன்எனும் மனம்செயல் தூய்மையர்
வல்லிதின் அழைத்து வாய்ப்புகள் அருளிப்
பண்டுவஞ் செய்து பாடுநோய் ஆற்றிய
தொண்டரும் சிறப்புயிர் துறப்பினும் மறவேம்!

- 1995

# விழா-
# சிறப்புப்
# பாடல்கள்

## 131 அறுபது பொங்கல்!

(அறுபது அகவைக் கிழவி, தன் பெயர்த்தியிடம் சொல்கிறாள்.)

நீண்ட சுருட்குழல் சேல்விழி மேவியென்
நெஞ்சை யிழுத்திடும் பாவையே,
ஆண்டுக் கொருமுறை பொங்கல் வந்தே, உளத்
தாக்கிய கூத்தினைக் கேளடி! 1

பொங்கல் பிறக்குமுன் நான்பிறந் தேன்எனப்
பெற்றவர் என்னிடம் சொல்லியே,
பொங்கி மகிழ்ந்து மகிழ்ந்தத னால்,இரு
பொங்கல் கழிந்தது வல்லியே! 2

மூன்று கழிந்தது; நான்கு கழிந்ததென்
முல்லைப்பல் கண்டு மகிழ்ந்தனர்;
ஆன்று சிறந்த தமிழ்மொழி யை, என்றன்
அன்னை எனக்கறி வித்தனள். 3

பள்ளியிற் குந்தினேன்! ஐந்தெனப் பொங்கல்
பறந்தோடி வந்ததே! ஆறினில்,
துள்ளி மகிழ்வுட னாடுதற்கே என்றன்
தோழிகளும் உடன் சேர்ந்தனர்! 4

சிற்றில் கட்டி விளையாடி மகிழ்வெய்திச்
செம்மலர் ஊஞ்சலில் உந்தியும்.
நெற்றி சுழித்திரு நீள்விழி யால், இசை
நேருக்கு நேராக ஆடியும், 5

பூத்த மலர்க்கொம்பை எட்டிப் பிடித்தற்குப்
புன்னை யிலையடி தாவியும்,
கோத்த மலர்ச்சர மிட்டிரு பெண்களைக்
காதலர் ஆக்கியும் ஆடிட, 6

பத்தும் இரண்டும் பறந்து, பதின்மூன்றிற்
பாதியும் தீர்ந்ததப் போதிலே
பத்தரை மாற்றுப் பொன் மேனியென, எனைப்
பார்த்தவர் கூறிடக் கூசினேன்! 7

அன்றொரு பொங்கலில், ஆறுசென்றேன்; மக்கள்
ஆட்டினை மாட்டினை மூழ்க்கியே,
நன்று கழுவிய வாறிருந்தார்; கண்டு
நின்றிருந்தேன்; எனை நோக்கியே, 8

குன்று விரைவது போல விரைந்தது,
கொம்பு வளர்ந்தவோர் காளையும்;
சென்று வளைத்து மடக்கி யடக்கினன்,
செக்கச் சிவந்தவோர் காளையும்! 9

அஞ்சி நடுங்கிய வாறிருந்தேன்; அவன்
அண்டை வந்தே யெனை நோக்கியே,
"வஞ்சி நடுங்கிடல் ஏன்?" எனக் கேட்டனன்,
வாயின் நடுக்கங் காணாதவன்! 10

உள்ளத்தினைப் பறித்தான்; அவன் எண்ணத்தை
ஊன்றிவிட்டான் என துள்ளத்தில்!
அள்ளிப் பருகுநல் லின்பங் கொடுத்திடும்
ஆளானா னொரு நாளிலே! 11

வெல்லச் சுவைமொழி பேசியென் உள்ளத்தை
விண்ணுக் கழைத்திடும் பாவையே!
செல்லச் சுவைமொழி கொஞ்சி மகிழ்ந்திடச்,
சென்றன ஐந்தாறு பொங்கலும்! 12

பேழை திறந்தொளி முத்து வெளிப்படப்
போலச் சிரித்திடும் நங்கையே!
தாழை மலர்நிறத் தோடுனைப் பெற்ற, உன்
தந்தையை முன்னர் பெற் றேனடி! 13

ஞாயிறு வந்தது! திங்கள் வருமென
நாட்டங்கொண் டார்மனம் போலவே,
ஆயிரு பத்தைந்து பொங்கலுக் குள்ளேவுன்,
அத்தையைப் பின்னர்பெற் றேனடி! 14

பிள்ளை தவழ்ந்து நடந்து வளர்ந்திடப்
பொங்கல் ஐந்தாறு கழிந்தன!
பள்ளி சென்றான்; படித்தான், எனக் கூறிடப்
பாதி கடந்தது வாழ்வினில்! 15

கண்ணுக் கிணையெனக் காத்துவந் தேன்; அவன்
காளை நிகர்த்தவன் ஆகினன்!
'பெண்ணுக் கழகது பேணல்' என்றே எனைப்
பார்த்தவர் கூறிப் புகழ்ந்தனர்! 16

வண்டு பறந்து வளைந்து திரிந்திடும்
வார்த்த மலர்க் கருந் தீங்குழல்
பண்டு நடந்த பழமை மறப்பது
போலக் கருமை மறந்ததே! 17

முல்லை முகையெனப் பேசி மகிழ்ந்திட்ட
முத்துப்பல் செத்து முடிவினில்,
'இல்லை'யெனப் பிறர் பேசிக் களித்திட
ஏற்றதடி என்றன் தோற்றமும்! 18

சந்தனத் தூளினைப் பூசிக் கழுவிச்செந்
சாந்தினைப் பூசிக் குளித்தவள்,
குந்தி யெழுந்திடக் கோல் ஒன்று வேண்டிடுங்
கோணி வளைந்தவள் ஆயினேன்! 19

தாமரைச் செம்முகம் என்றும் இருகண்கள்
தாவிடும் வண்டுகள் என்னவும்,
தேமலர்ச் செவ்விதழ் என்னவும், இவ்வுடல்
தேன்சுவை மாநிறம் என்னவும், 20

பேசிப் புகழ்ந்திட்ட பொன்னுடலோ, இன்று
பேரொளி குன்றிட யாவரும்
ஏசித் திட்டி மகிழ் வெய்தும் நிலையினில்
ஏன்திரை யுண்டதோ? கேளடி! 21

காலம் விரைந்ததுன் அத்தை யுளத்திற்குக்
காத்திருந் தானெரு காவலன்!
நீலமலர் விழிக் கானவன்; அன்னவன்
நேரிழை தொட்டிடும் மன்னவன்! 22

உன்னை மணந்திடப் பெற்றெடுத்தாள், ஓர்
ஓவியத்தை! இளங் கன்றினை!
மின்னை விரட்டிடும் சிற்றிடை நீ, எழில்
மேவி வளர்ந்திடும் பைங்கிளி! 23

பாலுலை யேற்றிச் சருக்கரை யிட்டின்பம்
பொங்கிடும் பொங்கல் அறுபதை
வாலைக் கன்னி! என்றன் வாழ்வில் கண்டே, உளம்
வீங்கி மகிழ்ந்திருந் தேனடி! 24

எப்பொங்கல் போன்றேயிப் பொங்கல் இருப்பதால்
என்ன புதுமையென் றேவுளஞ்
செப்புதல் போலச் சிரிக்கும் வகையினைச்
சொல்லடி! பூவின் இளமுகை! 25

பண்டுயாம் பொங்கிய பொங்கலில் பார்ப்பனப்
பாதை யிருந்தது! ஈண்டெனில்
தொண்டு விரவி யறிவு படர்ந்துளம்
தோய்ந்த தடி புதுப் பாதையில்! 26

செந்தமிழ் நூல்களைக் கண்டுளம் பொங்கிடுஞ்
சிந்தை யிருந்தவர் 'போகி' யில்
வெந்தழலிற் பெருஞ் செந்தமிழ் நூல்களை
வீசி யழித்தனர் பண்டையில்! 27

மூடப் பழக்க வழக்க மழிந்தது!
முன்னையினும் தமிழ்ப் பற்றினை,
நாடிப் பறந்தனர்; எங்கணும் செந்தமிழ்
நாட்டங் கொண்டாரடி மக்களும்! 28

கோவில் குறைந்தது! பள்ளி நிறைந்தது!
கோவர சாட்சி மறைந்தது!
ஆவல் விரைந்தது செந்தமிழ்மேல்! மக்கள்
ஆட்சி மலர்ந்ததிக் காலையே! 29

அன்றுகண்ட பொங்கல் ஆரியப் பொங்கலாம்!
ஆனாலிது தமிழ்ப் பொங்கலாம்!
நின்று தலைநிமிர்ந் தேறு நடையென
நீ நடந் தாடி மகிழ்ந்திடு! 30

சங்கு நிறைகரை சூழ்ந்து, பொருவளஞ்
சேர்ந்து விளங்குபொன் னாட்டிலே,
'பொங்குக பொங்கல்'என் றே,வுளம் பொங்கிப்
பொலிந்திடுக தமிழ்ப் பாட்டிலே!

-1952

## 132 பொங்கல் வாழ்த்து!

தங்கக் கதிர் முற்றித் தாழ்ந்தபின் போயதனைப்
பொங்குங் களிப்பிற்பொன் நெல்லாக்கிக் - சங்கொலிகை
மங்கையர் நல்லுலக்கை மாற்றிப்பின் புத்தரிசிப்
பொங்கியராய்ப் பொங்கிடுவார் நெஞ்சு!

தூய்மைப் புதுப்பானை தன்னில் அறிவென்னும்
தூய்மைப்பால் ஊற்றியுடன்
வள்ளுவர்சொல் - வாய்மைப்பால்
வார்த்தன்பும் சேர்த்து வகைசெய்து நற்பண்பைச்
சேர்த்துலகு பொங்கிடுக நன்கு!

-1954

## 133 தங்குக பேரின்பம் தழைத்து!

எத்திரு விழாவும் இன்தமிழ்ப்பண் பாட்டிற்கே
ஒத்திருக்க வில்லை உணர்கிலமே - பத்தியொடு
குத்தல் குதித்தல் குழவி மயிர்மழுக்கல்
கத்தல் கதறலெனக் காண்பவெலாம் - பித்தவிழா!
பாதிவிழா பார்ப்பார்க்(கு) ஒருபாதி நோற்பார்க்கு!
மீதிவிழா முற்றும் மதம்படுமே! - மோதுபனி
நீராற் குளிர்ந்து நிலைசாய்ந்த செந்நெல்லின்
போரால் மகிழ்ந்து புலன்காக்கும் - ஏராலே
இன்னார்க்கும் இட்டவர்க்கொன் றீயார்க்கு மீந்துவந்தே
பன்னாட்கும் காக்கும் பழனவர்க்கே - மன்னியநாள்
பொங்கற் றிருநாளே! பூந்தமிழின் நாட்டவர்க்குத்
தங்குகபே ரின்பம் தழைத்து!

-1955

## 134 பொங்கல் படையல்!

உள்ளமெனும் பானையிலே எண்ணப்பால் ஊற்றி
உயர்கருத்தாம் நல்லரிசி தீட்டியுலை யிட்டுக்
குள்ளமன மக்களிங்குக் கூட்டிவைத்துச் சேர்த்த
கொடுஞ்சாதி விறகடுக்கி, மானத்தீ வைத்து,
விள்ளரிய சுவைநல்குந் தமிழ்க்கனிச்சாற் றோடு
விழுப்பமெனும் நெய்யளவி நறும்பொங்கல் பொங்கிக்
கள்ளமிலா நெஞ்சுடைய நற்றமிழர்க் கிந்நாள்
களிப்பெழவும் விழிப்பெழவும் படையல்செய் வோமே!

-1960

## 135 நாடு வளம்பெற வாழிய!

இருந்தழிந் தின்றைக் கெழுந்தொளிர்ந்
தோங்கும் இனித்ததமிழ்
அருந்தனித் தாயை அழகுறச் செய்யும் அறிவியல்நூல்
மருந்தியல், விண்ணியல் என்றிவை
மேன்மேல் மலிந்துயர்ந்து
வருந்தமிழ் நாடு வளம்பெற வாழிய! வாழியவே!!

-1962

## 136 முத்தமிழ் விழா வாழ்த்து!

மடிப்புடை, கலையா மயிர்த்தலை, ஒளிப்படப்
பிடிப்புளம், ஒழுக்கப் பிறழ்நடை என்றிவை
குடிபுகும் மாணவக் குழாமென் றிக்கால்
நொடிப்புளங் கொண்ட நல்லோர் நோயற
அடிப்படைப் பயிற்சி அரசினர்ப் பள்ளியின்
துடிப்புடை மாணவத் தோன்றல் சில்லோர்
புத்துணர் வெடுத்துப் புடையவிழ்ந் தலர
முத்தமிழ்த் தாய்க்கு முதுவிழா வெடுத்தனர்.
போலிப் புலமையும் புன்மை உள்ளமும்
கூலித் தமிழ்த் தொண்டும் கூக்குரல் வன்மையும்
மலிந்த இக்கால் மாணவ நற்குழாம்
வலிந்துயர் வடைதல் வாழ்த்துக் குரியதே.
முத்தமிழ் விழாவை முன்னின்று நடத்தும்
தித்திக்கும் நெஞ்சினார் திருவுளம் வாழிய,
எடுத்த விழாவினை இனிதே
முடித்துக் கொடுப்பள் முத்தமிழ்த் தாயே!

-1962

## 137 பொங்கலும் வேண்டுமோ?

மொழியுங் கவலாய்; உரிமையுங் காவாய்;
அடிமையுற்றாய்!
விழியுந் திறவாய்; செவியுந் திறவாய்;
உளந்திறவாய்;
பிழியுங் கரும்பின் நறவொடு பால்தேன்
பயந்து, சுவை
பொழியும் நறுமணப் பொங்கலும் வேண்டுமோ?
போக்கிலியே!

-1964

## 138 பொங்கலாமோ...?

உள்ளமோ ஓட்டைப் பானை,
உணர்வெலாம் அணைந்த கொள்ளி!
கள்ளமும் கரவும்போட்டுக்
கயமையைக் கலந்து பொங்கி,
எள்ளலும் இழிவும் சேர்த்தே
இகழெனும் இலையிலிட்டுக்
குள்ளமும் குருடும்கூடிக்
குதித்திடல் 'பொங்க' லாமோ?

-1965

## 139 மரத் தமிழன்!

பார்ப்பான் ஒருவன்; பழிவடவன்
மற்றொருவன்;
போர்ப்பண் இசைத்துப் புறம்நிற்க,
இங்கு நீ
புத்தரிசி தெள்ளிப் புதுப்பால்
உலையேற்றிப்
புத்துருக்கு நெய்கலந்து, பொங்கியுண்பாய்
செந்தமிழா!
பொங்கல் நறுஞ்சுவையும், புத்துருக்கு
நெய்ச்சுவையும்
தங்குநின் வல்லடிமை தன்சுவைக்கே
ஈடாமோ?
ஏடா! தமிழனே! என்னிதுகாண்
நின்பெருமை
மாடாநீ? இல்லை; மரம்!

-1966

## 140

## வெங்காலூர்ப் பாவாணர் தமிழ்மன்றத்திற்கு வாழ்த்து.

பொங்குங் கடல்சூழ்ந்த பூவுலகில் எந்தமிழர்
எங்கண் இருந்தாலும் எந்தமிழும் அங்கிருக்கும்!
திங்கள் உலகத்தும் இந்தமிழ்போய் வாழ்வெடுக்கும்
மங்கா வரலாற்று மாண்பிதுவாம்; மெய்ம்மையிதாம்!

இங்கிதனுக் கோரெடுத்துக் காட்டாய் இலங்குவதே,
'பெங்களூர்' வாழும் பிழையாத் தமிழுளங்கள்.
பொங்கி எழுமுணர்வால், பொய்யாத தொண்டுளத்தால்
மூவாத செந்தமிழ்க்கே மூச்சிருக்கும் நோக்கத்தால்
பாவாணர் தம்மின் பெயரால் தமிழ்மன்றம்
ஏவாமல் தோற்றி இருக்கின்ற நற்செயலும்!

நாவால் தமிழ்வாழ்க வாழ்கவென நூறுமுறை
ஆவல் பெருக அரற்றியதால் வாழ்ந்ததென்ன?
தூவல் எடுத்துத் துலங்குகவே செந்தமிழென்
றெண்ணற்ற வாறாய் எழுதியதால் கண்டதென்ன?
பண்ணெடுத்துப் பாடிப் பைந்தமிழை வாழ்த்தியவர்
எண்ணற்ற கோடி! இருந்தும் பயனென்ன?

கண்ணற்றோம்; மேன்மைக்
கருத்தற்றோம்; மானமற்றோம்!
உண்ணற்கும் மேலாய் உடுத்தற்கும் மாண்பற்றோம்!
மண்ணற்ற நீண்ட மரம்போல் நிலையற்றோம்!
பேச்சுப்பேச் சென்றுபல பேசி முடித்துவிட்டால்
ஆச்சுதமிழ்த் தொண்டென்போம்;
அப்புறமோ பொய்வாழ்க்கை!
வாய்த்த பணத்தின்முன் வாயைப் பிளக்கின்றோம்!
ஏய்த்ததுவோ, கையூட்டோ, எவ்வழியே ஆனாலும்
காய்த்த மரக்கிளையைக் கையால் உலுக்கிடல்போல்
பேய்த்தன்மை கொண்டு பணத்திற் கலைகின்றோம்!
தேடும் பெரும்பணத்தால் தேடுகின்ற சீரென்ன?
வாடும் மனைவியென்றும் மக்களென்றும் வாழ்வெல்லாம்
கூறிவரல் அல்லால் குமுகாய வாழ்விழந்தோம்!

ஏறிவரும் பேரிழிவை எள்ளின்மூக் கத்துணையும்
எண்ணித் துடைத்திடவே எவ்வழியும் கண்டறியோம்!
மண்ணில் தமிழினத்தின் மாண்பைப் புதுக்குகிலோம்!

இந்நிலையை வீழ்த்தி இறுதிநிலை கண்டிடவும்
தந்நிலையை முன்போல் தமிழர்க்குத் தந்திடவும்
பாவாணர் மன்றம் பிறந்ததெனில் மாறில்லை!
காவாத செந்தமிழும் காக்கப் பெறுமினியே!

நந்தமிழ்க்குத் தொண்டுசெய்யும் நற்றமிழர் மன்றமிதே!
எந்தமிழைக் காக்க எழுந்த தமிழ்மன்றம்!
ஆகவே பாவாணர் மன்றம் அணிபெறுக!
ஈகைப் பெரும்பணியால் இம்மன்றம் தொண்டாற்றி
அன்றன்றும் செந்தமிழ்போல் ஆன்ற புகழ்பெற்றே
என்றென்றும் வாழ்க இனிது!

-1968

## 141 பொங்கல் நினைவு!

அன்புத் தம்பியே!
அருமைத் தங்கையே!
இன்பப் பொங்கலை
எண்ணிப் பார்க்கையில்,
துன்புறும் மக்கள், என்
நினைவில் தோன்றலால்
தென்பில் குறைகிறேன்;
அறிவில் திகைக்கிறேன்!

என்று நமக்குளே
    ஏற்றத்தாழ் வில்லையோ,
என்று நம்முளே
    இழிவு, இகழ்(வு) ஒழிந்ததோ,
என்று நம்மவர்
    உரிமைபெற் றுய்வரோ
அன்று தான்நமக்
    கருமைப் பொங்கலாம்!

நமக்குள் ஒருவரை
    நாம்தாழ்த் திடாமல்-
நமக்குள் ஒருவரை
    நலிவு செய் திடாமல்-
நமக்குள் அனைவரின்
    நலம்தரும் நினைவைச்
சுமக்குநாள் அன்றே
    சுவைதரும் பொங்கலாம்!

வாடிய மக்களின்
    வாட்டம் தவிர்த்திட
நீடிய வளங்களை
    நிலைக்கச் செய்யவும்,
நாடிய எல்லா
    நலன்கள் கிடைக்கவும்
கூடிய அரசுசெய்
    கொள்கைநாள் பொங்கலாம்!

ஆயும் அறிவியல்
    மக்களுக் காகவும்,
தோயும் விளைவெலாம்
    மக்கள் துய்க்கவும்,
நோயும் நொடியும்
    இலாதொரு நாளில்தான்,
வாயும் வயிறும்
    வளம்பெறும் பொங்கலாம்!

-1989

## 142 'பொங்கலோ பொங்கல்' எனப் பொய்விழாக் கொண்டாடுவதா?

இங்கோ அங்கோ என்
றில்லாமல் பல நாட்டில்
ஏதி லராய்,
எழில்தமிழும் இனஉறவும்
இழந்தும் கலந்தும்
இயல்பு மாறி,

மங்காமல் மங்கி, உயிர்
மடியாமல் உழல்தமிழர்
மறுபு றத்தே
மற்றிங்கு வாழ்பவரோ
மானமும் மதிப்பும்
மடிய விட்டே,

எங்கோ தொலைத்தளம்
மொழியையும் இனத்தையும்
நாட்டி னையும்
எவரெவர்க்கோ விற்றுவிட்டே
இளைத்தும் களைத்தும்
இளித்துக் கொண்டே

'பொங்கலோ பொங்கல்'எனப்
பொய்விழாக் கொண்டாடும்
புல்லி யர்க்கே
புதிதாக என்சொல்வோம்?
புத்துணர்வை எவ்வாறு
புகட்டு வோமோ?

-1994

# வாழ்த்துப் பாடல்கள்

## 143 சு. மன்னர்மன்னன் - சாவித்திரி.

பாச்சுவை மல்கிப் படர்ந்த பைந்தமிழ்
நாச்சுவை நல்கிய நற்கொழுங் கொம்பினைச்
செந்தமிழ்ப் பண்பெனுஞ் செறிமலர்க் கொடியொன்று
வந்து தழுவிய வகையினை வாழ்த்துவாம்!
அள்ளிய மகிழ்விற் கன்னவர் உடலும்,
தெள்ளிய கொள்கைக் கன்னவர் மனமும்
உரிமை ஆகுக; உழைப்ப தாகுக!
பெருமை பிறங்குக! திராவிடம் மீட்கும்
அருமை மக்களை அவர்பெற
ஒருமை யுளத்தோ டுவந்து வாழ்த்துவமே!

-1955

## 144 க. பழனியப்பன் - செயமணி.

(நான்மணி மாலை)

இருவிகற்ப நேரிசைவெண்பா

பூத்துக் குலுங்குநகைப் பொற்றொடியைப் பூமார்பன்
காத்துக் கிடக்கும் கடிமணத்தை - ஏத்தியின்பம்
பெய்துவக்கும் உள்ளம்! பழனியப்பற் கம்மடந்தை
கொய்துவக்கும் கொய்யாக் கனி!

கட்டளைக் கலித்துறை

கனிமலி இன்சுவை காட்டியும் மென்மைக் கவினிதழாற்
பனிமலி இன்குளி ரூட்டியும் அன்புக் கொடிபிணித்தே
தனிநிலை இல்லறம் தந்தவன் தாட்குத் தலைவணங்கி
நனிமலி இன்பப் பெரும்பொழில் வாழ்வின் நலன்பெறுமே!

நிலைமண்டில ஆசிரியப்பா

'பெறுவீ' ரெனக்குறள் பேசும் முறையறிந்
தறிவறி மக்களை ஈனவும், அந்தமிழ்
நாட்டிற் குழைக்கவும், நலிந்தோர்க் கொருவழி
காட்டவும் கடிமலர்க் காநுழை பொறிஞிமி
றாகி இல்லறம் அணிபெற் றிலங்கவும்
பாகியற் பைந்தமிழ்ப் பாடலாற் பரவுமே!

குறளடி வஞ்சிப்பா

பரவுசெங்கதிர்ப் பொன்னொளியெனு
மருகிடைச் செய மணியிளங்கொடி
பழனியப்பரைப் படர்ந்ததின்றுமன்,
முழவதிர்ந்திட மணம்புரிந்தன ரினிதே!
வாழ்க, வாழ்கவர்! இன்பம்
சூழ்க! இல்லறச் சுவைமிகப் பூத்தே!

-1956

## 145 வேங்கடேசன் - புட்பராணியம்மாள்.

வையகத்து நிற்கும் வளங்களெலாம் வந்தொருவற்
கையகத்து நிற்கும் கடிநாளாம் - துய்யகத்துப்
பேரிளமைத் தோகை பிணையும் பெருமணநாள்
சீரிளமைத் தோளனொடு சேர்ந்து.

தாழ்ந்திருக்கும் கண்ணின் தனிமயிலைத் தாழாக்கண்
ஆழ்ந்திருக்கும் ஆளான்; அதுவென்றும் - சூழ்ந்திருக்க,
தேனுதிர்க்குஞ் சொல்லியையும் தேடரிய செல்வனையும்
வானதிரப் பாடுகின்றோம் வாழ்த்து!

கற்றோரைப் போற்றிக் கடிந்துயிர்வாய் மெய்நோகப்
பெற்றோரைப் பேணிப் பெருந்தகைசேர் - உற்றோரைச்
சூழ்கநலஞ் சூழ்கவளஞ் சூழ்கபொலஞ் சூழ்கவென்றும்
வாழ்கவெனப் பாடுகின்றோம் வாழ்த்து.

-1957

## 146 உ.வே.பாலசுப்பிரமணியம் - துளசியம்மாள்.

கருத்துமணம், காதற் கலப்புமணம், செம்மைத்
திருத்தமணம் என்றமுறை தேர்ந்து - பொருத்தமொடு
செய்தகவே செய்தார்; சிறப்பும் பெருவளனும்
எய்துகவே என்று மிவர்க்கு.

-1958

## 147 மு.சாத்தையா - செயலெட்சுமி.
## (தமிழ்க்குடிமகன் - வெற்றிச்செல்வி)

கோதிலகம் எழுந்துலவும் குறைவிறந்த அருளன்பின்
மீதிலகம் படுப்பவர்க்கு மணம்படுத்தார் மேதகவே
தீதிலகம் அருள்சுரந்து திளைப்பதன்றித் திரு. கல்வி
ஏதிலவன் குளிர்தமிழால்
இசைந்திசைந்து வாழ்த்துகையில்,

திருசுரக்க; தீதகல்க; தெளிந்தறிவின் மகரீக;
உருசுரக்க; தமிழ்மொழிபோல்
உயர்வடைகென் றுரைப்பேமா?

அறம்புரிக; அவர்சுமந்தார் அகமகிழப் புகழ்பெறுக;
மறம்புரிக; தமிழ்மொழிபோல்
உயர்வடைகென் றுரைப்பேமா?

ஒருயிரில் ஈருடலாய் உளமிசைந்தே உயர்வாழ்வின்
தேருருளைக் கச்செனவே திகழ்ந்திடுகென் றுரைப்பேமா?

எனவுரைக்கும்,

சளைப்பில் அன்பினன் சாத்தை யாவின்
உளக்குடி லேறிய உயர்செய லக்குமி
தன்னை மணந்த தகுதிரு மணவிழா
அன்னை மொழியை அரசமர்த் தும்விழா!
அவ்விழா வாழிய! அக்கால்
செவ்விதின் மணந்தார் சிறப்புற வாழ்கவே!

-1960

## 148 இராசு - செயா.

இன்புறு நண்பர் இராசுவுக்கும் மேம்பொறைசேர்
அன்புறு தங்கை செயாவுக்கும், பின்பொருநாள்
சூழும் மணமென்றேன்! சூழ்ந்ததெனச் சூழ்ந்ததென
வீழும் முழவொலியும், வேட்பார்கள், வாழுமெனக்
கூறுகின்ற வாழ்த்தொலியும் கேட்டு மணமக்கட்
கேறுகின்ற இன்பும் விரைமலர்கள், நாறுகின்ற
நன்மணமும் காணுகிலே னென்றாலும் நல்வாழ்த்திற்
கென்மனமும் வந்துற்ற திங்கு!

-1960

## 149 மாரி.அறவாழி - தாயம்மை.

(வளர்பிறை)

விழிநோக் கொன்றி விழித்தனர்காண்!
வேய்த்தோள் தடந்தோள் பிணைந்தனர்காண்!
பழிநோக் கின்றி ஈருடலம்
பயின்றுயிர் மாறிப் புகுந்தனர்காண்!
வழிநோக் கறங்கள் வாய்க்காவோ?
வாய்த்தவர்க் கின்பம் பாய்ச்சாவோ?
மொழிநோக் குண்மை பெறுமென்றால்
முதலாம் பிறையே வளருதியே! 1

நெஞ்சோடு நெஞ்சங் குயின்றனர்காண்!
நினைவொடு நினைவும் பயின்றனர்காண்!
துஞ்சலும், பழிப்பதும் இல்லாராய்
தூய்மை இல்லறந் தொடங்கினர்காண்!
விஞ்சும் பொருள்கள் விளையாவோ?
விளையின் மகிழ்வுந் தழையாதோ?
எஞ்சமி லெஞ்சொல் மெய்யுறுமேல்
இரண்டாம் பிறையே வளருதியே! 2

பொய்யுணர் வின்றிப் புணர்ந்தனர்காண்!
புரைவினை யின்றி மணந்தனர் காண்!
ஐயுணர் வின்றி ஈரிருகால்
அறவழி நடந்திட இசைந்தனர்காண்!
பெய்மழைக் குலகம் பிழைசெய்மோ?
பெரும்பேர் இன்பம் பொழியாதோ?
மொய்யுணர் வெஞ்சொல் மெய்பெறுமேல்
மூன்றாம் பிறையே வளருதியே! 3

குலஞ்செய் குடிநலங் காத்தனர்காண்!
கூன்மொழிக் கவர்செவி கைத்தனர்காண்!
புலஞ்சேர்ந் துலகுயப் பயன்காட்டும்
பொய்யா மக்களைப் பெறுகுவர்காண்!
நிலஞ்சேர் வளங்கள் நேராவோ?
நேர்ந்தவர்க் கின்பம் தாராவோ?
நலஞ்செய் யெந்நா நலிவிலதேல்
நான்காம் பிறையே வளருதியே! 4

இழிவில் தலையறம் இணைந்தனர்காண்!
ஈடில் ஒழுங்கோ டணைந்தனர்காண்!
பழியில் மொழிசெய் பண்பினர்தம்
பக்கத் திருந்தே உய்குவர்காண்!
கழிபே ரின்பங் காணாரோ?
கண்டவர் பெற்றோர் பேணாரோ?
அழிவில் பெரும்புகழ் அடைவரென்றால்
ஐந்தாம் பிறையே வளருதியே! 5

தூக்கிய கொள்கைகள் பூண்டனர்காண்!
தூங்கா தரும்பணி காண்குவர்காண்!
ஊக்கிய அறநெறிக் கவர்வாழ்வை
ஊழ்த்திட இருபொழு துழைக்குவர் காண்!
தேக்கிய நறுநலம் நாடாதோ?
தேடாப் பொருள்கை கூடாதோ?
ஆக்கிய பாநடை பெறுமென்றால்
ஆறாம் பிறையே வளருதியே! 6

தமியருள் தாமாய்க் கலந்தனர்காண்!
தங்கருத் திழித்தினிப் புலந்திலர்காண்!
தமிழ்மொழி நாடதன் மக்களெல்லாம்
தம்முயிர் உடல்பொருள் என்றனர்காண்!

உமிபுடைத் திருகை நோவாரோ?
உழைத்துழைத் தின்பந் தாவாரோ?
இமிகர விலன்மொழி வினைபெறுமேல்
ஏழாம் பிறையே வளருதியே! 7

புதுமனைக் கிவரிணைந் தேகுவர்காண்!
புன்செயற் கிவருளம் வேகுவர்காண்!
மதுமலர்க் குழலியும் மணிமார்பும்
மற்றவர்க் குற்றவர் ஆகுவர்காண்!
முதுமையில் இளமையைக் காணாரோ?
முத்தமிழ் வாழ்வினைப் பேணாரோ?
எதுநலம் அதுபெறல் மெய்யென்றால்
எட்டாம் பிறையே வளருதியே! 8

மூச்சொடு மூச்சிணைந் துயிர்த்தனர்காண்!
முகத்தொடு முகமிணைந் தயர்ந்தனர்காண்!
பேச்சொடு பேச்சிணைந் துரைத்தாராய்
பிழைதனிற் பெரும்பொறை கண்டனர்காண்!
ஏச்சிலை! இழிவிலை! அன்னவர்க்கே!
இத்தரை நிலவொளிர் விண்அவர்க்கே!
ஓச்சுக அவர்புகழ்! உண்மையிதால்
ஒன்பதாம் பிறையே வளருதியே! 9

வந்தன வருவன எண்ணுவர்காண்!
வருநோய் தவிர்த்துண வுண்ணுவர்காண்;
தந்தனர் நினைந்தவர் மகிழ்வுறவும்
தாரார்க் கும்பொருள் தருகுவர்காண்!
முந்தையர் பெரும்புகழ் விளைக்காரோ?
முளையெடுத் துயர்ந்தவர் கிளைக்காரோ?
பந்தரின் கொடியெனப் படர்வாரேல்
பத்தாம் பிறையே வளருதியே! 10

தீதினை நன்றென மயங்கிலர்காண்!
தேய்வினை மாய்வன முயங்கிலர்காண்!
சூதினைக் கரவினைக் காணாராய்ச்
சூழ்ச்சியை வீழ்த்திடத் தயங்கிலர்காண்!
ஏதிலார்க் கின்னிழல் போல்வாரே!
இரப்பவர்க் கொருவழி கோல்வாரே!
பாதியன் னானவட் பாதியென்றால்
பதினொன் றாம்பிறை வளருதியே! 11

பித்தரை, மூடரை வெருகுவர் காண்!
பிணியரைக் கண்டுள முருகுவர் காண்!
முத்தொளிர் நகைச்சியும், முகில்தோளும்
மூதறி வினர்துணை பருகுவர் காண்!
இத்தரை இன்பொருள் ஈட்டாரோ?
ஈடறு பெரும்புகழ் நாட்டாரோ?
பத்தறு பேறும் அவர்பெறவே
பன்னிரண் டாம்பிறை வளருதியே! 12

சுரிகுழல், ஒளிநுதல் உவந்தனள் காண்!
சுளையிதழ் மலர்முகஞ் சிவந்தனள் காண்!
பிரிவில! பிழையிலள்! பினைவேறு
பிடிப்பிலள்! மகிழ்வுளம் நிவந்தனள் காண்!
சரிவில திவர்தொடர் முரிவிலதே!
சாந்துணை ஒன்றெனுங் குறியுளதே!
பரிவுள னெம்முரை மெய்யுரையேல்
பதிமூன் றாம்பிறை வளருதியே! 13

பெண்புது நலமிவன் நுகர்ந்தனன் காண்!
பெருமிடி படுமுறை தகர்ந்தனன் காண்!
கண்புனல் வழிதரக் காண்டவள்பால்
கணம்பிரி விலையெனப் பகர்ந்தனன் காண்!
நண்பினில் உயிர்ப்புற பிரிவுறுமோ?
நலிவிலும் பெருமகிழ் வுரிமையினே!
பண்பினி லுறுமொழி பயன்பெறுமேல்
பதினான் காம்பிறை வளருதியே! 14

இருளொரு கோடெனக் கீற்றாகி
இழியுகிர் வாளெனச் சுளையாகி
உருளலை ஓடமென் நுதலாகி
ஊசற் குழையுடன் ஓடாகித்
திரள்வெண் ணெய்கடை மத்தாகித்
தேனடைச் சங்கென வயிறாகி
அருளொளிர் முகமெனும் முழுநிலவே
அணைந்தவர் வாழ்வென ஒளிருதியே! 15

-1961

## 150 புலவர் சீனி.சட்டையப்பன் - மணிமேகலை.

எல்லையறும் அகன்புடவி ஒழுகலறா தியக்கிடுமோர்
வல்லிறையின் நுண்மனத்தே
உறைத்தெழுந்து முகிழ்த்தலரும்
பால்வழியின் அறநின்றார் பயன்கொளுவ வயின்சேர்ந்து
நூல்வழியின் உறவாடும் இருமணியின் புணர்வமையக்
குறிப்பேய்ந்த மடநல்லாள் ஐம்புலனும் இசைவார
மருப்பேய்ந்த களிற்றானை விழிவிழுங்கி உளக்கொண்டே
இருநோக்கின் ஒருபோக்காய் இயைவறாக் கைநெகிழாப்
பெருவாழ்விற் கிணைபோக்கும் பெற்றித்தே மணம்என்ப!

அவ்வழிக் கிளர்வூறு மெய்யுணர்வோர்
வளந்துய்க்கும் பெரும்பொழுதில்
விளைநிலத்துப் பெயலேபோல் கையிரந்தார்க் குள்ளிரங்கிக்
குரவோர்க்குத் திறம்பேணிக் குடிசெய்வார்க் கடிபோக்கி
உரவோர்க்கு நெறிகாட்டு மஃதொன்றே அறமென்ப;

அதுபிறழா மேற்சென்று புதிதுபுறத் துவக்குங்கால்,
கதலின்றி முதல்சேர்க்குஞ் சிதலேபோல் தாமுயன்று
புறவழி கூட்டின்றி அறவழி குறைவின்றிப்
பொறைகெடா துயர்வீட்டு மஃதொன்றே பொருளென்ப;

அதுகொண்டு, வலத்தது வல்லறமா
இடத்தது செம்பொருளா
நலங் கூடத் துணைபுணர்ந்து நட்டாரும் உள்குளிரப்
பொழுதுங் காலமும் இடனொடும் பொருந்திவர
வழுவிலா நுகர்வாரு மஃதொன்றே இன்பென்ப;

அனைத்து ஆக,

இன்பும் பொருளும் அறமும் இணைய
அன்பொடும் அருளொடும் இன்பினுந் துன்பினும்
ஏறியது தாழாது இறங்கின் வாழாது
மாறிலா நெஞ்சின் **மணிமே கலை**யொடு
பொறைபூண் விரைமொழி நிறைதமிழ்ச் செல்வன்
**சட்டை யப்பனா**ந் தமிழ்பயிற் றாளன்
முட்டறத் துவங்கிய வாழ்க்கை
எட்டுணை இடரும் இன்றி இயங்குகவே!

-1963

## 151 இளஞ்செழியன் - முல்லைவடிவு.

எந்தமிழ் நெஞ்சத் திளஞ்செழிய! தாங்களின்று
முந்தில் லறம்காண முல்லை வடிவின்கைப்
பற்றிடப் போகும் பனிபோன்ற செய்திசெவி
யுற்றிட என்னுயிர் உள்ளம் உடலெல்லாம்
பூரித்து நின்றேன்; பூந்தமிழால் வாழ்த்துகின்றேன்.

நேரிழை நற்றோளும் தங்கள் நெடுந்தோளும்
எந்தமிழ் அன்னைக்கும் நாட்டுக்கும் மக்கட்கும்
தந்த பெருஞ்சீர் அளக்கத் தகாதென்றே
வாய்விட்டுக் கூறுநாள் வந்தெய்தின் இவ்வாழ்க்கை
காய்விட்டு நன்றாய்க் கனிந்ததென நானுரைப்பேன்.
அந்நாளை நோக்கி அறஞ்சேர் நடையிடுங்கள்!
எந்நாளும் வாழ்க இனிது!

-1969

## 152 சி. இராமச்சந்திரன் - பார்வதி.

பேரன் புடையீர்!

வணக்கம் பிறங்குதிரு
வள்ளுவ ராண்டு, வயங்குஈரா யிரத்தொன்று,
விள்ளுகின்ற வைகாசி என்னும் விடைத்திங்கள்,
இருபத்து நான்காம்நாள் எழுந்த முழுத்தத்தில்,
திருவொத்து வாழும் திருச்சிராப் பள்ளிக்
கருவைத் திருநகருள், காலிட்ட பந்தரில்
இருங்கொண்ட மரபினோர் இராம சாமியின்
பெறலருங் செல்வி பார்வதி தன்னைப்
பால்வழி யறிந்து பயில்வறத் தெளிந்து
நூல்வழி யொழுகிய நுண்மையோர் அமர்ந்த
மன்றினுள் வைத்து மணங்கொள் நிகழ்வையும்
என்றும் யாம்புகும் இனியஇல் லறத்தையும்
நின்று பரவவும் நீடுமணம் கொழுவவும்
அன்றுயிர்த் தெழுந்து ஞாலத்து அறந்தூவும்
செந்தமிழால் வாழ்த்திச் சிறப்பு செய்தற்கே
வந்தருள வேண்டி வணங்கும், தமிழன்பன்,

-1970

## 153 நாவை.சிவம் - தாமரை முதல்மகன் சிவ.தமிழ்க்கதிரவன் பிறப்புக்கு வாழ்த்து!

**'நாவை சிவம்'** - எனும் நற்றமிழ் மகற்குத்
**'தாமரை'** ஈன்ற **'தமிழ்க்கதி ரவன்'**, எனும்
தலைமகன் வளர்ந்து தண்டமிழ்க் கல்விப்
புலமையும் ஆங்கிலப் புதுமையும் நிரம்பிப்
பிற்றைத் தமிழகம் பெருஞ்சிறப் பெய்தக்
கற்றன வெல்லாங் கடைப்பிடித் தொழுகிச்
சான்றோர் அவனைச் 'சான்றோன்' எனுமா
றான்ற பெரும்புகழ் அமைந்து, வா ழியவே!

-1971

## 154 நாவை.சிவம் - தாமரை மகள் தமிழ்மலர் பிறப்புக்கு வாழ்த்து!

நாவை சிவம்,தா மரை சிவம் நன்கு பெற்ற
பூவை **'தமிழ்மலர்'** பூத்ததே - பாவைக்குச்
செந்தமிழ் அன்னை சிறக்கத் துணைநிற்பாள்
எந்தமிழ் பேணுக என்று!

-1972

## 155 அ.தெ. தமிழநம்பி - மலர்க்கொடி.

தமிழ நம்பி!
எமை, உயிர்ப் பிக்கும் இனிய உளங்களில்
ஒன்று, தமிழ நம்பியின் உள்ளம்!
என்றும் தமிழ்நலம் பேணி இயல்வது!

எமக்குத் துணையாய் இறைவன் அனுப்பிய
இரண்டோர் உயிர்களுள் இவருயிர் ஒன்று!

எண்ணிய வுடன், உயிர் இனிக்கும் ஒளிமுகம்!
தண்ணிய பணிவுரை! தவறிலா நன்னடை!
இத்தகு நல்லுயிர்க் கில்லறத் துணையாய்
ஒத்த மலர்க்கொடி ஒன்று வாய்த்தது!

மலர்க்கொடி தானும் மணித்தமிழ நம்பியும்
பலர்க்கொரு காட்டென இல்லறம் பயிலுக!

எந்தமிழ் பேணுக! இனநலங் கருதுக!
செந்தமிழ் நாட்டை விடுதலை செய்யுந்
தடந்தோள் மறவரை ஈன்றுபுறந் தருக!
பொருந்திய பன்னலம் பொலிய
அருந்தவ நெஞ்சால் அமைய வாழ்த்துதுமே!

-1972

## 156 அரசிறைவன் - கதிர்மதி.

அன்னைத் தமிழ்க்கும் அருந்தமிழ்நன் னாட்டுக்கும்
தன்னைக் கொடுத்த தனித்தமிழன்! - என்னை
மனங்கொண்டு, யான்செய்யும் மாசற்ற தொண்டின்
இனங்கண்டு பாங்கிருக்கும் ஏந்தல்! - முனங்கொண்ட
பீடழிக்கும் ஆரியத்தைப் பேதலிக்கச் செய்ததனின்
கூடழிக்கும் கொள்கைக் குணக்குன்று! - பாடழியா
ஆண்மை வினையன் **அரசிறைவன்**; அன்னவற்கும்
காண்பரிய செல்வி **கதிர்மதிக்கும்** - மாண்புநிறை
நல்லோர் மனமகிழ, நட்டோர் உளங்களிக்க
எல்லோரும் வந்தே இணைவாழ்த்த - சொல்லார்க்கும்
மன்றல் நனிநிகழ்ந்து மல்கியதே பேரின்பம்!
குன்றல் இலாது குலந்தழைக்க! - என்றென்றும்
தாய்த்தமிழ்க்குத் தொண்டுசெய்து
தண்டமிழ்நா டோங்கிடவே
வாய்த்தமிழ்தாய் ஈங்கிருக்க வாழ்ந்து!

-1974

## 157 முத்தையன் - அரசிறைவி.

அதிர்தமிழ் நந்நாவால் ஆய்ந்ததமிழ் காக்கும்
கதிர்தமிழ் வாணன் களிப்போ,டெதிர்தாங்கி
அன்பிளவல் முத்தையன் ஆன்ற அரசிறைவிக்
கின்பமணம் கொண்டார் இனிது!

கொண்டவர் வாழ்த்துதும் கொண்டவர் வாழ்த்துதும்
உண்டவர்க் கின்னலம் ஊற்றாய்ப் பெருக்குமெஞ்
செந்தமிழ் உள்ளுயிர்த்த லால்!

உற்றவர் வாழ்த்துதும் உற்றவர் வாழ்த்துதும்
கற்றவர்க் கின்பம் கனியப் பொழிவிக்கும்
நற்றமிழ் உள்ளியங்க லால்!

சேர்ந்தவர் வாழ்த்துதும் சேர்ந்தவர் வாழ்த்துதும்
சோர்ந்தவர் நெஞ்சையும் சோரா துயிர்ப்பிக்கும்
பூந்தமிழ் ஆங்கிருத்த லால்.

-1976

## 158 கோ. இளவழகன் - வளர்மதி.

உரத்த நாடென்றன் உயிரில் தோய்ந்தது!
அரத்தக் கலப்பென ஆங்குயிர்த் திருக்கும்
உண்மை உளங்கள் ஒன்றிரண் டிற்குள்
திண்மை உணர்வும் தேர்ந்த கொள்கையும்
இன்பத் தமிழ்க்கும் எனக்கும் உதவும்
அன்புச் செறிவும் அமைந்திருக் கின்ற
இளவழ கன்எனும் ஏந்தலுக் கிருக்கும்
உளவழ கென்னால் உணர்த்துவ தரிது!

அத்தகு அருமைத் திருவுள் ளத்துடன்
ஒத்தகு புதுமை உள்ளமொன் றிணையும்
திருமண விழாவோ தீந்தமிழ் மணக்கும்
பெருமண விழாவாம்! பீடுசேர்ந் தியங்கும்
அவ்விழா தன்னில் ஆருயிர் போலும்
செவ்விய அறிவும் அன்புச் செழுமையும்
கொண்ட உளங்கள் கூடுவ தென்னில்
கண்ட விழிக்கோர் காட்சியும் வேண்டுமோ?

உறையெழி லெல்லாம் உளத்துத் திரண்டவோர்
இறையெழில் என்னும் இணையிலா ஏந்தலும்
முரசறை வதுபோல் முத்தமிழ் முழக்கம்
அரசிறை வனெனும் ஆன்ற அறிஞனும்
ஒன்றிய உளங்கள் ஓரா யிரமும்
நன்றிப் பெருக்கொடு நாடிவந் திணைந்து
வாழ்த்துவ தென்னில் வரவிய லாவென்
காழ்த்த உளமும் கலந்தினி தாங்கு
வந்திருந் தவர்க்கு வாழ்த்துரைக் காதோ?
செந்தமிழ்த் திருவெலாம் சேர்ந்த திருமண
நிகழ்ச்சியில் என்னுடைய நெஞ்சமும்
புகழ்ச்சி கூறிப் பொலிவுற வாழ்த்துமே!

-1976

## 159 புலவர் சிவசண்முகம் - செல்வி கலாவதி.

வெப்புமனம் வினைக் கோணல் விரகுநிறைந் தெங்கும்
வீணர்களே பெருகிவரும் துயர்மிகுமிந் நாளில்
எப்பொழுதும் தமிழ்நினைக்கும் இனியதிரு வுள்ளம்
எந்தமிழர் நலங்கருதும் தொண்டுணர்வு கொண்ட
ஒப்பரிய சிவசண் முகப்புலவர் என்பார்
ஒண்டொடியாம் கலாவதியை மணக்கின்ற போழ்தும்
செப்பரிய தமிழ்த்தொண்டாய் நூறாசி ரியமென்
செந்தமிழ்நூல் வெளியிட்டுப் பெரும்பெருமை கொண்டார்!

அன்னவர்தம் உளம் வாழ்க! தமிழ்நினைவு வாழ்க!
ஆற்றுகின்ற இல்லறமும் நலம்நிறைந்து வாழ்க!
பொன்னலமும் புகழ்நலமும் ஒருங்குவந்து சேர்ந்து
பொதுநலமும் நனிவாழ்க! பொலிக அவர் தொண்டு!
சொன்னலமும் பொருள்நலமும் புலநலமும் பெற்றுச்
சோர்வின்றி ஒளிமல்கும் அறிவுநலம் வாய்ந்து
பன்னலமும் அவர்பெறுக! பல்குகபே ரின்பம்!
பைந்தமிழ்போல் புலவரவர் தமிழ்க்குடும்பம் வாழி!

-1979

## 160 முத்துப் பாண்டியன் - மலர்விழி.

எந்தமிழ்த்தாய் வீற்றிருக்கை ஏற்ற தமிழ்நெஞ்சம்
செந்தமிழ்ப்பா யாக்கின்ற சீர்வாயும் - வந்தவர்க்கே
ஈத்துவக்கும் பண்பும் எழில்முத்துப் பாண்டியனைக்
காத்துவக்கும் வாழ்வுக் கலம்!

நல்முத்துப் பாண்டியனும் நல்ல மலர்விழியும்
இல்ஒத்த நல்லறத்தை ஏற்றார் - கல்லொத்த
வல்லுறுதி நெஞ்சங்கள் வாழ்கவென் வாழ்த்தினர்
சொல்லுறுதிச் சான்றோர்கள் சூழ்ந்து.

பாவல னாம்முத்துப் பாண்டியனும் பாண்டியனை
ஆவலால் கைப்பிடித்த அல்லி மலர்விழியும்
மேவலுறும் இல்லறமும் மேம்பட்டு வாழ்ந்துயர்ந்து
காவலாய் நிற்கதமிழ் காத்து.

-1979

## 161 ஈரோடு பெரு.தமிழ்வேந்தன் - பூங்கொடி.

பீடுதமிழ் காக்கும் பெருதமிழ் வேந்தனொடு
கூடுகின்ற பூங்கொடியாள் கொட்பின்றி - நீடுகுறள்
இல்லறத்தின் இன்பம் இனிய பொருளின்பம்
நல்லறத்தின் துய்க்க நயந்து.

-1981

## 162 பேரா. ஆறு. அழகப்பனார் மகள் திருமண வாழ்த்து!

வீறுதமிழ் வளர்க்கும் வியன்றமிழ் அறிஞர்
ஆறுஅழ கப்பரின் அருமைச் செல்வி
காவிரி நங்கையும் கண்ணனும் கூடும்
பூவிரி மணமகிழ் பொற்புடைத் திருமணம்
இனிதுநிறை வேறி இல்லறம் புதுக்கித்
தனிநலம் பெற்றுத் தமர்நலம் விழைந்து
செந்தமிழ் மொழியும் செழித்தநல் இனமும்
நந்தமிழ் நாடும் நலம்பெற உழைத்து
வளம்பெறு வாழ்வுடன் வாழ்வாங்கு வாழ
உளம்நிறை உணர்வுடன் உவப்புற வாழ்த்துவோம்!

-1982

## 163 இராணி - சந்திரன்.

பெரியார் தொண்டர் சக்தி மோகனின்
அருமைச் செல்வி அரசித் திருமகள்

மலேசியத் தொண்டர் அரங்கையா அவர்களின்
குலநலத் தோன்றல் குணந்திகழ் (சந்திரன்)நிலவன்

இருவரின் திருமணம் இனிதே நடந்து
பெருமையிற் பொலிந்து பீடு பெறுகவே!

இனநலங் கருதும் இருபெருந் தலைவர்தம்
இனவழித் தோன்றல்கள் இருவரும் இணைந்து

தமிழ்மொழி சிறக்கவும் தமிழினம் வாழவும்
தமிழ்நிலம் தன்னர சுரிமை தாங்கவும்

மூச்சால் உயிரால் முழுஉடல் உழைப்பால்
பேச்சால் பெருந்தொண் டாற்றிப் பெரும்புகழ்

சிறந்து விளங்கிச் சீரொடு வாழ்ந்திட
நிறைந்த நெஞ்சொடு நீடுவாழ்த் துவமே!

-1983

## 164 அறிவுச் செல்வன் - கல்யாணி

அறிவுச் செல்வன்,கல்யாணியோ
டகம்பொருந்தினன் வாழ்கவே!
செறிவுத் தமிழும் செழித்ததங்கே!
சிறப்பும் நலமும் சூழ்கவே!

நினைவும் செயலும் கமழ்ந்தினித்தன!
நெடிய வாழ்வும் மலர்ந்தது!
தினையும் தேனும் பிசைந்ததைப்போல்
திருவும் உருவும் கலந்தன!

அறத்தின் வாழ்வை அவர்கள் ஏற்றனர்,
ஆயிரம் ஆண்டு நிலைத்திட!
புறத்தின் காட்சி மறைந்து போனது,
புலன்கள் இன்பம் விளைத்திட!

மகிழ்ச்சிப் பூக்கள் அரும்பவிழ்ந்தன!
மலர்ந்த கொடியும் நிறைந்தது!
புகழ்ச்சி மொழியில் செவி குளிர்ந்திடப்
புதுமை இன்பம் உறைந்தது!

இளமை அருவி, தென்றல் குளிரில்
இணைந்து பொங்கி அவிழ்ந்தது!
வளமை! இனிமை! அமிழ்தச் சுவைகள்!
வாழ்க வாழ்க வாழ்கவே!

-1985

# நூல்கள் அணிந்துரை

## 165 மல்லிகை - மதிப்புரை!

('மல்லிகை' என்ற கையெழுத்து இதழுக்கு)

பூக்களைக் கண்டால் உள்ளம்
பூரிக்கும்; அதினும் வெள்ளைப்
பூக்களோ நம்மைக் கண்டு
புன்னகை செய்யும்; வெள்ளைப்
பூக்களில் மல்லி கையே
பொலி வதாம்; ஆனால் மல்லிப்
பூக்களோ வாடிப் போகும்
போகாதிம் மல்லிகைப் பூ!

.... மணத்தி னோடே
.... பூக்கள் மதுவைத் தேக்கும்!
.... இனிமைத் தேனோ!
.... வண்டு நக்கத் தீரும்!
.... பூக்கள் தேனைத்தந்து
.... பொலிவினையிழக்கும்! ஆனால்
.... கண்போல் உன்றன் நீரா
டும் மலர்

கனித் தமிழ் நாடு பண்டைக்
கன்னிநா டாகவேண் டின்
தனித்தமிழ் வேண்டு மன்றோ
தவறாதிம் மலரை
இனித்தமிழ் மொழியென
எழுதுவாராகில் தமிழால்
தனித்தமிழ் நாடு மொழி....
ஏதையம்? மேலும் செய்!

-1948 (?)

## 166 சுப்புரத்தினக் கவிஞன் பாரதிதாசற்கிப் படைப்பு !

போற்றியென்றும் பாவாலே
பூக்குந் தமிழ்க்காவைப் பாவாலே எந்நாளுங்
காக்குந் தமிழாளுங் காவலன் தேக்கமுறுஞ்
சீரதிகஞ் சேர்புலமைச் சுப்புரத்தி னக்கவிஞன்
பாரதிதா சற்கிப் படைப்பு.

-1948 (?)

## 167 கொய்யாக்கனி' நூலுக்குப் படையல்!

பன்மொழி இலக்கணப் பரவை குளிதெலா
நன்மொழி எனப்படும் நானில மொழிகளுள்
இன்மொழிப் பரலீ தெனக்கால் நிறுத்திய
தென்றமிழ் வாணர்ஞா. தேவநே யர்க்குப்
படையல் செய்தனன் பணிவொடும்
அடையும் மகிழ்வொடும் அவர்மா ணவனே.

-1956

## 168 தென்மொழி இதழின் முகப்புப் பாடல்!

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

- 1959

## 169 'தென்மொழி' முதல் தொகுப்பிற்கு முன்னுரை!

மாலிருக்கும் நெஞ்சிற்கு மருந்தி ருக்கும்!
மலைத்திருக்கும் உளத்திற்கும் செழிப்பி ருக்கும்!
வேலிருக்கும் தோளார்க்கு வீறி ருக்கும்;
வித்திருக்கும்; விளைவிருக்கும்; செந்தமிழ்த்தீம்
பாலிருக்கும்; அன்பிருக்கும்! தமிழர்நாட்டின்
மேலிருக்கும் இருள்விலக்க ஒளியி ருக்கும்!
மேன்மையுறுங் கையிலிந்நூல் இருக்கு மன்றோ!

பல்சுவைசேர் கட்டுரையும் பாட்டும் உயர்பண்பின்
மல்குசுவைத் தேன்கதையும் மற்றும் தமிழர்க்கே
நல்கிவருந் தென்மொழியின் நல்ல தொகுப்பென்றால்
பில்கிவருந் தேனுமதன் பின்!

1960

## 170 'பாவியக் கொத்து' நூலுக்குப் படையல்!

பெற்றீர்; மகிழ்ந்தீர்; பெயரிட்டீர்; பீடுதமிழ்
கற்று மகிழநறுங் கல்விதந்தீர்; வற்றாத
அன்புமிகக் காட்டினீர்; அன்றன்றும் பாராட்டி
என்பும் நெகிழ எனைவளர்த்தீர்; பின்பு தமிழ்த்
தொண்டுசெயக் கண்டுந் துணைநின்றீர்; தூயவுளங்
கொண்ட **துரைசாமி, குஞ்சம்மாள்** உங்கட்கே
பூப்படையல் வாடிவிடும்; பொன்படையல் மங்குமென்று
பாப்படையல் செய்தேன் பணிந்து!

-1962

## 171 தென்மொழி 'நூல்நிறை' பகுதிக்கு முன்னுரை!

அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்திடலால் மேலாமோ? முச்சில்
புடைத்துலையி விட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு?

-1964

## 172 தமிழ்ச்சிட்டு இதழின் முகப்புப் பாடல்!

இன்றைய பயனோ நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

- 1966

## 173 'மறைந்து வரும் தமிழ்ச்சொற்கள்' பகுதிக்கு முன்னுரை!

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனால்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம், இனியேனும் செந்தமிழை
நன்றாகப் பேணிவர நாம்முனைவோம்; நாற்புறமும்
சென்று மறைந்துவரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்றுதிரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்றம் பயின்றிடுக,
செப்பம் மொழிக்குச் சிறப்பு!

- 1966

## 174 தென்மொழி பாட்டரங்கப் பகுதிக்கு முன்னுரை!

ஆர்விடுத்தா லென்ன? இங் கார்போற்றி னாலென்ன?
சீர்வழுவா யாப்பும் செழித்த தனித்தமிழும்
எந்தமிழர்க் குள்ளொளியை ஏற்றும் உயர்கருத்தும்
முந்தியிங் கில்லா முழுச்சிறப்பும் கொண்டு, அடிமைப்
பூட்டறுக்க வல்ல புதுமை ஒளிர் பாட்டே
பாட்டரங்கம் ஏறுகின்ற பாட்டு!

-1967

## 175 'குறள்நெறி' இதழ்க்கு வாழ்த்து!

மொழிஆய் இலக்குவன் முத்தமிழ் காக்க முனைந்தெழுந்த
வழிஆய்ந் தெடுத்து வருதுயர் மேன்மேல் வரினுமினி
விழிவாய்ந் துடல்வாய்ந் துயிர்வாய்ந்
தற்றை வியன்றமிழின்
பழிமாய்ந் திடச்செய் குவனென்
றெழுந்தான் பயன்மகனே! 1

முறைகலை கற்பவன்; முத்தமிழ் ஆய்பவன்; மூண்டபகைக்
குறைமலைந் தோட்டித் தமிழ்க்குலம்
வாழக் குறள்நெறியென்
றறைதலுற் றானதற் காவி உடல்பொருள் ஆகவென்றான்;
மறைமலை என்னும் இலக்குவன் பெற்ற மணிமகனே! 2

கள்ளமி லாத்தமிழ்க் காதலுண் டுண்மைக் கருத்துமுண்டு;
வெள்ளமெ னத்தமிழ் வீறு முழக்கும் விறலுமுண்டு;
கொள்ள வெனத்தகு கொள்கையென்
றொன்றினைக் கொண்டுவிட்டால்
தள்ளவி லாத்தகை யாண்மையுண்
டன்னான் தகுதிறற்கே! 3

இன்றிருக் குந்தமிழ் நாட்டினர்க் கெந்தமிழ்ப் பற்றெழவே
அன்றிருந் தார்தமிழ் ஆய்ந்தது
போல்அர சாண்டது போல்
ஒன்றிரண் டன்றொரு நூறு குறள்நெறி ஓங்கிடினும்
நன்றுநன் றென்பேன் நனிவாழ்க வென்பேன் நலந்தரவே! 4

மாணவர் தந்தோள் மலையா
நெடுந்தோள்! மறல்மலிதோள்!
மாணவர் ஆண்மை மறிக்கொணா
ஆண்மை! மறைவிலாண்மை
மாணவர் உள்ளம் மடையுடைவெள்ளம்!
மலைவிலுள்ளம்!
மாணவர் ஆர்க்கும் குறள்நெறி கண்டான் மறைமலையே! 5

ஏலும் வகையெலாம் இன்றே
முனையும்! எழிற்றமிழ்த்தாய்
மேலும் சிறப்புற மேம்பணி யாற்றும்! மிளிர்கலைகள்
நாலும் உரைக்கும்; நலிந்த தமிழர் நலம்பெறவே
கோலும் வழியொன்று; மறைமலை கண்ட குறள்நெறியே! 6

தூக்கி நிறுத்தும் துவளுமெங் காளையர் தோள்களையே!
தாக்கி முரித்திடும் வெம்பகை சூழ்ந்த தருக்கரையே!
ஊக்கி வளர்த்திடும் அற்றைச் செழுந்தமிழ் ஒண்கலையே!
பூக்குந் தமிழ்க்குலத் திற்குக் குறள்நெறி புத்தெருவே! 7

-1967

## 176 'ஐயை' நூலுக்குப் படையல்!

இன்பினும் துன்பினும் எனையக லாமல்
அன்பினும் பணியினும் அயரா துதவிடும்
பெண்ணின் நல்லாள் தீதிலாப் பேதை
தன்னியள் மனைவி தாமரைக் கிதுவே!

-1968

## 177 'எண்சுவை எண்பது' நூலுக்குப் படையல்!

பாவேந் தர்எனும் பாரதி தாசனார்
நாவேந்தி வந்த நற்றமிழ் அமிழ்தம்
செத்துக் கிடந்த செந்தமிழ் மரபைப்
புத்துருக் கொடுத்துப் புதுக்கிய பொழுதில்
எண்சுவை எண்பது எனுமிவ் விலக்கியம்
பண்சுவை மணமும் பரப்பிய தாகலின்
எவரடித் துரைக்கினும் இணையிலா,
அவரடிக் கிதுமோர் அணிமலர் ஆகுமே!

-1969

## 178 'அறிவு' இதழ்க்கு வாழ்த்து!

தமிழ்க்குடி புகுந்த நெஞ்சம்;
தனித்தமிழ் முழக்குஞ் செவ்வாய்;
தமிழ்க்கொடி தாங்குந் தோள்கள்;
தமிழ்நலம் புனைந்த கைகள்;
தமிழ்க்குடிச் சிறப்பு நோக்கி
இராப்பகல் நடக்குங் கால்கொள்
தமிழ்க்குடி மகனார் போக்கும்
தாளிகை அறிவின் ஊற்றே!

நினைவாற்றல் தோய்ந்த வேழம்;
நிலைப்பாற்றல் வாய்ந்த வேங்கை;
வினையாற்றல் பூண்ட தேனீ;
விளைவாற்றல் மிக்க நன்செய்;
புனைவாற்றல் கொள்சி லந்தி
போல்தமிழ்க் குடிம கன்றான்
அனையாற்றல் கொண்டு போக்கும்
'அறிவு' இதழ் நிலைத்து வாழ்க!

-1970

## 179 தேவநேயப் பாவாணரின் "திருக்குறள் தமிழ் மரபுரைச்" சிறப்புப் பாயிரம்!

பத்துரைக்கு மேலும் பரிமே லழகரோ
டொத்தவுரை நூறுசெய்தும் ஒன்றாமே - மெத்ததிரு
வள்ளுவனார் நூலுக்கு வாய்மை உரைசெய்தார்
தெள்ளுதமிழ்ப் பாவாணர் தேர்ந்து. 1

நுண்ணிய நூலறிவும் நுண்மாண் நுழைபுலமும்
திண்ணிய கேள்வியுந் தீர்தலால் - எண்ணிய
தெய்வத் திருக்குறட்குத் தேவநே யன்செய்நூல்
உய்யக் கிடைத்த வுரை. 2

ஆர்ந்த தமிழ்மொழியோ டாரியமும் ஆங்கிலமும்
ஏர்ந்த பிறமொழியும் ஏய்வுறவே - ஊர்ந்தமதித்
தேவநே யன்செய் தெளிந்த குறளுரையால்
காவனே ருற்றதெனக் காண். 3

சொல்லும் பொருளுந் தொகவாய்ந்து தொல்வரலா
றொல்லும் பலவகையா லோர்ந்துணர்ந்து - வெல்லும்
படியுரைத்த பாவாணர் பாரித்த வாற்றற்
கடியுரைத்தல் யார்க்கும் அரிது. 4

இனம்பேணற் கென்றெழுந்த வின்குறட்குத் தந்தம்
மனம்போன வாறு மயங்கிப் - புனைந்துரைத்த
பான்மை தவிர்த்துநூற் பாங்குரைத்தார் பாவாணர்
மேன்மை பிறங்கிற்று மேல். 5

நரிசூ ழுறவரிமா நல்கிதென்றே யற்றைப்
பரிமே லழகர் பயந்துரைத்தார் - ஒற்றைப்
புரிமேல் கரிநடந்த பொய்யைப்பா வாணர்
எரிமே லெறிந்தா ரிகழ்ந்து. 6

வல்லார்ந்த செந்தமிழில் வாய்ந்த திருக்குறள்போல்
சொல்லார்ந்த மற்றவற்றில் சொல்லரிதாம் - சொல்லார்ந்த
செந்தமி ழுள்ளுஞ் செயவரிதாம் பாவாணர்
முந்துரை செய்நூன் முறை. 7

செந்தமிழுஞ் செங்கதிரால்; சீர்சால் திருக்குறளும்
அந்தமிழால் வீசும் அணிமதியால்; அந்தமதிக்
கெட்டிநடை யிட்டவறி வேற்றமே பாவாணர்
ஒட்டிநடை யிட்ட உரை. 8

செப்பா லடித்தவொரு காசுக்குச் செந்தமிழை
எப்பாலும் விற்கும் இழிஞரிடை,முப்பாலுக்
கொத்த மரபுரையொன் றோதினார் பாவாணர்க்
கொத்த கடனென் றுணர்ந்து. 9

தேவநே யன்என்னுந் தேர்ந்தமதிப் பாவாணர்
தேவத் திருக்குறட்குத் தீர்ந்தவுரை - மேவியபின்
மற்றோர் உரைசெயவும் மானுவரோ? மானுவரேல்
கற்றோர் நகைப்பர் கலித்து. 10

-1970

## 180 கற்பனை ஊற்று - படையல்!

அன்பிருந்த நெஞ்சம்!
அகலாதொன் றாய்வளர்ந்து,
தென்பூட்டி என்னைத் தெளிவித்த நல்லதுணை!
முன்பிறந்தாள்; வாழ்ந்தாள்!
முழுவாழ்க்கை வாழ்வதற்கு
முன்பிறந்தாள்! - "உன்றன்
முதுமையெல்லாம் தாண்டிவந்து,
பின்பிறப்பாய்"- என்றெனக்குப் பேறு தந்தாள்!
யானவட்குப்
பின்பிறப்பாய்த் தோன்றியதால்
பின்பிறப்ப தென்றுலகில்
நின்றிருந்து விட்டேனோ?
நேர்ச்சி புரியவில்லை!
அன்றிருந்தாள் போல "அருகிருக்கின் றாள்" - என்றே
இன்றும் இருப்பேன்! இராசம்மாள் தூய்நெஞ்சோ
டொன்றிக் கலந்ததிவ் வூற்று!

-1971

## 181 தமிழ்நூல் - பாயிரம்!

முப்புடை முந்நீர் முழக்கிடைப் படுத்த
தெப்பத் தன்ன திகழ்ஞா லத்தின்
தொன்னிலப் பரப்பெனத் துவரக் காட்டிய
கன்னிக் கண்டத்துக் கட்புலந் தோன்றிப்
புகுதிரை நிவந்த வடமலைப் பொழிலகத்து
உலாவிப் படர்ந்தடி யூன்றி யுலகெலாம்
அளாவிய தீந்தமிழ் அஃகித் திசைந்து
கிழக்கரை நின்ற வழக்கொடு முரணித்
தொண்டுபடு திராவிடந் தோன்றித் தன்வயின்
பண்டுநிலை புதுக்கப் பருவுறுங் காலை,
உணர்வது வேலி உரையது வரையெனா
உரையது சீரே உறுவினைத் தகவெனா
உறுவினைந் தகவின ஒத்தது பயனெனா
பயனிறை வின்றிப் பாரும் பாழெனா
முன்னி நயனிறை மூளல் வேண்டி
மன்னிய புலவன் சரவணத் தமிழன்
தேவ நேயன் திருத்திய தெளிதமிழ்க்
கேவலன் றானென வெடுத்துக் காட்டி,
எழுத்துமுதல் சொல்லா உறுப்புபுணர் பொதுவா
ஒழிபுதொட ரீறா வோரேழ் இயலுள்
காப்பிய நூலொடு கழகம் பயின்று
யாப்பிற் றொகுத்த காப்புடைத் தமிழ்நூல்
புதுவரி வெடுப்பினும் புதுமொழி வழக்கினும்
எதுமுறை நிலைப்பென விறப்ப வெண்ணா
வோரிரு கொள்கை உரைத்தா னெனினும்
பாரவ னூற்குப் பராவுக பயனே!

-1972

## 182 இறைக்குருவனாரின் 'வலம்புரி' இதழ்க்கு வாழ்த்து!

நிலம் பெரிது; வளம் பெரிது; நிலத்தைச் சூழ்ந்த
நீல்வண்ணக் கடல்பெரிது; கடலில் சென்ற
கலம் பெரிது; புகழ் பெரிது; தமிழர் வாழ்ந்த
கதைபெரிதே - என்றாலும் இன்றைக்குற்ற
சிலம்பரிதாந் துயர்பெரிதே! குனிந்து வாழுஞ்
சிறுமைநிலை மிகப்பெரிதே! - இவற்றுக் கெல்லாம்
**வலம்புரி**தன் முழக்காலே முடிவு காணும்;
வாழ்வுதரும் தமிழ்க்கெனவே வாழ்த்துவமே!

-1972

## 183 முனைப்புடன் பேணுக!

தென்மொழி காத்த நெடுஞ்சேர லாதனென்
திறல்மிகு மறவரிங் கெழுந்து,
தென்மொழி யணியில் தீச்சுடர் எனுமோர்
தீந்தமிழ் இதழினைத் தொடங்கிப்
புன்மொழி யடர்த்துப் புலைமொழி வீழ்த்திப்
புதுநடை நடந்திட நினைந்து,
நன்மொழி, இன, நிலம் காத்திட முனைந்தார்!
நாமவர் விறல்வாழ்த் துவமே!

ஓச்சடர்ந் தெழுந்தால் பகைவர்கள் ஓடும்
உயர்தமிழ்ப் பேரினம் இன்று
பேச்சடர்ந் திருக்கச் செயல்மறங் குன்றிப்
பிணமெனக் கிடந்திடும் வேளை,
பாச்சுடர் எழுத்தால் தீச்சுடர் கொளுத்திப்
பயனுறும் வினைசெய முனைந்து
மூச்சடர்ந் தெழுமிவ் விதழினைத் தமிழர்
முனைப்புடன் பேணுக நன்றே!

## 184 செங்கை அழகனின் 'ஆயிரம் மலர்கள்' பாடல் நூலுக்கு ஊக்கவுரை.

பண்டை யிருந்தே பாவலர்க்கும் பூக்களுக்கும்
பெண்டிற் கிருக்கும் பெருந்தொடர்பை விஞ்சுமா
றுண்டு தொடர்பு; இங் கோரா யிரமலரைக்
கண்டு நுகர்ந்து கவினுரைத்தார் பாவலர்கள்!
செங்கை அழகன் சிறந்த தமிழுணர்வில்
பொங்கி யெழுந்த புதுமுயற்சி இப் படைப்பு!
பாவலரை ஊக்குவித்துப் 'பாடுமின்கள் பூக்கள்' என்றார்
ஆவலினால் செந்தமிழுக் காக்கமெனப் பாவலரும்
கோட்டுப் பூ, மற்றும் கொடிநிலநீர்ப் பூக்களெனப்
பாட்டிலக்கி யத்திற்குப் பன்மணத்தைப் பூசிவிட்டார்!
ஊடே இலைசிலவும் உண்டெனினும் நல்லமலர்க்
காடாகும் இத்தொகுப்பு! கண்டு நுகர்ந்திடுக!
நல்ல முயற்சி! நலம்நினைந்து போற்றிடுக!
வல்ல புலவர்க்கெம் வாழ்த்து!

-1974

## 185 'வண்ணச்சிறகு' இதழ்க்கு வாழ்த்து!

வண்ணச்சிறகு வலவன் உள்ளத்தின்
எண்ணச் சிறப்பை எடுத்து விளக்கி
மீண்டும் பறந்து தமிழின் மேன்மைக்கு
யாண்டும் உழைத்திட யாப்பும் உரையுமாய்ப்
பாடிக் களிக்குமாம்! பைந்தமிழ் வலவன்
தேடிக் கிடைத்தஓர் தீந்தமிழ்த் தொண்டன்!
ஈங்கிவர் முயற்சியும் இணையிலாத் தொண்டும்
நீங்கிடாக் கிடைத்த நெடுமழை, தமிழ்க்கே!
வலவன் வாழ்க! அவர் வண்ணச் சிறகும்
இலகுசெந் தமிழ்போல் யாண்டும் திகழ்கவே!

-1977

## 186 'தனித்தமிழ்' நூலுக்கு அணிந்துரை!

தமிழ்மொழித் திருவைப் பிறமொழித் திரிபால்
கமழ்மணம் நீக்கும் கயமையைக் கடிந்தும்,
பொருள்நலம் சிதைக்கும் புன்மையைத் தடுத்தும்,
அருள்நிறை **மறைமலை அடிகள்** தொடங்கிய
தனித்தமிழ் இயக்கத் தனிவர லாற்றையும்,
முனித்தெழுந் தறிஞர் கொள்கை முழக்கி
உலையாத் தொண்டால் உலகம் பரப்பிய
மலைபோல் முயற்சியின் மாண்பையும் விளக்கித்
தென்மொழிப் படையின் திறல்மிகு விறலோன்
புன்மொழி சூழினும் புதையா நெஞ்சினன்
**தமிழ மல்லனின் 'தனித் தமிழ்'** என்னும்
அமிழா உணர்வினால் ஆக்கிய இந்நூல்,
பல்வகைத் திறனொடும் பயன்மிகு குறிப்பொடும்
நல்வகை அமைப்பொடும் நஞ்சினார் நடுங்க
நனிவெளிப் பட்டது; நற்பயன் கொண்டது!
இனி, ஒளி பரப்பி எந்தமிழ் இயக்கம்
யாண்டும் பரவிட இந்நூல் உதவித்
தூண்டும் தமிழரைத் தூய்தமிழ் காக்கவே!

ஆரிய மொழியால் தமிழ்மொழி அடைந்த
பாரியக் கலப்பும் தமிழினப் பழிப்பும்
நீங்கிட உதவிய நெடுந்தகை அறிஞரும்
தூங்கிடா துழைத்த தொண்டரும், குழுக்களும்
எவரெவர் எவையெவை எனவகைப் படுத்தித்
தவறெதும் சூழாத் தகவுரை யோடு
**தென்மொழி மல்லன்** தீதறப் புனைந்த
இன்மொழி பயிலும் இனியநூல் இதுவாம்!

செந்தமிழ் மொழியின் முந்திய நிலையும்
வந்தவர் புகுத்திய வறுமொழிக் கலப்பும்
கலப்பு நிகழ்ந்த காலமும் கரணமும்
உலப்பால் தமிழ்மொழிக் குற்றபல் இழிவும்
கேடும் இவையெனக் கீண்டி விளக்கி,
நாடும் இனமும் மொழியும் நலம்பெற

எழுந்த தனித்தமிழ் எனுமிந் நூலினால்
விழுந்த தமிழினம் விழிப்புற் றெழுதலும்
இழந்த பழம்புகழ் இனிமேற் புதுக்கலும்
உழந்த பெருந்துயர் ஒதுக்கிச் சிறத்தலும்
நேர்ந்திடல் உறுதி! நெடும்பயன் வந்து
சேர்ந்திடல் உறுதி; தனித்தமிழ் சிறக்கவே!

-1978

## 187 பாவலர் முல்லைவாணனின் குழந்தைப்பாடல் தொகுதிக்கு மதிப்புரை!

சிங்கைவாழ் முல்லை வாணன்
செழுந்தமிழ் மொழியில் உள்ளம்
பொங்கிடக் குழந்தை கட்குப்
புதுப்பாடல் தொகுதி தந்தார்!
எங்குளார் தமிழர் அங்கே
இவர்பாக்கள் முழங்கும்! முன்னர்
மங்கிய வளங்கள் எல்லாம்
மலர்ந்திடும் தமிழர் வாழ்வில்!

வளர்கின்ற குழந்தை வாயில்
தாய்த் தமிழ் வளர விட்டால்
தளர்கின்ற தமிழின் நாட்டம்
தழைந்திடும் அன்றோ? நெஞ்சில்
விளைக்கின்ற தமிழு ணர்வால்
நல்லறம் விளையும் அன்றோ?
களர்நிலம் நன்செய் யாகக்
காண்பது பெருமை யன்றோ?

பாவலர் முல்லை வாணன்
பாடல்கள் எல்லாம் நல்ல
தூவளர் தமிழில் அன்பு
துலங்கிடச் செய்தல் உண்மை!
ஆவலால் குழந்தை கட்கே
அழகிய தலைப்பில் இன்பம்
மேவுறும் பாக்கள் தந்தார்!
மேன்மையுற் றென்றும் வாழி!

-1979

## 188 மலேசியப் பாவலர் பொன்.அன்பரசனின் ‘உதிரிப் பூக்கள்’ பாடல் நூலுக்கு மதிப்புரை!

‘உதிரிப் பூக்க’ளென் றொருபெய ரிட்டுக்
கதிரில் மணிகளாய்க் கருத்துகள் நிறைத்தே
ஆக்கம் மிகுந்திட அழகுத் தமிழில்
தேக்கிய தேன்குடம் திறந்தது போலப்
பொன்.அன் பரசன் புதுமை உணர்வொடு
நன்னறும் பாக்கள் நயந்திடத் தந்தார்!

தந்த பாக்களில் தனித்தமிழ் ஒளிர்ந்தது!
அந்தத் தமிழினில் அவரது நெஞ்சின்
தூய உணர்வு துளும்பி வழிந்தது!
மாயாக் கொள்கை மலையென நின்றது!
பீடுடை வாழ்க்கைப் பெருமிதம் தெரிந்தது!
நாடென இனமென மொழியென அவர்செய்
ஓலமும் அங்கே ஓங்கி ஒலித்தது!
கோலமெல் லாமும் செந்தமிழ்க் கோலம்!

சிற்சில இலக்கணப் பிழைகள் இடையிடைக்
கற்சில் கள்போல் கண்களை உறுத்தின.
ஏய்ந்திடும் அச்சுப் பிழைகளும் இருந்தன.
ஆயினும் ‘தென்மொழி’ அளாவிய நெஞ்சின்
உணர்வின் மிகுதியால் உழுவலன் பரசன்
புணர்த்த பாக்கள் ஆகலின் புசித்தேன்!
உதிரிப் பூக்களில் ஊறிய தமிழ்த்தேன்
எதிரி நாவினும் இனிக்கும் தகையது!
மலேசியப் பாவலர் பொன்.அன் பரசன்
குலாவிய தமிழால் இன்பம் கொழிக்கவே!

-1980

## 189 'அந்தமான் முரசு' கிழமையிதழாக மலர்ந்ததற்கு வாழ்த்து!

எந்தமிழ் மொழியின் ஏற்றம் கருதியும்
செந்தமிழ் இனத்தின் செழிப்பை நோக்கியும்
'அந்தமான் முர'செனும் அருமைத் தமிழிதழ்
பன்னீ ராண்டாய்ப் பயன்பெற வுழைத்து
நன்னருங் கிழமை இதழாய், நாமெலாம்
மகிழ்வுற மலர்ந்தது; மனம்மிகக் குளிர்ந்தது!
திகழ்வுறும் அதன்ஒலி திசையெலாம் பரந்தது!

ஒப்பிலா நம்மொழி உயர்வுற் றோங்கவும்
எப்புடைத் தமிழரும் ஒருங்கே இணைந்தோர்
உரிமைத் தமிழகம் உறுதியாய்க் காணவும்
அருமை இதழாம் 'அந்தமான் முரசு'
இந்நில வுருண்டையில் எங்கணும் ஒலிக்க!
என்னருந் தமிழருக் கினியதொண் டாற்றுக!

இலக்கணம் வழுவா திலக்கியம் இயற்றுக!
கலக்கமி லாமல் கருத்துகள் பொலிக!
எழலிலாத் தமிழருக் கெழுச்சி யூட்டும்
வழுவிலாத் தமிழின வரலாறு எழுதுக!

அடிமைத் தனத்தின் மிடிமை அகற்றுக!
குடிமைச் சிறப்பின் கொள்கைகள் நாட்டுக!
மொழி, இனம், நாடெனும் முப்படிக் கொள்கைக்கு
இழிவு வராமல் இராப்பகல் உழைக்க!

அந்தமிழ் இதழாம் 'அந்தமான் முரசு'ம்
அந்தமான் முரசின் ஆசிரி யர், சுப.
சுப்பிர மணியனார் சொல்லும் செயலும்
தப்பிலா தியங்கித் தாழ்வுற்ற தமிழர்க்கு

வங்கக் கடலின் வரலாறு ஆகுக!
எங்கும் அவர்புகழ் ஏற்றம் பெறுகவே!

-1980

## 190 'கவிதை' வாழ்கவே!

தீந்தமிழ்ப் பாவலர்! 'தெசிணி'யார் ஈன்ற
ஈர்ந்தமிழ்க் **'கவிதை'** எனும்பாட் டிதழாள்
பத்தோடொன்பது ஆண்டுகள் பயன்மிகு ஆண்டுகள்
முத்துப் பாடல்கள் முழங்கி, இருபதாம்
ஆண்டில் மகிழ்வோ டடிவைக் கின்றாள்!
நீண்ட நன்னடை, நெடும்புகழ் பெறுக!

புல்லியர் சிற்சிலர் புலமை யின்மையால்
பல்லியின் உரைபோல் பயனிலா வரிகளைப்
பாடலென் பெயரில் பற்பலவெழுதி
ஈடருந் தமிழ்க்கே இழிவுகள் செய்யும்
கயமை மிகுந்தவிக் காலத்தில், தெசிணி
நயமிகு மரபு நலிவுறா வண்ணம்
செந்தமிழ்த் தீம்பா செறிய இயற்றலும்,
அந்தமிழ்ப் புலவரை ஆங்குரு வாக்கலும்,
உளத்தைப் பெரிதும் உவகையில் ஆழ்த்தும்!
வளத்தின் இலக்கிய வறுமையைப் போக்கும்!

'கவிதை' இதழால், கவின்மிகு பாக்களால்
செவிகுளிர் விக்கும் தீந்தமிழ்ச் செழும்பணி
இன்னும்பல் லாண்டுகள் இனிது நடந்தே
மன்னுக! பெரும்பயன் மணித்தமிழ் பெறுக!
பாவலர் தெசிணியார் பைந்தமிழ்க்
காவலர் ஆகுக! 'கவிதை' வாழ்கவே!

-1981

## 191 ‘குறளும் பொருளும்’ நூலுக்கு வாழ்த்துரை!

மறையரசன் வள்ளுவன்செய் திருநூ லுக்கு
மாண்புரைகள் விரிவுரைகள் பலர்வ குத்தார்!
நிறையரச உரைகளென ஓரி ரண்டை
நிறுப்பார்கள் பெரும்புலவோர்! பிறவற் றுள்ளே
குறையுரைகள் கறையுரைகள் பலவும் உண்டு!
கொள்கைகளை மக்கள்நலம் கருதி யிங்கே
இறையரசன் குறட்பொருளைப் பாட்டினாலே
எடுத்தியம்பிப் பெருமைபெற்றார்; வாழ்த்துகின்றோம்!

உரைப்பாக்கள் பாநலமும் செழுஞ்சொற் கட்டும்
ஒட்பமுடன் தூய்தமிழும் செறிந்து நின்று,
வரைப்பாங்கு கொண்டிலங்கிக் கற்பா ருள்ளம்
வயப்படுத்தும் திறன்சான்று நிற்றல் கண்டோம்!
விரைப்பாரும் புனைவுலகில் புன்மை கூறும்
வெறுநூல்கள் பொலபொலென மொய்க்கும் போதில்
நிரைப்பாரும் அறநூல்கள் பேணு கின்ற
நிறைநெஞ்சப் புலமையினை வாழ்த்து கின்றோம்!

அடிமைமிகு காலத்தில் மதச்சார் பூட்டி
அன்றுரைத்த சிலவுரைகள் திருக்கு றட்கு
மிடிமைதரும் போக்குணர்ந்தே அறிவால் ஆய்ந்து
மேன்மைதரும் அறிவியற்குப் பொருந்து மாறு
குடிமைநலம் மேம்படுத்தும் உரைப்பா தந்தார்,
கொள்கைசேர் இறையரசன்! அவர்மு யற்சி
நொடிமையுற்றுக் கிடக்கின்ற தமிழினத்தின்
நோய்மைக்குத் தனிமருந்தாம்! வாழ்த்து கின்றோம்!

-1981

## 192 தமிழ்நிலம் இதழின் முகப்புப் பாடல்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

- 1983

## 193 எதிர்நீச்சல் நூலுக்குப் பாராட்டுப்பா!

தனித்தமிழ் நெஞ்சால் கற்பனையால்
தகுசால் கடவூர் மணிமாறன்
இனித்திடு பாக்கள் ஒருங்கிணைந்த
'எதிர்நீச் சல்'நூல் தொகுத்தளித்தார்!
பனித்துளி அளவிற் சிறுவடிவம்
பரந்துள வான்போல் கற்பனைகள்!
கனித்திரள் போலும் பல்சுவைகள்
கதையும் உண்டு! மிகமகிழ்ந்தேன்!

யாப்பினிலே சிறுபிழைக்கும் இடமில்லை; தமிழ்நடையில்
யாங்கேனும் தடையே இல்லை;
தோப்பினிலே படர்ந்திருக்கும் குளிர்நிழல்போல் ஆங்காங்கே
தூயதமிழ் கொஞ்சும் பாங்கில்
பாப்புதையல் கண்டதுபோல் பல்வகைப்பா கண்டுவந்தேன்
பளிங்குநன்னீர்ச் சுனைகள் போல!
காப்புதனித் தமிழுக்காம் கடவூர்நன் மணிமாறன்
கற்கண்டுப் பாடல் நூலே!
காதல்,தமிழ் அறம், பொதுமை எனுந்தலைப்பில்
கருத்துமிகக் கனிந்த பாக்கள்!

ஓதுதற்கோ மிகஎளிமை! உணர்தற்கோ
மிகவளமை! இனிமை! ஒன்றுந்
தீதில்லாத் தமிழ்த்தொண்டு! தீங்கில்லாச்
சுவைநலன்கள் திகழச் செய்தார்!
ஆதலினால் வாழ்த்துகின்றேன்! அன்பர்மணி
மாறன், எதிர் நீச்சல் வாழ்க!

-1983

## 194 விடியல் விதைகள் - நூலுக்கு வாழ்த்து!

நச்சுவிதை தூவுகின்ற
நயனில்லா எழுத்தாளர்
நாற்புறமும் மிகப்பெருகிக் கீழ்மையால்,
கச்சவிழ்ப்பும் கற்பழிப்பும்
கதைகளெனப் பாக்களெனக்
கணக்கின்றிப் பரப்பிவரும் நாளிலே,
மெச்சுகின்ற கருத்துகளை
மேன்மையுறுந் தூய்தமிழில்
மிளிர்கின்ற பாக்களிலே தூவியே
அச்சுவடி வாய், 'விடியல்
விதைகள்'எனத் தாமளித்தார்
அன்பர் மணிமாறன்! என்றும் வாழ்கவே!

நல்லமனம் நல்லஎண்ணம்,
நல்லதமிழ், நல்லநடை,
நல்லவளம், நல்லகருத் தாகவே,
வெல்லவருந் தீந்தமிழ்க்கும்
வீழ்ந்தஇனம், நாட்டினுக்கும்
வீறுதரும் நல்விளைவை ஊட்டவே,
வல்லவராம் பாவடிப்பில்,
வாய்மை யராம் தொண்டுணர்வில்
வாழ் கடவூர் மணிமாறன் தூ வினார்,
நல்ல 'விடி யல் விதைகள்'
நந்தமிழ்ப் பேரினத்தில்
நாற்றுவிட்டுப் பயிர்தழைத்து வாழ்கவே!

-1985

## 195 'ஏசுபிரான் பிள்ளைத்தமிழ்' நூலுக்கு வாழ்த்து!

இறைவருக்குத் தாயாகி எந்தமிழ்க்குச் சேயாகி
ஏந்திமலர் மார்ப ணைந்தே
குறைவறுக்குஞ் செழுந்தமிழில் தோதில்லாச்
சொற்புனைந்து
கொழுமரைவை குழைத்துப் பூசி
மறைவிலுறு பரம்பொருளை மனத்திலுறு நறும்பொருளாய்
மருட்கையின்றிப் பிள்ளைத்தமிழில்
நிறைவுறுத்த வந்தஅருள் செல்லத்து ரைப்புலவன்
நீணிலமேல் நீடு வாழ்க! 1

எழுத்தெழுத வறியாதான் ஏடெழுதல் மட்டின்றி
யாப்பெழுதும் கலிகா லத்தே
பழுத்தொழுகும் தேன்தமிழில் பயனெழுக முட்டின்றிப்
பாவன்மை பயிலக் காட்டிக்
கொழுத்தன்பிற் சுரத்தெழுந்த கொண்முடியை ஏசுபிரான்
குழந்தைக்குப் பிள்ளைத் தமிழில்
வழுத்துவந்த புலவன்அருள் செல்லத்து ரையிந்த
வையத்து நீடு வாழ்க! 2

தனித்தமிழில் உரையெழுதுந் தகவில்லார் பலர்வாழும்
தறிகெட்டத் தமிழ்ஞா லத்தே
இனித்தொழுகுங் கொழுஞ் சொல்லால் நறவூறுஞ் செம்பொருளை
எழுதரிய ஓவ மாக்கிப்
பனித்தமிழில் வாய்குளிரப் பயிலுசெவி உளங்குளிரப்
பாடியவர் நரம்பு பொலியக்
குனித்துடலம் வணங்குமருள் செல்லத்து ரைப்புலவன்
குவலயத்து நீடு வாழ்க! 3

(வேறு)

மன்ற மாமயில் ஆடு பூந்துறை
மாலைமா மழை பொழிந்தபோல்
வென்ற தீந்தமிழ் ஆடி வியனிறை
வேந்தன் ஏசுபி ரான்எனும்

குன்றி னேறியங் குதிர்த்த கட்டளை
கொண்டு குழவியின் குலவிய
நன்றி பாடினன் செல்லத் துரையெனும்
நாந லப்புலம் வாழ்கவே! 4

உள்ளத் தூன்றிய வித்தெனும் இறை
உணர்வின் ஊறி முளைத்துயர்
கொள்ளத் தீங்கனி அருள்பழுத் திளங்
குழவிப் பாடல் எனுஞ்சுவை
அள்ளத் தந்தருள் செல்லத் துரையெனும்
அருஞ்சொற் புலவனிங் காக்கிய
பிள்ளைத் தீந்தமிழ் இயேசு பிரான்புகழ்
பேசும் உலகினி தோங்கவே! 5

-1985

## 196 மணிகண்டனின் ‘கூட்டுக்குயில் பாட்டுக்குரல்’ நூலுக்கு மதிப்புரை!

அணிகண்டேன்; நல்ல
அழகுகண்டேன்; ஆக்கப்
பணிகண்டேன்; கண்டேன்நற்
பாங்கும் மணிகண்டன்
பாடல்நூல் கண்டேன்;
பயன்கண்டேன்; பைந்தமிழ்த்தாய்
ஆடல்நூல் காணும்
அரங்கு!

-1985!

## 197 எழில்வாணனின் 'ஒருசொட்டுக் கண்ணீர்' நூலுக்கு அணிந்துரை!

ஏழை உழவனை, உண்மைஆ சானை,
எந்தமிழ்ப் பாவலன், ஈழத் தமிழனை,
கூழைப் படையோ டெல்லைகாப் பவனை,
குமுகத் தொண்டனை, அறஅதி காரியைக்,
கோழை யின்றி நாட்டுக் குழைக்கும்
குணத்தனைக், கலைஞனை, நல்லறி வோனைப்
பீழைப் படுக்கும் சூழலை விளக்கிப்
பெருமைப் பாக்களைக் கொண்டதிந் நூலே!

(வேறு)

'தூவிய கடமையின் வாழ்வினை
அன்னவர் கொடுந்துன் பத்தை
மேவிய தூய்தமிழ்ப் பாக்களாய்
நம்மிடை மிளிர விட்டே
பாவலர் எழில்வாணன் 'ஒருசொட்டுக்
கண்ணீ'ரைப் படையல் செய்தார்!
ஏவிய அவர்குரல் நமக்கும்கண்
ணீரினை இமிழ்க்கு மன்றோ?

விலைக்குப் பாடுவா ரிலர்,எழில்
வாணன்! வெம்பு நெஞ்சாய்
உலைக்குக் குத்திய அரிசியைப்
பிறர்க்கீந்து உமிச மைப்பார்
தலைக்குப் பதினேழு பாக்களைப்
பாடியே அவர்த விக்கும்
நிலைக்குக் கண்ணீரை நெகிழ்ந்துகுக்
காதவர் நிலத்திலுண்டோ?

அன்புத் தமிழுளம், அழகிய
தமிழ்நடை, அழன்றெ ழுந்த
என்பைத் தொளைக்கும் எரிசினம்,
இரக்கம், யாவும் கொண்டே
நன்பாத் தொடையலாய் நறும்பா
வலர் எழில்வாணன் செய்த
தென்பூட் டும்இந்த நூற்பயன்
என்று திகழ்க நன்றே!

-1985

## 198 இறையரசனின் 'சிந்தனை ஊற்று' பாடல் நூலுக்குப் பாராட்டுப்பா!

"**சிந்தனைஊற்**" றென்னும் சிறுபாடல் நூலெமக்கு
வந்தது(அ)தில் உள்ளம் வளம்பெருக்கி நின்றதென்பேன்!

தூய தமிழ்ச்சொற்கள்! துவளாத நல்லநடை!
ஏய உணர்வெழுப்பும் இன்கருத்துப் பொன்முடிப்பு!

வெண்பாவும் மண்டிலமும் வெஃகும் வியன்சிந்தும்
ஒண்பாமுப் பத்தொன் பதுபாட்டும், பாட்டரங்கில்
ஏறிய பாடல்கள் ஈரிரண்டும் கோத்துத்தேன்
ஊறிய தீம்பலா வின்சுளைகள் ஒத்தனபோல்
பாவிருந் துண்டேன்;பா வல்லோன் இறையரசன்
நாவிருந்தை என்னென்பேன் நான்?

-1985

## 199 'பூங்கொத்து' நூலுக்கு வாழ்த்து!

வில்வ நாதனின் வியன்தமிழ்ப் பாக்கள்
சொல்வளம் கருத்து நலன்கள் தோய்ந்தவை!

யாப்பு முயற்சியில் எங்கோ ஒருசில
கோப்பு நெகிழ்ச்சிகள் இருப்பினும் குறைவிலாத்

தூய தமிழால் துலங்கிச் சிறந்தவை!
ஏய தமிழர் இனநலங் காப்பவை!

கொள்கை தெளிந்த கூர்மைச் சொற்கள்!
ஒள்கதிர் போல ஒளிரும் உணர்வு!

தொய்ந்த தமிழினம் தோள்களை உயர்த்தி
நைந்த வாழ்வை நன்னிலைப் படுத்திப்

பொலிவு மங்கிய தமிழைப் புதுக்கி
வலிவு பெற்றிட வாழ்வியல் கூறும்

நறுந்தமிழ்ப் பாக்களை நல்கிய பாவலன்!
வெறுந்தமிழ் உணர்வை விதைப்பவன் அல்லன்!

தமிழைத் தீய்க்கும் தகவிலாப் பாக்களை
உமிழும் கொடியவர் உயர்கின்ற நாளில்

உண்மைத் தமிழும் உயிர்ப்பும் கருத்துமாய்த்
திண்மைப் பாக்கள் செழிக்கத் தந்தனன்!

பூங்கொத் தென்னும் பொலிவுறும் இந்நூல்
தீங்கனிக் கொத்தெனத் திகழ்ந்து சுவைத்தது!

வில்வ நாதனின் விழுமிய முயற்சிகள்
வெல்க! அவன்பா விளங்குக நன்றே!

-1985

## 200 தமிழியக்கன் - நூலுக்கு அணிந்துரை!

தூவலி னால்பொருள் தொகுத்திடும்
விழைவினால் சிலர்தமிழ்த் தொண்டரென்பார்;
ஆவலி னால்சிலர் அருந்தமிழ்
அணியொடும் யாப்பொடும் ஆர்ப்பரிப்பார்;
நாவலர் ஆகியே நறுந்தமிழ்
நயத்தொடும் நடிப்பொடும் சிலர் நவில்வார்;
பாவலர் தமிழியக் கன்தமிழ்
பயில்வது பைந்தமிழ் பயனுறவே!

செறிவுற இலக்கியம் செய்குவார்
சிலரிவண் செந்தமிழ் செழிப்படைய!
நெறியியல் அறவியல் நிகழ்த்துவார்,
நீணிலம் கோணலை நிமிர்க்கவென்பார்!
வெறியியல் உணர்வுகொண் டாண்பெண்
உறவெலாம் சுவையோ டுரைத்திடுவார்!
**'அறிவியல் இலக்கியம்'** முழக்குவார்
**தமிழியக் கன்**தமிழ் அணிபெறவே!

(வேறு)

தனித்தமிழில் அறிவியலைப் பாட லாகத்
தகுகருத்துப் புலப்படவே ஆக்கித் 'தந்தார்;
கனித்தமிழில் வல்லமைசேர் **'தமிழி யக்கன்'**
கருத்துக்கும் பாவுக்கும் தலைவ ரானார்!
'இனித்தமிழில் எதனையுமே கூற லாகும்'
எனும் உண்மை மெய்ப்பித்தார் இந்த நூலால்!
நுனித்தறிந்த தமிழ்த்திறனால் ஆக்கம் சேர்க்கும்
நூலிதுபோல் பலவெழுதித் தருதல் நன்றே!

இன்றுவரை இயற்கையினைப் பாட வந்தார்,
எழில், உருவம், வண்ணங்கள், இலைகள், பூக்கள்,
குன்றுவளர் வெள்ளருவி, பறவை, மேகம்,
குளிர்கடல்,தென் றல் - இவற்றைப் பாட லாக,
அன்றுயர்ந்த செந்தமிழில் ஆக்கித் தந்தார்;
ஆனால்நம் **தமிழியக்கன்** புலமை மிக்கார்,
நின்றவற்றின் அறிவியல்சேர் நிலைக ளெல்லாம்
நிலைத்ததமிழ் வல்லமையால் பாடல் செய்தார்!

நாம்வாழும் நிலக்கோளம், உலகம், வானம்,
ஞாயிறு, வெண் ணிலவு, விண் மீன்கள், மின்னல்,
தீம்புயல்சேர் நிலநடுக்கம், மழை, காற் று,உப்பு,
தேங்குநிலக் கரி, கல்நெய், இழுவை, ஆடி,
மேம்படு வெள் ளொளி, ஒலிகள், வால்மீன்,
மேலறுவான் வில்,என்னும் இயற்கூ றெல்லாம்
தேம்படுசெந் தமிழ்ப்பாவில் விளக்கிச் சொன்னார்,
திகழ்புலமை **தமிழியக்கன்!** வாழ்த்து கின்றேன்!

(வேறு)

தட்டாத யாப்பழகு! தளர்வில்லாப் பாவோட்டம்!
தமிழறிந்த புலவோர்க் கெல்லாம்
எட்டாத அறிவியலை எடுத்தளிக்கும் நல்விளக்கம்!
எந்தமிழில் பிறமொ ழிச்சொல்
முட்டாத தூயநடை! முனைமழுங்காச் சொல்வழக்கு!
முழுக்கருத்தும் கூறும் பாங்கு!
தெட்டாத தமிழ்த்தொண்டர் தமிழியக்கன் செயுந்தொண்டு
தேயாமல் திகழ்க! வாழ்க!

-1985

## 201 சிவப்பு மலர்கள் - நூலுக்கு வாழ்த்து!

தென்மொழிப் பாவலர் கடவூர் மணிமாறன்
தெளிவுறப் பாடலில் வல்லவர் - அன்பு
திகழ்ந்தவர்; பழகிட நல்லவர் - அவர்
என்மொழி, என்னினம் என்நாடு உய்ந்திட
ஏராளமாய்எழுதிக் குவிப்பவர் - நாடு
என்றுய்யு மோ - என்று தவிப்பவர்!

உண்மைத் தமிழ்ப்பற்றும் உயரிய கொள்கையும்
உடலுழைப் பும் மிகக் கொண்டவர் - பல
உயர்தமிழ் நூல்களைக் கண்டவர் - அவர்
திண்மைச் செழுந்தமிழில் பாட்டும் உரையுமெனத்
தேர்ந்திடும் நூல்பல யாத்தவர் - தமிழ்
தேறிய கல்வியில் மூத்தவர்!

பத்திரண் டாண்டுகள் பைந்தமிழ்ப் பாக்களைப்
பாடிப் பாடிஉளம் களித்தவர் - நறும்
பாக்களைத் தாய்த்தமிழ்க் களித்தவர்! - இனம்
புத்தெழுச் சியுடன்நறும் பொதுமையும் பெற்றிடப்
பொழுதெலாம் சிந்தனை செய்பவர்! - நலன்
புலர்ந்திடாப் பொழுதுளம் நைபவர்!

தூய தனித்தமிழில் புதுமை இலக்கியங்கள்
தோற்றித் தமிழ்த்தாயைப் போற்றுவார் - இனத்
தொண்டைச் சிறப்புறவே ஆற்றுவார் - தமிழ்த்
தேய விடுதலைக்கே உணர்வும் உரமும் தரும்
தென்புக் கருத்துமிகச் சாற்றுவார் - சீர்
திருத்தம் கூறிநிலை மாற்றுவார்!

சிவப்பு மலர்கள், எனப் பாடல் பலதொகுத்துச்
செப்ப முறஇதனைத் தருகிறார்! - முன்
சேர்த்த புகழில்நிலை பெறுகிறார்! - மனம்
உவப்பப் 'பைந்தமிழின் சோலை' 'பாவலரின்
மேடை' 'வளரும்தலை முறை' களாம் - பயன்
மிளிர்வும் கருத்துமிதன் நிறைகளாம்!

'நெருப்பின் நினைவு'களும் 'நெஞ்சின் நிழல' சைவும்
நெற்று மணிஎனும்நற் பாடல்கள்! - ஒரு
நிலைத்த தமிழினத்தின் தேடல்கள்! - தமிழ்
விருப்பு மிகவும், இனம் ஏற்ற முறவும் - நிலம்
விடுதலை பெறவும்துணை நின்றிடும்! - இடை
வீழ்ச்சி யின்றிப் பகை வென்றிடும்!

-1986

## 202 வாழ்க நன்றே!

இருபதின் ஐந்தாம் ஆண்டில்
எடுத்தடி வைத்தி ருக்கும்
திருவளர் கவிதை என்னும்
தீந்தமிழ்ப் பாடல் ஏடும்
குருமகன் தெசிணி தாமும்
கூம்புத லின்றி யாண்டும்
மருவுக வளங்கள் ஆக்கம்
மண்டுக! வாழ்க நன்றே!

-1986

## 203 ‘பிஞ்சுதமிழ்’, நூலுக்கு வாழ்த்து!

கொஞ்சித் தமிழ்பயிலும் அன்புக் குழந்தைமொழி
பிஞ்சு தமிழ் என்று பேசியே - விஞ்சுபுகழ்
பாவலர் கன்னல் பயந்தளித்தார் பாடல்நூல்
ஆவலுறுந் தூய்தமிழில் ஆம்!

அழகு நடை கூத்தாட அன்புமனம் பூக்கப்
பழகுதமிழ் எங்கும் பரவக் - குழகுமொழிப்
பால்வாய் தமிழ்மணக்கப் பாடினார் கன்னலெனும்
நூல்வாய் புலவர்இந் நூல்!

பாவலர் கன்னலெனும் பாப்புலவர் பன்னலமும்
மேவுபுகழ் பெற்று மிளிர்கவே - காவலுறுந்
தூயதமிழ் எங்கும் துலங்குகவே - தூற்றுவர்தம்
வாயடங்க மென்மேல் வளர்ந்து!

-1986

## 204 ‘நீ தமிழ்மகனா’ - நூலுக்கு வாழ்த்து!

முப்பொழுதும் சிரித்தமுகம்,
முழங்குகின்ற செந்தமிழ்வாய்,
முனிவே இன்றி
எப்பொழுதும் இனநலத்தை
எந்தமிழ்நாட் டுரிமையினை
எடுத்தெ டுத்தே
செப்புகின்ற வீரவுரை,
செய்கின்ற நறுந்தொண்(டு), என்(று)
அனைத்தும் சேர்த்தால்
ஒப்புகின்றேன், எழில்வாணன்
உருவந்தான் முன்னிற்கும்
உணர்ந்து கொள்வீர்!

தப்பெழுதா மல்எழுதும்
தழைத்ததமிழ்ப் பெரும்பற்று,
தகைசால் பண்பு,
கொப்புளித்துப் பிறமொழிச்சொல்
துப்பிவிட்டுத் தூயதமிழ்
கூறும் வேட்கை,
அப்பழுக்கில் லாதஉளம்
அணையாத நல்லுணர்விங்(கு)
ஆருக் கென்றால்,
மெப்புதலுக் கில்லாமல்
உரைக்கின்றேன் **எழில்வாணன்**
விழிமுன் நிற்பார்!

அன்னவர்தாம், '**தமிழ்மகனா**
**நீ**'யென்றே கன்னத்தில்
அறைந்த தைப்போல்
மின்னலெனத் துடிக்கின்ற
மேலாம்ஓர் நூல்செய்தார்!
மிகம கிழ்ந்தேன்!
கன்னலென இனிக்குஞ்சொல்,
கருத்தூற்று; தூயதமிழ்
கமழும் பூங்கா!
மன்னுதமிழ் மலர்த்துகின்ற
மாபெருந்தொண் டென்றதனை
மதிக்கின் றேனே!

எம்புகின்ற பாட்டாற்றல்,
இறுமாந்த களிற்றுநடை,
இழுக்கா யாப்பு,
அம்பெழுந்து பாய்வதுபோல்
ஆர்க்கின்ற சொல்சீற்றம்,
அனைத்தும் சேர்ந்தே
செம்புலவர் **எழில்வாணன்**
செய்துள, '**நீ தமிழ்மகனா**'
எனும்நூல் சீர்த்தித்
தம்புலமைக் கோரெடுத்துக்
காட்டாகத் தான்நிற்கும்
தமிழ்போல் வாழ்ந்தே!

-1987

## 205 'செயலும் செயல் திறனும்' - நூல் படையல்!

அன்பூறும் நெஞ்சினன்; அருந்தமிழ்த்தாய்
வாயினன்; அன்றன் றைக்கும்
தென்பூறும் நம்மருங் கொள்கைசொலும்
நாவினன்; தீந்த மிழ்க்கே
என்பூறும் தொண்டினன்; இளைஞர்மகிழ்
பண்பினன்; எமைய ணைத்தே
இன்பூறும் அன்பினால் எமக்குதவும்
கொடையினன் வளங்கோ என்போன்!

தென்புதுவை நன்னகர் வாழ்ந்திருந்து,
தென்மொழித் தொண்டு செய்து,
நன்பிரான்சு மேவியே நனிவாழ்ந்த
போதுமே நயந்தே எம்மை
முன்பழைத்துச் சொற்பொழி வுலாச்செய்த
மொய்ம்பன்அரி மாவளங்கோ
இன்படைய லாகுமிந் நூலவற்கே
என்றுமே வாழ்க வென்றே!

-1988

## 206 'சங்கே முழங்கு' - நூலுக்கு வாழ்த்து!

செந்தமிழும் சிந்தனையும்
ஒன்றிணைந்து சீர்திருத்த
உணர்வும் சேர்ந்தால்,
வந்துவிழும் கருத்துகட்குப்
பஞ்சமில்லை; வளத்துக் கோர்
அளவும் இல்லை!
நொந்தமிழும் உள்ளங்கள்
நோய்படுத்த மக்களினம்
நொடிந்த வாழ்க்கை
வெந்தழியும் போதினிலே
விடிவுதர வேண்டாவா,
விழித்த நெஞ்சம்?

தமிழ்நெஞ்சால், தமிழ்நாட்டு
நல்லுணர்வால், நம் கடவூர்
மணிமாறன் செய்
அமிழ்தூற்றுப் பாக்களெல்லாம்
ஆசிரியர், மாணாக்கர்
புலவர், மற்றும்
இமிழ் எழுத்தா ளர், பொழிவா
ளர், இதழா ளர், இளைஞர்
எனும்த லைப்பில்
குமிழ்தரூஉம் கருத்தொலிக்கும்
குவிசங் காய் முழங்குவதைக்
கூர்ந்து கேட்பீர்!

பாவேந்தர் தமிழியக்கம்
போலுமொரு செந்தமிழ்நூல்
பயந்த நெஞ்சம்
நாவேந்தும் நம்கடவூர்
மணிமாறன் நவின்ற'சங்
கே முழங்கு'
ஈவேந்தும் வாணிகராம்
தமிழ்ப்பா வலர்நடுவில்
எழுந்த கொள்கைப்
பாவேந்தும் செம்புரட்சி
செயவந்த பயன்மிகுநூல்!
பலசால் வாழ்க!

-1990

## 207 தமிழீழம் - நூல் படையல்!

அன்னையின் அன்பிற் கடுத்தலோர் அன்புளம்
என்னைப் புரந்து போற்றிடும் என்றால்
அதுதான் வெங்காலூர் அருள்மணி உள்ளம்!
இதுதான் அவருடை அன்பினது ஆழம்
என்றுநான் முடிவுசெய் முன்னம் 'இலை,இலை;
நின்றுபார்' என்றெனை நினைந்திடும் உள்ளம்!

தொண்டுசெய் துள்ளமும் உடலும் தொய்ந்திட
மண்டிடும் வெப்பத் துயர்க்குமா மழைபோல்
அன்புரை பொழிந்தே ஆறுதல் கூறி, என்
என்பையும் குளிர்செய் இணையிலா நல்லுளம்!

வேரில் எருவும் வியன்குளிர் நீருமாய்
வாரி வழங்கிடும் வள்ளண்மை உள்ளம்!
இவ்வுடல் மறைந்தே என்னுயிர் நிலைக்குமேல்
அவ்வுயர் அணுவிலும் அருள்மணி அன்புளம்
ஒன்றி யிருந்திடல் உண்மைஎன் பதற்கு
நன்றியாய்ப் படைத்தஇந் நறுநூல் சான்றே!

-1990

## 208 செந்தமிழ்ச் செய்யுட்கோவை - நூலுக்கு அணிந்துரை!

**எழில்வாணப் பாவலர் பால்**
இதுவரையில் யாமகிழ
மொழிநலமும் இனநலமும்
முகிழ்த்திருக்கக் கண்டிருந்தோம்!
மொழிநலமும் இனநலமும்
முகிழ்த்ததுடன், காதலர்செய்
விழிநலமும் இதழ்நலமும்
விளங்கிடநூல் யாத்தனரே!

**'செந்தமிழ்செய் யுட்கோவை'**
எனும்அன்பு செழித்தஉயிர்
உந்துணர்வு மொய்த்திடவும்
உள்ளங்கள் இணைந்திடவும்
தந்தமிழ்து துளும்புமொரு
தகுகாதல் நூல்தந்தார்,
முந்துதமிழ்க் கோவைகளின்
முறைவைப்பிற் கேற்றிடவே!

பாக்களெல்லாம் பைந்தமிழ்த்தேன்!
பண்ணியைபு நலங்கொழிக்கும்!
தேக்கியுள்ள கருத்தெல்லாம்
திகழ்நெஞ்சக் குலைமலர்த்தும்!
யாக்கையுளே உயிர்உலவல்
யாப்புடலுள் உணர்வுணர்த்தும்!
நோக்கிலுயர் அன்பூறும்
நுண்காதல் சிறந்திடவே!
(வேறு)
காதற் பெருமழை உயிர்நனைப்ப
கருத்துப் பெரும்புனல் உளம்பாய
கூதற் குளிரில் உடலணைந்து
குலவும் மயிலும் குலமகனும்
ஈதற் பேரறம் நிகழ்த்தியதை
**எழில்வா ணன்-**எனும் இயற்புலவன்
சாதற் கியலாச் செந்தமிழில்
சாற்றினான் கோவை போற்றிடவே!

**-1990**

## 209 ‘கவிதை’யால் நீடு வாழ்க!

தமிழுக்குத் தெசிணி செய்யும்
தமிழ்த்தொண்டே ‘கவிதை’த் தொண்டு!
அமிழாத மரபில் பாக்கள்
ஆயிரக் கணக்கில் யாக்கும்
இமிழாத பாவ லர்கள்
எழுதிட வாய்ப் பளிக்கும்
கமழுறும் பெருமை மிக்கார்
‘கவிதை’யால் நீடு வாழ்க!

-1991

## 210 தமிழமல்லன் நூலுக்கு அணிந்துரை!

‘பாவேந்த ரும்தனித்த மிழும்’என்றே
தமிழமல்லன் பயந்து தந்த
மீவுயர்இவ் வுரைநூலுள் மேன்மையுறும்
பலகருத்தை மிளிரச் செய்தார்!
ஆவலுறக் காத்திடுக! அவர் ஆய்வை
ஒப்பிடுக! அமைவு கொள்க!
மேவுகஇந் நூல்எங்கும்! தமிழமல்லன்
மெய்யுழைப்பு மேலும் வெல்க!

பூவேந்தாய்ப் பிறந்தவர்கள் புகழெல்லாம்
பூவுலகில் புழங்கு மட்டும்!
நாவேந்தாய் வாழ்ந்திருந்த பாவேந்தர்
புகழென்றும் நலிவ தில்லை!
காவேந்தும் தென்றலெனும் தனித்தமிழே
நீயதற்குக் கரண மன்றோ?
பாவேந்தர் புகழ்சேர்க்கும் இந்நூலால்
பயன்மிகுக, பைந்த மிழ்க்கே!

-1991

## 211 இறையரசனுக்கு வாழ்த்துரை!

பாவிலுரை செய்புலவர்
இறையரசன் முன்னர்
பாரறநூல் திருக்குறட்குப்
பாட்டிலுரை செய்தார்!
நாவிலுரை தூயதமிழ்,
நல்லுணர்வு நெஞ்சம்,
நந்தமிழின் முன்னேற்ற
நறுங்கொள்கை, வாய்மை,
மேவலுறும் பாமணியாம்
இறையரசன் இக்கால்
மேலுமொரு நல்லறநூல்
நாலடியார் ஆய்ந்தே
பாவிலுரை பகர்ந்துள்ளார்;
பயன்மிகவும் செய்தார்!
பைந்தமிழர் படித்துணர்க!
பாராட்டும் செய்க!

மண்டிலத்தில் உரைசெய்த
மாண்பதனால் கற்பார்
மனத்தில்உரை உடன்படியும்;
கருத்துநிலை நிற்கும்!
வண்டிமிரும் மலர்குடைந்து
தேன்சுவைத்து, நாமும்
வாழ்வதற்கே அடைசுட்டிப்
பயன்தருதல் போல,
கண்டுபொருள் தாம்சுவைத்து
நாம்சுவைப்ப தற்கும்
கவினுறவே உரைதந்தார்
பாவடிவில்! அன்னார்
தொண்டுபெரும் பயன்நல்கும்;
துய்ப்பவர்க்கே இன்பம்
தோன்றுமதோ டறம்விளங்கும்
தொன்தமிழும் வாழும்!

அறந்தழுவும் மனத்தினராய்
அறநூல்கள் தேடி
ஆய்ந்துகற்றுப் பொருளுணர்ந்தே
அப்பொருளைப் பாட்டில்
பிறந்தபயன் பெற்றிடவும்
பிறருணரத் தந்தார்!
பெருமையுடை நல்லறிஞர்
அருமைவினை செய்வார்!
இறந்தபின்னும் பெரும்புகழும்
ஏற்றமும்பெற் றுய்வார்!
இறையரசன் நற்செயலும்
என்றென்றும் நிற்கும்!
சிறந்தமொழி, இனவுணர்வு,
நாட்டுணர்வு கொண்ட
செம்புலவர் இவர்பெருமைச்
செயல்வாழ்க! வாழ்க!

-1991

## 212 ‘இளமை விடியல்’ - வாழ்த்துப் படையல்!

பெற்றெடுத்து மோந்து
பெயரிட்டுப் பேணிநின்று
கற்றறிந்தார் போற்றுமுயர்
கல்விதந்து - உற்ற தந்தை
போனபின்னும் என்னைப்
புரந்தஅன்னை குஞ்சம்மாள்
வானநினை விற்(கு)இது ஓர்
வாழ்த்து!

-1995



எழுதி எழுதிச் செல்கின் றேன், நான்!
என்ன பயன், என எண்ணிப் பார்க்கிலேன்!
உழுது விதைத்தவை ஒருநாள் விளையுமோ?
ஊமை விதைகளாய்ச் சாவியாய் ஒழியுமோ?
புழுதியுள் மறையுமோ? பூக்களாய் மலருமோ?
அழுகியும் உலுத்தும் அமுங்கிப் போகுமோ?
பழுதென் றுரைத்து, அவை பழித்திடப் படுமோ?
தொழுது போற்றுமோர் காலந் தோன்றுமோ?
துயரச் சுமைக்கொரு தூண்என நிற்குமோ?

பசித்த அறிவினால் புசித்திடு வார்களோ?
பரபரப் புணர்வொடு கொறித்திடு வார்களோ?
விசித்து விசித்து, நான் அழுத அழுகையும்
விடிய விடிய, நான் வடித்த கண்ணீரும்,
மக்கள் இனத்தின் கடைசி மாந்தனின்
ஒக்க அழுகையோ டொன்றாய் இணையுமோ?
ஒழுகுகண் ணீரோ(டு) ஓடிக் கலக்குமோ?
எழுதி எழுதிச் செல்கின் றேன், நான்!
என்ன பயன், என எண்ணிப் பார்க்கிலேன்!